

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜம்
பெருமாள் தேவஸ்தானம்

# கும்பாபிஷேக மலர்

2003

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# சமர்ப்பணம்

இலங்காபுரியின் வடபுலத்து யாழ்நகரின் கண் சிறப்புற்று விளங்கும் வைஷ்ணவத்தலம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானமாகும். இத்திருத்தலத்தில் சென்ற ஐந்தாண்டுகளாக சில லட்சம் ரூபா செலவில் ஸ்ரீ ரெங்கநாத சந்நிதியின் முன்பாக ஐந்துதளங்களை உடைய கோபுரம் ஒன்று உருவாக்கப் பெற்று 2003 ஆம் ஆண்டில் பூரணமாக நிறைவு எய்தப் பெற்று இதன் பின்பு முழுமையாக கர்ப்பக்கிரகம் ஸ்ரீ ரெங்கநாத சந்நிதி, மற்றும் பரிவார மூர்த்திகளான ஸ்ரீ சந்தான கோபாலர், ஸ்ரீ வேணுகோபாலர், ஸ்ரீ ராமசந்நிதி முதலியனவற்றிற்கு புதிய ஆலயங்கள் அமைக்கப்பெற்று சென்ற 10.07.2003 ஆம் வருடம் மிகச் சிறப்பாக சம்புரோக்கஷண கும்பாபிஷேகம் சகல மூர்த்தி களுக்கும் ஸ்ரீ ரெங்கநாத பஞ்ச அவஸ்தைக் கேபாபுரத்திற்கும் நடைபெற்றது. இத்திவ்ய திருப்பதியில் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாளும், ஸ்ரீ ரெங்கநாதசுவாமியும், ஸ்ரீதேவி பூமிதேவி சமேதராக வீற்றிருந்து தம்மைநாடும் அடியவர்களைக் காத்து ரட்சித்து வேண்டும் வரங்களை அருள்பாலிக்கின்றனர். வல்வினைகள் நீக்கும் ஸ்ரீ வேங்கடேச வரதனது இராஜகோபுர மும் திருத்தி அமைக்கப்பெற்று ஸ்ரீ ரெங்கநாத கோபுரம் முதலியனவற்றிற்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற்ற வைப வத்தை முன்னிட்டு இவ்வரிய மலரை செடியாய வல்வினைகள் தீர்க்கும் ஸ்ரீ வேங்கடவரதனது திருப்பாதங்களில் சமர்ப்பித்து வந்திக்கின்றோம்.

சுபம்

இங்ஙனம்
வண்ணை ஸ்ரீவேங்கடேச
வரதராஜப் பெருமாள்
கோவில் ஆதீனமகாசபை
யாழ்ப்பாணம்.



மூலஸ்தான மூல மூர்த்தி ஸ்ரீ வேங்கடேஸ்வரர் , சாயா விக்கிரகங்கள் ஸ்ரீ தேவி பூமிதேவி சமேத ஸ்ரீ வரதராஜ சுவாமிகள்.



சிலா விக்கிரகம் - ஸ்ரீதேவி, பூதேவி ஸ்ரீ ரெங்கநாதசுவாமி

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சமர்ப்பணம் | – | வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் ஆதீனமகா சபை |
| முகவுரை | – | ஸ்ரீரெங்கநாத கோபுரமலர் வெளியீட்டுக் குழுவினர் |
| ஆசிச்செய்திகள் | – | |

1. ஸ்ரீ அஹோபிலமடம் 45வது பட்டம் ஸ்ரீமந் அழகியசிங்கர் ஜீயர் ஸ்வாமிகள். தமிழ்நாடு.
2. பிரதிஸ்டா சிரோமணி சிவாச்சாரிய சக்கர வர்த்தி பிரம்ம ஸ்ரீ சாமி.விஸ்வநாதக் குருக்கள் கொழும்பு.6
3. இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் நல்லூர்
4. மேற்படி கும்பாபிசேஷக பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ சாமி.சாந்தரேசக்குருக்கள், தாவடி.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

**வாழ்த்துச்செய்திகள்** –

1. திரு.தி.மகேஸ்வரன் பா.உ
இந்துசமய விவகார அலுவல்கள்
அமைச்சர். இலங்கை.

2. சுவாமி ஆத்மாநந்தா
ஸ்ரீராம கிருஷ்ணமிசன், கொழும்பு.6

3. செயலாளர் திரு.பரமேஸ்வரன்
இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு.4

**சிறப்புக் கட்டுரைகள்** –

1. திருவேங்கட வரதனது திருக்கோவிலும்
கோபுரத்தில் அமைந்துள்ள சிற்பங்களும்
தலைவர்
திரு.நா.ஸ்ரீரஞ்சன்,
ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள்
தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

2. வண்ணை வாழ் வேங்கட வரதனது வனப்பு
பொருளாளர்
திரு.நா.ஸ்ரீரெங்கநாதன்
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

3. வண்ணையம்பதியில் வைணவம்
வளர்த்த வைசியர்
கௌரவ செயலாளர்
திரு.ஸ்ரீ.பாலமுரளி
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

4. ஆலய அமைப்பும் சிறப்பும்
திரு.V.N.C.நாராயணசாமி (போசகர்)
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

5. ஏகாதசி வரலாறு
செயலாளர், திருப்பணிச்சபை.
திரு.V.S. கிருஷ்ணமூர்த்தி
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

6. வண்ணை ஸ்ரீ வேங்கட வரதனது
மஹோற்சவ வைபவங்கள்
நிருவாகசபை உறுப்பினர்
திரு.மு.சிவலோகநாதன்.
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

7. தீபாவளித்திருநாளும் அதன் வரலாறும்
உதவிப் பொறுப்பாளர்
திரு.பெ.கோவிந்தசாமி.
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வ ராஜப்
பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

8. கிருஷ்ணலீலையும் அதனுடன்
தொடர்புடைய உற்சவமும்
உபசெயலாளர்
திரு.இ.இராகவன், மகாசபை.
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

9. வண்ணைவாழ் ஆழ்வார் உற்சவங்கள்
நிருவாகசபை உறுப்பினர்
திரு.தி.சிவரூபன்
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

10. வைண ஆகமமும் கலை மரபுகளும்
திரு.வெ.நா.செ.நாராயணசாமி
மகாசபை உறுப்பினர்.
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

**ஆகம தத்துவக்கட்டுரைகள்** –

1. கும்பாபிஷேக தத்துவம்
   மதுரகவி காரை
   எம்.பி.அருளானந்தன் **B.A. (HONS)**

2. வைணவ திருக்கோவில்
   அமைப்பும் வழிபாடும்
   பிரம்மஸ்ரீ ப.கிருஷ்ணாந்த சர்மா
   **B.A. (HONS)**
   நல்லூர்.

3. சிவாகம மரபில் விஷ்ணு
   பிரம்ம ஸ்ரீ சபத்மநாதன் **B.A. (HONS)**
   நல்லூர்.

4. வைணவ திருவுருவங்கள்
   பிரம்ம ஸ்ரீ சா.குமரேசசர்மா**B.A. (HONS)**
   தாவடி.

5. பகவத்கீதை அழியா அமிர்தம்
   கலாநிதி. சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராசா
   கணித புள்ளிவிபரவியற்துறை
   யாழ்.பல்கலைக்கழகம்.

6. வைணவத்தின் பெருமை
   திரு.**V.N.C.** நாராயணசாமி
   முன்னாள் தலைவர்
   வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
   பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

**இலக்கியக் கட்டுரைகள்** –

1. இராமன் கண்ட அநுமான்
   திரு.க.சிவராமலிங்கம்
   முன்னைநாள் பிரதி அதிபர்
   யாழ்.இந்துக்கல்லூரி.

2. கண்ணன் திருவடிகளில்
   அர்ச்சுனன் மாலையானான்
   இராஜா சண்முகநாதன்
   மணற்றரை ஒழுங்கை
   கந்தர்மடம்.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

ஆழ்வார்கள் கட்டுரைகள் –

1. தொண்டுக்காக வாழ்ந்த ஆழ்வார்
பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்
தலைவர், தமிழ்த்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

2. கோதையின் கோல விளக்கு
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
திட்டப்பணிப்பாளர்,
சைவவித்தியா அபிவிருத்திச் சங்கம்.

3. வைணவனென்னும் வன்மை கண்டாய் –
வண்ணை வேங்கடேசப் பெருமாள் தேவஸ்தான
முன்னைநாள் ஓதுவார் சு.தியாகராசா,
யாழ்ப்பாணம்.

கவிதை –

1. ஸ்ரீரெங்கநாதனின் தாழ் பணிந்திடுவோம்!
சைப்புலவர்
இராசையா ஸ்ரீதரன்
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

2. வண்ணைச் ஸ்ரீரெங்கநாதன் பத்து
ஆக்கியோன் – V.N.C.நாராயணசாமி
தேவஸ்தானம் யாழ்ப்பாணம்.

நன்றியுரை –

ஸ்ரீரெங்கநாதக் கோபுரத்திருப்பணிச் சபை

பட்டியல்–

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தை பரிபாலனஞ்செய்த அறங்காவலர் பட்டியல்.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

## முகவுரை

**கண்ணன் அடியார்களே!**


இவ்வுலகில் நாம் மனிதராக யாக்கை எடுத்ததின் பயன் யாதெனில் நாராணப்பரம்பொருளின் பாதம் நண்ணி அவன் புகழ் பாடி உய்தற் பொருட்டேயாகும்.

ஆகையால் கண்ணன் அடியவர்கள் ஸ்ரீ வண்ணை வாழ் ஸ்ரீ வேங்கட வரதனின் திவ்ய கடாட்சத்தைப் பெறும் பொருட்டு இவ்வரிய நூல் எம்பெருமானுடைய கும்பாபிஷேகம் நிறைவெய்திப் பல திங்கள் கழிந்த பின் இம்மலர் மலர்கின்றது. இதை வரவேற்கவும் இதை நறுமணம் கமழச் செய்வது என்ற நோக்குடன் வைஷ்ணவ சம்பந்தமான ஆகம புராணதத்துவக் கட்ரைகளை வழங்கிய அந்தணப் பெரியோர்கட்கும், வைணவப் பற்றுக் கொண்ட அறிஞர்கட்கும் எமது நன்றிக்கடைப்பாடு உரித்தாகுக. இது போன்றே இம்மலர் வாடா மலராகத் திகழ கண்ணனது கீதை நெறியையும் ஆழ்வாரது பாசுர நெறிகளையும் கட்டுரை வடிவில் யாத்து ஈந்த பல்கலைக்கழக அறிஞர் பெருமக்கட்கும் எமது நன்றியறிதல் உரித்தாகுக. இவ்வாற்றான் இலக்கிய உருவில் அமைந்த இனிய கட்டுரைகளை வழங்கிய கல்லூரி மூதறிஞர்களுக்கும் எமது நன்றியறிதல் உரித்தாகுக. இதுமாத்திரமன்று இம்மலர் நலம் பெற ஆசி உரைகளையும் வாழ்த்துரைகளையும் நாராணன் மீதுவைத்த பக்தி வயத்தால் வழங்கிய இந்துசமயப் பெரியவர்கட்கும் அந்தண ஆச்சாரியர்கட்கும் இந்து சமய விவகார அமைச்சர் அவர்கட்கும் எமது கனிவான நன்றியறிதல் உரித்தாகுக. பல்லாற்றானும் இம்மலர் செவ்விய வழியில் சிறந்து விளங்க வேண்டும் என்று உழைத்த மலர் வெளியீட்டுக் குழுவினர்க்கும் இத்தேவஸ்தானத்தின் வரலாற்றையும் சிறப்பையும் செவ்விய முறையில்கட்டுரை வடிவில் ஈந்த மகாசபை உறுப்பினர்கட்கும் தேவஸ்தான நிழற்படங்களையும் இம்மலரை நன்முறையில் அச்சிட்டு உதவிய 'ஈழநாடு' ஸ்தாபனத்தினருக்கும் என்றென்றும் எமது தேவஸ்தான ஆதீன மகாசபையின் நன்றியறிதல் உரித்தாகும்.

**சுபம்**

இங்கனம்
V.N.C நாராயணசாமி
செ.இரத்தினகோபால்
மு.சிவலோகநாதன்
இம்மலர் வெளியீட்டுக்குழுவினர்.
வ.ஸ்ரீ.வே.வ.பெ
தேவஸ்தானம்
யாழ்ப்பாணம்

ஓம்
ஸ்ரீராம ஜெயம்



மேற்படி ஆலய தேவஸ்தானத்தின் பிரதமகுருவான
**பிரம்மஸ்ரீ வ.இராஜேஸ்வரக் குருக்கள்**
அவர்களின் நிழற்படம்

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# ஆசிச்செய்தி

முதற்கண், ஸ்ரீ அஹோபிலமடம் 45 ஆம் பட்டம் ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஜீயர் ஸ்சுவாமிகளின் அருளாசிகளைத் தெரிவித்துள் கொள் கின்றோம்.

இப்பவும், தேவரீர் அனுப்பிய 12.07.2003 தேதியிடப்பட்ட கடித்தி லிருந்து, யாழ்ப்பாணத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீவேங்கடேஸ வரதராஜப் பெருமாள் மஹாஸம்ப் ரோக்ஷணத்திற்குப் பிறகு 26.08.2003 அன்று மண்டலாபிஷேகம் பூர்த்தியாக இருப்பதை அறிந்து ஸ்ரீமத் அழகியசிங்கர் திருவுள்ளம் மிகவும் சந்தோஷப்படலாயிற்று.

பெருமாளுக்கு தினமும் நடக்கவேண்டிய திருவாராதனங்கள் எந்தவிதமான குறைவும் இன்றி மிகச்சிறந்த முறையில் காலாகாலமாக நடைபெற்று, தெய்வீக ஸாநித்தியம் ஓங்கி ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் பல ஆயிரக்கணக்கான பக்தர்களை ஆகர்ஷித்து அருள்பாலிக்கவும் ஸத்வமூர்த்தியான பெருமாளின் அநுக்கிரகத்தால் இலங்கையில் மக்கள் தெய்வீகத்துடன் கூடிய செல்வச் செழிப்புடனும் அமைதியுடனும் வாழவும், மஹாஸம் ப்ரோக்ஷணம் மற்றும் மண்டலாபிஷேக மஹோத்ஸ வத்தில் எவர் எந்த விதத்தில் கைங்கரியம் செய்திருந்தாலும் அவர்கள் அனைவரும் பல்லாணடு பல்லாண்டு ஆயுள் ஆரோக்ய சௌபாக்கியத் துடனும் தனதான்யஸம் விருத்தியுடனும் வாழ்ந்து இதுபோன்று பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்யம் தொடர்ந்து செய்து வரவும் ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸ்ரீமாலோல லக்ஷ்மீந்ருஸிம் ஹனைப் பிரார்த்தித்து அநுக்ர ஹித்த பல மந்தராக்ஷதை மஹாப்ரஸாதம் இத்துடன் இணைத்துள்ளோம்.

**ஸ்ரீமத் அழகியசிங்கர் ஜீயர் ஸ்வாமிகள்**
*அகோபிலமடம்,*
*கிழக்கு தாம்பரம்,*
*சென்னை, தமிழ்நாடு.*

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# ஆசிச்செய்தி

"சாந்தாகாரம் புஜகசயனம் பத்மநாபம் சுரேசம்
விஸ்வாகாரம் ககன சதிர்சம் மேகவர்ணம் சுபாங்கம்
லக்ஷ்மி காந்தம் கமலநயனம்' யோகி க்ருத்தியான
கம்மியம் வந்தே விஷ்ணும் பவபயகரம் சர்வலோகைக நாதம்."

அண்ட சராசரங்களையும் அனைத்து மக்களையும் காத்தருள் புரியும் ரக்ஷ சக மூர்த்தியாக விளங்கும் வண்ணை மாநகரின் கண்ணே சகல ஆன்மாக்களையும் காத்தருள் செய்யும் பக்தரக்ஷ கராகிய ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக அமர்ந்து பக்தர்களுக்கு அருள் நல்கும் ஸ்ரீ வேங்கடேசப்பெருமாளுக்கும் அங்கு பரிவாரமாக அமர்ந்த மூர்த்திகளுக் கும் ஸ்ரீரங்கநாத சுவாமிக்கும் புதிதாக அமைந்த ராஜகோபுரத்திற் கும் அவன் அருளாலே அவன்தான் வணங்கி என்ற பிரார்த்தனையுடன் நடத்தவிருக்கும் மகாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்திவிழா வரும் ஆனிமாதம் 26 ஆம் திகதி (10.07.2003) வியாழக்கிழமையும் பூர்வபக்ஷ துவாதசி திதியும் அனுஷ்ச நக்ஷத்திரமும் சித்தயோகமும் சயன ஏகாதசியும் கூடிய சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடத்த சாக்ஷாத் நாராயணப் பெருமான் திருவரு ளுடன் நடக்க இருக்கும் பெருஞ்சாந்தி விழாவாகிய மகா கும்பாபி ஷேகப் பெருஞ்சாந்திவிழா நிறைவுடன் நடக்க எமது பிரார்த்தனை யும் நல்லாசிகளையும் அன்புடனும் திரிகரண சுத்தியுடனும் பிரார்த்தித்து ஆசிவழங்குகின்றேன். இவ் ஆலய தர்மகர்த்தாக்கள் சபையினர், வேங்கடேசன் பக்தர்கள் சகல நன்மையும் பெற்று லக்ஷுமி விலாச சம்பன்னர்களாக வாழ்க வளர்கவென எனது பிரார்த்தனை ஆசிகளை அன்புடன் வழங்குகின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து" "கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்தா கோவிந்தா."

*இங்ஙனம்*
*பிரதிஷ்டா சிரோமணி,*
*சிவாச்சாரிய சக்கரவர்த்தி,*
*சாமி.விஸ்வநாதக்குருக்கள்*
*வெள்ளவத்தை, கொழும்பு - 06*

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# ஆசிச்செய்தி

அன்புள்ள அடியார்களுக்கு:

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீவேங்கடேஸ்வரப் பெருமாளிற்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பழமையும் பெருமையும் வரலாற்று சிறப்பும் மிக்க இவ்வாலயம் யாழ்ப்பாண நகரை அலங்கரிக்கும் நிலையில் இரண்டு இராஜகோபுரங்களைக்கொண்டு சிறப்புடன் விளங்குகின்றது. இராஜகோபுரம் சூலலிங்கம் எனவும் இறைவன் உடைய திருவடி என்றும் போற்றப்படுகின்றது. இதனாலேயே கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்று நம்சமய ஆலயங்களில் இராஜகோபுரங்கள் அமைத்து வழிபாட்டை முறையாக செய்வதன் ஊடாகவே இறைவன் உடைய அருளைப்பெற்று இப்பிறவியிலும் மறுபிறப்பிலும் புண்ணிய பேற்றுக்கு ஆள் ஆகின்றோம். காத்தல் கடவுளாம் வேங்கடேஸ்வர பெருமாள் வேண்டுவார் வேண்டுவதை ஈகின்றவன் ஆக இவ் ஆலயத்திற்கு வந்து வழிபாடு செய்யும் அடியார்க்கு நல் அருளை வழங்கிக் கொண்டிருக்கின்றார். ஆலய வழிபாடு மனித வாழ்வில் மிகவும் இன்றியமை யாதது. ஆலயங்கள் தோறும் சென்று வழிபாடு செய்வதன் ஊடாக மனிதன் மனித நேயத்தோடு தர்மத்தைச் செய்து ஏனைய உயிர்களையும் தன் உயிர் போல் நேசித்து வாழக்கூடிய வழிமுறையை அறிந்து கொள்கின்றான்.

இதனாலேயே நம் சமயம் "நித்தலும் எம்பிரான் கோயில் புக்கும்" என்றும் கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண் டாம் என்றும் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றும் நம் சமயம் போற்றி நிற்கின்றது. இதனை உணர்ந்த நகரங்கள் தோறும் கிராமங்கள் தோறும் ஊர்கள் தோறும் கோயில்கள் அமைத்து வழிபாடு செய்த பெருமை நம்நாட்டுக்கு உண்டு. இவ்வரிசையில் நீண்ட வரலாறு கொண்ட தனித்துவமான வழிபாடும் கொண்ட இப்பெருமாள் கோயில் இப்பிரதேசமக்க ளின் தேவைகளை பூர்த்திசெய்யும் வகையில் இன்று பல அறப்பணிகளையும், தர்மப்பணிகளையும் செய்து ஆலயம் பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. எல்லோருடைய மனதை யும் மகிழ வைத்துள்ளது. இதனை செயற்படுத்தி வரும் ஆலய தர்மகர்த்தாவினரை வாழ்த்துகின்றோம்.

இன்று நடைபெறும் இக்கும்பாபிஷேகத்தை அனைத்து அடியவர்களும் வழிபாடு செய்து அறத்தொடு கூடிய அறவாழ்வு வாழ மண்ணின் நல்ல வண்ணம் வாழ வரதராயப் பெருமாளை வேண்டுகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

இரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

*நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# ஆசிச்செய்தி

ஹரி ஓம் நமோ நாராயணாய நமஹ
பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசியுரை

அனாதி நிதனம் விஷ்ணும் ஸர்வலோக மஹோச்வரம்
லோகபத்யகஷம் ஸ்துவந்நித்யம் ஸர்வ துக்காதி கோ பவேத்

"ஆதியும் முடிவற்றவனும் , எல்லா உலக நாயகர்க்கும் தலைவனும், உலகனைத்தையும் மேலிருந்து பார்த்துக் கொண்டிருப் பவனும் ஆகிய விஷ்ணுவை எப்போதும் போற்றி, ஒருவன் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபடுபவன் ஆகின்றான்"

மேற்கூறிய கருத்து விஷ்ணு சகஸ்ர நாமத்தின் பூர்வபாகத்தில் பீஷ்மர் தருமருக்கு உபதேசிப்பதாக அனைவருக்கும் கூறும் கருத்தாக அமைகின்றது. பரந்து வியாபித்துள்ள பரம்பொருள் திருமால் உலக ஜீவராசிகளை ரக்ஷிக்கின்றார். ரக்ஷகக் கடவுளாக கலி யுகத்தில் தோன்றி மக்களின் கொடிய வல்வினைகளைப் போக்கும் தெய்வமாக வேங்கடவன் அருள் பாலித்த வண்ணம் உள்ளான்.

"ஈழத்துத் திருப்பதி" எனப் போற்றப்படும் யாழ்ப்பாணம் அருள்மிகு வண்ணை வேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் அமர்ந்து மக்களின் துன்பங்களைப் போக்குபவனாக உள்ளான். அண்மையில் கும்பாபிஷேகம் எனும் பெரும் சாந்தி நடைபெற்று புதுப்பொலிவுடன் ஆலயம் மிளிர்வது அவன் திருவருளே.

"எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன்
ஏழ் படிகால் தொடங்கி
வந்து வழி வழி ஆட் செய்கின்றோம்"

என்கின்ற பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு அடிகளுக்கு அமைவாக அடியேனும், அடியேன் குடும்பத்தினரும் கொண்ட உறவு மிகவும் நெருக்கமானது. இற்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் எனது பூட்டனார் அமரர் பிரம்மஸ்ரீ சாம்பசிவக் குருக்கள் வழி, குருத்துவப் பாரம்பரியம் தொடரலாயிற்று. நிறைவான தோற்றப் பொலிவும் நெற்றியில் மெல்லிய நீண்ட நாமம் தரித்த இவரை அடியவர்கள் அன் பாக

சீனிக்குருக்கள் ஐயா என அழைப்பார்கள். இவருடைய காலத்தில் ஸ்தல விருஷமாகிய பலா மரத்தின் கீழ் சிறிய ஆலயமாக (இன்று ஆலயத்தின் பின்புறம் உள்ள பலா மரத்தடியில்) இன்றைய ஆலயம் அமைந்திருந்ததாக செவிவழி அறியமுடிகின்றது. இவரைத் தொடர்ந்து எனது தந்தை வழிப்பேரனார் நல்லூர் அமரர் பிரம்மஸ்ரீ இ.சண்முகக் குருக்கள் குருத்துவத்தை ஏற்றிருந்தார். இவருடைய காலத்தில் ஆலயத்தின் பரிவார மூர்த்தி களுக்கு சம்புரோக்ஷண அபிஷேகம் ஒன்று நடைபெற்றதாக கூறுவர் (ஏறத்தாழ 1941-1942 காலப்பகுதி). இவர் காலத்தில் இவருடைய மூத்த மருமகனார் நயினை அமரர் பிரம்மஸ்ரீ நடராஜக் குருக்களும் ஆலய குருத்தவ சேவையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பேரனார் சண்முகக் குருக்களின் முதுமையின் தளராமையினால் இவருடைய இளைய மகனும், எனது சிறிய தந்தையுமாகிய பிரம்மஸ்ரீ ச. சாம்பசிவ சர்மா (கண்ணன் ஐயா) 1957 ஆம் ஆண்டு காலப்பகுதியி லிருந்து பிரதம அர்ச்சகராக இருந்து ஆலயப் பொறுப்புக்களைக் கவனித்து வந்தார். 1956, 1957 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் எனது பெரிய தந்தையார் அமரர் பிரம்மஸ்ரீ சுந்தர்ராஜக் குருக்கள் (பாணந்துறை) மஹோற்சவத்தையும், ஏனைய குருத்துவத்தையும் நடாத்தி வந்தார். இவரைத் தொடர்ந்து எமது சிறிய தந்தையார் ச.சாம்பசிவசர்மாவுடன் இணைந்து, குருத்துவக் கைங்காரியங்களை அமரர் பிரம்மஸ்ரீ இராமசாமிக் குருக்கள் சேவை யாற்றி வந்தார். இ. ..ரே இவ்வாலயத்தில் திருவோணதீப உற்சவத்தை ஆரம்பித்து வைத்தவர். அத்துடன் எமது ஆலய மஹோற்சவத்திற்கென சிறந்த பத்ததியினையும் தொகுத்து எழுதியவர். இப்பத்ததியும், பத்ததி வழிக்கிரியைகளும் இன்றளவும் ஆலயத்தினரால் பேணப்பட்டு வருகின்றது.

1966 - 1967 காலப்பகுதியில் அடியேனின் அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய நவாலி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாத குருக்கள் குருத்துவ சேவையில் ஈடுபட்டார். இவருடன் இவர் மைந்தர் பிரம்மஸ்ரீ வி.வேங்கட சுப்பிரமணியக் குருக்கள் (மணி ஐயா) பிரதம ஆலய அர்ச்சகராக சேவையாற்றினார். 1978 இல் மஹாகும்பாபிஷேகமும் 1985 இல் சம்புரோக்ஷண கும்பாபிஷேகமும் சாமி விஸ்வநாதக் குருக்களால் நடாத்தி வைக்கப்பட்டது. இவ்விரு கும்பாபிஷேகங்களி லும் பங்கு பற்றும் பேறு அடியேனுக்கு கிடைக்கப்பெற்றமை பெரு மாளின் திருவருளே. 1985 கும்பாபிஷேகத்துடன் அடியேனுக்கு பெருமாளின் கைங்கரிய சேவை நெருக்கமாயிற்று.

1987 இல் குருத்துவ சேவையில் பொறுப்பேற்ற அடியேனுக்கு, எனது தம்பியார் பிரம்மஸ்ரீ சா.ரமணேஷ சர்மா, மற்றும் ஆலயப் பரிசாரகர் அமரர் பிரம்மஸ்ரீ தாமோதர ஐயர் ஆகியோர் துணையாக ஈடுபட்டிருந்தனர்.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

அடியேனின் குருத்துவ சேவையின் பயனாய் 1996 இல் அந்தரீத கும்பாபிஷேகமும், இவ்வாண்டு மஹா கும்பாபிஷேகமும் ஆற்றும் பெரும் கைங்கரியம் இடம் பெற்றமை பெருமாளின் திருவருளே. நாட்டுச் சூழல் காரணமாக புலம் பெயர்ந்து இருப்பினும் தொடர்ந்தும் பெருமாளின் குருத்துவ சேவையில் ஈடுபட்டு வருதல் அடியேனுக்கு ஆத்ம திருப்தியை தருகின்றது.

1999 இல் எனது தம்பியார் பிரம்மஸ்ரீ சோ.குகதாசசர்மா பிரதம அர்ச்சகராகவும், மற்றும் பிரம்மஸ்ரீ க. சுரேந்திர சர்மா ஆகியோரின் சேவையின் பின்னர் எனது அன்பிற்குரியவரும், சக மாணவரும், உற வினருமாகிய பிரம்மஸ்ரீ ஸ்ரீ வத்ஸவரத ராஜேஸ்வரக் குருக்கள் குருத் துவ சேவையில் ஈடுபட்டுச் சேவையாற்றி வருகின்றார்.

சரண் என்று அடைபவர்களைக் காத்தருளும் பெருமாள் அனை வருக்கும் நல் வாழ்வை அளிக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

தேவஸ்தானத்தைச் சேர்ந்தோர் கும்பாபிஷேக நிகழ்வை ஒட்டி சிறப்புமலர் ஒன்று வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அடியார்களுக்கு ஆத்மீக சிந்தனையை ஊட்டும் மலராக இது அமைவ தோடு மட்மல்லாமல், ஆலயத்தின் வரலாற்று ஆவணமாக அமையும் எனக் கருதுகின்றேன்.

சகல ஜீவராசிகளும் சுபீட்ஷமாக வாழவும், கும்பாபிஷேக சிறப்புமலர் வாடா மலராக அருள்மணம் கமழவும் எல்லாம் வல்ல ஸ்ரீதேவி, பூமி தேவி சமேத ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாளின் பாதாரவிந்தங் களை நினைந்து ஆசி கூறுகின்றேன்.

'சர்வத்ர கோவிந்த நாம சங்கீர்த்தனம்'

*- பிரம்மஸ்ரீ சாமி. சுந்தரேஸ்வரக் குருக்கள்*
*தாவடி*

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# ஆசிச்செய்தி

தேவஸ்தான பிரதமகுரு வழங்கிய மங்களாசாஸனம்

க்ருதேது நிருஸிம்ஹஹோபூத் த்ருதேயாம் ரகு நந்தன:
துவாபரே வாசுதேவஸ்ய கலௌ வேங்கட நாயக:

சதுர்யுகங்களில் கிருதயுகத்தில் நரசிம்மனாகவும், திரேதா யுகத்தில் ஸ்ரீ இராமனாகவும், துவாபரயுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாகவும் கலியுகத்தில் ஸ்ரீ வேங்கடேசனாகவும் அருள் புரிகின்ற ஸ்ரீமந்நாராயணனின் திவ்ய பாதக்கமலங்களை பணிந்து வணங்குகின்றேன்.

தெய்வ சாந்நித்தியத்தை வலுப்படுத்தி திருவருட் சக்தியை அதிகரிக்கச் செய்யவும், நித்திய நைமித்ய கிரிகைகளில் வரும் குறைகளை நிவர்த்திக்கும் பொருட்டும் பன்னிரு ஆண்டுகளுக்கொரு முறை மஹாகும்பாவிஷேகம் செய்ய வேண்டுமென ஆகமங்கள் வலியுறுத்துகின்றன அறுபத்துநான்கு கிரியைகளை உள்ளடக்கிய கும்பாபிஷேகம் "பெரும் சாந்தி" என போற்றப்படுகிறது.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை ஓர் உருவத்துள் கொணர்ந்து அதற்கு நாமம்(பெயர்) சூட்டி முறைப்படி வழிபாடாற்றி பக்தி செலுத்துவது சைவ சமய மரபாகும்.

ஓர் ஆலயத்தை ஆகம முறைப்படி அமைத்து அதில் திருவுருவங்களை பிரதிஷ்டை செய்து மஹாகும்பாபிஷேகம், நித்யநைமித்ய உற்சவங்களை நடாத்தி வழிபடுவது மானிடப் பிறவியின் பலன். அது எல்லோருக்கும் கிடைக்காது. "தவமும் தவமுடையார்க்கே" எனும் வாக்கிற்கமைய முற்பிறவியிலே செய்த நல்வினைப் பயனாக எமக்கு இவை கிடைக்கின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள வைஷ்ணவ தலங்களுள் ஈழத்து திருப்பதி எனப்போற்றப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம் இற்றைக்கு சுமார் அறுநூறு வருடங்களுக்கு முன்பு மார்க்கண்டேயே ஹோத்திரத்தை சேர்ந்த பத்சாலி வைசியரால் ஸ்தாபிக்கப்பெற்று இன்றும் அவர்களாளேயே பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. நித்திய, நைமித்திய விழாக்கள் யாவும் பாஞ்சராத்ர ஆகம முறைப்படி சிறப்பாக நடைபெற்று வரும் இவ்வாலயத்திலே நிகழும் சுபானு வருஷம் ஆனித்திங்கள் 26ம் நாள் (10.07.2003) குருவாரமும் அனுஷ நக்ஷத்திரமும் ஏகாதசி திதியும் கூடிய சுபநாளில் மங்களகரமாக நிகழ்ந்தது. பகவானின் ஆலயத்தில் புதிதாக ஸ்ரீ ரங்கநாதர் வாயில் ராஜகோபுரமும், பரிவார மூர்த்திகளுக்கு நூதன ஆலயமும், சிறப்பான சுதர்ஸனமூர்த்தியும் அமையப்பெற்று ஆலயம் எழில் மிகு வர்ணம் தீட்டி புது மெருகுடன் சிறப்பாக விளங்குகின்றது. இவ்வரிய பணிகளை செவ்வனே நிறைவேற்றிய ஆதீன மஹாசபையினருக்கும், நிதியுதவிகள் பொருளுதவிகள் செய்த தர்ம சீலர்களுக்கும், இப்பணிகளை சிறப்புற செய்த பணியாளர்களுக்கும் கும்பாபிஷேக வைபவங்களில் கலந்து சிறப்பித்த அந்தண பெருந்தகைகள், அடியார்கள் மற்றும் அனைவருக்கும் எம்பெருமானின் திருவருளினால் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு கிடைக்க பிராத்தித்து எமது நல்லாசிகளை தெரிவிக்கின்றோம்.

கண்ணன் கழலினை நண்ணும் மனமுடையீர் எண்ணும் திருநாமம்
திண்ணம் நாராயணமே.

சுபமஸ்து

ஸ்ரீவத்ஸ. வரதராஜ இராஜேஸ்வரக் குருக்கள்
பிரதம குரு
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
யாழ்ப்பாணம்.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வாழ்த்துச்செய்தி

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்
248/1 காலி வீதி, கொழும்பு 4

காத்தற் கடவுளாகிய விஷ்ணு பகவான் (வரதராஜப் பெருமாள்) யாழ்ப்பாண நகரிலிருந்து அருளாட்சி புரியும் இடம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயமாகும். "சர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்பது வைஷ்ண சமயத் தவர்களின் கோட்பாடாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் நகரிலே ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயமும், வடமராட்சியில் வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் பொன்னாலையில் வரதராஜப் பெருமாள் ஆலயமும் சிறப்புமிக்க விஷ்ணு தலங்களாகக் காணப்படுகின்றன.

விஷ்ணு பகவான் வெளிப்படும் வடிவங்களாக பரம், வியூகம், விபவம், அந்தர்யா மித்துவம், அர்ச்சை என்பன காணப்படுகின்றன. இவற்றில் விபவம் என்பது அவதார வடிவத்தினைக் குறிக்கின்றது. எப்பொழுது அறம் அழிந்து மறம் மேலோங்குகின்றதோ அப்பொழுது நல்லோரைக்காக்கவும் தீயோரை அழிக்கவும் நான் யுகம் யுகம் தோன்றி திரு அவதாரம் செய்கின்றேன் எனக் கிருஷ்ண பரமாத்மா பகவத் கீதையில் கூறியுள்ளார். அர்ச்சை வடிவமாகிய விக்கிரக வடிவத்திலே இருந்து இறைவன் அருளாட்சி புரியும் திருத்தலங்களே விஷ்ணு தலங்களாக காணப்படுகின்றன. தென் னிந்தியாவின் திருப்பதியில் இருக்கின்ற ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலயமும் திருச்சியில் உள்ள ஸ்ரீ அரங்கநாதர் ஆலயமும் பழமை யும் பெருமையும் திருவருட் சிறப்பும் மிக்க ஆலயங்களாகத் திகழ்கின்றன.

விஷ்ணு பகவானின் திருவருளுக்குப் பாத்திரமான அனுபூதிச் செல்வர்களாகிய பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் தமிழிலே உள்ள மிகச்சிறந்த தோத்திர நூல்களாக காணப்படுகின்றன. ஆழ்வார்களின் பாடல்களை வைஷ்ணவாகள் தேவகானம் எனப் போற்றுவார்கள். உலகியல் வாழ்வில் நாம் அனுபவிக்கின்ற துன்பங்கள் துயரங்கள் நீங்கவேண்டுமானால் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்ற நாராயணனின் திருப்பாதங்களை வணங்குதல் வேண்டும் என்பதை துயரறு சுடரடி தொழுதெழுமனனே என நம்மாழ்வாரின் பாடல் குறிப்பிடுகின்றது. பக்தி வைராக்கியத்தின் உயர்ந்த நிலையினை ஆழ்வார்கள் பாடல்களில் காணலாம். தாய்மை, காதல், நட்பு ஆகிய மானுட அணுகுமுறைகளி

னூடாக ஆழ்வார்கள் இறைவனைப் பாடியுள்ளார்கள்.

பல நூற்றுக்கணக்கான மக்களால் பக்தி சிரத்தையோடு நாள்தோறும் வணங்கப்படும் தலமாக வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம் திகழ்கிறது. ஆலயம் மிகச் சிறப்பான முறையில் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. நித்திய நைமித்திய கிரியைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்தின் பிரதான வாசலில் மிகப்பெரிய கோபுரம் அழகான சிறபங்களுடன் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஸ்ரீ ரங்கநாதருக்கு ஆலயத்தின் தெற்கு வாசலில் மிகப்பெரிய இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுர கும்பாபிஷே கத்தை ஒட்டி வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளின் திருவருட் கடாட்சம் அனைத்து மக்களுக்கும் கிடைக்கவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

*திரு.தி.மகேஸ்வரன் (பா.உ)*
*இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர்.*

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ் தானத்தின் கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 10.07.2003 அன்று நடைபெறவுள்ளதென அறிந்து விழா சிறப்புடன் அமைய இறையருளைப் பிரார்த்திக் கின்றோம்.

"கையில் எண்ணெயைத் தடவிக்கொண்டு பலாப்பழத்தை அறுத்தால் அதன் பிசின் கையில் ஒட்டாது. அவ்வாறே இறைபக்கதியை வளர்த்துக்கொண்டால் உலகக் கவலைகள் மனதை அண்டாது." என்பார் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்.

இறைவழிபாட்டிற்காக அமைந்த இடமே ஆலயம். எனவே தான் ஆலயந் தொழுவது சாவும் நன்று என்றனர் நமது பெரியோர். இறைவழிபாட்டின் மூலம் மனம் தூய்மை பெறுகிறது. அவ்வாறே மனத்தூய்மையின் காரணமாக இறை வழிபாடும் பக்திபூர்வமாக அமைகிறது.

நமது சமயத்தைப் பெருமைப்படுத்திய எண்ணற்ற ஞானிகள், இறைவழி பாட்டின் மூலம் உன்னத நிலையை அடைந் ததை அவர்கள் அருளியுள்ள திருப்பாடல்கள் வாயிலாக அறியலாம். இறையனுபூதியின் வெளிப்பாடாக அமைந்துள்ள அப்பாடல்கள் இன்றும் மக்கள் மனதை நல்வழிப்படுத்தும் அற்புத ஆற்றல் கொண்டவையாக உள்ளதைக் காணலாம்.

அனைவருக்கும் இறையருள் சித்திக்கப் பிரார்த்திக்கின்றோம்.

சுவாமி. ஆத்மானந்தா.
ஸ்ரீராம கிருஷ்ணமிஷன்,
கொழும்பு.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வாழ்த்துச்செய்தி

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு
248.2.1 காலி வீதி, கொழும்பு - 04
28-01-2003

யாழ்.மண்ணிற்கு பெருமை சேர்க்கும் ஆலயங்களில் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயமும் ஒன்றாகும். பல நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த இவ்வாலயம் அற்புதங்களும், அதிசயங்களும் நிகழ்த்தி மக்களை அணைத்து நிற்கும் தெய்வீகத் தன்மை கொண்ட ஆலயமாக விளங்கு கின்றது.

புதிய சுபானு வருடத்தில் ஸ்ரீ வேங்கடேச பெருமாள் தேவஸ்தானத் தின் அங்கமாக ஸ்ரீ ரெங்கநாத சுவாமி, சந்நிதி முகப்பில் அமைந்துள்ள ஐந்து தள கோபுரத்திற்கும், ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளுக்கும், சம்பூரண புனருத் தாரண மகா கும்பாபிஷேகம் நடத்த திருவருள் கூடியுள்ளது கண்டு மிகவும் மனமகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாலயத்தின் ஐந்து தள அமைப்பையும், ஆலயத்தையும் புனருத்தாரணம் செய்ததுடன் நின்றுவிடாது, ஆலய சூழலையும், அழகுபடுத்தி ஆலயத்திற்கு அழகு சேர்த்த பெருமை தேவஸ்தான மகாசபையைச்சாரும். இப்பணியில் முழுமையா கத் தங்களை ஈடுபடுத்திக்கொண்ட மகாசபையினரை மனமார பாராட்டுகின்றேன். ஆலயங்களின் வளர்ச்சிக்கு அறங்காவலர்களின் பணி மிகவும் அத்தியவசியமானது. ஆலய பூசை வழிபாடுகளுடன் ஆலயங்கள் நின்றுவிடாது, சமூக சமய பணிகளிலும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வதன் மூலம் ஆலயம் சார்ந்துள்ள சமூகமும் கிராமமும் பெரும் பயனை அடைகின்றன.

இத்தகைய சமூக, சமயப் பணிகளில் வருங்காலத்தில் தேவஸ்தான மகாசபை தம்மை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம், சமூகத்திற்கு நற்பணிகளை செய்தவர்களாக மிளிர்வார்கள்.

உத்தராயண காலத்தில் ஆனிமாத சுப நாளில் நடைபெறும். இம் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடந்தேறி, சகல மக்களுக்கும் ஸ்ரீ வேங்கடேச பெருமானின் இன்னருள் கிடைத்திட திருவருளை வேண்டி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*திரு.பரமேஸ்வரன்.*
*செயலாளர்.*
*இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு,*
*கொழும்பு - 04.*



ஸ்ரீ மகாலக்ஷ்மி பரிவார மூர்த்தி



சிலா விக்கிரகம்
ஸ்ரீ ஆண்டாள் தேவி - பரிவாரமூர்த்தி

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# திருவேங்கடவரதனது திருக்கோவிலும் கோபுரத்தில் அமைந்துள்ள சிற்பங்களும்

திருவளரும் வண்ணையம்பதியில் எழுந்தருளிக் காட்சிதரும் வைணவத்தின் முழுமுதற்பொருளாக விளங்கும் அருள்மிகு ஸ்ரீவேங்கடவரதனது திருத்தலம் தென்னிந்திய திருப்பதி தேவஸ் தானத்தின் ஐதீகங்களை பின்பற்றும் சேத்திரமாக விளங்குகின்றது. நல்லூர் இராஜதானியின் வாரிசு ஆன தமிழ் மன்னன் குண பூசணசிங்கை ஆரியன் காலத்து சிறிய உருவில் பத்ம சாலி செட்டிகளால் தமது வைணவசமய சம்பிரதாயத்தையும் தமது சமூகத்தினரின் தெய்வழி பாட்டையும் வளர்பதற்கு என இவ்வைசிய குலத்தவரால் உருவாக்கப் பெற்ற திருக்கோவிலாகும். இந்த வைணவ ஆலயம் ஏறத்தாழப் 14 ஆம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டது ஒன்றாகும்.

இத்தேவஸ்தானம் உருவாக்கப்பெற்ற காலத்து ஸ்ரீவேங்கடேசப் பெருமாளே சிலா விக்கிரமாக ஸ்தாபிக்கப்பட்டார். பின்பு 18 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டினின்று கொணரப்பட்ட ஸ்ரீதேவி, பூமிதேவியுடன் கூடிய ஸ்ரீவரதராஜப் பெருமாள் சிலா விக்கிரகங்கள் கருவறையில் அமைக்கப்பெற்றன. 1940 ஆண்டில் ஸ்ரீவேங்க டேசப்பெருமானின் சிறிய விக்கிரகத்தை கருவறையின் மத்தியில் அமைத்து இவரின் பின்புறத்து ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரான ஸ்ரீவரதராஜப் பெருமாளை சாயா விக்கிர கமாக ஸ்தாபித்தனர்.

கருவறையின் விமானத்தில் சுதை விக்கிரகங்கள் அமைந்துள்ள இவ்விமானம் அட்டகோணவடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விமானத்தில் இடம்பெறும் சுதை விக்கிரகங்கள் ஆவன கிழக்கில் ஸ்ரீவேங்கடேசப்பெருமாள், ஸ்ரீமந் நாராண மூர்த்தி - ஸ்ரீதேவி கல்யாணகாட்சி தெற்கில் இதன் அருகே ஸ்ரீதேவியை தமது தொடையில் இருத்திய வண்ணம் காட்சி தரும் ஸ்ரீநரசிம்ம மூர்த்தி, மேற்கில் ஸ்ரீதேவி பூமிதேவியுடன் வீற்றிருக்கும் ஸ்ரீசூரிய நாராணய மூர்த்தி வடக்கில் ஸ்ரீதேவி, பூமிதேவியுடன் கூடிய ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஐந்து தலை அரவின் மீது வீற்றி ருக்கும் காட்சி, இத்துடன் நான்குதிக்குகளிலும் சிம்மங்களுடன் கூடிய கருடர்கள் இடம்பெறுகின்றனர்.

1948 ஆண்டில் ஸ்ரீரெங்கநாதசுவாமியின் பீடம் உருவாகி இதற்கு என விமானமும் அமைக்கப்பெற்றது. இந்த விமானத்தின் முன்புறத்தில் ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரான ஸ்ரீரெங்க நாதர் ஆதிஷேசனாகிய அரவின் மீது பள்ளிகொள்ளும் காட்சியும், ஸ்ரீகிருஷ்ணன் வேய்ங்குழல் ஊத இராதை இவனின் திருப்பாதம் அருகே இருந்து இவனது இசையைக் கண்டுரசிக்கும் காட்சியும். ஸ்ரீசங்கரநாராயணனது திருவுருவமும், நான்குபக்கத்தேயும் கருடர்கள் இடம்பெறுகின்றனர். ஸ்ரீமகாலஷ்மி

யின் விமானத்தின் முற்பகுதியில் ஸ்ரீமகாலஷ்மியினதும் அஷ்டலக்ஷ்மிகளினதும் உருவங்கள் ஆவனவும் சுதையினால் செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீஆண்டாள் தேவியின் விமானத்தில் இடம்பெறும் சிற்பங்கள் ஆவன ஸ்ரீஆண்டாள் பெருமாட்டியின் திருவுருவமும், ஸ்ரீபூமிதேவியின் கல்யாணமும், ஸ்ரீஉருக்குமணிதேவி சத்தியபாமா சமேதரான ஸ்ரீகண்ணனது காட்சியும் இடம்பெறு கின்றன.

ஜாகசாலையில் முன்பகுதியில் இடம்பெறும் சிறப்பம்சங்கள் ஆவன பெரிய தென்கலை நாமம் உருவாக்கப்பெற்று இருபுறங்களிலும் சங்கும், சக்கரமும் பொறிக்கப்பட்டுள்ளன. வசந்த மண்டப முன்பகுதியில் சித்திரிக்கப்பெற்ற சிற்ப ங்களாவன பெரிய உருவிலான துவாரபாலகர்கள், ஸ்ரீதேவி, ஸ்ரீபூமிதேவியுடன் கூடிய ஸ்ரீவரதராஜப்பெருமாள் இவரின் இருப்பக்கத்தும் கருடனும் அனுமானும் இவர்கள் பக்கத்தே மச்ச, கூர்ம அவதாரங்களும் இடம்பெறுகின்றன. மகாமண்ட பத்திலுள்ள சிறப்பம்சங்களாவன - ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதரான ஸ்ரீவரதராஜப் பெருமாள் இவரின் இரு புறத்திலும் ஸ்ரீகருடனும், ஸ்ரீஅனுமானும் வாய் புதைத்து பணிவுடன் நிற்கும் காட்சி இடம்பெறுகிறது. ஸ்ரீரெங்கநாத சந்நிதியிலுள்ள சிற்ப்ப ங்களாவன: ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதரான ஸ்ரீரெங் கநாத சுவாமி ஆதிஷேசனாகிய பாம்பின் மீது சயனித்திருக்கும் காட்சி இவர் தனது நாபியில் ஸ்ரீபிரம்மனைத் தாங்கியுள்ளார். இவரின் முன்புறத்தில் கருடனும், அனுமனும் தொழுத வண்ணம் அமர்ந்துள்ளனர்.

தேரடியிலுள்ள ஆஞ்சநேயரின் சிற்பங்கள் ஆவன: இந்த ஆலயத்தின் முன் முகப்பில் ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்தியின் பெரிய உருவில் உருப்பெற்ற இவர் தனது இருகரங்களாலும் இதயத்தைப்பிழந்து ஸ்ரீராமன் ஒருவரே தன்உள்ளத்தில் இருப்பவர் என்பதை பக்தர்களுக்கு புகல்கின்றார். இவ்வாலயத்தின் பின்புறத்தே அனுமன் சஞ்சீவிமலையைப் பெயர்த்துச் செல்லும் காட்சியும் சுதை உருவில் செய்யப்பெற்றுள்ளன.

இத்தேவஸ்தானத்தில் 1978 ஆம் ஆண்டில் அமைக்கப் பெற்ற முதற்கோபுரமான ராஜகோபுரம் இலங்கையில் மிக உயரமான கோபுரமாக மக்களால் கணிக்கப்பெற்று வருகின்றது.

இக்கோபுரத்தில் சப்தமதளங்களிலும் இடம்பெறும் சுதை விக்கிரகங்கள் ஆவன வடபகுதி முழுவதும் ஸ்ரீராமாயண காவியத்தையும் தென்பகுதி முழுவதும் ஸ்ரீமத்பாகவத கதையையும் சித்திரிக்கின்றன.

ஸ்ரீராம அவதாரத்தை விரித்துரைக்கும் இதிகாசத்தை ஸ்ரீராமாயணம் என்றும் ஸ்ரீகிருஷ்ணனது அவதாரத்தையும் அவரது லீலைகளையும் ஸ்ரீமத் பாகவதம் என்றும் வைணவர்கள் அழைப்பர். இந்த இரு கதைகளின் முக்கிய அம்சங்கள் சுதை உருவாக்கங்களாகச் செயப்பட்டு விரவிக்கிடக்கின்றன. அத்துடன் ஸ்ரீமந்

நாராயணன் இப்பூவுலகில் எடுத்த அவதாரங்கள் பத்து என புராணங்கள் இயம்புகின்றன. அவை மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, ராம, பலராம, கிருஷ்ண, கல்கி அவதாரங்கள் ஆகும்.

## ஸ்ரீராமாயணத்தைச் சித்திரிக்கும் சுதை விக்கிரகங்களின் அமைப்பு

ஸ்ரீராமன் குழந்தைப் பருவத்தே கூனியாகிய மந்தரையின் கூனிற்கு மண் உண்டை அடித்த காட்சி,, தசரதர் தனது புத்திரர்கள் ஆகிய ஸ்ரீராமனையும், இலக்குவனையும் விசுவாமித்திர முனிவருடன் தண்டகாரூணிய வனத்திற்கு அனுப்பிய காட்சி. வசிட்ட முனிவரின் மனைவி அகலிகை கல்லுரு நீங்கப்பெற்றமை. மிதுலையில் ஜனகனது வில்லை முறித்து உப்பரிகையில் நின்ற சீதையை நோக்கினான் ஸ்ரீராமன், சீதையும் நோக்கினள் ஸ்ரீராமனை என்னும் காட்சியும், வனவாசத்தின் பொழுது சூர்ப்பனகை ஸ்ரீராம, இலக்குவணன் மீது மையல் கொண்டமையை உணர்ந்த இலக்குவன் இவளது மூக்கை அரிந்தமை. மாயமானாக வந்த மாரீசனை ஸ்ரீராமன் அம்பு எய்து வதம் செய்தமை, இலங்கை வேந்தன் இராவணனால் வதை உண்ட சடாயுப்பட்சி, கிஷ்கிந்தையில் ஸ்ரீராமன் அனுமனைச் சந்தித்தமை, வாலியும், சுக்கீரவனும் பொருதும் பொழுது ஸ்ரீராமன் ஏவியகணை ஏழு மராமரங்களைத் துளைத்து வாலியின் நெஞ்சில் ஸ்ரீராமபாணம் புகுந்த காட்சி, அசோக வனத்தில் சிறையிருந்த செல்வி சீதையிடம் அனுமன் சென்று கணையாளி பெற்றுவந்த காட்சியும், ஸ்ரீராம இராவண யுத்தமும், ஸ்ரீராம பட்டாபி ஷேக வைபவமும் இக்கோபுரத்தின் ஏழு தளங்களிலும் விரவிக்கிடக்கின்றன.

## ஸ்ரீகிருஷ்ணனது லீலைகளில் முக்கிய அம்சங்களின் அமைப்பு

குழந்தை ஆகிய ஸ்ரீகிருஷ்ணன் ஆலிலையில் துயில்கின்ற வண்ணம் காற்பெரு விரலைச் சுவைக்கும் காட்சி. ஸ்ரீகிருஷ்ணன் பசுக்கன்றுகளை அவிழ்த்துவிட்டு ஆயர்சேரிப் பெண்களுக்குத் தரும் அன்புத் தொல்லைகள், ஸ்ரீகண்ணன் வெண்ணைக் கலையத்தை திருடி உண்ணும் காட்சி. வஞ்சகி, பூதகியின் மாயை அறிந்து அவள் நஞ்சுமுலையுண்ட காட்சி. உரலுடன் பிணையுண்ட கோபாலன் உரலை உருட்டிச் சென்று விருட்ச மாய் நின்ற நள, கூபரருக்கு சபவிமோசனம் அளித்தமை, கோபிகாஸ்திரிகளின் ஆடை கவர்ந்து சென்று மரத்தில் மறைத்து வைத்த காட்சி. ஸ்ரீகிருஷ்ணன் கம்சனை வதம் செய்த காட்சி. குருஷேத்திரத்தில் நடைபெற்ற பாரத யுத்தத்தில் பார்த்தனுக்குப் தேர்ச்சாரதியாக அமைந்து கீதா உபதேசம் செய்த காட்சி இவையாவும் இக்கோபுரத்தில் ஏழுதளங்களிலும் விரவிக் கிடக்கின்றன.

இதுமாத்திரமன்று கோபுரத்தின் மகர நாசிகளின் தென்புறத்து ஸ்ரீமகாலட் சுமியின் சுதையுருவமும், வடபுறத்தில் ஸ்ரீஆண்டாளின் திருவுருவமும் இடம் பெறுகின்றன. மற்றைய தளங்களில் ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதரான ஸ்ரீவே வங்க டேசப் பெருமாள் கருடனில் காட்சியளித்தலும் ஆதிஷேசன் மீது ஸ்ரீதேவி பூமிதேவி

ஓம்
ஸ்ரீராமஜெயம்

சமே தராக ஸ்ரீரெங்கநாதர் அருந்துயில் கொள்ளும் காட்சியும் ஸ்ரீமந்நாராயணனதுதச அவதாரமாகிய மச்ச, கூர்ம, வராக, நரசிம, பரசுராம, ஸ்ரீராம, பலராம ஸ்ரீகிருஷ்ண, கல்கி ஆகிய சுதை விக்கிரகங்களும் விரவிக்கிடக்கின்றன. அத்துடன் கருடப் பட்சிய தனில் ஸ்ரீதேவி பூமிதேவியுடன் ஸ்ரீமகாவிஷ்ணு எழுந்தருளும் காட்சியும், ஸ்ரீமுருகன் வள்ளியின் காதல் காட்சியும் ஸ்ரீகண்ணன் ராதை குலவும் காட்சியும் துவார பாலகர்கள் குதிரை மீது அமர்ந்திருந்து காவல்புரியும் காட்சியும் கோபுரத் தில் சகல ஜீவராசிகளினதும் உருவங்களும், தேவர்கள், மானிடர்கள், அரசர்களது சிற்பங்களும் அமைந்துள்ளன. ஆகையால் மக்களாகிய நாம் அவசியம் கோபுர தரிசனம் செய்தல் அவசியமாகும். கோபுரமாவது பகவானின் அற்புத சிருஷ்டியாகும்.

*தலைவர்*
நா.ஸ்ரீரஞ்சன்
***வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்***
*யாழ்ப்பாணம்.*



ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வண்ணைவாழ் வேங்கட வரதனது வனப்பு

இலங்கையின் வட புலத்தில் யாழ்.குடாநாட்டில் யாழ்.நகரில் வண்ணையம் பதியில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் யாழ்.நகரில் வண்ணையம்பதி பெரு நிலப்பரபை உடைய குறிச்சியாகக் கருதப்படு கின்றது இப்பெருநிலப்பரப்பில் தென்கிழக்குப் பகுதியில் இத்தேவஸ்தானம் அமையப் பெற்றுள்ளது. இத்தேவஸ்தானம் தன்னகத்தே அடக்கியுள்ள பண்டைய யாழ்.பட்டின குறிச்சிகள் ஆவன. கிழக்குப் பகுதிக் குறிச்சிகள், பாணன் காடு, சந்தநாதன் தோட்டம், தென்பகுதிக் குறிச்சிகள் சருவீச்சிக்காடு தட்டான்துறை மேற்குப்பகுதிக்குறிச்சி அடியார்க்கு நல்லான் வரம்பு. வடக்குப்பகுதிக் குறிச்சிகள் சந்தநாதன் தோட்டம், வண்ணான் தோட்டம் ஆகியனவாகும். தேவஸ் தானத்தின் வெளிப்பிரகாரத்தில் கிழக்குப்பகுதியில் ஆஞ்சநேயர் சந்நிதியும், தேர்முட்டியும், சிறிய கருடன் ஆலயங்க ளும் அமைந்துள்ளன. தெற்குப்பகுதியில் பூந்தோட்டமும் சந்திர புஸ்கரணி என்ற நாமமுடைய தீர்த்தக்கேணியும் அமைந்துள்ளன. மேற்குப் புறத்தில் தேவஸ் தானத்திற்கு வரும் அடியவர் அக்காலத்தில் நீராடுவதற்குரிய கிணறும் அமையப் பெற்றுள்ளது. வடக்குப் பகுதியில் ஸ்ரீலக்சுமி நாராயணன் கல்யாண மண்டபமும் அமையப்பெற்றுள்ளன.

இத்தேவஸ்தானத்திற்குரிய ஆதனங்கள் கன்னாதிட்டிவீதி, மணிக்கூட்டு வீதி, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்.வீதி பருத்தித் துறை வீதி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

இத்தேவஸ்தானம் அமைந்துள்ள நிலப்பகுதியும் அதன் வெளிவீதியிலுள்ள காணிகள் யாவும் இத்தேவஸ்தானத்திற்கு உரித்தானவர்களான பத்ம சாலிகளால் நன்கொடை செய்யப்பட்டவையாகும்.

இத்தேவஸ்தானம் ஏறத்தாழ கி.பி 14 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது. இக்காலம் முதல் 17 ஆம் நூற்றாண்டு காலம் வரை இச்சாகியத்தாரின் வசதி படைத்தோரின் நிதி உதவியுடன் நித்தியபூசைக்கருமங்கள் நடைபெறலாயின. கி.பி 18 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.19 ஆம் நூற்றாண்டளவில் இச்சாக்கியத் தாரிடம் பெற்ற மகிமைப் பணமூலமும், ஆதனங்களில் பெறப்பட்ட குத்தகை நிதி மூலமும் தேவஸ்தானத்தில் வரவு செலவு நிகழ்த்தப்பட்டது. இக்காலத்திலேயே நவக்கிரக கோயிலும் அமைக்கப்பட்டது. மகோற்சவங்களும் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. புரட்டாதி சனீஸ்வர எள் தீப வருவாய் மூலமும் உற்சவ உபயக்காரரின் உபயப்பணம் மூலமும் உற்சவங்ள் நடைபெற்றன. ஏறத்தாழ 18 ஆம் நூற்றாண்டு காலத்து நவக்கிரக மண்டலம் ஸ்தாபிக்கப்பெற்றது. இம்மண்டலம் மற்றைய ஆலயங்களிலுள்ள நவக்கிரக மண்டலத்தின் நின்று அமைப்பில் வேறுபட்டதாகும். கி.பி 18 நூற்றாண்டு முதல் 1970 ஆம் ஆண்டுவரை தேவஸ்தான அர்ச்சனை வருவாய் யாவும் நித்திய நைமித்திய பூசைகள் செய்த பிரதம குருக்களினால்

சூலிக்கப்பட்டன. இதனால் தேவஸ்தானத்தில் திருப்பணி வேலைகள் சிலவற்றையே செய்யமுடிந்தன. கி.பி 1933 ஆம் ஆண்டில் தேவஸ்தானத்திற்குரிய மின்சாரம் யாழ்.மாநகர சபையின் மூலம் பெறப்பட்டன. 1905 ஆம் ஆண்டில் ஸ்ரீவேணுகோபால சுவாமி விக்கிரகமும், ஸ்ரீராமர், சீதா, லக்சுமணர், ஆஞ்சநேயர் மூர்த்திகளும் தாம்பரத்தினால் செய்யப்பட்டன. 1905 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரை ஸ்ரீவேணு கோபால சுவாமி விக்கிரகத்தைச் செய்து தேவஸ்தானத்திற்கு அன்பளிப்புச் செய்தவர்களால் படித்தரச் செலவும் மாதந்தோறும் செலுத்தப்பட்டது. 1970 ஆம் ஆண்டில் தீர்த்தமாடும் கேணியின் முகப்புத்தோற்றம் திருத்தப்பெற்று கேணியின் படிக்கற்கள் ஒழுங்குற அமைக்கப் பட்டது. ஒரு குறிப்பிட்ட காலம் வரை இக்கேணியில் சுவாமி தீர்த்தமாடும் வைபவம் நடைபெறாது இருந்தநிலை நீக்கப்பெற்று அன்று முதல் இன்றுவரை தீர்த்தோற்சவம் இக்கேணியில் நடை பெறுகின்றது. கி.பி.1907 ஆம் ஆண்டில் தேர் உற்சவத்தின் பொருட்டு செய்யப்பெற்ற கட்டுத்தேர் 1959 ஆம் ஆண்டு வரை தேர் உற்சவத்தின் அன்று இழுக்கப்பட்டு வந்தது. பின்பு 1958 ஆம் ஆண்டில் மகாசபையின் தீர்மானத்திற்கு அமைய அறங்காவலர் சபையின் பெருமுயற்சியினால் உருவாக்கப் பெற்ற சித்திர ரதம் 1960 ஆம் ஆண்டில் மகோற்சவத்தில் ரத உற்சவத்தின் அன்று மிக விமர்சையாக வீதிவலம் வந்தது.

## இச்சித்திரத்தேரின் உருவமைப்பு

இத்தேரில் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்கள் எமக்கு ஸ்ரீராமயண மகாபாரத இதிகாசங்களையும் ஸ்ரீகிருஷ்ண லீலைகளையும் அதன் வரலாறுகளையும் எடுத்து இயம்புகின்றன. இத்தேரின் மேல்த்தளத்தல் முதலாம் சுற்று வட்டத்திலுள்ள சிற்பங கள் ஆவன ஸ்ரீமத் நாராயணனின் தச அவதாரமான மச்ச, கூர்ம, வராக, வாமன, நரசிம்ம, பல ராம, ஸ்ரீராம, பரசுராம, ஸ்ரீகிருஷ்ண, கல்கி மூர்த்தங்கள் ஆகும். தேரின் கீழ்த்தளத்தில் முதலாவது சுற்றிலுள்ள சிற்பங்களாவன கண்ணன் மண்ணை யுண்ணல், பூதகிவதம், ஸ்ரீகிருஷ்ணன் வெண்ணெய் திருடுதல், உரலில் கட்டுண்டு கிடத்தல், காளிங்க நர்த்தனம், சகடாசுரன் வதம், கம்சன்வதம், ஸ்ரீகிருஷ்ணன் அர்ச்சுணனுக்கு கீதையை உபதேசம் செய்தல், உருக்குமணி சத்திய பாமா சகிதம் ஸ்ரீகிருஷ்ணன் காட்சி தருதலாகும்.

மேல்தளத்தில் இரண்டாவது சுற்றில் ஸ்ரீராம காவியத்தை சித்திரிக்கும் சிற்பங்கள் ஆவன ஸ்ரீராம பட்டாபிஷேகம், அகலிகை சாபவி மோசனம், சீதா கல்யாணம், ஸ்ரீராமன் அனுமனையும் சுக்கிரீவனையும் சந்தித்தல், சேதுபந்தன காட்சி ஆகியன இடம்பெறுகின்றன.

கீழ்த்தளத்தில் இரண்டாம் சுற்றில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் ஆவன ஸ்ரீவேங்கடேசுவரப் பெருமாள், தில்லைக் கோவிந்தர், ஆதிஷேசன் மீது பள்ளிகொள்ளும் ஸ்ரீரெங்கநாதர், ஸ்ரீநிவாசப்பெருமாள், கஜேந்திர மோட்சம், இரணியனை வதம் செய்த ஸ்ரீநரசிம்ம மூர்த்தி, கருடன் மீது காட்சிதரும் ஸ்ரீவேங்கடேசுவரப் பெருமாள் ஆகிய காட்சிகள் இடம்பெறுகின்றன.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

மேற்தளத்தில் மூன்றாவது சுற்றில் பன்னிரு ஆழ்வார்களின் திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவையாவன பொய்கையாழ்வார், புதத்தாழ்வார், பேயாழ் வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், ஸ்ரீஆண்டாள் ஆவர். இத்துடன் ரதத்தின் மேல் கந்தருவர்களது சிற்பங்கள் செதுக்கப்பட்டுள் ளன. ரதத்தின் நடுப்பகுதியில் பவளத்தூண்களும் ரத பீடமாகிய சுவாமி வீற்றிருக் கும் பீடம் அலங்கார வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. தேரின் ஸ்தூபி யில் ரத உற்சவத்தின் முதல் நாள் இரவு பிரதம குருக்களினால் கிரியைகள் செய்யப்பட்டு கலசம் பொருத்தப் படுகின்றது. தென்னிந்தியாவில் 108 வைணவ தலங்கள் உள்ளன. அவற்றில் வடகலையைச் சார்ந்த ஸ்தலங்களும் தென்கலையைச் சார்ந்த ஸ்தலங்களும் உள்ளன. வடகலையின் முக்கிய ஷேத்திரமாக விளங்குவது திருப்பதி தேவஸ்தானமாகும். தென்கலையின் முக்கிய ஷேத்திரமாக விளங்குவது ஸ்ரீரங்கனது தேவஸ்தானமாகிய பெரியகோயிலாகும். இத் தேவஸ்தானம் வடகலையைச் சார்ந்த ஈழத்திருப்பதியாக யாழ்.குடாநாட்டில் விளங்குகின்றது.

ஸ்ரீரங்கநாதர் கோபுரத்திற்கு 10.06.1998 இல் அத்திவாரம் போடப்பட்டது. தொடர்ந்து திருப்பணி வேலைகள் சிறப்பாக நடந்தேறவும். மகாகும்பாபிஷேகம் இனிதே நடைபெறவும் என்னாலான வேலை களைச் செய்வதற்கு எனக்கு ஒத் துழைப்பையும் ஆதரவையும் வழங்கிய சபையின் தலைவர் செயலாளர் நிர்வாக சபை உறுப்பினர், சிவாச்சாரியார்கள், கட்டிடங்கள் நிர்மாணித்த ஆச்சாரியார், ஆலய ஊழியர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

பாரிய திருப்பணி வேலைகள் செய்து, கும்பாபிஷேகம் செய்ய பெரும் தொகைப் பணம் தேவைப்பட்டபோது பணஉதவி செய்த உள்நாட்டிலுள்ள தர்மசீருக்கும், வெளிநாட்டுகளிலிருந்து பணம் அனுப்பியவர்களுக்கும் எட்டுலட்சம் பெறுமதியான பெயின்ற் வகைகளை இனாமாக வழங்கிய C.I.C ஸ்தாபனத் தினருக்ரதும், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி புனர்வாழ்வு அமைச்சு அன்பளிப்பாக வழங்கிய ரூபா 629,000 ஐக்கிய தேசிய முன்னணி புனர்வாழ்வு அமைச்சு ரூபா 100,000வும் பெயின் வகைகளுக்கு தீர்வை அறவிடாமல் ஒத்துழைப்பு வழங்கிய தமிழீழ நிதி வருவாய் துறையினருக்கும், கும்பாபிஷேக விழா நடைபெற்றபோது விழா இனிதே சிறப்புற சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அன்பர்களுக்கும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்.

*நா.ஸ்ரீரங்கநாதன்*
*பொருளாளர்,*
*ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.*

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வண்ணையம்பதியில் வைணவம் வளர்த்த வைசியர்

வண்ணையம் பதியில் நெசவு தொழிலை வளம் பெறச்செய்த வைசியக் குலத்தோன்றல்கள் ஆகிய பத்மசாலிச் செட்டிகள் தமது வைணவ வழிபாட்டை பேணுவதற்கு பதின்நான்காம் நூற்றாண்டு காலத்து வண்ணை ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஆலயத்தைச் சிறிய உருவில் தோற்றுவித்தனர் இன்று இத்தேவஸ் தானம் வளர்ச்சியுற்று சிறந்த ஓர் வணக்கஸ்தலமாக விளங்குவதற்கு காரணமாகத் திகழ்பவர்கள் இன்று இத்தேவஸ்தானத்தை பரிபாலிக்கும் பத்மசாலிச் செட்டிகளும் இவர்களது மூதாதையரும் ஆவர் கி.பி 14காம் நூற்றாண்டு முதல் 18ம் நூற்றாண்டு வரை சிறிய கோவிலாக விளங்கி வந்த இவ்வாலயத்தை விஸ்தரிக்க இவ் வம்சத்தினர். கி.பி 1835ம் ஆண்டு தொடங்கிப் பல காணிகளை இத் தேவஸ்தானத்தின் வளர்ச்சிக்குத் தருமசாசனம் செய்துள்ளனர் அத்துடன் கி.பி 18ம் நூற்றாண்டு காலத்தில் இச்சாகியத்தினரின் இல்லங்களில் பல நெசவுத்தறிகள் இயங்கி வந்தன இத்தொழில் மூலம் பெற்ற வருவாயில் ஒரு குறிப்பிட்ட தொகையை இத்தேவஸ்தானத்தின் வளர்ச்சிக்கு வழங்கினர் என்று அக்காலத்து தேவஸ் தானக்குறிப்பேடு சான்றுபகர்கின்றது.

ஏறத்தாள கி.பி.1810ம் ஆண்டு தொடக்கம் இச்சாகியத்தாரில் நன்னிலையில் இருந்தோரின் முயற்சியால் மூன்று காலப் பூஜைகள் நித்தியம் நடைபெறத்தொடங் கின. இதன் பின் இச்சாகியத்தினரில் வளர்ச்சி படைத்தோர் ஒன்று சேர்ந்து இக்கோவிலை விஸ்தரிக்கலாயினர் இக்காலத்திலேயே மடப்பள்ளி, களஞ்சியஅறை உருவாகப்பெற்றன கி.பி.1820ம் ஆண்டளவில் ஒரு கும்பாபிஷேகம் நடைபெற்றதாக குறிப்பேடு கூறுகின்றது கி.பி.1840ம் ஆண்டளவில் ஸ்ரீமகாலக்ஷ்மி சந்நதி நவக்கிரகபீடம் உட்பிரகாரச் சுற்றுமதில் முதலியவற்றைக் கட்டியெழுப்பினர் கி.பி 1840 - 1878ம் ஆண்டுகட்கு இடைப்பட்டகாலத்தில் உட்பிரகாரத்தினுள் மகா மண்டபம், வசந்தமண்டபம் ஜாகசாலை, திருமஞ்சனக்கிணறு முதலியவற்றை பொழியப்பெற்றக் காட்டுக் கற்களினால் உருவாக்கி அத்துடன் வெளிப் பிரகாரத்தைச் செப்பனிட்டு பூந்தோட்டம், சந்திர புஷ்கரணி என்ற தீர்த்தக்கேணி ஆகிய வற்றை நிர்மாணித்தனர் இதன்பின் கி.பி 1878ம் ஆண்டளவில் இக்கோவிலில் பிரமோற்சவம் ஆரம்பிக்கப்பட்டது என குறிப்பேடு கூறுகின்றது. அக்காலத்தில் இச்சாகியத்தினர் தமது தொழிலின் பொருட்டு எவ்வளவு தூரம் தமது உறவினருடன் ஒன்றிணைந்தனரோ அதுபோன்றே வைணவ சமயத்தின் மீதும், ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் மீதும் பற்றுவைத்தனர்.

வண்ணயம் பதியில் வைணவம் வளர்த்த வைசியர் இத்திருக்கோவிலின் வளர்ச்சியிலும் உரிய கண்ணும் கருத்துங் கொண்டு,தமது இனத்தில் மூத்தோரின் வாய்ச்சொல்லுக்கு உரிய மதிப்பளித்து இவரில் தக்கோரைக் கனம்பண்ணி ஒற் றுமை வயப்பட்டு இவர்கள் ஒன்றிணைந்த ஒன்றுகூடல்மூலம் தக்கோரை தேர்வு

செய்து இத்தேவஸ்தானத்தை நிருவாகம்செய்ய கி.பி.1840ம் ஆண்டின் பின் அறங்காவலர் சபையை உருவாக்கினர் இக்காலத்து நான்கு அறங்காவலர்கள் மூலம் தேவஸ்தானத்தின் நித்தியகருமங்களையும் வருவாய்க்கு ஏற்ப திருப் பணிகளையும் செய்துவரலாயினர்.

ஏறத்தாழ கி.பி.1878ம் ஆண்டிற்கு முன்பதாக இச்சமுகத்தாரின் ஒன்றுகூடல் மூலம் எட்டு அறங்காவலர்களை நியமித்து அதற்கு என உறுதிச்சாசனம் உரு வாக்கி இவர்களது பொறுப்பில் தேவஸ்தான பொறுப்புக்கள் யாவற்றையும் வழங்கி தேவஸ்தான வளர்ச்சியில் கூடிய அக்கறை செலுத்தத் தொடங்கினர். அக்காலத்தில் நித்திய பூஜைக்கும், நித்திய மடப்பள்ளிச் சேவைக்கு மென அந்தணர்களை நியமித்து இவர்கள் குடியிருப்பதற்கென இல்லங்கள் வெளிப்பிரகாரத்தில் வழங்கி அக்காலத்து வருவாய்க்கு ஏற்றவகையில் ஒரு குறிப்பிட்ட ஊதியத்தை வழங்களாயினர்.

இச்சாகியத்தினர் தமது தொழிலையும் கவனித்துக்கொண்டு தொண்டு புரியும் உளத்துடன் இத்தேவஸ்தானத்தில் நடைபெறும் உற்சவகாலங்களில் திருவிளக்கேற்றுதல் தீர்வத்தி பிடித்தல் பிரகாரங்களைப்பெருக்குதல், வாகனங் களுக்கு கொம்புகள் கட்டுதல் களஞ்சியப்பொருட்களை உற்சவக்காலத்தில் வழங்குதல், முதலியவற்றைச் செய்ய உதவினர் ஏறத்தாழ கி.பி.1915ம் ஆண்டின் பின் சில மாற்றங்கள் ஏற்பட்டன. அவைபூந்தோட்ட வேலைகளையும், தேவஸ்தானக் களஞ்சியவேலைகளையும் செய்வதற்கு மாத வேதன அடிப்படையில் ஒருவரை நியமித்தனர். இதுபோன்றே தேவஸ்தான உட்பிரகாரத்தை பெருக்குவதற்கென ஒருவரையும் நியமனம் செய்தனர்.

ஏறத்தாழ 1900ம் ஆண்டு தொடக்கம் நித்திய பூஜைகளையும் சகல உற்சவங்களையும் பிரமோற்சவத்தையும் செய்யப் பொருத்தமான குருக்களை அக்கால வழமைக்கு ஏற்ப ஒரு குறித்த வேதனத்தை வழங்கி தேவஸ்தானத்தின் முழு அர்ச்சனை வருமானத்தையும் இக்குருக்களே பெறும் வசதி வாய்ப்பு அளித்தனர் இவ்வழக்கம் 1970ம் ஆண்டுவரை தொடரப்பெற்றது இவ்வாண்டின் பின் அறங்காவலர் சபையினர் மகாசபையின் அனுமதி பெற்று முழு அர்ச்சனை வருமானத்தையும்,அர்ச்சனை பற்றுச்சீட்டுக்களை மக்கட்கு வழங்கிச்சேகரித்தனர்.

1937ம் ஆண்டளவில் இச் சாகியத்தார் இத்தேவஸ்தானத்தின் செயற் பாடுகளை கண்காணிக்கும் ஒருமுறைமையான மகாசபையை உருவாக்கி வண்ணை ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் கோவில் ஆதீன மகாசபை யாழ்ப்பாணம் என்ற பெயர் சூட்டினர். சிறிய யாப்பு ஒன்றையும் உருவாக்கி இதில் அங்கம் வகிக்கக் கூடியவரின் தகுதியையும் குறிப்பிட்டுள்ளனர் அஃது பிறப்பால் வசியக்குலத்தைச் சார்ந்த பத்மசாலிச் செட்டிகளின் வாரிசில் உதித்த 18வயதும் அதற்கு மேற்பட்ட ஆண்கள் மாத்திரம் உறுப்பினராக இச்சபையில் இடம்பெறத்தகுதியுடையவர்கள் எனச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது இம்முறைமையான சபையில் வருடாந்தக்கூட்டத்தில் தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர் பொருளாளர் இதுதவிர்ந்த

உறுப்பினர்கள் நிருவாகசபையில் நியமனம் பெறுகின்றனர். மகாசபையினரே இவர்களைத் தெரிவு செய்வர் மகாசபையே உச்சவரம்புடைய சபையாகும் நிர்வாக சபையின் பரிந்துரைக்கு இணங்க அறங்காவலர் சபை இயங்குகின்றது நிருவாக சபை மாதம்தோறும் தேவஸ்தானத்துடன் சம்மந்தப்பட்ட விடயங்களை ஆராய்ந்து அதற்கு ஏற்ற தீர்மானங்களை இயற்றி மகாசபையின் அங்கீகாரத்தை பெற்று இவற்றை செயல்படுத்துகின்றது. தேவஸ்தானத்தின் கணக்கு வழக்கு யாவும் முறைமையாகப் பதியப்பட்டு வருடாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன இவற்றை கணக்கு பரிசோதனைச்சபை மகாசபையினால் நியமனம் பெற்றசபை பரிசீலனை செய்து உறுதிப்படுத்திய பின் மகாசபையின் அங்கீகாரத்தை பெறுகின்றன. தேவஸ்தானத்தின் திருத்த வேலைகள், திருப்பணி வேலைகள் யாவும் செய்வதற் கென விசேட உப சபைகள் நியமிக்கப்பட்டு அதன்மூலம் திருப்பணி சபையினால் இவ்வேலைகள் செய்யப்பெறுகின்றன இத்தேவஸ்தான ஊழியர்கள், அர்ச்சகர்கள் யாவருமே நிருவாகசபையின் பணிப்புரையின் பிரகாரம் மகாசபையினால் அங்கீகாரம் பெற்று இவர்களது நியமனம், வேதனம் யாவும் நிர்ணயிக்கப்படுகின்றன மகா சபை உறுப்பினரே இம்மகாசபையை அன்று முதல் இன்று வரை கட்டிக்காத்து வருகின்றனர். தேவஸ்தானத்தின் குறைநிறைகளை மாத்திரம் எடுத்தியம்பிக்கொண் டிராது தேவஸ்தானத்தின் வளர்ச்சிக்கு அருந்துணையாக அமைத்துள்ளது இச்சபை. வண்ணையம்பதியில் வேங்கடவரதனது மாட்சி நிலைத்திருப்பதாக.

சுபம்!

*ஸ்ரீ.பாலமுரளி*
*கௌரவ செயலாளர்*
*வண்ணை ஸ்ரீவேங்கடேசவரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்*
*யாழ்ப்பாணம்.*





தேவிமார் சகிதம் பகவான் ரத ஆரோகணம் செய்தல்



ஸ்ரீ வேணு கோபாலர் விக்கிரகம்

ஓம்
ஸ்ரீராமஜெயம்



# ஆலய அமைப்பும் சிறப்பும்



திரு. V.N.C. நாராயணசாமி.
(முன்னைநாள் அறங்காவலர்)

இந்துக்களின் தெய்வ வழிபாட்டிற்கு ஆலயங்களே உறுதுணையாக அமைந்துள்ளன. ஆலயங்களும் அதன் கோபுரங்களும் ஊருக்கு அணிகலனாகத்திகழ்கின் றன. இந்துமதம் சிற்பக்கலை, இசைக்கலை, சமய இலக்கிய கலைகளுடன் ஒன்றிணைந்த தத்துவங்களையும் சமயக் கிரியைகளையும் உணர்த்தும் மதமாகத்திகழ்கின்றது. இந்துமத ஆலயங்கள் மக்கள் பண்பாட்டின் உறைவிடமா கும். பசித்தோருக்கு பிரசாதம் என்கின்ற வகையில் உணவளிக்கும் நிலையங்களாகவும், சிற்பம், இசை, சுகாதாரம், சமய தத்துவங்களையும் பக்தி மார்க்கத்தை யும் மக்களுக்கு எடுத்தியம்பும் ஸ்தாபனங்களாக அமையப்பெற்றுள்ளன. இந்துக்களின் தெய்வ வழிபாட்டுத் தலங்கள் பல பெயர்களால் அழைக்கப்படு கின்றன. அவை தேவஸ்தானம், கோவில், தலம், ஷேத்திரம், ஆலயம் என்பனவாகும். பண்டைக் காலம் தொடங்கி இன்றுவரை கோவில் வழிபாடு மிகவும் அவசியமெனக் கருதி இந்து மக்கள் இதை விரும்பிப் பின்பற்றுகின்றனர். ஆலய வழிபாட்டை பிம்ப வழிபாடு என வைதிகர்கள் அழைப்பர். பிம்பம் என்பது உருவங்கள் விக்கிரங்கள் எனப் பொருள்படும்.

## ஆலய அமைப்புக்கள்

திருக்கோவில்கள் அமைக்கும் முறைகள் தொன்றுதொட்டுத் தமிழ்நாடு எங்கணும் சோழ, பாண்டிய, பல்லவ அரசர்களால் நன்கு பேணப்பட்டு வந்துள்ளன எனத் தமிழ் நாட்டில் உள்ள கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன. இந்திய கட்டடக் கலை மூவகையாக நெறிப்படுத்தப்பட்டுள்ளன. அவை நாகரம், வேசரம், திராவிடம் என்பனவாகும். தேவியர் சகிதம் இணைந்த மூலவரும், பரிவார மூர்த்திகளும் அமைந்த திருக்கோவில் சங்கீரண ஆலயம் என்று அழைக்கப்படுகின்றது. இவ்வாலயங்கள் ஆகம பண்பாட்டிற்கு அமைய உருவாக்கப்பட்டுள்ளன. பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் மரம், செங்கற்களைக் கொண்டு கோவில்கள் உருவாகப் பெற்றன என்று சரித்திரம் கூறுகின்றது. மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகிய பல்லவ மன்னர் மகாபலிபுரத்தில் கன்மலைகளைக் குடைந்து கற்கோவில்கள் அமைத்தனர் என தமிழ் அக வரலாறு புகல்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள திருக்கோவில்களில் பூஜை வழிபாடு இயற்றப்பெறும் தெய்வ விக்கிரகங்கள்

யாவும் கருங்கற்களினால் வடிக்கப் பெற்று பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளன. இது தமிழா பண்பாடாகும்.

# ஆலய அமைப்பும் சிறப்பும்

மேற்கூறிய திருக்கோவில்கள் அமைப்பில் வைணவம் சார்ந்த வைகானச ஆகம விதிமுறைகளுக்கு இணங்க யாழ் நகரில் ஏறத்தாழ பதினான்காம் நூற்றாண்டில் அரசோச்சிய தமிழ் மன்னனாகிய குணபூசன ஆரியன் செகராச சேகரனின் காலத்து சிறிய உருவில் வைணவ வழிபாட்டுத் தலமாக உருப்பெற்ற வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் ஆலயம் ஒல்லாந்தர் காலத்து புனர்நிர்மாணம் செய்யப பெற்றது. பின்பு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வளர்ச்சி பெற்று சகல பரிவார மூர்த்திகளின் சந்நிதிகள் அமையப்பெற்ற நிலையில் பிரசித்தமான நவக்கிரகபீடத்தை தன்னகத்தேயுடைய ஒரு திவ்விய ஷேத்திரமாக விளங்கத் தொடங்கியது. அன்று தொடங்கி இன்றுவரை இத்தேவஸ்தானத்தை வைணவ சமயத்தைச் சார்ந்த பத்ம சாலிச் செட்டிப்பிள்ளைகள் நிருவாகப் பரிபாலனம் செய்து வருகின்றனர்.

தமிழ் நாட்டில் உள்ள சைவாகம விதிக்கு உட்பட்ட சைவாலயங்களின் அமைப்பில் இருந்து சிறிது வேறுபட்ட தன்மையை உடையவை விஷ்ணு ஆலயங்கள். விஷ்ணு ஆலயங்களின் அமைப்புத் தன்மையாவன கர்ப கிருஹம், அர்த்த மண்டபம், ஸ்நபன மண்டபம் மகாமண்டபம் இதன் முடிவில் தான் மாற்றம் ஏற்படுகின்றது. இதனையடுத்து சிவாலயங்களில் நந்திபீடம் இடம் பெறுகின்றது. வைணவ ஆலயங்களிலும் இதே போன்று அவ்விடத்தில் கருடன் எழுந்தருளியிருக்கின்றார். ஆனால் இவர் தனது எஜமானாராகிய விஷ்ணு பகவானை தனது விரிந்த சிறகுகளால் மறைத்த வண்ணம் கைகூப்பி வணங்கிய வாறு நிற்கின்றார். இதனால் பக்தர்கள் கர்ப்பகிருஉறத்தில் வீற்றிருக்கும் பகவான் பெருமாளை நிருத்த மண்டபத்தினின்று வணங்க வியலாது தெற்கில் உள்ள வாயில் வழியாக மகா மண்டபத்தை அடைந்து தான் பகவானை சேவிக்க இய லும் என்பது உணரப் பாலது. இதன் காரணமாக இவ்வாலயத்திலும் இவ் வைணவ ஆகம விதிக்கு அமைய நிருத்த மண்டபத்தில் எழுந்தருளி நிற்கும் கருடனுக்கு ஓர் அளவில் கர்ப்பக் கிருஉறத்தை மறைக்குந் தன்மையில் ஒரு கோவில் சிறிய அளவில் உருவாக்கியுள்ளார்கள். இக்கோவில் ஸ்தாபிக்கப்பட்ட காலம் முதல் ஏறத்தாழ கி.பி 1790 ஆண்டுவரை சிறிய உருவிலான சிலா விக்கிரகமாகிய ஸ்ரீ வேங்கடேச மூர்த்தியே மூல மூர்த்தியாக இருந்து வந்தார். பின்பு இச் சாகியத்தினர் பலரின் விருப்பிற்கு ஏற்ப இத்தேவஸ்தானத்தை பரிபாலித்தவர்கள் தமிழ் நாடு சென்று ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரான ஸ்ரீவரதராஜப் பெருமாள் முகூர்த்தத்தை கொணர்ந்து இக்கோவிலின் கர்ப்பக் கிருஹத்தில் ஸ்தாபித்துவிட்டு ஸ்ரீ வேங்கடேச மூர்த்தியை அகற்றி ஸ்தலவிருட்சமாகிய பலாவின் கீழ் வைத்துவிட்டனர்.

சிறிது காலத்தின் பின்பு இத்தேவஸ்தானத்தின் வருமானமும் சீரும் சிறப்பும் குன்றத் தொடங்கியது. இதன் தன்மையை ஆகம சாஸ்திர வழிமுறையில் ஆராய்ந்து இதற்குரிய பிராயச்சித்தத்தை இயற்றுவதற்காக தமிழ் நாடு சென்று ஒருசில

வைணவ சமய ஆச்சாரிய விற்பன்னர்களின் ஆலோசனை பெற்று வந்து 1940ம் ஆண்டளவிற் இத் தேவஸ்தானத்தில் சகல விக்கிரகங்களையும் பாலஸ்தாபனம் செய்து இத்தேவஸ்தானத்தின் ஆதி மூலமூர்த்தியாகிய சிறிய உருவிலான ஸ்ரீவேங்கடேசப்பெருமாளை முன்போல் கர்பக்கிருஉறத்தில் ஸ்தாபித்து இவரின் பின்புறத்தில் இவரின் சாயா விக்கிரகமாக ஸ்ரீதேவி,பூமிதேவி சமேதரான ஸ்ரீவர தராஜமுகூர்த்தத்தையும் கர்ப்பக்கிருஉறத்தில் ஸ்தாபித்து 1941ம் ஆண்டில் புனருத் தாரண கும்பாபிஷேகத்தை மூலஸ்தானம் உட்படச் சகல பரிவார மூர்த்திகளுக்கும் நிகழ்த்தினார்கள்.

# வாஸ்து சாஸ்திரமும் இந்து சமயமும்

இந்து மத ஆலயங்களின் அமைப்பை வெறும் ஆலய வணக்கத்தல அமைப் பாகக் கருதாது ஒரு மானிடனின் உயிர் பொருந்தப்பெற்ற உடல் உறுப்புகளின் தன்மையை ஒத்ததான வடிவு என வாஸ்து சாத்திரம் புகல்கின்றது. இதற்கு ஏற்பவே இந்து ஆலயங்கள் அமைக்கப் பெறுகின்றன. அவையாவன சிகை - ஆலயஸ்தூபி, சிரசு - கற்பக்கிருஉறகம், முகம் - அர்த்தமண்டபம், கழுத்து-ஸ்நபனமண்டபம், இருதயம், வயிறு - மஹாமண்டபம், தொடை - நிருத்த மண்டபம், முளங்கால் - ஆஸ்தான மண்டபம், பாதம் - கோபுரம் என விபரிக்கப்படுகின்றன.

இவ்வாலயத்தில் ஸ்நபன மண்டபத்தில் மணிபூரகம் என்ற பகுதியில் ஸ்ரீரங்க நாதரின் சிலா விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீதேவி,பூமிதேவி சமேதராக ஸ்ரீ அரங்க நாதசுவாமி பிரமனை தாமரை மலரில் தாங்கிய வண்ணம் ஆதிஷேனா கிய ஐந்து தலைகளையுடைய அரவின் மீது சயனித்துள்ளார். இந்நிலையில் இவரது சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை பண்ணபட்டுள்ளது மஹா மண்டபத்தின் தென்பக்கத்தே ஸ்ரீவிக்கினேஸ்வரரின் சிலாவிக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வடபாகத்தே ஸ்ரீராமானுஜ ஆச்சாரியரின் தாம்பர விக்கிரகம் இடம்பெறுகின்றது. நிருத்த மண்டபத்தில் கருடனும், இவரின் பக்கத்தே கொடிஸ் தம்பமும் இதன் பக்கத்தே பலிபீடமும் ஸ்தாபிக்கப்பெற்றுள்ளன. ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு ஸ்தாபிக்கப் பெற்ற கொடிஸ்தம்பத்தின் இடைப்பகுதியாகிய விஷ்ணுபாகத்தில் இக் கொடிஸ்தம்பத்தில் முன்புக்கத்தில் வடகலை நாமமும், தெற்குப் பாகத்தில் சக்கரமும் மேற்குப்பக்கத்தில் ஸ்ரீவேங்கடேச விக்கிரகமும், வடக்கு பக்கத்தில் சங்கும் பொறிக்கப்பட்டுள்ளன. நிர்த்த மண்டபத்தின் வடபகுதியில் நவக்கிரக மண்டலம் அமையப்பெற்றுள்ளது. இவ்வாலயத்தில் உட்பிரகாரம், வெளிப்பிரகாரம் ஆகிய இரண்டு பிரகாரங்கள் இடம்பெறுகின்றன. இவற்றைத் தூலம், சூக்குமம், என்று அழைப்பர். தூலமாகிய உட்பிரகாரத்தின் தென்மேற்குப் பகுதியில் ஸ்ரீமகா லக்ஷ்மி சந்நிதியும், இதன்பக்கத்தே ஸ்தல விருட்சமாகிய பலாவும், ஸ்ரீசந்தான கோபாலர் சந்நிதியும், மையப்பகுதியில் ஸ்ரீவேணுகோபாலர் சந்நிதியும், ஸ்ரீராம சீதா, லக்ஷமண ஆஞ்சநேயசந்நிதியும் வடமேற்குப்பகுதியில் ஸ்ரீஆண்டாள் சந்நிதியும் இடம்பெற்றுள்ளன. இத்தேவஸ்தானத்தில் வசந்த மண்டபம் சுவாதிஷ்டானப் பகுதியிலும் இதன் மேற்குப் புறத்து ஜாகமண்டபமும் அமைந்துள்ளன.

பெரிய மணிக்கோபுரத்தின் பக்கத்தே ஸ்ரீ ஆஞ்சநேயரது தாம்பர விக்கிரகம்

சிறிய கோவிலினுள் இடம்பெற்றுள்ளது. பழந்தமிழ் நாட்டில் ஆலயங்களில் கரு வறையின் மேல் உள்ள விமானங்களையே மிக உயரமாக அமைத்து வந்தனர். இந்நியதியில் சோழ அரசனாகிய இராஜராஜன் காலத்தில் மாற்றம் ஏற்பட்டு உயரமான கோபுரங்கள் முக்கிய நுழைவாயிலாகிய கிழக்கு வாயில்களில் அமைக்கப பெற்றன. இவற்றை இராஜகோபுரங்கள் என அழைக்கின்றனர் இம்மாற்றத்தினால் இதன் பின்பு கருவறை விமானங்கள் உயரத்தில் குறுகிவிட்டன. இத்தேவஸ் தானத்தில் கருவறைவிமானம் 1972ம் ஆண்டில் அட்டாச்சரப் பொருளான ஸ்ரீவேங்க டேச வரதராஜப் பெருமாளுக்கு அஷ்ட கோணத்தில் அமைக்கப்பெற்று கும்பாபிஷே கம் நிகழ்த்தப்பெற்றது இவ்விமானத்தில் ஸ்ரீவேங்கடேசப் பெருமாள், ஸ்ரீ லக்ஷ்மிகல் யாணம், லக்ஷ்மிதேவி சமேத ஸ்ரீநரசிம்ம முகூர்த்தம்,சூரியநாரயணர், ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத வரதராஜப் பெருமாள், ஸ்ரீபூமிதேவி கல்யாணம் ஆகியனவும், சிம்மங்களுடன் கூடிய கருடர்கள் சுதை உருவில் உருவாகப் பெற்றுள்ளனர்.

ஆலய அமைப்பில் இராஜகோபுரங்கள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன இத்தேவஸ்தானத்தில் 1973ம் ஆண்டில் ஏழுதளங்களை உடைய இராஜ கோபுரம் ஒன்று உருவாகப்பெற்று 1978ம் ஆண்டில் நிறைவு பெற்று அவ்வாண்டிலேயே இராஜகேபுரக் கும்பாபிசேகம் நடாத்தப்பெற்றது. இதே போன்று இக் காலத்திலேயே பெரிய கண்டாமணி ஒன்றும் வார்க்கப்பெற்றது. கோபுரத்தில் ஸ்ரீராமாயண, பாரத காவியங்களின் சில பகுதிகளும், ஸ்ரீமத்பாகவதக் கதைகளின் அம்சமாகிய ஸ்ரீகிருஷ்ணலீலைகளின் சில பகுதிகளும், ஸ்ரீ மகாலக்ஷ்மி, ஸ்ரீஆண்டாள்தேவி, ஆதிஷேசனில் பள்ளி கொள்ளும் ஸ்ரீரெங்கநாதசுவாமி, ஸ்ரீவேங்கடேசப்பெருமாள் கருடனில் எழுந்தருளும் காட்சி, ஸ்ரீவரதராஜப் பெருமாளின் சுதை விக்கிரகங்கள் ஆகியன விரவிக்கிடக்கின்றன.

மணிபூரகம் என்று ஆகம சாஸ்திரத்தில் கூறப்பெறும் பகுதியில் ஸ்ரீஅரங்க நாதரது சிலா விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இச்சந்நிதி தெற்குத்திசையை நோக்கியவாறு அமைந்துள்ளது. இவரது சிலாவிக்கிரகம் 1948ம் ஆண்டில் தமிழ் நாட்டில் வடிவமைக்கப்பட்டதாகும். இவரது சந்நிதி ஸ்ரீரெங்கநாத சந்நிதி என வழங்கப்பெறுகின்றது. 1999ம் ஆண்டில் இவரின் சந்நிதி முகப்பில் ஐந்து தளங் களையுடைய பஞ்சேந்திரிய அவஸ்தை என்று கூறப்பெறும் கோபுரம் உருவாகப் பெற்று, இக்கோபுர தளங்களில் ஸ்ரீ அரங்கநாதனுடைய திருவடிவம், மற்றும் ஸ்ரீகிருஷ் ணரது லீலைகளும், ஸ்ரீ மகாலக்ஷ்மியினதும், ஸ்ரீ ஆண்டாள் தேவியினதும் சுதை உருவங்கள் வடிக்கப்பெற்று அடியவர்களுக்கு ஆனந்தமயமான தெய்வீக காட்சிகளை அருள்கின்றன. சுதை வேலைகள் யாவும் பூர்த்தியாகின்றன. இவ்வாண்டு தேதி 10 மாதம் ஜூலாய் 2003ல் கும்பாபிஷேக கைங்கரியம் நடைபெற உள்ளது.

இவ்வாலயத்தில் மகா மண்டபத்தின் முன் மேற்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதரான ஸ்ரீவரதராஜப் பெருமாளின் சுதை வடிவ அமைப்பு, இவர் தேவிமாருடன் கையில் சங்கு சக்கரம்,கதை ஆகியவற்றை ஏந்திய வண்ணம் நிற்க இவரது முன்னிலையில் கருடனும், அனுமனும் வாய்புதைத்து நிற்கின்றனர். ஸ்ரீரெங்கநாதரது சந்நிதி மேல்தளத்தில் ஸ்ரீ அரங்கர் ஆதிஷேசன் மீது அறிதுயில்

கொள்ளும் நிலையில் காட்சி தருகின்றார்.இவரது பாதார விந்தங்களைச் சேவித்த வண்ணம் கருடனும் அனுமனும் இருக்கின்றனர். ஸ்ரீமகாலக்ஷ்மியின் சந்நிதி விமானத்தில் அஷ்டலக்ஷ்மிகளின் சுதை உருவங்கள் இடம்பெறுகின்றன. அவை மகாலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி, வித்தியாலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, கஜலக்ஷ்மி, தனலக்ஷ்மி, தானியலக்ஷ்மி, சௌபாக்கியலக்ஷ்மி ஆவர். ஸ்ரீஆண்டாள் சந்நிதியின் விமானத்தில் ஸ்ரீஆண்டாளின் திருவுருவும், ஸ்ரீபூமி தேவி கல்யாணம், முதலியன சுதை உருவில் உருவாகப் பெற்றுள்ளன.

ஸ்ரீரெங்கேசரது விமானத்தில் ஸ்ரீஅரங்கநாதரது திருவுருவமும், ஸ்ரீராதையும் கிருஷ்ணனும்,ஸ்ரீசங்கரநாரயணமூர்த்தியும், கருடனது திருவுருவங்களும் சுதையில் வடிக்கப்பெற்றுள்ளன. வசந்தமண்டப வாயிலின் மேற்தளத்தில் ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத வரதராஜப் பெருமாளும் மச்ச, கூர்ம அவதாரங்களும் சுதை வடிவில் அமைக்கப் பெற்றுள்ளன. இவ்வாலயத்தில் பண்டுதொட்டு ஆறுகால நித்திய பூஜைகள் நடைபெற்று வருகின்றன. அவை உசக்காலபூஜை, காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, இரண்டாங்காலம்,அர்த்தசாமப்பூஜைகள் ஆகும். தினமும் திருப்பதி தேவஸ்தானத்தில் கடைப்பிடிக்கப்படும் ஸ்ரீவேங்கடேசசுப்பிரபாதச் சேவை ஐதிகம் இத்தேவஸ்தானத்திலும் தினமும் காலையில் நிகழ்த்தப் பெறுகின்றது. இத்தேவஸ் தானத்தில் கி.பி 1878ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை வருடந்தோறும் பிரமோற் சவங்கள் நடைபெற்றுவருகின்றன. இவ்வுற்சவம் வருடம் தோறும் புரட்டாதித் திங்களில் வரும் சுக்கிலபக்ஷத்திதியில் அத்த நட்சத்திரத்தில் துவஜா ஆரோ கணத்துடன் ஆரம்பமாகி ஒன்பதாவது தினமாகிய உத்தராட நட்சத்திரத்தன்று ரதோற்சவம் நடைபெறுகின்றது பத்தாவது தினமாகிய திருவோணநட்சத்திரத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது. இவ்வாலயத்தில் அமைந்துள்ள சந்திர புஷ் கரணி என்று அழைக்கப்படும் தீர்த்தக் கேணியில் நிகழ்த்தப் பெறுகின்றது பத்தாவது தினம் இரவு துவாஜா அவரோகணம் நடைபெறுகின்றது.கொடியேற்ற விழாவன்று இரவு ஜாகபூஜை ஆரம்பித்து 18க் காலங்களுக்கு இவ்வைபவம் நடைபெறுகின்றன. இதனால் வைதீக உத்தமர் இதை நவதின உற்சவம் என்று அழைக்கின்றனர். இந்த ஜாக வைபவம் தீர்த்த உற்சவத்துடன் பூர்த்தியாகின்றது.

மற்றும் உற்சவங்களிலும் இத்தேவஸ்தானத்தில் பிரமோற்சவத்திலும் இடம் பெறும் சிறப்புக்கள் முதற்தினமாகிய கொடியேற்ற விழாவன்று தேவிமாருடன் சுவாமியை சூரிய விருத்தச் சேவையில் எழுந்தருளச்செய்து துவஜாரோகண வைபவக்கிரியைகள் யாவும் வைணவ சம்பிரதாயத்திற்கு ஏற்ப வைகானஸ ஆகம விதிப்படி நிகழ்த்தப் பெற்று இறுதியில் கருடபத்ததி ஓதப்பெற்று துவஜா ஆரோகணம் நிகழ்த்தப்பெறுகின்றது பின்பு வெளிப்பிரகாரத்தில் அஷ்டதிக்குப் பாலகர்களை அஞ்சலி செய்து வரவேற்று பலி வழங்கப்பெற்று உபசரித்து இப் பூஜை இப்பத்து தினங்களும் இரவு பகல் கொடி ஸ்தம்பபூஜையை நிறைவேற்றிய பின் இச்சுற்றுப் பலிபூசை வெளிப்பிரகாரத்தில் நடாத்தப்பெறுகின்றன. துவஜா ஆரோகணத்தன்றும் துவஜா அவரோகணத்தன்றும் இத்திக்குப் பாலகரின் பூஜை விரிவாகச் செய்யப்பட்டு அவ்விரு தினத்தன்றும் ஈசான மூலையில் பூதநாட்டியம் நடாத்தப்பெறுகின்றது. ஈசான மூலையில் மகோற்சவ இரவு வேளை உற்சவங்

களில் கட்டியம் சேவிக்கும் ஆச்சாரியரால் தினம் தீபாராதனை செய்யப்பட்டு ஓதுவாரினால் தினமும் பாசுரம் பாடப்டபடுகின்றன. தினமும் இரவு,பகல் உற்சவங்களில் கட்டியம் சேவிக்கப்படுகின்றன. இக்கட்டியங்களில் பதினொரு அங்கங்கள் அமைந்துள்ளன. அவை அஷ்டத்திக்கு பாலகரை வரவேற்று உபசரிக்கும் திவ்விய சமஸ்கிருத சுலோகங்கள் ஆகும். இவற்றுடன் மீதியானவை சுவாமியை வந்தித்து உபசரிக்கும் சுலோகங்களும் அத்துடன் இத்தேவஸ் தானத்தைப் பரிபாலிக்கும் வைணவ சமயத்தைச் சார்ந்த மார்க்கண்டேயகோத்திர வைசியகுலத் தோன்றல்கள் ஆகிய பத்மசாலிச் செட்டிப்பிள்ளைகளை காத்துரட்சிக்கும் வண்ணம் வேண்டப்படும் சுலோகங்களும் இடம் பெறுகின்றன.

இத்தேவஸ்தானத்தில் மாதம் இருமுறை ஏகதாசி உற்சவங்கள் நடை பெறுகின்றன. அவை சுக்கில பக்ஷ, கிருஷ்ண பக்ஷ ஏகாதசிகளாகும். ஆழ்வார் பன்னிருவரின் உற்சவங்கள் நடைபெறுகின்றன. மாத ஏகதாசி தினங்களில் ஆதி ஸ்ரீவேங்கடேச மூர்த்திக்கு உற்சவம் நடாத்தப்பெறுகின்றது.

வருடம் தோறும் தைப்பொங்கல் உற்சவம் நடாத்தப்படுகின்றது. பட்டிப் பொங்கல் உற்சவத்தன்று பகலில் ஸ்ரீவேணுகோபாலருக்கு அன்னாபிசேகம் நடைபெற்று மாலையில் கோபூஜை நடாத்தியபின் இவர் வீதி வலம் வருகிறார். வருடந்தோறும் மாசித்திங்களில் வரும் திருவோண நட்சத்திரத்தில் இலட்சார்ச்சனை விழா தொடங்கப்பெற்று ரோகினி நட்சத்திரத்தில் இவ்விழா பூர்த்தியாகின்றது. (அகண்ட ஹோம காரியத்துடன்) வருடந்தோறும் பங்குனி அல்லது சித்திரைத்திங்களில் ஸ்ரீராமரின் ஜனன தினவிழா நிகழ்த்தப்பெறுகின்றது. இதை ஸ்ரீராமநவமிதினம் என வைணவர்கள் கொண்டாடுவர்.

பங்குனி உத்திரத்தன்று இராம பிரானுக்குப் பட்டாபிஷேக விழா நடாத்தப்படு கின்றது. சித்திரைத் திங்கள் அன்று தமிழ் வருடப்பிறப்பு உற்சவம் நடாத்தப்படு கின்றது. சித்திரை மாத திருவோண நட்சத்திரத்தன்று சுதர்ஷன ஹோமவைபவம் மிகவும் சிறப்பாக நடத்தப் பெறுகின்றது. சித்திரை திங்களில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தன்று ஸ்ரீராமானுஜ ஆச்சாரியருக்கு விழா எடுக்கப்படுகின்றது. ஆனித்திங் களில் வரும் ரோகினி நட்சத்திரத்தில் வருட சங்காபிசேகமாகிய நவோத்திரசகஸ்ர சங்காபிசேகம் மூலமூர்த்திகட்கும், பரிவார மூர்த்திகளுக்கும் நவக்கிரகபீடம், வெளி ஆஞ்சநேயருக்கும் நடாத்தப்படுகின்றன. ஆடித்திங்களில் வரும் ஆடிப்பூர நட்சத்திரத்தன்று ஸ்ரீஆண்டாள் தேவிக்குருதுசாந்தி வைபவம் நிகழ்த்தப்பெற்று ஸ்ரீவைகுந்தவாசரால் திருமாங்கல்யதாரண உற்சவம் நிகழ்த்தப்பெறுகின்றது.

ஆடித்திங்களில் வரும் சுக்கிலபக்ஷசுக்கிரவாரத் தினத்தன்று வரலக்ஷ்மி விரத உற்சவம் நிகழ்த்தப்பெற்று அடியவர்கட்கு வரலக்ஷ்மி விரதநூல் வழங்கப் படுகின்றது ஆவணித்திங்களில் வரும் கிருஷ்ணபக்ஷ அஷ்டமித்திதியும் ரோகினி நட்சத்திரமும் ஓர் அளவு கூடப் பெற்ற நள்ளிரவில் ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு ஜனன பூஜை நிகழ்த்தப்பெற்று அடியவர்களுக்கு ஜனன காயம் வழங்கப்பெற்றுகின் றது. இவ்விழாவின் மறுதினம் மாலையில் உறியடி உற்சவம் நிகழ்த்தப் பெறுகின் றது. புரட்டாதித்திங்களில் வரும் சனிவாரங்களில் நவக்கிரக நாயகர்களுக்கு அடியவர்கள் கிரகதோஷ நிவர்த்தி வழிபாடு செய்கின்றனர். இத்தினங்களில் இரவு, பகல் உற்சவம் நடைபெறுகின்றன.

இத்தேவஸ்தானத்தில் கி.பி.1878ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை பிரமோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. இவ் உற்சவம் புரட்டாதித்திங்களில் வரும் சுக்கிலபக்ஷத்திதியில் வரும் அத்தம் அல்லது சித்திரை நட்சத்திரத்தில் துவஜா ஆரோகணத்துடன் பிரமோற்சவம் ஆரம்பமாகி ஒன்பதாவது தினம் ஆகிய உத்திராட நட்சத்திரத்தன்று ரதோற்சவமும் பத்தாவது தினமாகிய திருவோண நட்சத்திரத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெற்று பின்பு இரவு துவஜா அவரோகணம் நடாத்தப்பெறுகின்றது.

1) முதல் நாள் ஆகிய கொடியேற்ற உற்சவ இரவு இடம்பெறும் விழா பிரமனையும் சிருஷ்டியையும் உணர்த்த சுவாமி அன்ன வாகனத்தில் எழுந்தருளும் காட்சியாகும்.
2) இரண்டாம் நாள் இரவு உற்சவத்தில் பகவான் ஆதிசேஷன் மீது எழுந்தருளுகின்றார்

ஆதிசேஷனது ஐந்து தலைகளும் பஞ்ச பூதங்களின் உருவாக அமைந்தவை. பாம்பணையில் பகவான் சயனித்தல் என்பது தனது ஆளுமையின் கீழ் இவற்றை அமைத்து உயிரினங்களை காப்பது என உணர்த்தப்படுகின்றது.

மூன்றாவது நாள் இரவு உற்சவத்தில் பகவான் கருடன் மீது எழுந்தருளும் காட்சி காத்தல் தொழிலை செய்யும் பகவான் வானில் மிக உயரத்தில் பறக்கும் பட்சியாகிய கருடனை ஊர்தியாக ஏற்றதன்மை விண்ணிற்கும் மண்ணிற்கும் தானே தலைவன் என்பதை உணர்த்தும் காட்சியாகும். நான்காம் நாள் இரவு உற்சவத்தில் பகவான் அனுமன் மீது எழுந்தருளும், தன்மையாவது ஸ்ரீராமனது அவதார நிலையை நினைவூட்டி அனுமனது துணைகொண்டு இலங்கை வேந்தனது தருக்கை அழித்து தருமத்தையும் நீதியையும் நிலைபெறச் செய்தமையை உணர்த்துகின்றது இவ்விழா. ஐந்தாம் நாள் இரவு உற்சவத்தில் பகவான் பூந்தண்டிகையில் எழுந்தருளி வரும் இவ்விழா செல்வனை போல திருமாலே என்ற பாசுரத்தினை நினைவு கூரச்செய்கின்றது. திரு என்பது மகாலக்ஷ்மியைக் குறிக்கும். உள்ளத்தில் திருமகளை வைத்திருக்கும் ஸ்ரீமந் நாராயணன் சகல செல்வங்களும் பொருந்தப்பெற்றவன் என்பதை உணர்த்தும் விழாவாகும். ஆறாம் நாள் இரவு உற்சவம் சுவாமி யானை வாகனத்தில் உலாவரும் காட்சியாகும். இவ்விழா ஆதிமூலமே என்று அபயக்குரல் கொடுத்த யானையினை முதலை வாயினின்று மீட்டகாட்சியாகும். தனது பக்தர்களைக் காக்க பகவான் உதவும் பாங்கை உணர்த்துகின்றது.

ஏழாம் நாள் இரவு உற்சவம் சுவாமி ஸ்ரீகண்ணன் உருவில் வெண்ணை உண்ணும் காட்சியில் சப்புறத்தில் வீதி உலாவரும் பெருவிழாவாகும். இவ்விழா கிருஷ்ணபரமாத்மாவின் லீலையில் ஒன்றாகும். இது மக்களின் வெண்ணையைப் போன்ற உள்ளம் கவரும் கள்வன் ஸ்ரீகண்ணன் என்பதை உணர்த்தும் விழாவாகும்.

எட்டாம் நாள் இரவு உற்சவம் பகவான் குதிரை வாகனத்தில் எழுந்தருளும் காட்சியைச் சித்தரிக்கின்றது. பகவான் எடுத்த அவதாரங்களில் இது பத்தாவது

அவதாரமாகும். இவ் அவதாரத்தில் சுவாமி குதிரையில் தோன்றி பூவுலகின் செயற்பாடு இயந்திர உருவில் நிலை பெறும் என்பதை உணர்த்தும் விழாவாகும். இது குதிரை வேகமுடைய இயந்திரவியலை விளக்குகின்றது.

ஒன்பதாவது நாள் பகல் ரதோற்சவமாகும். இவ்விழாவின் தத்துவமானது சிருஷ்டி, திதி, சம்காரம், திரோநுபவ. அநுக்கிரக என்ற பஞ்ச கிருத்தியங்களில் சம்காரத்தைக் குறிக்கும் உற்சவமாகும். இவ்வுற்சவத்திற்கு பகவான் மிக அலங்கார பூஜிதராக எழுந்தருளி வருகின்றார். இவ்வாலயத்தில் ரத ஆரோகணத்திற்கு வரும் சுவாமியை இராஜகோபுர மண்டபத்தில் வைத்து பட்டு உத்தரியம் சாத்தப்பெற்று மாலை அணிவித்து சுகந்த சந்தனம் வழங்கி உபசரிக்கப்படுகின்றார். இதை கந்த உற்சவம் என்று அழைப்பர். இதன் பின் ரதத்தில் அவரோகணித்து வீதிவலம் செய்கின்றார். ரதத்தினின்று சுவாமி அவரோகணித்து கோவிலின் உள்வீதியை அடைந்ததும் பகவான் பூர்ணகும்ப இராஜமரியாதையையும் பாததீர்த்தத்தையும் ஏற்றுக்கொண்ட பின் வசந்த மண்டபத்தை அடைந்து தீபாரா தனையைப்பெற்று மகா ஆசீர்வாதப் பூஜையை ஏற்றபின் இவ்விழா நிறைவுறு கின்றது. இரவு தேரடி உற்சவம் நடைபெறுகின்றது.

பத்தாவது நாள் தீர்த்தோற்சவமாகும். இத்தினத்தில் பகவான் தேவியருடன் ஆதி ஸ்ரீவேங்கடேச மூர்த்தியுடனும் கருடவாகனத்தில் சந்திரபுஷ்கரணியாகிய தீர்த்தக் கேணிக்கு எழுந்தருளுகின்றார். பஞ்சகிருத்தியங்களில் மறைத்தல் அருளல் என்ற பகுதிகளை நினைவுறுத்துவது தீர்த்தோற்சவமும்,துவஜா அவரோகணமும் ஆகும். இத்தடன் பகவானின் நவதின உற்சவம் ஆகிய பிரமோற்சவம் நிறைவு பெறுகின்றது. தீர்த்தோற்சவ தினத்தில் கீழ் கண்ட அம்சங்கள் இத்தேவாலயத்தில் இடம் பெறுகின்றன. அவை சூர்ணோற்சவம், ஜாகபூர்ணாகுதி வைபவம், மூலமூர்த்திகளுக்கு ஜாககும்பாபிசேகம் திருப்பதி ஐதிகமாகிய சிரவணதீபம் ஆகிய திருவோணநட்சத்திர தீபம் எற்றுதல் முதலியன இடம்பெறுகின்றன.

பத்தாவது தினமாகிய இரவு துவஜா அவரோகண உற்சவம் இடம் பெறுகின்றது தேவிமாருடன் பகவான் சந்திரப்பிறைச்சேவையில் பிரதக்ஷணம் செய்கின்றார். இத்துடன் விழா நிறைவு பெறகின்றது. இது மோட்சத்தை அருளும் விழாவாகக் கொண்டாடப் பெறுகின்றது.

பதினொராவது தினமாகிய இரவு பகவானுக்கு திருக்கல்யாண உற்சவம் நிகழ்த்தப் பெறுகின்றது. இன்று தினம் சுவாமி மக்கட்கு இல்லற வாழ்வை உணர்த்தும் பொருட்டு ஸ்ரீதேவி, பூமிதேவியருக்கு திருமாங்கல்யதாரணம் செய்து மணவாளக் கோலத்தில் பூந்தண்டிகையில் காட்சியளிக்கின்றார்.

பன்னிரெண்டாவது தினமாகிய இரவு பகவானுக்கு திருவூஞ்சல் பா இசைத்து திருவூஞ்சலில் தேவியர் சகிதம் வீற்றிருந்து ஆடுகின்றார். பின்பு பூந்தொட்டியில் எழுந்தருளி மக்கட்கு காட்சி தருகின்றார்.

பதின்மூன்றாவது தினமாகிய இரவு பகவானை யோகநிலையில் அலங்கரித்து

இவருடன் ஆதி ஸ்ரீ வேங்கடேஸ்வரரையும் எழுந்தருளப் பண்ணி வதிரிவிருட்சம் என்று அழைக்கப்படும் இலந்தை விருட்ச நிழலில் வீற்றிருக்கச் செய்து வீதி வலம் பெறச் செய்கின்றனர்.

பதின் நான்காவது தினமாகிய மாலைவேளை ஸ்ரீஆஞ்சநேயரை அலங்கரித்து அவருக்கு பொங்கல் பூஜை விழா கொண்டாடப் பெறுகின்றது. பதின் நான்காவது தினம் பகலில் வீதிவலம் வந்த வாகனங்கள் அனைத்திற்கும் வாகன பூஜை நிகழ்த்தப்பெறுகின்றது. இத்துடன் மூலமூர்த்திகளுக்கு பிராயச்சித்த அபிசேகமும் நடாத்தப்படுகின்றது. நவராத்திரி விழாக்காலத்தில் ஸ்ரீலக்ஷ்மி அம்பாள் கொலு வீற்றிருக்கின்றார். விஜயதசமித் தினத்தன்று சுவாமி சமீவிருக்ஷச பூசையில் பங்கு பற்றி மானம்பூ உற்சவத்தில் பங்குபெறுகின்றார்.

மகாலக்ஷ்மி தேவி மானம்பூ பூஜையில் பங்குபெறும் வழக்கம் இல்லை. மகாலக்ஷ்மி படிதாண்டாப் பத்தினி. அவர் இக்காரணத்தினால் வெளி வீதி வலம் வருவதில்லை. சுமங்கலிகள் தீப பூஜை இத்தேவஸ்தானத்தில் நவராத்திரி விழாவின் இறுதியில் வரும் பௌர்ணமியன்று கொண்டாடப்படுகின்றது ஐப்பசித்திங்களில் தீபாவளி தினத்தன்று ஸ்ரீவேணு;கோபால சுவாமிக்கு அபிசேக ஆராதனை நடைபெற்று உற்சவம் நிகழ்த்தப்படுகின்றது. கார்த்திகை திங்களில் வரும் ரோகினி நட்சத்திரத்தன்று கார்த்திகை தீப உற்சவம் நடைபெறுகின்றது. மார்கழித்திங்கள் முழுமையும் திருப்பள்ளி எழுச்சி திருப்பாவை பாக்கள் பாடப்பெற்று தினமும் வைகறை பூஜைகள் நிகழ்த்தப்பெறுகின்றன.

மார்கழித்திங்களில் வரும் கேட்டை நட்சத்திரத்தில் தொண்டரடிப் பொடியாழ்வார் உற்சவம் பண்டுதொட்டு இவ்வாலயத்தில் நடைபெற்றுவருகின்றது மார்கழித்திங்களில் வரும் மூல நட்சத்திரத்தன்று ஆஞ்சநேயருக்கு ஜனன உற்சவம் நிகழ்த்தப் பெறுகின்றது. மார்கழித்திங்களில் வரும் சுக்கில பக்ஷ ஏகாதசித்திதியில் சுவர்க்க வாயில், துவாதசித்தின உற்சவங்கள் நிகழ்த்தப் பெறுகின்றன. ஆகையால் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற முதுமொழிக்கு இணங்க அடியவர்கள் பேரின்பப் பயனை பெறக்கடவர்.

சுபம்

*வீ.என்.சீ. நாராயணசாமி*
*(போசகர்)*
*வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்,*
*யாழ்ப்பாணம்.*

# ஏகாதசி வரலாறு

சூரிய வம்சத்ததைச் சார்ந்த கிலீபச்சக்கரவத்திக்கு வசிட்டமுனிவர் உபதேசித்த ஏகதாசி மகிமை பற்றிய வரலாறு. ஆதியில் இவ்வரலாறு முக்கண்ணன் ஆகிய சிவபெருமானால் பார்வதிதேவிக்கு கூறப்பட்டது. இங்கு ஸ்ரீமந்நாராயணனின கூர்ம அவதாரத்தையும் ஸ்ரீமகாலக்ஷ்மியின் அவதாரத்தையும் இதனுடன் தொடர்புடைய ஏகாதசி மகிமையும் கூறப்படுகின்றது. துர்வாசமுனிவர் அரிதப்பெண் ஒருவளுக்கு பகாவான் நாராயணனும் மகாலக்ஷ்மியும் உவந்து அளித்த மாலை ஒன்றை இவர் தமதுவசம் பெற்று இதை இந்திரனுக்குப் பரிசளிக்க இந்திரலோகம் எடுத்துச் சென்றார் அப்பொழுது இந்திரன் வெள்ளை யானை மீது பவனிவந்தான் இதைக் கண்ணுற்ற துர்வாசர் இம்மாலையை அவனுக்கு வழங்க முற்பட்டபோது இவன் அதை தனது அங்குசத்தினால் ஏற்று யானையின் மத்தகத்திலிட்டான். யானை இதனை துதிக்கையால் எடுத்து நிலத்திலிட்டு மிதித்தது இதனைக் கண்ணுற்ற முனிவர் மிகுந்த சினங்கொண்டு இந்திரா உனது இந்திரபோகவாழ்வு அற்றுப்போவதாக என்று சாபமிட்டார். இதனைக்கேட்ட மாத்திரத்தே மகாலக்ஷ்மி இந்திர லோகத்தை விட்டு நீங்கி திருப்பாற்கடலை அடைந்து விட்டாள். இதனால இந்திரலோகம் இன்னலுற்றது. இந்திரன் இந்நிலை குறித்து சிவனிடம் முறையிட்டான். சிவன் இந்திரனை பிரம்மாவிடம் செல்லுமாறு பணித்தான் பிரம்மா இந்திரனை திருப்பாற்கடலில் உள்ள நாராயணமூர்த்தியிடம் அழைத்துச் சென்றார் (பகவான்) பிரம்மன் இந்திரன் முதலான தேவர்களே பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற்று ஸ்ரீமகாலக்ஷ்மியை திருப்பாற்கடலில் இருந்து அவதாரம் பெறச்செய்வதற்கு நீங்கள் யாவரும் உதவி புரிதல் வேண்டும். இதற்கு மந்திர மலையை மத்தாகவும் வாசுகி என்ற அரவை நாணாகவும் கொண்டு திருப்பாற்கடலை கடைதல் வேண்டும் அப்பொழுது நான் மந்திர மலையை கூர்ம அவதாரம் எடுத்துத் தாங்கிக் கொள்வேன் என்றார். பிரம்மனும், தேவர்களும், இந்திரனும் பகவானைத்தியானித்த வண்ணம் ஸ்ரீமகாலக்ஷ்மியின் அவதாரத்தை நினைத்து திருப்பாற்கடலை கடையத்தொடங்கினர் அப்பொழுது ஆலகால விஷம் தோன்றியது. இதனைக்கண்ட தேவர்கள் பீதி அடைந்து ஓடத்தொடங்கினர் அப்போது சிவன் இதனைக் கண்ணுற்று ஆலகாலவிஷம் முழுவதையும் அவர் உண்டார். இவர்கள் உத்தமமான ஏகாதசி அன்று விரத அனுஷ்டானத்துடன் உணவு உண்ணாது கண்கள் அயராது பின்பும் பாற்கடலை கடையத் தொடங்கினர் அப்பொழுது தனவந்திரி அமிர்த கலசத்துடன் தோன்றினார் இதனை பகவான் ஏற்று தேவர்களுக்கு அமிர்தத்தை பங்கிட்டு அளித்தார். அமிர்தத்தை உண்டபொழுது துவாதசியும் உதயமாயிற்று இரவு பொழுது நீங்கத்தொடங்கிய அதிகாலை நேரத்தில் ஸ்ரீமகாலக்ஷ்மி அவதாரம் செய்தாள். பிரம்மா இந்திரன் முதலான தேவர்கள் மகிழ்சியுற்று ஹரி! ஹரி! என்று ஆரவாரித்து பகவானையும் மகாலக்ஷ்மியையும் வணங்கினர் இந்த ஏகாதசியையும் துவாதசியையும் விரதமிருந்து கண்விளித்து ஸ்ரீமந்நாராயண மூர்த்தியை தியானிக்க பிரம்ம இந்திர தேவர்களும் ரிஷிகளும் மானிடர்களும் ஒன்றிணைந்து சம்மதித்தனர் இதுபோன்றே இப்புவூலகில் உள்ள வைணவ பக்தர்கள் இந்த இருதினங்களையும் கொண்டாடிவருகின்றனர்.

# ஏகாதசி வரலாறு அதன் மகத்துவம்

பகவானே இவ்வரலாறு மூலம் திருவாய் மலர்ந்துள்ளார் அஃது பிரமன், இந்திரன் முதலான தேவர்களே ரிஷிகளே! என் மார்பினில் வசிக்கின்ற ஸ்ரீ மாகாலக்ஷ்மியையும் ஸ்ரீமந் நாராயணன் ஆகிய என்னையும் துவாதசித்தினத்தில் துளசிதளத்தால் அர்ச்சித்து ஏகாதசித் தினம் முழுதும் என்னை நினைந்து தியானித்து உபவாசம் இருந்து இத்தினம் இரவு பூராகவும் கண்விழித்து ஏகாதசி அன்று சூரிய உதயத்தின் முன் நீராடி எனது நாமங்களை பாராயணம் செய்து துளசிதீர்த்தத்தை பெற்று இவ்வரிய விரதத்தைப் பூர்த்தி செய்பவர்கட்கு அறம், பொருள், இன்பத்தையும் மோட்சத்தையும் நல்குவேன் என்று கூறிய தாகசூதகபுராணிகர் நைமிசாரண்ய வாசிகளான செனகாதிமுனிவர்களுக்கு உபதேசித்ததாக வசிட்டமுனிவர் கிலீபச்சக்கரவர்த்திக்கு கூறியருளினார்.

1) விரதம் அனுஷ்டிப்பவர்கள் மார்கழித்திங்களில் வரும் பூர்வ பட்ச ஏகதாசியை முதலாகக் கொண்டு விரதத்தை ஆரம்பிக்கவேண்டும் இந்த ஏகாதசித் தினத்தை சுவர்க்கவாயில் ஏகாதசி அல்லது வைகுண்ட ஏகாதசி என்று அழைப்பர்.

2) தை மாதத்து பூர்வ பட்சத்தில் வரும் ஏகாதசியை புத்திரதா ஏகாதசி என அழைப்பர்.

3) மாசி மாதத்தில் பூர்வ பட்சத்தில் வரும் ஏகாதசியை சயன ஏகாதசி அல்லது வீம ஏகாதசி என அழைப்பர்.

4) பங்குனி மாதத்து பூர்வ பட்சஏகாதசியை ஆமல ஏகாதசி என்று அழைப்பா.

5) சித்திரை மாதத்து பூர்வபக்ஷ ஏகாதசியை காமதாஏகாதசி என அழைப்பா

6) வைகாசி மாதத்து பூர்வ பட்ச ஏகாதசியை மோகினி ஏகாதசி என அழைப்பர்.

7) ஆடி மாதத்தில் வரும் பூர்வ பட்ச ஏகாதசியை பாண்டவ ஏகாதசி என்று அழைப்பர்.

8) ஆவணி மாதத்து பூர்வ பட்ச ஏகாதசியை பதும ஏகாதசி என்று அழைப்பர்.

9) ஆனி மாதத்து பூர்வ பட்ச ஏகாதசியை நந்தன ஏகாதசி என்று அழைப்பா.

10) புரட்டாதி மாதத்து பூர்வ பட்ச ஏகாதசியை வாமன ஏகாதசி என்று அழைப்பர்.

11) ஐப்பசியில் வரும் பூர்வ பட்ச ஏகாதசியை பாசாங்குச ஏகாதசி என்று அழைப்பர்.

12) கார்த்திகை மாதத்தில் வரும் பூர்வ பட்ச ஏகாதசியை பிரபோதினி ஏகாதசி என்று அழைப்பர்.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

வண்ணை ஸ்ரீவேங்கடேசவரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் பூர்வ பட்ச அபர பட்சத்து ஏகாதசிகளில் ஆதி ஸ்ரீவேங்கடேசப் பெருமாளுக்கு உற்சவம் நடைபெற்று கருடவாகனத்தில் உள் வீதி வலம் வருகிறார்.

*இங்ஙனம்*
*V.S.கிருஷ்ணமூர்த்தி*
*செயலாளர் திருப்பணிச் சபை*
*வண்ணை ஸ்ரீவேங்கடேசவரதராஜப்பெருமாள்*
*தேவஸ்தானம் யாழ்ப்பாணம்.*



ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வண்ணை வேங்கடேசனது மகோற்சவ வைபவங்கள்

இந்து ஆகமங்களில் கூறப்பட்டுள்ள மும் மூர்த்திகளில் காத்தற் தொழிலுக்கு அதிபதியாக விளங்குபவர் திருமால் ஆவார். இவரை வைணவ மதத்தைச் சார்ந்தோர் பலபெயர்களைக் கொண்டு அழைக்கின்றனர். திருமாலைத் தமது குலத்தெய்வமாக வணங்குபவர்களை வைணவர் என்று அழைப்பர். தென் இந்தியாவில் வைணவஸ்தலங்கள் 108 உள்ளன. தமிழ் நாட்டில் வடகலை, தென் கலைவைணவர்கள் உள்ளனர் வடகலையைச் சார்ந்த வைணவர்கள் திருவேங்கடம் என அழைக்கப்படும் திருப்பதி தேவஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீவேங்டேசப் பெருமாள் முகூர்த்தத்தையே தமது குலத்தெய்வமாக வணங்குவர் .இவர்களின் முதன்மைஸ்தலம் திருப்பதியாகும். பண்டைக்காலத்தில் இவ் வைணவர்கள் தமது நெற்றியில் இடும் நாமத்தைப் புருவம் வரை இடுவர் இவர்களை வடகலை வைணவர்கள் என்றும் தமது நெற்றியில் இடும் நாமத்தை புருவத்தின் கீழ்ப்பாதம் இடுபவரை தென்கலை வைணவர்கள் என்றும் அழைப்பர் இவர்களது முதன்மைஸ்தலம் ஸ்ரீரங்கமாகும் இவர்கள் தமது குலத்தெய்வமாக வரதராஜப்பெருமாளை வணங்குவர் இவ் இருபாலாலாரும் ஸ்ரீரெங்கநாதரை வணங்குவர். ஸ்ரீரங்கத்தைப் பெரிய கோவில் என்று அழைப்பர் மேற்படி தேவஸ்தானத்தை பரிபாலிக்கும் பத்மசாலிச் செட்டிகளில் இவ்விருபாலாரும் உள்ளனர்.அத்துடன் இப்பத்மசாலி சாகியத் தினருள் சிறுபான்மையினராக வீர சைவர்களும் உள்ளனர். இம்மூவர்க்கத்தினரும் தமது குலத்தெய்வமாக ஸ்ரீவேங்கடேசவரதராஜப் பெருமாளையே வணங்கி வருகின்றனர். இத்தேவஸ்தானத்தைச்சார்ந்த வைஷ்ணவர்கள் கி.பி 1800ம் ஆண்டுவரை தமிழ் நாடு சென்று வைஷ்ணவ பட்டாச்சாரியார்களை அணுகி வைஷ்ணவ தீட்சை பெற்றுக்கொண்டனர். இதற்குப்பின் இவ் வழக்கம் அருகிவிட்டது. வைஷ்ணவ தீட்சைபெற்ற வைணவர்கள் பன்னிரு இடங்களில் நாமத்தை தரிக்கவேண்டும் அக்காலத்தில் வைதீக அந்தணர்கள் கடல் கடந்து செல்லும் பிரயாணங்களை ஏற்பதில்லை.

வைணவதலங்களில் இருபெருங்கூறான கிரியை முறைகள் நடை பெறுகின்றன. அவை வைகானச ஆகம, பாஞ்சராத்திர ஆகம சம்பிரதாயத்திற்கு ஏற்ப பூஜாவிதானங்களை அமைத்துள்ளனர். இத்தேவஸ்தானத்தில் வைகானச ஆகமத்திற்கு அமைவான பூஜா காரியங்களே அன்று தொட்டு இன்று வரை நடைபெறுகின்றன.

இத்தேவஸ்தானத்தில் மகோற்சவ காரியங்கள் அனைத்தும் வைகானச வைணவ ஆகமத்திற்கேற்ப கிரியா அம்சங்கள் யாவும் நிகழ்த்தப்பெறுகின்றன. இத்தேவஸ்தானம் வைஷ்ணவ சம்பிரதாயத்தையும், கோட்பாட்டையும் அனுசரிக்கும் ஒரு திவ்வியமான தேவஸ்தானமாக குடாநாட்டு மக்கள் கருதுகின்றனர்

இத்தேவஸ்தானத்தில் கி.பி 1878ம் ஆண்டுதொடக்கம் மகோற்சவம் நடத்தப்பட்டு வருகின்றது. அன்று தொடக்கம் இன்று வரை கஸ்தம் பாதச்சாத்துப்படி நடைபெற்று வருகின்றது. கஸ்தம் பாதச் சாத்துப்படியின் அவசியம் பற்றி எமது தேவஸ்தான பத்தயில் கூறப்பட்டுள்ளது வைணவ ஆகம சாஸ்திரங்களுக்கு ஏற்றவகையில் கஸ்தம் பாதச் சாத்துப்படி உருப்படிகள் இத்தேவஸ்தானத்தில் அமைந்துள்ளன. ஆதியில் வைஷ்ணவ அந்தணர்கள் இச்சாத்துப்படியைச் செய்து வந்தனர். இப்பொழுது இவர்களிடம் பயிற்சி பெற்ற சைவ அந்தணர்கள் செய்து வருகின்றனர்.

இத்தேவஸ்தானத்தில் மகோற்சவங்களில் வீதிவலம் வரும் வாகனங்களாவன கருடன், ஆதிஷேசன் ஆகிய ஐந்துதலை நாகம், அன்ன வாகனம், அநுமன், யானை, குதிரை, பூந்தண்டிகை, சப்பறம் ஆகும்.

மஹோற்சவ விழாக்கள் புரட்டாதி மாதத்தில் பூர்வ பட்சத்து அத்தம் அல்லது சித்திரை நட்சத்திரத்தில் ஆரம்பமாகின்றது முதல் நாள் விழா கொடியேற்ற விழாவாகும். கொடியேற்ற விழாவன்று சுவாமி தேவிமாருடன் சூரிய விருத்தச்சேவையில் எழுந்தருளுகின்றார். வைணவ ஐதீகத்தின்படி சேவை என்பது திருவிழாவையும் வாகனத்தையும் குறிக்கும் சொல்லாகும். கொடியேற்ற இரவு சுவாமி மாத்திரம் அன்ன வாகனத்தில் காட்சி தருகின்றார். இது பிரம்மதேவனது படைத்தற்தொழிலை ஞாபகப்படுத்த அன்னவாகனத்தில் எழுந்தருளுகின்றார்.

இரண்டாம் நாள் இரவு சுவாமி ஐந்து தலை நாகம்மீது சயனம் செய்யும் வகையில், அழகிய கஸ்தம் பாதச்சாத்துப்படி செய்யப்படுகின்றது இக்காட்சி பகவான் திருப்பாற்கடலில் பள்ளி கொள்ளும் நிலையை உணர்த்துகின்றது.

மூன்றாம் நாள் இரவு சுவாமி கருடன் மீது வீதிவலம் வருகின்றார். கஸ்தம் பாதச்சாத்துப்படி செய்யப்படுகின்றது. இக்காட்சி பகவானது காத்தற்தொழிலை ஞாபகப்படுத்துகின்றது. நான்காம் நாள் இரவு சுவாமி அனுமன் மீது எழுந்தருளி காட்சி தருகின்றார். சுவாமி கையில் வில்லு, அம்புடன் சாத்துப்படி நடைபெறுகின்றது. இக்காட்சி ஸ்ரீராமனது அவதாரத்தை உணர்த்துகின்றது.

ஐந்தாம் நாள் இரவு சுவாமி பூந்தண்டிகையில் வீதிவலம் வருகின்றார். சுவாமியை மிக அலங்காரமாக செல்வந்தனது கோலத்தில் கஸ்தம் பாதச்சாத்துப்படி செய்யப்படுகின்றது. இக்காட்சி பகவானை செல்வந்தனாகச் சித்தரிக்கின்றது.

ஆறாவது நாள் இரவு சுவாமி யானைமீது வீதிவலம் வருகின்றார். சுவாமி கையில் துரட்டி கொடுத்து கஸ்தம்பாதச்சாத்துப்படி செய்யப்படுகின்றது. இக்காட்சி பகவான் முதலை வாயில் இருந்து யானையைக்காத்த செயலை உணர்த்து கின்றது.

ஏழாம் நாள் இரவு சுவாமி சப்பறத்தில் வெண்ணைத்தாளியுடன் எழுந்தருளும் காட்சி.இதுஸ்ரீகிருஷ்ணன் வெண்ணைய் உண்ட காட்சியை கஸ்தம்பாதச்சாத்துப்படி மூலம் மக்களுக்கு உணர்த்தும் காட்சியாகும். வண்ணைத்திரு வேங்கடவனது மகோற்சவங்களில் எட்டாம் நாள். பகல் சுவாமியும் அம்பாள்மாரும் சின்னக் கருட வாகனத்தில் உள் வீதிவலம் வருகின்றனர். இரவு சுவாமி குதிரைமீது காட்சி தருகின்றார். கையில் சவுக்கு கொடுத்து மறுகையில் கடிவாளத்துடன்

கஸ்தம் பாதச்சாத்ப்படி செய்யப்படுகின்றது. இக்காட்சி பகவானை குபேரனாகவும் கல்கி அவதாரம் பெற்றவனாகவும் சித்திரிக்கின்றது. ஒன்பதாம் நாள் பகல் சுவாமி தேவிமாருடன் மிக அலங்காரமாக சிம்மாசனத்தில் காட்சி தருகின்றார். சுவாமிக்கு ஜடாமுடி தரித்து சுவாமியையும் தேவிமாரையும் மிக அலங்கரிக்கின்றார்கள். கஸ்தம் பாதச்சாத்துப்படி மூலம். இது சுவாமி யுத்தத்திற்கு எழுந்தருளும் காட்சியை சித்திரிக்கின்றது. இத்தேவஸ்தானத்தில் ரதோற்சவமும் தீர்த்தோற்சவமும் மிக விரிவான கிரிகைகளுடன் தொடக்கப்படுகின்றது. ரதோற்சவத் தன்று சுவாமி தேரின்று இறங்கி வந்து தேவஸ்தானத்தினுள் வரும்போது பூரண கும்பமரியாததையுடன் வரவேற்கப்படுகின்றார். பாததீர்த்த வைபவம் நடை பெற்றதும் கோவில் ஓதுவார் ஊழியர்களாகிய மங்கள வாத்தியக்காரர், சங்கு நாதம் ஒலிப்பவர் பூமாலை புனைபவர், திருத்தொங்கல் புனைபவர், தேருக்கு சருக்கு முண்டியிட்ட ஆசாரியர், சலவைத்தொழிலாளர், களஞ்சிய வேலை செய்வோர் ஆகியோர்க்கு வேட்டி சால்வை வழங்கப்படுகின்றது. சுவாமி வசந்தமண்டபம் அடைந்ததும் பெரிய மண்டபப்படி அமைத்து சக்கரை, புளி, தயிர் சாதவைக

ளும், பழவைகளும் காளாஞ்சிகளும் பானகம் ஆகிய சர்க்கரையுடன் தேன் கலந்த நீர், மோர் ஆகியன நிவேதனம் செய்யப்படுகின்றன. இதன்பின் மகா ஆசீர்வாத வைபவம் நடைபெறுகின்றது. இரவு தேரடி வைபவ விழா நடைபெறுகின்றது.

பத்தாம் நாள் காலையில் தீர்த்தோற்சவ அங்கம் ஆகிய பொற்சுண்ணம் இடித்தல் வைபவம் பொற்சுண்ணப்பாக்கள் இசைக்கப்பெற்று நடைபெறுகின்றது. இதன்பின் பேரி தாடன உற்சவம் நடைபெற்று சுவாமியும் அம்பாள்மாரும் கருட வாகனத்தில் தீத்தோவத்திற்கு செல்கின்றனர். தீர்த்த வைபவம் நிறைவுற்றதும் சுவாமி உள்வீதியில் யாக மண்டபத்தில் நின்று பூர்ணாகுதியை ஏற்றுக்கொண்டு கோபுர வாயில் சென்று பாத தீர்த்தம் பெற்று அமர்கின்றார். கொடிக்கம்பத்தின் முன்னால் ஆதிஸ்ரீவேங்கடேசப் பெருமாளுக்கு ஆசனம் கொடுக்கப்படுகின்றது. இவருக்கு திருவோணத் தீபபூஜை நடத்தப்பட்டு திருவோணத் தீபம் ஏற்றப்படு கின்றது. இதன்பின் மூலமூர்த்திகட்கு யாகக் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இதன் பின்பு கோபுர வாயிலிருந்து சுவாமி வசந்த மண்டபத்தை அடைந்ததும் யாகப்பொட்டும் முளைப்பாலிகையும் தீர்த்தமும் அடியவர்கட்கு வழங்கப்படுகின்றன. இத்துடன் தீர்த்தோற்சவ விழா நிறைவுபெறுகின்றது. இரவு கொடியிறக்க விழா நடைபெற்று சுவாமியும் அம்பாள் மாரும் சந்திரப் பிறைச்சேவையில் வெளிவீதி வலம் வருகின்றனர். இத்துடன் கொடியேற்ற விழா நிறைவுபெற்று பதினொராம் நாள் அன்று மாலையில் சுவாமிக்கு திருக்கல்யாண வைபவம் இடம்பெற்று, சுவாமி அம்பாள்மாருக்கு திருமாங்கல்யதாரணம் செய்கின்றார். இதன்பின் சுவாமி மணவாளக் கோலத்தில் வெளிவீதி வலம் வருகின்றார். இந்த உற்வசத்திற்கு கஸ்தம் பாதச்சாத்துப்படி செய்து மிக அலங்காரமாக மாப்பிள்ளை கோலத்தில் மணவறையை வந்தடைகின்றார். இதேபோன்று அம்பாள்மாருக்கும் மிக அழகான சாத்துப்படி செய்யப்படுகின்றது. தேவிமாருடன் சுவாமி மணவாளக் கோலத்தில் பூந்தண்டிகையில் வரும் காட்சியைக்காண ஏராளமான பக்கதர்கள் அன்று தேவஸ்தானத்தில் கூடுகின்றார்கள்.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

பன்னிரண்டாம் நாள் மாலையில் சுவாமி வசந்த் மண்டபத்தில் பூஜை யாகிய பின் திரு ஊஞ்சல் பாக்கள் ஓதுவார் இசைக்க திருவூஞ்சலில் ஆடுகின்றார். பின்பு சுவாமி பூந்தொட்டியில் மிக அலங்காரமாக வீதிவலம் வருகின்றார். பதின்மூன்றாம் நாள் மாலையில் சுவாமியை யோகநாராயணர் சேவையில் கஸ்தம் பாதச்சாத்துப்படி செய்து இவருடன் கூட ஆதி ஸ்ரீவேங்கடேஸ்வரரையும் அலங்கரித்து இலந்தை விருட்ச சேவையில் வெளிவீதி வருகின்றார் சுவாமி. பதின்னான்காம் நாள் காலையில் மூலமூர்த்திகளுக்குப் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்ற பின் வாகன பூஜை நடைபெறும். அன்று மாலையில் ஆஞ்சநேய மூர்த்திக்கு அபிஷேகம் நடைபெறும். அடியார்கள் ஆஞ்சநேயருக்கு வெளிவீதியில் பொங்கல் வைப்பர். உற்சவமூர்த்தி ஆகிய ஆஞ்சநேயரை அலங்காரம் செய்து வெளிவீதியில் உள்ள ஆஞ்சநேயர் கோயிலில் எழுந்தருளப்பண்ணி பூஜை நடைபெறும். அப்பொழுது பொங்கல் வைத்து அடியார்களின் பொங்கற் பிரசாதங்கள் யாவும் ஆஞ்சநேயர் முன் படைக்கப்பட்டு நிவேதனம் செய்யப்பட்டு இவருக்கு வடைமாலைகள் சாத்தப்பெற்று சோடசோப உபசார பூஜை நடைபெறும். இதன் பின்பு ஸ்ரீ ஆஞ்சநேயர் வீதி வலம் வருவார். இத்துடன் மகோற்சவ விழா நிறைவுபெறுகின்றது. இத்தேவஸ்தானத்தில் உற்சவங்கள் நடைபெறும் வேளையில் உபயகாரரிடம் 'சுவர்ண புஸ்பம்' என்ற பெயரில் தட்சனை பெறப்படுகின்றது.

வைணவ பூஜை விதானத்திற்கேற்ப உபயகாரர்களுக்கும் மற்றும் அர்ச்சனை செய்யும் அடியார்களுக்கும், மூலமூர்த்தியின் சந்நிதியில் சட கோபம் என்ற நாமம் உடைய சாமியின் திருப்பாதம் பொருத்தப்பெற்ற முடிஅடியவர்கட்கு சாத்தப்படுகின்றது.

*திரு.மு.சிவலோகநாதன்*
*நிருவாக சபை உறுப்பினர்*
***வண்ணை ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் தேவஸ்தானம்.***

# தீபாவளி திருநாளும் அதன் வரலாறும்

ஒரு சமயம் கண்ணன் துவார கையில் இருக்கும் பொழுது விண்ணு லகின் அதிபதியாகிய இந்திரன் பூமிதேவியின் புத்திரனாகிய நரகாசுரன் செய்யும் அக்கிரமங்களைத் தாங்க முடியவில்லை இவன் தேவர்களுக்கு இழைத்துள்ள துன்பத்தைக் கேளும் அவை வருணனது நீர் சிந்தும் அருட்கு டையை அபகரித்து விட்டான் தேவர் களதும் சித்தர்களதும் பெண்டிரைக் கவர்ந்து சென்றுவிட்டான் அதிதியாகிய எனது தாயாரது இருகுண்டலங் களை யும் பறித்து விட்டான் எனது ஊர்தி யாகிய ஐராவதம் என்னும் யானையை யும் என்னிடம் இருந்து அபகரிக்க ஆயத்தம் செய்கின்றான் ஆகையால் பகவானே எம்மை இவனி டம் இருந்து காத்தருளவேண்டும் என்றான். இதனைக் கேட்டமாத்திரத்தே பகவான் கண்ணன் புன்னகை பூத்தார் இந்திரனது வேண்டு கோளை நிறை வேற்ற கருடனை நினைக்கின்றார் நினைத்தமாத்திரத்தே கருடன் இவர் முன் தோன்றுகின்றான் அப்பொழுது சத்தியபாமா சகிதம் ஸ்ரீகண்ணன் நரகா சுரனுடைய நகரத்திற்கு அவனுடன் யுத்தம் செய்வதற்கு புறப்பட்டு விட்டார் என்று புராணம் கூறுகின்றது. பகவான் கிருஷ்ணன் எதற்காக சத்திய பாமா வையும் யுத்தத்திற்கு அழைத்துச் சென்றான் என்பதற்கு ரிஷி மூலம் காரணம் கூறப்படுகின்றது.

அஃது சத்தியபாமா பூமிதேவியின் அம்சம் ஆவாள் பிரளயகாலத்து பகவான் வராக மூர்த்தியாக அவ தரித்து பூமி தேவியை தனது கோரப் பற்களின் மூலம் பாதாலத்தில் இருந்து மீட்டு வந்தார் அச்சமயத்தில் பகவா னுக்கும் பூமிதேவிக்கும் இடையே ஏற்பட்ட ஐக்கியத்தினால் நரகாசுரன் இருவருக்கும் புத்திரனாகத் தோன்றி னான் காலப்போக்கில் இவன் அசுர னாக மாற்றம் பெறுவான் என்று முன் கூட்டியே அறிந்த பகவான் பிற்காலத் தில் தான் இவனை வதம் செய்ய நேரும் அப்பொழுது உனது முன்னி லையில் உனது சம்மதத்துடன் சம்கா ரம் செய்வேன் இதன் பொருட்டே பூமி தேவியின் அவதாரமாகிய சத்திய பாமாவை யுத்தத்திற்கு அழைத்துச் சென்றான் ஸ்ரீகிருஷ்ணனுக்கும் நர காசுரனுடைய சைனியத்திற்கும் இடையே கடும் யுத்தம் நடைபெற்றது. ஈற்றில் பகவான் கண்ணன் சக்கரா யுதத்தை ஏவி நரகாசுரனை வதம் செய்தார் இதனைச் சத்தியபாமா பொறுத்துக் கொண்டாள். நரகாசுரன் இறந்ததும் இவன் அதிதியிடம் முன்பு அபகரித்த குண்டலங்களை மீட்டுவந்து பகவானிடம் வழங்கி இவன் இறந்த இந்நாளை மக்கள் அனைவரும் நந் நாளாக கொண்டாட வேண்டும் என்று பிரார்த்தித்தாள். இதுவே தீபாவளி நன்நாளாகும் என்று பத்ம புராணம் கூறுகின்றது நரகாசுரன் இறந்த நாளன்று தேவலோகத்திலும் பூலோ கத்திலும் மங்களகரமாக விளக் கேற்றப்பட்டன.

பூமிதேவியாகிய எனது பாரத்தை தீர்க்கவென்றே சுவாமி நீங்கள் பூவுல

கில் ஸ்ரீகிருஷ்ண அவதாரம் செய்தீர்கள் உலகத்தை படைத்து காத்து அழிக்கும் தன்மை உடையவர் தாங்களேதான் அன்றி வேறொரு தெய்வம் இல்லை ஆகையால் என்மீது கருணை கொண்டு நரகாசூரன் செய்த தீமைகளையும் பாவங்களையும் அகற்றி இவனை தூயவனாக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் என்றாள். பகவானும் அப்படியே செய்வதாக வாக்களித்தார் இதனால் பகவான் தேவராலும் மக்களாலும் நரகநாசன் என்ற பெயர்பெற்று விளங்கினார் இதன் பின்பு பகவான் கண்ணன் தேவலோகம் சென்று நீர் அருட்குடை.யை வருணனிடம் வழங்கினார் இந்திரனது தாயாரிடம் குண்டலங்களை வழங்கினார் சத்தியபாமாவின் விருப்பை பூர்த்தி செய்ய பாரியாத மரத்தையே வேருடன் பெயர்த்து வந்து ஈந்தார் என்று இப் புராணம் கூறுகின்றது.

இத்தேவஸ்தானத்தில் ஐப்பசி மாதத்தில் வரும் அபரபக்ஷ நரகசதுர்த்தசியன்று தீபாவளித்திருநாள் உற்சவம் ஸ்ரீ வேணு கோபால மூர்த்திக்கு கொண்டாடப்படுகின்றது.

சுபம்

*பெ.கோவிந்தசாமி*
*உதவிப் பொறுப்பாளர்.*
*வண்ணை ஸ்ரீவேங்கடேச*
*வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.*





ஸ்ரீ மகாலக்ஷ்மி விமானம்



ஸ்ரீ ஆண்டாள் விமானம்

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# கிருஷ்ணலீலையும் அதன் தொடர்புடைய உற்சவமும்

ஸ்ரீகிருஷ்ணலீலைகள் பலயாதவர்க்கும் மாதவர்க்கும் மக்கட்கும் நன்மை பயத்தனவேயன்றி தீமை பயப்பனவாக அமையவில்லை கண்ணன் ஆயர்சேரியில் ஆச்சியர் கடைந்து வைத்த வெண்ணெய்யை திருடி உண்டான் இதனால் நவநீத கிருஷ்ணன் என்ற பெயரைப் பெற்றான் குழந்தைப் பருவத்தே மண்ணையுண்ட கண்ணனைக் கண்ட யசோதை வாயைத்திறவெனப் பணித்தபோது இவனது வாயினுள் உலகையே கண்டாள், மருண்டு இவன் தெய்வக் குழந்தை என மதித்தாள். இத்தகுதி வாய்ந்தவன் தனது பிள்ளைப் பருவத்தே ஆயர்களது இல்லம் தோறும் சென்று வெண்ணெய் திருடி உண்டசெயலால் அயலவரிடம் யசோதை அவமானப்பட்டாள். தனது அருமைச் செல்வனின் செயல் கண்டு மனம் நொந்து அவனைத் தேடிப்பிடித்து அதற்குரிய தண்டனையை வழங்க வேண்டும் என்ற வைராக்கியத்துடன் கண்ணனைத் தேடித்திரிகின்றாள். பல இடங்களில் தேடியும் இவன் கிடைப்பதாக இல்லை கடைசியில் ஒரு தயிர் விற்பவனின் கடையினுள் புகுந்து இங்கு கண்ணன் வந்தானா என்று வினவினாள் இதற்கு முன்பாகக் கண்ணன் இவனது கடையை நாடிவந்து தன்னைக் காப்பாற்றும் படி இரந்தான் கண்ணனது பால் வடியும் முகமும், குறும்புப் பார்வையும், கரிய அழகிய தோற்றமும் மிகவும் கவர்ந்தன தயிர்விற்பவனது மனதை, உடனே இவன் தயிர்ச்சால் ஒன்றில் கண்ணனை மறைத்து வைத்துவிட்டான் மாயக்கண்ணனின் மாயத்தோற்றத்தில் ஆண்களே மயங்குவராயின் பெண்களின் நிலமை கூறவும் வேண்டுமோ. இவ்வேளை யசோதை தயிர்விற்பவனின் கடையினுள் புகுந்தாள் இவளின் நிலையை உணர்ந்த கடைக்காரன் வெண்ணெய் திருடி உண்ணும் உனது அருமைப்புதல்வன் இங்கு வரவில்லை என்று கூறி அவளை வெளியே அனுப்பி விட்டான். இதனால் மன வேதனையும் சினமும் கொண்ட யசோதைப்பிராட்டியார் கண்ணனின் வரவை எதிர்பார்த்து இல்லத்தில் காத்திருக்கின்றாள் அப்பொழுது நாய்ப்பசுவை நாடி வந்த கன்று போல கண்ணன் வந்து நிற்கின்றான் இதுவே ஏற்ற தருணமாக கருதிய யசோதை இவனை நயந்து பரிந்து அரவணைத்து கயிறு ஒன்றை எடுத்து இவனது அரையில் தொடுத்து உரலுடன் பிணைத்து விட்டாள். காத்தற் கடவுளாகிய நாராயணன் நரசிம்ம அவதாரம் எடுத்து இரணியவதம் செய்து பிரகலாதனைக் காத்தது போல் ஸ்ரீகிருஷ்ண அவதாரத்தில் நளகூபரர் ஆகிய தனது அடியவர்களது சாபத்தை நீக்கும் பொருட்டு அங்கு முற்றத்தில் மரமாய் நின்ற நளகூபரர் நடுவே உரலை உருட்டிச் சென்று மரங்களை சாய்த்தான் அக்கணமே இவ்விருவரும் சாபம் நீங்கப் பெற்று பகவான் கண்ணனைப் பலவாறு துதித்துப் போற்றி வணங்கினர். இதிலிருந்து நாம் அறிவது யாதெனில் கண்ணனின் லீலைகள் யாவும் கருத் துடன் கூடிய செயலாக நிகழ்த்தப் பெற்று யாதவர்க்கும், மாதவர்க்கும், மாந்தர்க்கும் யாவர்க்கும் நன்மை பயப்பனவாக அமைந்தனவே

தவிர்ந்து தீமை எவர்க்கும் பயக்க வில்லை என்று திடமாகக் கூறுகின்றது.

ஆகையினால்த்தான் பகவான் எடுத்த அவதாரங்கள் யாவும் உலக சேமத்தின் பொருட்டே நிகழ்த்தப்பெற்றன எனப் புராணங்கள் புகல்கின்றன. இவ் அவதாரங்கள் யாவற்றிலும் மேலாக ஸ்ரீராம அவதாரமும், ஸ்ரீகிருஷ்ண அவதாரமும் பெரிதும் மக்களால் விரும்பிப் போற்றப்படுகின்றன. ஸ்ரீராம அவதாரம் கருணையின் வடிவமானது ஸ்ரீகிருஷ்ண அவதாரம் அதர்மத்தை ஒழித்து தர்மத்தை இவ்வுலகில் நிலை பெறச் செய்ய வந்த அவதாரமாகும் இதனாற் போலும் கருணைவடிவான ஸ்ரீராமன் யுத்தகளத்தில் ஆயுதம் இழந்த இராவணனைப்பார்த்து "இன்று போய் நாளை வா" என்றான். இதே போன்று கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் கூறுகின்றான் தர்மம் குன்றி அதர்மம் ஓங்குங்கால் தர்மத்தை நிலை நாட்ட நான் தோன்றுவேன் என்கிறான் என்னே கண்ணனின் விந்தைச் செயல்கள்.

இத்தேவஸ்தானத்தில் ஸ்ரீகிருஷ்ணனின் அவதாரத்தையும் அவனது லீலையையும் உணர்த்தும் வகையில் மஹோற்சவத்தின் ஏழாவது நாள் இரவு வெண்ணைத் தாளிச் சேவை என்கின்ற உற்சவம் நடைபெறுகின்றது இவ் வுற்சவம் ஸ்ரீகிருஷ்ணன் வெண்ணெய் உண்ணும் காட்சியை சித்தரிக்கின்றது.

சுபம்

*இ.இராகவன்*
*உபசெயலாளர்*
*மகாசபை*
*வண்ணை ஸ்ரீவேங்கடேச*
*வரதராஜப் பெருமாள்*
*தேவஸ்தானம்.*



ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வண்ணைவாழ் ஆழ்வார் உற்சவங்கள்

வைணவத்தை பக்தி நெறியில் தமிழ்நாடு எங்கணும் வளர்த்தவர்கள் பன்னிரு ஆழ்வார்கள் ஆவர். இவர்கள் தமிழ் நாட்டிலுள்ள வைணவ தலங்கள் தோறும் சென்று பக்தி பயக்கும் இனிய திருமொழிகளை பாடிப் பரவி வைணவத்திற்கு அருந்தொண்டு ஆற்றினார்கள். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் 1988 ஆம் ஆண்டு ஆழ்வார்கள் சந்நிதியொன்று உருவாக்கப் பெற்று அதில் பன்னிரு ஆழ்வார்களின் விக்கிரகங்களை தாம்பரத்தில் உரு வாக்கி ஸ்தாபித்தனர்.

1988 ஆம் ஆண்டு முதல் இந்த ஆழ்வார்கள் தினங்களுக்கு உற்சவங்கள் நடத்தப்படுகின்றன. ஆழ்வார்கள் பன்னிருவராவர். இவர்களில் முதல் ஆழ்வார்கள் பொய்கையர், பூதத்தார், பேயார் ஆவர்.

## பொய்கையாழ்வார்

இவர்கள் காஞ்சிபுரத்தல் திருவெஃகாவில் துவாபரயுகத்தில் பூர்வபக்ஷத்து திருவோண நட்சத்திரத்தில் ஐப்பசி மாதத்தில் சித்தாத்திரி வருடத்தில் உதித்தவராவர். இவருக்கு வருடந்தோறும் இத்தினத்தில் விழா இங்கு எடுக்கப்படுகிது.

## பூதத்தாழ்வார

இவர் தொண்டைநாட்டில் மகாபலிபுரத்தில் துவாபரயுகத்தில் சித்தாத்திரி வருடத்தில் ஐப்பசி மாதத்து பூர்வபக்சத்து அவிட்ட நட்சத்திரத்தில் உதித்தவர் ஆவர். இவருக்கு வருடந்தோறும் இந்தத் தினத்தில் விழா எடுக்கப்படுகிறது.

## பேயாழ்வார்

இவர் சென்னை நகரைச் சார்ந்த திருமைலாப்பூரில் துவாபர யுகத்தில் சித்தாத்திரி வருடத்தில் ஐப்பசி மாதத்து பூர்வபட்சத்துசதய நட்சத்திரத்தில் உதித்தவராவர். இந்தத் திருநாளில் வருடந்தோறும் இவருக்கு விழா எடுக்கப்படுகின்றது.

## திருமழிசை ஆழ்வார்

இவர் திருமழிசையில் துவாபர யுகத்தின் சித்தாத்திரி வருடம் தை மாதம் அபரபக்சத்து மகம் நட்சத்திரத்தில் உதித்தவராவர். இங்கு இவருக்கு வருடந்தோறும் இந்தத் தினத்தில் விழா நடத்தப்படுகிறது.

## மதுரகவி ஆழ்வார

இவர் திருக்கோளூரில் துவாபர யுகத்தில் ஈஸ்வர ஆண்டில் சித்திரை மாதம் பூர்வ பட்சத்தில் சித்திரை நட்சத்திரத்தில் அவதரித்தவர். இவருக்கு இந்தத் திருப்பதியில் வருடந்தோறும் விழா நடத்தப்படுகிறது.

## நம்மாழ்வார்

இவர் தாம்பரபரணி ஆற்றின் தென்கரையிலுள்ள திருக்குருகூரில் கலியுகம்

பிறந்த 43 ஆம் நாள் பிரமாதி வருடம் பௌர்ணமி அன்று விசாக நட்சத்திரத்தில் திரு அவதாரம் செய்தவர். இவருக்கு இந்ததேவஸ்தானத்தில் வருடந்தோறும் இந்தத் தினத்தில் விழா எடுக்கப்படுகின்றது.

## குலசேகர ஆழ்வார்

இவர் கொல்லிநகரில் கலியுகத்தில் 28 வது ஆன பராபவ வருடம் மாசி மாதம் பூர்வ பக்சத்து புனர்பூச நட்சத்திரத்தன்று அவதாரம் செய்தவர். இவர் ஸ்ரீ ராமபிரான் மீது அளவற்ற பக்தி உடையவர். இவரது விழா வருடந்தோறும் இங்கு கொண்டாடப்படுகின்றது.

## பெரியாழ்வார்

இவர் ஸ்ரீ வில்லிபுத்தூரில் கலியுகத்தில் 47 வது ஆன குரோதன வருடத்தில் ஆனி மாதம் பூர்வபக்சத்து ஏகாதசித்திதியில் சுவாதி நட்சத்திரத்தில் திருஅவதாரம் செய்தவர் இவருக்கு வருடந்தோறும் இவ்வாலயத்தில் விழா எடுக்கப்படுகின்றது.

## ஸ்ரீ ஆண்டாள்

சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் அழைப்பர். இவர் ஸ்ரீ வில்லிப்புத்தூரில் நந்தவனத்தில் பெரியாழ்வாரால் கண்டெடுக்கப்பட்டார் என்றும் கலியுகத்தில் 98 வதுதான நளவருடம் ஆடி மாதம் பூர்வ பக்சத்து பூர நட்சத்திரத்தில் திரு அவதாரம் செய்தார். இங்கு இவருக்கு விழா சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. இவரது திருப்பாவை பாக்கள் பாடப்படுகின்றன.

## தொண்டரடிப்பொடியாழ்வார்

இவர் திருமண்டங்குடியில் கலியுகத்தில் 268 ஆவது பராபவ வருடம் மார்கழி மாதம் அபர பட்சத்து கேட்டைநட்சத்திரத்தில் உதித்தவர் இவரால் பாடப்பெற்ற திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் மார்கழி மாதம் முழுமையும் ஓதப்படுகின்றன. இவருக்கு விழா மார்கழியில் எடுக்கப்படுகின்றது.

## திருப்பாணாழ்வார்

இவர் திருவுறையூரில் கலியுகத்தில் 343 ஆவதான துன்மதி வருடத்து கார்த்திகை மாதத்து பூர்வபக்ஷத்து ரோகிணி நட்சத்திரத்தில் அவதாரம் செய்தவர். இந்தக் கோவிலில் இவருக்கு வருடம் தோறும் மேற்கூறிய தினத்தில் உற்சவம் நடத்தப்படுகின்றது.

## திருமங்கையாழ்வார

இவர் சோழ தேசத்து ஆலி நாட்டில் திருவாலி எனும் தலத்தில் அருகே உள்ள திருக்குறையலூரில் கலியுகத்தில் 398 ஆவது ஆன நளவருடம் கார்த்திகை மாதம் பௌர்ணமி திதியில் கிருத்திகை நட்சத்திரத்தில் அவதரித்தவர். இவ்வாலயத்தில் வருடந்தோறும் இந்தத் தினத்தில் விழா எடுக்கப்படுகின்றது.

*நிர்வாகசபை உறுப்பினர்*
*திரு.தி.சிவரூபன்*



கர்ப்பகிருஹமுன் கருடன் கோவில்



ஸ்ரீ வேணுகோபாலர் பரிவார மூர்த்தி

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வைணவ ஆகமமும் கலை மரபுகளும்

ஆழ்வார்களால் பாடல்பெற்ற தலங்களை மங்களாசனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்கள் என அழைப்பர். இவ்வாறான திவ்விய தேசங்கள் 108 பாரதத்தில் உள்ளன.

பாரதத்தின் சுயம்புத் தலங்களாக 8 தேவஸ்தானங்கள் விளங்குகின்றன. அவை திருவேங்கடம் (திருப்பதி), ஸ்ரீரங்கம், ஸ்ரீ மூஷ்ணம், சாளக்கிராமம், தோத்தாத்திரி, பத்திரி காசிரமம், நைமிசாரணியம், புஸ்கர சேத்திரம் என்பனவாகும். இருவகை வைஷ்ணவ மரபுநெறி முறைகள் வைஷ்ணவர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

## வடகலைமரபு

வடகலையைச் சாரந்த வைணவர்கள் நாமம் தரிக்கும்பொழுது நெற்றியில் இந தச் சின்னத்தை தரிக்கும் பொழுது கண்ணின் புருவம் வரை வெண்களி மண் சாந்தை ஈர்க்கின் உதவி கொண்டு இட்டுக்கொள்வார். இதன் மத்தியில் திருச் சூரணக் குழம்பைதைத் தரித்து இந்த நாமச் சின்னத்தைப் பூர்த்திசெய்வர்.

இந்த வெண்களியில் இட்ட சின்னம் யாக்கை நிலையானது அல்ல என்பதை உணர்த்துகின்றது. மத்தியல் இடும் சூர்ணச் சின்னம் ஸ்ரீ மகாலக்ஷ்மியின் கடாட்சத்தை உணர்த்துகின்றது. இந்தச் சின்னத்தை தரிப்பவர்க்கு இது காப்பாக அமைகின்றது.

வடகலை வைஷ்ணவர்கள் ஸ்ரீமந்நாராயண சம்பந்தமுடைய வைகாசன கிரியை வழிபாட்டு முறைகளை பிரமாணங்களாக ஏற்று வைதீக காரியங்களைச் செய்வர். அத்துடன் ஸ்ரீபாஷ்யத்தையும் வடமொழியில் யாத்தஸ்ரீமந்நாரயணனது திவ்விய நூல்களையும் ஏற்றுப் பாராயணம் செய்வர். இவர்கள் ஸ்ரீவேதாந்த தேசிகரைப் பின்பற்றுகின்றனர். இவர்களது முதன்மைத் தலம் திருப்பதி ஸ்ரீவேங்கடாச்சல பதிதேவஸ்தானமாகும்.

## தென்கலை மரபு

தென்கலையைச் சார்ந்த வைஷ்ணவர்கள் நாமச்சின்னத்தை இடும்பொழுது கண்ணின் புருவத்தின் கீழ்ப்பாகம் வரை வெண்களிமண் சாந்தை ஈர்க்கின் உதவிகொண்டு பாதம் இடுவர். இதன் மத்தியில் திருசூர்ணக் குழம்பைத் தரித்து இதனைப் பூர்த்தி செய்வர். தென்கலையை சார்ந்த வைஷ்ணவர்கள் ஸ்ரீமந்நாரணனுடைய பாஞ்சாரத்திர கிரியைகளையும் வழிபாட்டு முறைகளையும் பிரமாணங்களாக ஏற்று பக்திக்கும் பாகவத கைங்கரியங்களுக்கும் முதலிடம்

அளித்து ஸ்ரீபாஷ்யத்தையும் நலாயிர திவ்விய பிரபந்தத்தையும் ஏற்று பாராயணம் செய்வர். இவர்கள் ஸ்ரீராமானுஜ ஆச்சாரியரைப் பின்பற்றுகின்றனர். இவர்களது முதன்மைத்தலம் + ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதசுவாமி தேவஸ்தானமாகும்.

வடகலை, தென்கலை சார்ந்த வைஷ்ணவர்கள் வேறுபாடின்றி சகல வைஷ்ணவ தலங்களையும் வழிபாடு செய்வர். வைஷ்ணவம் வளம் பெறக் காரணமாக அமைந்த திவ்விய நூல்கள் ஆவன சதுர்வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணநூல்கள் - கருடபுராணம், நாரதபுராணம், பாகவத புராணங்கள் ஆகும். வைஷ்ணவத்தின் முக்கிய நோக்கு சரணாகதித் தத்துவத்திலேயே அடங்கியுள்ளது.

பாரதத்திலுள்ள வைஷ்ணவ ஆலயங்கள் இருவகை நெறிமுறைகளை பின்பற்று கின்றன. அவையாவன வைகானசம், பாஞ்சராத்திரமாகும்.

## வைகானச ஆகமம

மிகப்புராதன காலத்தில் விகனசர் என்ற மகரிஷியினால் திருவாய் மலர்ந்து அருளப்பட்டது. இது வேதங்களுக்கு முதன்மை ஸ்தாணம் வழங்கி அதில் கூறப்பட்ட கிரியா அம்சங்களை ஏற்று அதன் வழிமுறைகளைப் பின்பற்றுகின்றன. திருப்பதி ஸ்ரீ வேங்கடாசலபதி தேவஸ்தானத்தில் வைகான ஆகம நெறி முறைகளைப் பின்பற்றுகின்றனர். இதுபோன்றே வடகலை ஆலயங்கள் யாவும் பின்பற்றுகின்றன.

## பாஞ்சராத்திர ஆகமம்

ஐந்து இரவுகளில் பகவானால் சனர், சாண்டில்யர் ஆகியோருக்குப் திருவாய் மலர்ந்தருளப்பட்டது. இப்பாஞ்சராத்திர ஆகமத்தில் ஆலயங்கள், விக்கிரகங்கள் அமைத்தல், பூஜை முறைகள், உற்சவங்கள் முதலியவற்றின் கிரியா முறைகள் விளக்கப்பட்டுள்ளன. ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு முதன்மை ஸ்தானம் வழங்கப்பட்டுள்ளன. இப்பாஞ்சராத்திர கிரியா முறைகள் ஸ்ரீரங்கம் காஞ்சிபுரம் ஆகிய தென்கலை வைஷ்ணவத் தலங்களில் அனுஷ்டிக்கப்படுகின்றன. வைஷ்ணவம் ஆன்மாக்களின் முத்திநிலை ஆகிய ஸ்ரீவைகுந்தத்தை அடைய பக்தி மார்க்கத்தை கடைப்பிடித்து பூரண சரணாகதி பக்குவத்தை ஏற்பதே சிறந்த மார்க்கம் என இயம்புகிறது. ஸ்ரீமந்நாரயண மூர்த்தி ஐந்து வகை நிலைகளை உடையவர். அவை பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்பனவாகும்.

பரம் என்னும் நிலை ஞானிகள் மாத்திரம் இப்பக்குவ நிலையிலிருந்து பரம்பொருள் ஆகிய ஸ்ரீமந்நாராயணனை உணரக்கூடிய நிலையாகும்.

வியூகம் என்னும் நிலை பக்தர்கள் சரணாகதித் தத்துவத்தைக் கடைப்பிடித்து பரபக்தி என்னும் பக்குவ நிலையிலிருந்து திருப்பாற்கடலின் தூய்மையும், வெண்மையும் பொருந்தப் பெற்ற தன்மையுடைய ஆன்மாக்களின் உள்ளத்தில் பகவான் திருப்பாற்கடலில் பள்ளிகொண்டு வீற்றிருக்கும் தன்மையை உணரக் கூடிய நிலையாகும்.

விபவம் என்னும் நிலை மூன்று தன்மைகளையுடையது. அவை ஆவேசம், அவதாரம், அம்சம் ஆகும்.

1. ஆவேசம் ஒரு செயலை நிகழ்த்துவதற்காக சடுதியாய்த் தோன்றி அக்கருமம் நிறைவுற்றதும் மறைந்துவிடுதல். இந்த உருவத்திருமேனிகள் ஆவன மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம் ஆகும்.

2. அவதாரம் என்னும் நிலை பகவான் பூமியில் பிறப்பு எய்தி உலக இன்பதுன்பங்களை அனுபவித்து மனிதனாக வாழ்ந்து அந்த அவதார நோக்கை நிறைவு செய்தலாகும். இவ்வகை உருவத்திருமேனிகளாவன, ஸ்ரீராமபிரான், ஸ்ரீகண்ணபிரான் ஆவர்.

3. அம்சம் என்னும் நிலை பகவானது திருக்கரத்தில் உள்ள சங்கு, சக்கரம், கௌஸ்துபம், சாரங்கம் என்னும் ஆயுதங்களையும் மார்ப்பில் அணியப் பெற்றுள்ள துளாய் மாலையையும், வாகனாதிகள் ஆகிய கருடன் ஆதிஷேசன் ஆகியோரையும் உலகில் பிறவி எடுக்கச் செய்து ஆன்மாக்களுக்கு நன்மை பயக்கின்றது. இவ்வகை உருவத்திருமேனிகளை எடுத்தவர்கள் ஆழ்வார்கள் ஆவர். அம்சம் என்னும் நிலையை ஆராயும் பொழுது ஒரு சில புராணிகர்கள் பகவானின் ஆணைக்கு ஏற்ப ஆதிஷேசன் பலராமரது அவதாரம் எடுத்து ஸ்ரீகிருஷ்ணனுக்கு தூதுவனாக அமைப்பெற்றார் என்று கருதுகின்றனர்.

4. அந்தர்யாமித்துவம் என்னும் நிலை பகவான் ஸ்ரீமந்நாரயணன் மறைந்து நின்று அருளும்நிலையாகும். பிரகலாதனது தூய பக்தியையும் அவனது திடமான வைராக்கிய நம்பிக்கையையும் கண்ணுற்ற பகவான் அவனது இன்னல்களைக் களைந்து அருளும் பொருட்டு தூணில் மறைந்து நின்று நரசிம்ம உருவில் வெளிப்பட்டு இரணியனை வதம் செய்து தனது பக்தனுக்கு அருள பாலித்து தனது திடீர் அவதாரத் திருமேனி கொண்டு இதன் நோக்கைப் பூரணப்படுத்தும் இத்தன்மையை அந்தர்யாமித்துவம் என்று அழைப்பர்.

5. அர்ச்சை என்னும் நிலை பகவான் ஸ்ரீமந்நாரயணன் விக்கிரக வழிபாட்டில் எழுந்தருளி நின்று அருளாபலிக்கும் நிலையாகும். வைஷ்ணவ மதத்தில் பகவான் ஸ்ரீமகா விஷ்ணுவின் அர்ச்சிக்கும் உருவத்திருமேனிகள் எனப்படும் விக்கிரகங்கள் ஆவன, ஸ்ரீவேங்கடேசப்பெருமாள் ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஸ்ரீ லக்சுமிநாராயணன், ஸ்ரீபூவராக மூர்த்தி, ஸ்ரீலக்சுமி நரசிம்ம மூர்த்தி, ஸ்ரீ ராமமூர்த்தி ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி என்பனவாகும். இவ்வழிபாட்டில் வடகலையைச் சார்ந்த திருவுருவாக ஸ்ரீவேங்கடேச் பெருமாளையும் தென்கலையைச் சார்ந்த திருவுருவாக ஸ்ரீவரதராஜப் பெருமானளயும் வைஷ்ணவ மதத்தைச் சார்ந்தோர் போற்றிச் சேவிப்பர்.

*இங்ஙனம்*
*வெ.நா.செ.நாராயணசாமி*
*மகாசபை உறுப்பினர்*

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# கும்பாபிஷேக தத்துவம்

இறைவன் எழுந்தருளும் இடங்களைக் கும்பம்,பிம்பம்,தம்பம் என மூவகை யாகக் கூறுவர். ஆலயங்களைப் புதுப்பிப்பதற்கு அங்குள்ள பிம்பம் தம்பம் ஆகியவற்றில் விளங்கும் மூர்த்திகளைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து கோயிலைப் புதுப்பித்தபின் அங்குள்ள திருவுருவங்களில்அபிடேகத்தின் மூலம் மீண்டும் அம்மூர்த்திகளைச் சேர்ப்பித்தலைக் கும்பாபிஷேகம் என கூறுவர் கும்பாபிஷேகம் குடமுழுக்கு, திருக்குட நன்னீராட்டு என்ற பெயர்களாலும் வழங்கப் பெறும் பிரதிஸ்டை எனவும் கூறப்பெறும்.

பிரதிஷ்டை வகை:- ஆலய பிரதிஷ்டை நான்கு வகைப்படும் அவை

1.ஆவர்த்தம் 2.அநாவர்த்தம்
3.புனராவர்த்தம் 4.அந்தரிதம் என்பனவாம்.

ஆவர்த்தம்:- ஓர் ஆலயத்தைப் புதிதாகக் கட்டிமுடித்து பாலாலய மூர்த்தியைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து பூசித்து மூலஸ்தானத்தில் அம் மூர்த்தியை எழுந்தருளச்செய்து அதற்கு அபிஷேகம் செய்தல் ஆவர்த்தம் எனப்படும்.

அநாவர்த்தம்:- ஆற்றுப் பெருக்காலோ, பெருமழையாலோ, நில அதிர்வுகளாலோ, மணல் மூடியதாலோ பல ஆண்டுகள் பூசை இல்லாமல் இருந்த ஆலயத்தைக் கட்டிமுடித்து விக்கிரகங்கள் முதலியவற்றைப் புதுப்பித்துக் கும்பாபிசேகம் செய்தல் அநாவர்த்தம் எனப்படும்.

புனராவர்த்தனம்:- கருப்பக்கிரகம், விமானம், பிரகாரம், கோபுரம், பலிபீடம் முதலியவைகளில் பழுது ஏற்பட்டாலும், அஷ்ட பந்தனத்தில் பழுது உண்டானாலும் விமான விக்கிரங்களில் பழுது நிகழ்ந்தாலும் வர்ணம் அழிந்திருந்தாலும் சுவாமியைப் பாலாலயம் செய்து ஆலயத்தை புதுப்பித்து மூலதானத்தில் மீண்டும் சுவாமியைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தல் புனராவர்த்தனம் எனவும் வழங்கப்பெறும்.

அந்தரிதம்:- ஆலயத்தில் திருட்டு நிகழ்ந்தாலோ,சண்டாளன்,நாய் முதலியன உள்ளே புகுந்தாலோ சுவாமியின் பிரத்தியங்கம்,உபாங்கம் போன்றவைகளுள் பழுது ஏற்பட்டாலோ உடனே அவைகளைத் திருத்தி மகா கும்பாபிஷேகம் செய்தல் அந்தரிதம் எனப்பெறும். இதற்கு நாள் நட்சத்திரம் பார்க்கவேண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும் கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகட்கு

ஒரு முறை செய்யவேண்டுமென்பது ஆகமவிதி. இவ்வாறு செய்யப்படும் மூர்த்திகளிலேயே தெய்வ சாநித்தியம் மிக்கிருக்கும்.

**அஷ்ட பந்தனம் :-** எட்டுவகையான மருந்துகளை அந்தந்த அளவோடு கூட்டி மூர்த்திகள் பீடத்திலிருந்து அசையாதவண்ணம் சாத்தப் பெறும் மருந்து அஷ்ட பந்தனம் எனப் பெறும் சுக்கான் மூன்று பங்கு குங்கிலியம் இரண்டு பங்கு , கொம்பரக்கு ஒரு பங்கு, தேன்மெழுகு, காவிக்கல், செம்பஞ்சு இவை வகைக்கு முக்கால் பங்கு, சாதி லிங்கம் கால் பங்கு இந்த அளவில் கூட்டி நன்றாக மரஉரலில இடித்துச் சேர்க்கப்பெறும். இம்மருந்தை, மூர்த்திகளுக்குச் சாத்துதல் வேண்டும். இது கும்பாபிஷேகத்தில் செய்யப்படும் முக்கிய கிரியையாகும்.

**கிரியைகள்:-** கும்பாபிஷேகத்திற்கு அங்கமாகச் செய்யப்படும் கிரியைகள் அறுபத்து நான்காகும் சில ஆகமங்கள் ஐம்பத்தைந்து என்றும் கூறும் அவற்றுள் அனுக்ஞை,கணபதி பூஜை, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரணம்,அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கும்பஸ் தாபனம், கலா கர்ஷணம், யாகசாலை, பிம்பசுத்தி, ஸ்பர்சாகுதி முதலியன இன்றியமையாதன.

**அனுக்ஞை:-** ஆசாரியனைத் தேர்ந்து எடுத்து அவரை இறைவன் அனுமதி பெற்றுக் கும்பாபிஷேகம் செய்வதற்கு நியமனம் செய்தலாகும்.

**கணபதி பூஜை :-** காரியம் இடையூரின்றி நிகழ நிகழ்த்தும் வழிபாடு.

**வாஸ்து சாந்தி :-** பூமியைச் சுத்தம் செய்தல்.

**மிருத்சங்கிரணம்:-** மண் எடுத்தலாகும்.

**அங்குரார்ப்பணம்:-** முளையிடுதல்.

**ரக்ஷாபந்தனம்:-** காப்புக் கட்டுதல்.

**பிம்பசுத்தி:-** மூர்த்திகளைத் தூய்மை செய்தல்.

**ஸ்பர் சாகுதி:-** மூர்த்திகளுக்குச் செய்யப்படும் யாகப் பயன்களை மூர்த்திகளிடம் சேர்த்தல் இவ்வாறே ஒவ்வொரு கிரிஜையும் யாகசாலையில் நிகழும்.

**கும்பம்:-** யாக சாலையில் எழுந்தருளவிருக்கப் பெறும் கும்பங்கள் அந்தந்த மூர்த்திகளின் திருவுருவங்களாகும்,கும்பத்திலமைந்த பொருள்கள் அனைத்தும் அம்மூர்த்திகளின் உடற்கூறுகளாகக் கருதப்படும், கும்ப வஸ்திரம் - தோல், மேல் பூசிய செம்மண் - இரத்தம், கும்பத்துமண் - மாமிசம் தீர் - மேதை ,சுற்றியநூல் - 72ஆயிரம் நாடிகள் உள்ளிடு ரத்தினம் - சுக்கிலம் , கூர்ச்சம் - எலும்பு , மாந்தளிர் - மயிர், தேங்காய் - சிரம், கீழே பரவும் நெல் முதலியன- ஆசனம் , மந்திரம் - பிராணன்,இவ்வாறு கும்பம் சிவ சொரூமாகப் பாவிக்கப்பெறும்,கோயில் திருவுருவங்களில் உள்ள தெய்வீக

சக்தியைக் கும்பத்தில் ஆவாகித்து யாகசாலைக்கு எழுந்தருளச் செய்து உபசரித்து மகிழ்வித்தல் வேண்டும்.

**கலாகர்ஷணம்:-** கலைகள் பதினாறு அவை அகரம், உகரம், மகரம், விந்து, பிறைமதி, நிரோதினி நாதம், நாதாந்தம், சக்தி, வியாபினி, வியோமருபை, அநந்தை, அநாதை, அநாகிருதை, சமனை, உன்மனை என்பனவாம்.

மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியை எழுப்பி இறைவன் வரை கொண்டு சென்று, பாசங்களை நீக்கி உன் மனையில் சுத்தமானதாகப் பாவித்து அதன் மேல் இருக்கும் சிவத்தினிடம் சேர்த்துப் பிராசாத மந்திரத்துடன் கலந்த சிவத்தை ரேசகம் என்னும் பிராணாயாம வகையால் கையில் இருக்கும் பூவால் எழுந்தருளச் செய்து கும்பத்தில் இருக்கச்செய்யும் கிரியை கலாகர்ஷணம் எனப்படும்.

யாகசாலை:- யாகசாலை 36 தத்துவ சொரூபமாகவும் சிவபெருமானது அட்ட மூர்த்த வடிவமாகவும், ஆறு அத்துவாக்களின் வடிவாகவும் கூறப்படும் யாகமண்டபம் சாந்தியதீதகலை, பந்தல் கால்கள் - பதம் மண்டப நாடு - வர்ணம் , கும்பம்- மந்திரம், ஓமப் பொருள் - தத்துவம் யாகசாலை அமைந்துள்ள இடம் - புவனம் நான்கு வாயில்கள் - நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி என்ற கலை, வேதிகை ஆதார சக்தியுடன் கூடியதாக அநந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம், என்ற ஐந்து ஆசனங்களை உடையது.

**கும்பாபிஷேகம்:-** யாகசாலையில் ஒன்பது குண்டகளில் அக்கினி வளர்க்கப்படும் அவை நாற்கோணம், முக்கோணம், அர்த்த சந்திரன் முதலிய வடிவங்களில் காணப்படும் குண்டங்களைச்சுற்றிப் பசுந்தர்ப்பைக ளைப் பரப்பி ஆல் அரசு முதலிய சமித்துக்களை குண்டத்தில் இட்டு, கடைந்தெடுக்கப்பட்ட சுத்தமான அக்கினி கொண்டு அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி அத்தெய்வங்களை மனத்தில் தியானித்து சுருக்கு சுருவம் என்னும் கருவிகளைக் கொண்டு நெய் சொரிந்து அவி வளர்க்கப்படும். மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றாலும் வழிபாடு நிகழும் ஓம குண்டத்தில் எழும் புகையும், வேதம் சிவாகமம் திரு முறை ஒலிகளும் அன்பர்களின் நல்லெண்ணங்களும் எங்கும் வியாபித்திருக்கின்ற இறைவனது அருட்சக்தியைத் தூண்டிக் கும்பத்தில் பிரகாசிக்கச் செய்யும் அப்போது கும்பம் முழுமையான தெய்வீக சக்தியோடு திகழும் இவ்வாறு யாகசாலையில் நடைபெறும் கிரியைகள் முற்றுப்பெற்றவுடன் அச்சக்தி ஆலயத்திலுள்ள மூர்த்திகளுக்கு தருப்பைக் கயிறு பொன், வெள்ளிக் கம்பிகளால் சேர்ப்பிக்கப்படும், அதன்பின் கும்பத்திலுள்ள நீர்,சிகரங்களுக்கும் பிம்பங்களுக்கும் அபிடேகம் செய்யப்பெறும் விமான கலசம் மூல மூர்த்தியின் சக்தியை உலகெங்கும் பரவச் செய்து நன்மைகளை உலகிற்கு உண்டுபண்ணும்.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

மகாபிஷேகம் :- கும்பாபிஷேகம் செய்வித்தபின் இறைவன் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளுக்கு முறைப்படி விஷேச அபிஷேக ஆராதனைகள் செய்வித்தற்கு மகாபிஷேகம் என்று பெயர்.

மண்டலாபிஷேகம்:- கும்பாபிஷேகம் செய்த நாளிலிருந்து 45 நாட்களுக்கு மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேகம் செய்வித்துப் பூர்த்தி செய்வதை மண்டலாபிஷேகம் என்று கூறுவர்.

கும்பாபிஷேகப்பலன்:- கும்பாபிஷேகம் பெருந்சாந்தி எனப் பெயர் பெறும் திருஞான சம்பந்தர் சிறந்த ஆலய விழாக்களைக் குறித்து அருளிச்செய்த பூம் பாவைத் திருப்பதிகத்தில் பெருந் சாந்தி விழாவைக் கண்டு களிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார். கும்பாபிஷேகம் செய்தல், செய்வித்தல், துணைபுரிதல், கண்டுகளித்தல் ஆகியன மிக்க சிவபுண்ணியத்தை நமக்கு ஈட்டித்தரும் சிறப்புடையன. பெருந்சாந்தி விழாவைச் செய்பவர், செய்விப்பவர், காண்பவர்கள் இருமை இன்பங்களையும் எய்தி இன்புறுவர்.

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்
*B.A.(HONS)*
ஆசிரியர் யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
வர்ணனை ஒலிபரப்பாளர்,இலங்கை ஒலிபரப்புகூட்டுஸ்தாபனம்.



ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வைணவ திருக்கோவில் அமைப்பும் வழிபாடும்

ஷண் மதங்கள் எனக் கூறப்படும் அறுவகை வழிபாட்டு முறைகளாகக் காணாபத்தியம் கௌமாரம், சைவம், சாக்தம், சௌரம், வைஷ்ணவம், என்பன கொள்ளப்படுகின்றன. மிகச்சாதாரண நிலையில் உள்ள மனிதன் எளிய முறையில் பக்தியின் மூலம் அனுபூதி அடையமுடியும். பக்தி என்னும் பரிசுத்த நிலையில் நித்தியமான பரம்பொருளைச் சரணடைந்து கலந்து விடமுடியும். தத்துவ சிந்தனைகளுக்கு அப்பால் சமுதாய வாழ்வினை அடிப்படையாகக் கொண்டு விளங்குவது வைஷ்ணவ சமயம் ஆண்டாளின் பாசுரம் ஒன்று தத்துவமன்று தகவேலோரெம்பாவாய்' எனக்குறிப்பிடுகின்றது.

**"பக்த்யா பகவந்தம் நாராயணம் அர்ச்சயேத் தத்விஷ்ணோ.**
**பரமம் பதம் கச்சந்தி விக்ஞாயதே"**

பக்தியுடன் பகவானான நாராயணனை வழிபட்டு விஷ்ணுவினுடைய பரமபதத்தை அடையலாம் என வைகானஸகல்ப சூத்திரத்தில் விகனமகரிஷி எடுத்து கூறுகின்றார். மேலும் ஸ்ரீமந்நாராயணனின் திவ்யமங்கள விக்கிரகத்தை வர்ணாச்சிரம நியமங்களோடு பக்தியுடன் பகவானை ஜபம், ஹோமம், அர்ச்சனை, தியானம், என்பவற்றின் மூலம் ஆராதிப்பதே சரிதகிரிஜா, யோக ஞானங்களாகிய நான்கு சாதனங்களுமாகும் என விஷ்ணு புராணம், மரீசி சம்ஹிதை என்பனவும் எடுத்தியம்புகின்றது.

**"வர்ணாஸ்ரமாசாரவதா புருஷேண ப்ரபுமான் விஷ்ணுராராத்யதே பந்தா:**
**நான்யஸ்தத் தோஷகாரக"**

**- பராசரர் விஷ்ணு புராணம்.**

"சரிதக்ரியாஞானயோகேசு சதுர்சுபூஜாமார்க்கேசு அதசமாஸ்ரயணம் சதுர்விதம் பவதி ஜபஹுத அர்ச்சனத்யானாதீனி மரீசிசம் + ஹிதை" இறைவனின் நாமத்தை ஜபம் செய்வது அவனது உருவத்தினைத்தியானித்து வழிபடுவது என்பவற்றின் மூலம் இக்கலியுகத்தில் பக்தி செலுத்தி பகவானை ஆராதனை செய்வது இலகுவானதாகும்.

வைஷ்ணவத்திற்கேயுரிய சிறப்புத்தன்மை அவதாரக்கொள்கையாகும். நினைத்தபொழுது நினைத்த உரு நிறுத்திடும் நிர்மலன் ஆக சிவன் திருவிளையாடல்கள் புரிந்து' ஆட்கொள்கிறான். விஷ்ணுவானவர் (அவதாரம் கீழிறங்குதல்) மக்களை நல்வழிப்படுத்துவதன் பொருட்டும் தர்மத்தை நிலை நாட்டுவதன் பொருட்டுமல்ல நல்லோரைக் காப்பாற்றவும் யுகங்கள் தோறும் அவதாரங்களை மேற்கொண்டு உலகினை நிலைபெறச் செய்கின்றார்.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

"யதா யதா கிதர்மஸ்யக்லானி : பவதி பாரத
அபயுக்தானாம் அதர்மஸ்ய ததாத் மானம் ஸ்ருஜாம்யகம்
பரித்ராணாய சாதூனாம் விநாசாய சதுஷ்க்ருதாம்
தர்ம சம்ஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகே யுகே"

- பகவத்கீதை.

கலியுகத்தில் ஜீவாத்மாக்களுக்கு முக்தி அளிக்கவேண்டும் என்பதற்காக பரம கருணையுடைய எம்பெருமான் பூலோகத்திற்கு அர்ச்சாவதாரம் செய்கின்றான். (சிலைவடிவாக வருகின்றான்)

"அச்சாவதார ரூபேண லோகேஸ்மின் சதுரானன
அவதாரம் கரிஷ்யாமி ஹரியா லக்ஷ்மியா சமன்வித:"

அப்படி எம்பெருமான் அவதாரம் செய்த இடத்தைச் சுற்றி வந்து வணங்கவும் தூய்மையாக வைத்துக்கொள்ளவும் ஏற்பட்டவைதான் ஆலயங்கள். பல இன்னல்களால் அமைதியற்றிருக்கும் மனதை அமைதியாகவும் ஆனந்தமாகவும் அழகாகவும் இருக்கின்ற எம்பெருமானைக் கண்ணினால் கண்டு

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணையுண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினை காணாவே" என்பதாக திருப்பாணாழ்வார் அனுபவித்தது போல அனுபவிக்கவேண்டும். அப்பொழுது மனம் ஒருநிலைப்பட்டு அமைதியும் ஆனந்தமும் ஏற்படும்.

ஆலயங்களை அமைக்கின்ற விடயத்தில் ஆகமங்கள் தேவாலய வாஸ்த்து சாஸ்திரங்கள் சிற்ப சாஸ்த்திரங்கள் என்பன பின்பற்றப்பட வேண்டிய அறிவு நூல்களாகும் .வைஷ்ணவத்திற்குரிய ஆகமங்கள் சிறப்பாகச் சம்ஹிதைகள் என அழைக்கப்படும். வைகானஸம், பஞ்சராத்ரம் என்னும் சம்ஹிதைகள் வைஷ்ணவ ஆலய அமைப்பு மற்றும் பூஜை முறைகள் என்பன பற்றி எடுத்து இயம்புகின்ற முக்கியமான நூல்களாகும், கிரியைகளை விளக்குகின்ற நூல்களாகிய கல்ப்பசூத்திரங்களின் வரிசையில் ஸ்ரீவைகானஸ கல்ப்ப சூத்திரமும் ஒன்றாகும்.

"நாராயணஸ்ய யஸ்யாத்மா விகனா இதி வர்த்ததே" ஸ்ரீமந்நாரணரின் ஆத்மா வடிவமாக வந்த விகனஸ முனிவரால் ஏற்படுத்தப்பட்டதே, இந்த ஸ்ரீ வைகானஸகல்ப்ப சூத்திரமாகும். விகனஸ முனிவரால் தமது சிஷ்யர்களான மரீசிப்ருகு, காசியபர், அத்திரி போன்ற முனிவர்களுக்கு உபதேசிக்கப்பட்ட ஜய, ஆனந்த, சம்ஞான, வீர, விஜய, விமல, கல்ப்ப, சம்ஹிதைகள் என எட்டுவிதமான சம்ஹிதையின் பிரிவுகள் காணப்படுகின்றன,

32 பகுதிகளையுடைய இந்த வைகானஸ கல்ப்பசூத்திரத்தில் மரீசி முதலிய விகனஸரின் சிஷ்யர்களாலே கர்ஷணாதி உத்சவம் வரையிலான தெய்வீக

விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. மரீசி முனிவரால் கூறப்பட்ட ஆனந்த சம்ஹிதையில் விமானார்ச்சனாகல்ப்பம் என்னும் பகுதி கூறப்பட்டுள்ளது.

“பகவானேவஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே ஸ்வயமேவகாரயதி”

என திவ்வியமங்கள விக்கிரகமாகத்தன் நிலையிலிருந்து இறங்கி ஸ்ரீதேவி, பூமிதேவியுடன் அவதரித்து தன்னைப் பூலோகத்தில் சாசுவதமாக ஏற்படுத்திக் கொண்டவர் பகவான் விஷ்ணு.

உயர்ந்ததான ஜோதி வடிவாக பிரம்மவஸ்த்துவாக இருக்கின்ற அழிவற்றது மான எல்லா உயிர்களிலும் ஆத்மாவாகவும் இருக்கின்ற எல்லாவற்றிற்கும் ஆதாரமாக விளங்குகின்ற எல்லோரையும் காப்வராகவும் விளங்குகின்ற பரமபுருஷானாகிய விஷ்ணுவை அர்ச்சித்து வழிபடுகின்ற முறைமையே வைகானஸகல்ப்ப சூத்திரத்தின் ஆனந்த சம்ஹிதையில் விமானார்ச்சனா கல்ப்பம் என்ற பகுதியில் கூறப்படுகின்றது. 101 படலங்களை பகுதிகளாக உடைய விமானார்ச்னா கல்ப்பம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ள வைஷ்ணவ ஆலய அமைப்பினை பற்றியே இக்கட்டுரையில் பெரும்பாலும் கூறப்படுகின்றது.சுருதி, யுக்தி, அனுபவம், என்கின்ற 3 நிலையிலும் ஆகமங்கள், சிற்பசாஸ்த்திரங்கள், தேவாலயவாஸ்து, ஜோதிடம், போன்ற சாஸ்த்திரங்களின் அடிப்படையிலும் ஸ்தபதி ஆசார்யன் ஆகியோர் மரபு வழி நின்று இவ்விடயங்களைப் பரீட்சித்துக் கடைப்பிடிக்கவேண்டும் என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். சைவசமய மரபில் கோவில் என்பது சிதம்பரம் திருக்கோவிலைக் குறிக்கும். இதயஸ்தானமாக கருதப்படும் சிறப்பு போல வைஷ்ணவ மரபில் ஸ்ரீரங்கம் திருக்கோவில் கருதப்படுகின்றது. இவ் ஆலயம் ஏழு பிராகாரங்களைக் கொண்டு சம்ஹிதைக ளிற் கூறப்பட்டவாறு அமைந்த சிறந்த ஆலயமாகும் .இங்கு தென்னிந்திய பண்பாட்டோடிணைந்த வைஷ்ணவ சம்பிரதாயங்கள் பின்பற்றப்பட்டு நித்திய நைமித்தியங்கள் நடைபெற்று வருகின்றது.

மங்களா சரணத்துடன் மரீசி முனிவருக்கும் அவரது மாணவர்களுக்கும் இடையே உரையாடல்களாக இடம் பெறுகின்ற இச் சம்ஹிதையில் ஆசார்ய வரணம், பூமி பரீஷை முளையிடுதல் கிராமகிரக அமைப்பு கர்ஷணம் செய்து நிலத்தைப் பண்படுத்தல் பாலயாலம் அமைத்தல் சங்குஸ்தாபனம், இரத்தினங்கள், வைத்தல் என்னும் விடயங்கள் கூறப்படுகின்றது. அடுத்து சங்கீரணம் சாந்திகம், பௌஷிடிகம், ஜயதம், அத்புதம், சர்வகாமிகம் என்னும் வகை வகையான விமானங்களின் இலக்ஷணங்கள் நாகரவேசர திராவிட முறையான விமானங்களை அமைத்தல் என்பன, பற்றிக் கூறப்படுகின்றது. தொடர்ந்து அதிஷ்டான பேதம் கருவறையின் அளவு எடுக்கும் முறைமை முகமண்டபம், அர்த்தமண்டபம், வாயில் கதவு, என்பவற்றின் அளவுகள் அமைக்கும் முறை என்பன கூறப்பட்டு வருகின்றது . ஸ்தூபியின் அளவு விமானத்தின் ஸ்தூபியில் அமைக்கப்பட வேண்டிய விடயங்கள் என்பனவும் தொடர்ந்து கூறப்படுகின்றது. பதினொராவது படலம் முதலாக ப்ராஸாதத்தின் அளவினடிப்படையில் பிரகாரங்கள் அமைய வேண்டிய முறைபற்றிக் கூறுகின்றது. ஒவ்வொரு பிராகாரத்திற்கும் அதன் முன்பக்கத்திற்கும் உரிய அளவுகளைக் கூறி எழு பிராகாரம் கொண்ட அமைப்பு பற்றி கூறுகின்றது .

மூலப்பிராகாரத்தின் பரப்பளவை மையமாகக் கொண்டு ஒரு தளம் முதல் பன்னிரண்டு தளங்கள் வரையான கோபுரத்தின் அமைப்பு பரிவாரக்கோயில்களின் அமைப்பு மகா மண்டபத்தின் அளவமைப்பு, சபாமண்டபத்தின் அமைப்பு, முன் நிருத்தமண்ட பத்தின் ஆக்ணேயதிக்கில் ஆஸ்தானமண்டபம், சோபன மண்டபம், ஸ்னபன மண்டபம், அக்கினி திக்கில் யாகசாலை, தென்புறச்சாலையின் மத்தியில் நித்திய அக்கினிக்குண்டம், தெற்கில் ஹோமஸ்தானம் யாகசாலை, என்பன, இரண்டாவது சுற்றில் அமைய வேண்டிய இடங்கள் கூறப்பட்டுள்ளன. கோவிலுக்கு முன்பு அல்லது வடக்கு பாகத்தில் திருக்குளத்தின் அமைவிட மும். "வீசவத்கோபுராத் பாஹ்யே வீத்யந்தே புரஸ்ததா ஹநுமந்தம் ப்ரதிஷ்டாப்ய" என வீதியில் கோபுரத்தின் முன்பாக வெளிப்பிராகாரத்தில் ஹநுமனைப் பிரதிஷ்டை செய்வது பற்றியும் கூறுகின்றது.

கருவறையில் விக்கிரத்தில் திருவடிக்கு இடையில் விஷ்ணுமூர்த்தி அதன் பீடத்தில் கிழக்கு முதலாக புருஷ, கபில, யக்ஞ. அச்யுத, நாராயண, அனிருந்த, புண்ணிய மூர்த்திகளையும் இரண்டாவது ஆவரணத்தில் வராஹ, சுபத்திர, நரசிம்ம, ஈசிதாத்ம, வாமன, சர்வோத்வஹ, திரிவிக்கிரம, சர்வவித் யேஸ்வர, மூர்த்திகளையும் மூன்றாவது ஆவரணத்தில் இந்திரன் முதலானவர்களையும் மூன்றாவது ஆவரணத்தில் மித்ர, சனாதன, அத்ரி, சனந்தன, சனத்குமார, விஸ்வசனகனையும் மூன்றாவது ஆவரணத்தில் இந்திரன், தெற்குசுவற்றின் புறம் பிதாமஹபுண்யனையும் வடக்கில் கங்கா தரப்ருவையும் வாயில்களில் தாதார, விதாதார, பதங்க, புவங்க, பதிர, வருண னையும் . நர்க்ஷண் முத ான விமானபால தேவர்களையும் ஸ்தூபியின் அடியில் கிழக்கு. முதல் நான்கு திசைகளிலும் ந்யக்ஷ, விவஸ்வந்த, மித்ர, க்ஷத்ர, ஆகிய தேவதைகளையும் . நுழைவாயிலில் மணிகன் சந்தையும் முகமண்டப வாயிலில் விகனஸ தாபசனையும் முதல் ஆவரணம் முதல் ஏழு பிராகாரங்களின் வாயிலில் முறையே கிஷ்கிந்த தீர்த்தனையும். விக்னே சநாகேசனையும், சங்க பத்மனையும் துஹண பலிந்தனையும் நந்தக சாரங்கனையும் சக்ரசூலிசங்க சூலியையும் சண்ட பிரசண்டனையும் ஆகிய பதினொன்று துவார பாலகர்களையும் அமைத்தல் வேண்டும். விஷ்வச் சேனரை சோமனுக்கும் ஈசானுக்கும் இடையில் அமைத்து முதல் ப்ரகாரத்தில் ஸ்ரீபூத, கருட, சக்ர, த்வஜ, சங்க, யூதாதிப, அஷகந்தர் என்பவர்களை முன்பக்கத்தில் உரியவாறு அமைத்தல் வேண்டும். மேலும் இவ் அமைப்பு பற்றி விளக்கமாக கூறுமிடத்து முகமண்டபத்தின் படியின் மத்தியில் ஸ்ரீ பூதனையும் முதல் ப்ராகார முன்பக்க அளவை நான்காகப்பிரித்து நான்கு பாகத்திலும் மூன்றாவது அம்சத்தில் ஸ்ரீபூத கருடனுடைய சக்ரம், த்வஜம், சங்கு. மஹா பூதாஷ ஹந்தம் ஆகியவை களை முறைப்படி அமைத்தல் வேண்டும். இரண்டாவது அம்சத்தில் கருடனையும் மூன்றாவது அம்சத்தில் சக்கரத்தையும் 3 வது பிரகாரத்தில் 2 வது அம்சத்தில் சங்கையும் 3 வது அம்சத்தில் த்வஜத்தையும் 4 வது பிராகாரத்தில் 3 வது அம்சத்தில் யூகாதி + பனையும். 5வது பிரகாரம், 3வது அம்சத்தில். அஷகந்தனையும் அல்லது கோபுரத்திற்கு வெளியில் வீதியின் பாதியளவிற்கு முன் அஷவந்தனையும் அமைத்தல் வேண்டும்.

அல்லது எல்லா இடத்திலும் முதல் பிராகாரத்தினுடைய முற்பகுதியில் உள்ள

இடத்தை நான்கு பாகமாக்கி விமானத்திற்கு அருகில் 2வது அம்சத்தில் கருடனையும் 3வது அம்சத்தில் பலிபீடத்தையும் .அமைக்கலாம். கிழக்கு வாயிலின் முதல் பிராகாரத்தில் 2வது அம்சத்தில் இந்திர ஈசானன் ஆகியோருக்கிடையில் திருமஞ்சன தீர்த்தம் பானீய தீர்த்தம், புஷ்பமண்டபம் என்பன அமைத்தல் வேண்டும். திருமஞ்சனம் நிறைவேறியபின் தேவைப்படும் துடைக்கும் வஸ்த்திரம் உத்தரீயம், சந்தனம், தாம்பூலம், பூஜைக்குரிய திரவியங்களை சேகரித்து வைக்கும் இடம் என்பனவும் அங்கு தனியாக அமைத்தல் வேண்டும். இந்திர அக்கினி என்பவற்றிற்கிடையில் பள்ளியறை அமைத்தல் வேண்டும். சோம ஈசான பாகத்திற்கு இடைப்பட்டதாகவும் பள்ளியறை அமையலாம். அக்கினி மூலையில் யாகசாலை அமைதல் வேண்டும்.

முதல் ப்ராகாரத்தில் கிழக்கு வாயில் முதல் வாயிலின் தெற்குப்புறத்திலும் கோணங்களிலும் இந்திரன் முதலானவர்களையும் இந்திரனுக்கு தெற்கில் நவக்கிரகங்களையும் 3 வது பிரகாரத்தில் கிழக்கு முதல் நான்கு திசைகளின் வாயிலில் கங்கை, யமுனை, நர்மதை, சிந்து ஆகியோரரையும் கிழக்கு வாயிலின் வடக்கு புறத்தில் துர்க்கையையும் 5 வது பிரகாரத்தில் கிழக்கு வாயிலின் வடக்கு பிரகாரத்தில் சப்தமாத்ருக்களையும் அமைத்தல் வேண்டும். இங்கு ஒவ்வொரு மண்டபங்களிலும் உரிய தேவதைகள் அமைத்தல் பற்றி விபரமாகக் கூறப்பட்டுள்ளது. விளக்கப்படம் பின்னிணைப்பாக இணைக்கப்பட் டுள்ளதால் முக்கிய விடயங்களே கூறப்பட்டுள்ளது. ஏழு பிரகாரம் அமைந்த கோவிலில் அமைய வேண்டிய ஆலய அமைப்பு , தெய்வங்களின் விபரங்கள் என்பன பற்றி விளக்கப்படம் மூலம் விரிவாக அறிந்து கொள்ளமுடியும்.

"அரியலாற் தேவியில்லை ஐயனை ஆறனார்க்கே" என்ற சைவமறை சனதகுமாரசம் ,ஹரிகை, சிவபுராணம் என்பன ஹரியானவர் பார்வதியின் அம்சத்திலிருந்து உண்டானவர் எனக் கூறுகின்றன. "மளைபௌருஷம் ரூபம் கோபிகாஜனமோகனம்" என லலிதோபாக்யானத்தில் "கோபிகைகளை மோகிக்கச் செய்து தனது புருஷரூபம் எனப்படுகின்றது" மகேஸ்வரனுடைய ஆதி சக்தியானவள் போகரூபத்தில் பவானியாகவும், யுத்தத்திலே துர்க்கையாகவும், கோபத்திலே காளியாகவும், புருஷரூபத்திலே விஷ்ணுவாகவும் விளங்குவதாகக் கூறப்படுகின்றது. கூர்ம புராணத்தில் தனது பக்கத்தில் இருக்கும் அம்பிகையே நாராயணன் என்று சிவபெருமான் கூறுகின்றார். அம்பிகையை உபாசிப்பதால் விஷ்ணுவிற்கு ப்ரீதி ஏற்பட்டு விஷ்ணுலோகம் கிடைக்கும் என பராசரஸ்மிருதி, பத்மபுராணம், வாமனபுராணம், என்பவற்றில் கூறப்பட்டு முள்ளது. மேலும் அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறுவதற்கு கைலயங்கிரி செல்லும் வழியில் கண்ணனைச் சிவமாகப் பா வித்து சிவபூசை செய்த நிகழ்வை மகாபாரதம் எடுத்தியம்புகின்றது.

இவ்விதமான தெய்வீகச் சிறப்புடைய விஷ்ணு வழிபாடானது "கணங்கொள் அவுணரக்க கடந்தபோலார் மாயோன் மேய வோணநன்னாள்" எனத்தமிழிலக் கியங்களில் போற்றப்படுகின்ற மாயோன் திருமால் என வழிபடப்பட்ட சிறப்புடை யது.

இலங்கையில் வைஷ்ணவ வழிபாடானது வரலாற்றுத் தொன்மையுடையது.

வல்லிபுர ஆழ்வார் கோவில், பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோவில், வண்ணை வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோவில் என்பன குடாநாட்டில் மிகவும் புராதன ஆலயங்களாக விளங்குகின்றன. இவ்வாலயங்களின் அமைப்பு மற்றும் பூசைமுறைகள் என்பன எமது பிரதேச பண்பாட்டு நிலைகளுக்குட்பட்ட தாகவும், வைஷ்ணவ சம்பிரதாயங்களை தன்னகத்தே தனித்தவமாகக் கொண்டு விளங்குவதுமாக உள்ளது.

வைஷணவ சம்ஹிதைகளில் கூறப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு முன்பு கூறப்பட்டதற்கு இணங்க சில்பசாஸ்திரம் ஜோதிடம், தேவாலயவாஸ்து சாஸ்திரம் என்பவற்றையும் துணையாகக் கொண்டு எமது பிரதேச பண்பாட்டு அம்சங்களிற்கு உட்பட்டு இவ்வாலயங்களின் அமைப்பு மற்றும் நடைமுறைகள் தனித்துவமாகப் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் இலங்கைத்தீவின் சிரசாய் விளங்கும் வடபால், கிழக்கிலும், மேற்கிலும், மத்தியிலும் வீற்றிருந்தும், இன்னல்களிலிருந்தும் அடியவர்களைக் காத்து அருள் பொழிகின்ற நாராயணனைப் பணிந்து அவதாரபுருஷர்களின் வாழ்க்கை நெறிநின்று கலி காலத்தில் அவனை அடைவதற்கு இலகுவான வழிகளாகக் கூறப்பட்டுள்ள கீதைபராயணம், துளசிபூசை , நாமசங்கீர்த்தனம் போன்ற வழிகளில் அவனை வணங்கி பரந்தாமன் அருளிற்கு பாத்திரமாவோமாக!

**பிரம்ம ஸ்ரீ.ப.கிருஷ்ணானந்தசர்மா**
B.A. Hons
**நல்லூர்**

ஓம்
ஸ்ரீராமஜெயம்

## உசாத்துணை நூல்கள்



1) வைஷ்ணவம் - சாஸ்தா பதிப்பகம் வெளியீடு

(விஷ்ணுவழிபாடு) தொகுப்பாசிரியர் செந்தில் துறவி

2) பிற்கால வைணவம் - ம . ராதாகிருஷ்ணபிள்ளை

3) ஆகமச்சித்திரங்கள் - பாகம் - 2 (வைஷ்ணவநிதி) சாம்பசிவ சோமஸ்கந்த சிவாச்சாரியார்

4) 108 வைணவ திவ்யதேசஸ்தல வரலாறு - ஆ.எதிராஜன்

5) விஷ்ணுசகஸ்ரநாம பாஷ்யம் - உரையாசிரியர் அண்ணி

6) வைணவமும் ஆழ்வார்களும் - தே.ந.ச. தேவராஜன்


7) ஸ்ரீமத்பகவத்கீதை - சுவாமி சித்பவானந்தர் உரை

8) Vedic Reader For Students - By A.Macdonel


9) பெருமாள் பெருமை - தொகுப்பு ப.சிவானந்தசர்மா

10) ஸ்ரீ பாஞ்சராத்ர - பகவத் ஆராதன க்ரமம் - தென்னிந்திய அர்ச்சகர் சங்கம்

11) ஸ்ரீ வைஹானஸ விஷ்ணு ஆராதந க்ரமம் - தொகுப்பு ஸ்ரீ ஷேசப்படட்டாச்சாரிய சுவாமி



| எண் | தேவதைகளின் பெயர்கள் | திசை | ஆவரணம் |
|---|---|---|---|
| 01 | துருவபேரம் (விஷ்ணு) | கி | |
| 02 | ஸ்ரீலக்ஷ்மி | கி | |
| 03 | பூமிலக்ஷ்மி (ஹரிணி) | கி | |
| 04 | கௌதுகபேரம் (விஷ்ணு) | கி | |
| 05 | பருஷன் | கி | |
| 06 | கபிலன் | கி | |
| 07 | சத்யன் | தெ | |
| 08 | யக்தன் | மே | |
| 09 | அச்சுதன் | மே | |
| 10 | நாராயணன் | மே | |
| 11 | அனிருத்தன் | வ | |
| 12 | புண்யன் | கி | |
| 13 | வராஹன் | கி | 1 |
| 14 | சுபத்திரன் | கி | 1 |
| 15 | நரசிம்மன் | தெ | 1 |
| 16 | ஈசிதாத்மா | மே | 1 |
| 17 | வாமனன் | மே | 1 |
| 18 | சர்வோத்வன் | மே | 1 |
| 19 | திரிவிக்கிரமன் | வ | 1 |
| 20 | சர்வவித்யேஸ்வரன் | வ | 1 |
| 21 | தீர்த்தன் | கி | 1 |
| 22 | இந்திரன் | மே | 2 |
| 23 | சோமன் | மே | 2 |
| 24 | அக்கினி | மே | 2 |
| 25 | அங்காரகன் | வ | 2 |
| 26 | யமன் | வ | 2 |
| 27 | புதன் | வ | 2 |
| 28 | நிருதி | கி | 2 |
| 29 | பிருஹஸ்பதி | கி | 2 |
| 30 | வருணன் | கி | 2 |
| 31 | சுக்கிரன் | கி | 2 |
| 32 | வாயு | கி | 2 |
| 33 | நனைச்சரன் | தெ | 2 |
| 34 | குபேரன் | தெ | 2 |
| 35 | இராகு | தெ | 2 |
| 36 | ஈசானன் | மே | 2 |
| 37 | கேது | மே | 2 |
| 38 | பாஸ்கரன் | மே | 2 |
| 39 | கங்கா | மே | 3 |
| 40 | சுந்தரி | மே | 3 |
| 41 | சரஸ்வதி | மே | 3 |
| 42 | ஸ்வாஹா | வ | 3 |



| | | | |
|---|---|---|---|
| 43 | யமுனா | வ | 3 |
| 44 | ஸ்வதா | வ | 3 |
| 45 | ஸ்ரீ | கி | 3 |
| 46 | மாயா | கி | 3 |
| 47 | நர்மதா | கி | 3 |
| 48 | சமஹலாதினி | கி | 3 |
| 49 | ஜேஸ்டா | கி | 3 |
| 50 | ராகா | தெ | 3 |
| 51 | சிந்து | தெ | 3 |
| 52 | சீனிவாலி | தெ | 3 |
| 53 | மஹாகாளி | மே | 3 |
| 54 | சுரா | மே | 3 |
| 55 | துர்க்கா | மே | 3 |
| 56 | ஹரிணி | மே | 4 |
| 57 | விஷ்ணு | மே | 4 |
| 58 | இருக்கு | மே | 4 |
| 59 | அக்ஷதன் | வ | 4 |
| 60 | அக்கினி | வ | 4 |
| 61 | குஹன் | வ | 4 |
| 62 | யஜுஸ் | கி | 4 |
| 63 | மித்திரன் | கி | 4 |
| 64 | தோயன் | கி | 4 |
| 65 | பவித்திரன் | கி | 4 |
| 66 | சாமம் | கி | 4 |
| 67 | பவனன் | தெ | 4 |
| 68 | வாயு | தெ | 4 |
| 69 | தக்ஷகன் | மே | 4 |
| 70 | அதர்வணம் | மே | 4 |
| 71 | சிவன் | மே | 4 |
| 72 | ஹவிஷ்டன் | மே | 4 |
| 73 | அனுமதி | மே | 5 |
| 74 | பன்னிரண்டு ஆதித்யன் | மே | 5 |
| 75 | வருஷங்கள் | மே | 5 |
| 76 | கந்தர்வர்கள் | வ | 5 |
| 77 | சப்த மாதர்கள் | வ | 5 |
| 78 | முனிவர்கள் | வ | 5 |
| 79 | பிராணன் முதலானவர்கள் | கி | 5 |
| 80 | அப்சரசர்கள் | கி | 5 |
| 81 | ஜயாக்கள் | கி | 5 |
| 82 | அஷ்வின்கள் | கி | 5 |
| 83 | மருத்துக்கள் | கி | 5 |
| 84 | வசுக்கள | தெ | 5 |
| 85 | சப்தரோஹிணிகள் | தெ | 5 |
| 86 | வித்யாதரர்கள் | தெ | 5 |


| | | | |
|---|---|---|---|
| 87 | சத்ரத்திரர்கள் | மே | 5 |
| 88 | ஏகாதசரத்திரர்கள் | மே | 5 |
| 89 | குச | மே | 5 |
| 90 | நாரதன் | மே | 6 |
| 91 | பிரஹலாதன் | மே | 6 |
| 92 | ஹலேசன் | வ | 6 |
| 93 | மதனன் | வ | 6 |
| 94 | ஆறுஇருதுக்கள் | வ | 6 |
| 95 | விபா | வ | 6 |
| 96 | யஷன் | கி | 6 |
| 97 | வியாயனீ | கி | 6 |
| 98 | பிராஜாபதி | கி | 6 |
| 99 | காமினி | கி | 6 |
| 100 | ஜாம்பவன் | கி | 6 |
| 101 | சந்திரமா | தெ | 6 |
| 102 | முட்கலுன் | தெ | 6 |
| 103 | சுந்தரன் | தெ | 6 |
| 104 | அசுரர் | மே | 6 |
| 105 | கின்னரசோடிகள் | மே | 6 |
| 106 | தும்புரு | மே | 6 |
| 107 | அர்யமா | மே | 7 |
| 108 | ஆதித்யன் | மே | 7 |
| 109 | சவித்ருசாவித்திரி | வ | 7 |
| 110 | அக்கினி | வ | 7 |
| 111 | தண்டதரன் | வ | 7 |
| 112 | யமன் | வ | 7 |
| 113 | இந்திரேந்திரர் | வ | 7 |
| 114 | நிருதி | கி | 7 |
| 115 | பாசபிருத் | கி | 7 |
| 116 | சரிதபதி | கி | 7 |
| 117 | ருத்ரருத்ரஜன் | கி | 7 |
| 118 | யவனன் | கி | 7 |
| 119 | தனதன் | தெ | 7 |
| 120 | சோமன் | தெ | 7 |
| 121 | ஆபஆபவத்ஸன் | தெ | 7 |
| 122 | ஈசன் | மே | 7 |
| 123 | பிரம்மா | மே | 7 |
| 124 | மணிகன் | மே | 1 |
| 125 | சந்த்யன் | கி | 1 |
| 126 | விகனசன் | கி | 1 |
| 127 | தாபசன் | கி | 1 |
| 128 | ஸ்ரீபூதன் | மே | 1 |
| 129 | கிஸ்கிந்தன் | கி | 2 |
| 130 | கருடன் | மே | 2 |

| | | | |
|---|---|---|---|
| 131 | விக்கினேசன் | கி | 3 |
| 132 | சக்கரம் | மே | 3 |
| 133 | நாகேசன் | கி | 3 |
| 134 | சங்கநிதி | கி | 4 |
| 135 | பாஞ்சசன்யன் | மே | 4 |
| 136 | பத்மநிதி | கி | 4 |
| 137 | துர்க்கணன் | கி | 5 |
| 138 | த்வஜம் | மே | 5 |
| 139 | பலிதன் | கி | 5 |
| 140 | நந்தன் | கி | 6 |
| 141 | யூதாதிபதி | மே | 6 |
| 142 | சாரங்கன் | கி | 6 |
| 143 | சங்கசூடி | கி | 7 |
| 144 | அஷ்கந்தன் | மே | 7 |
| 145 | சக்ரசூடி | கி | 7 |
| 146 | சண்டன் | கி | 7 |
| 147 | பிரசண்டன் | கி | 7 |



ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வைகானஸ ஆகம முறைப்படி அமைந்த ஏழு பிரகாரக் கோவில் அமைப்பும், மூர்த்திகள் அமைந்திருக்க வேண்டிய திக்குகளும் விபரங்களும்



ஓம்
ஸ்ரீராமஜெயம்

# சிவாகம மரபில் விஷ்ணு

பிரம்மஸ்ரீ ச.பத்மநாதன B.A.(Hons)

இந்து சமயம் சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் எனும் ஆறு மதப்பிரிவுகளை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இந்து சைவம் என்னும் பொருளையே உணர்த்துகின்றது. சைவம் சிவ சம்பந்தமுடையது. சிவனை முழு முதற் கடவுளாக உடையது. இத்த கைய சைவசமயத்திற்கு அடிப்படையானவை சிவாகமங்களும், சைவமரபுகளுமேயாகும். சிவாகம மரபில் முக்கியத்துவம் பெறுவது திருக்கோவில் அமைப்புக்களும், திருவுருவ அமைப்புக்களும், கிரியை மரபுகளுமாகும். இவையாவற்றினூடாகவே சிவாகம மரபில் விஷ்ணு நோக்கப்படுகின்றார்.

திருக்கோவில் வழிபாட்டுமரபுகளுக்கு அடித்தளமாக அமைவன சிவாகமங்களாகும். இந்து சமயத்தின் கலைக்களஞ்சியமாக விளங்கும் சிவாகமங்கள் திருக்கோவில் அமைப்பு, வழிபாடு, திருவுருவம், ஓவியம், இசை, கலை, தத்துவம் எனப் பல இன்னோரன்ன அம்சங்களைக் கூறி இந்துப்பண்பாட்டின் அடிப்படைத் தன்மைகளைக் கூறுகின்றன. இத்தகைய சிவாகமங்கள் சிவனை மையமாகக் கொண்ட திருக்கோவில் சார்ந்த விடயங்களை விதி நூல்களாகக்கொண்டு விதித்துக் கூறுவதை மையமாகக்கொண்டு விளக்கம் அளிப்பதைப் பிரதானமாகவும். அதிலிருந்து ஏனைய அம்சங்களை ஆங்காங்கு விதித்து உணர வைப்பதும் சிவாகம முறையாகும். அத்தகைய நிலையில் இடம்பெறும் அம்சங்களுள் விஷ்ணுவும், விஷ்ணு சார்ந்த வழிபாடு, திருக் கோவில் சிறப்புக்கள் என்பனவும் இடம் பெறுகின்றன.

விஷ்ணு சம்பந்தமுடையது வைஷ்ணவம். இவ்வைஷ்ணவத்திற்குரிய சிறப்பு வாய்ந்த தனித்துவமான மரபுகளை வைஷ்ணவ சம்ஹிதைகள் கூறுகின்றன. இவ்வைஷ்ணவ சம்ஹிதைகள் எண்ணிக்கையில் பல. இவற்றுள் பாஞ்சராத்திரம், வைகானசம் எனும் இரண்டு பிரிவுகள் சிறப்பான தன்மையுடையவை. இவ்விரண்டு பிரிவுகளையுடைய சாஸ்திரங்களும் விஷ்ணுவின் வெளிப்படுத்தும் தன்மைகளுள் சிறந்ததும், அடியார்களுக்குமானவைகளுமான பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சம், எனும் ஐந்து அம்சங்களை விளக்கிக் கூறும் சிறப்பினைத் தன்னகத்தே கொண்டது என்பது அதன் சாரமாக அமைகின்றது.

திருக்கோயில் அமைப்பு சார்ந்த தன்மைகளினை விளக்கும் சிறப்பு இந்திய சாஸ்திர மரபிற்கு தனித்துவமான சிறப்பாகும். அவற்றுள் சிவாகமங்கள், சிற்ப சாஸ்த்திரங்கள், வாஸ்து சாஸ்த்திரங்கள் ஒன்றிணைந்த பங்கு வகிக்கின்றன. இவை கூறும் தன்மைகள் இந்திய பண்பாட்டுடன் அமைநது இணைந்து இந்துப்பண்பாட்டின் சிறப்பில் இணைந்த சிவாகம மரபில் முக்கிய பங்கினை வகிக்கும் இந்திய திருக்கோயில் அமைப்பு முறைமை இந்தியா எங்கணும் சுவறிக்காணப்படுகின்றது. அத்தகைய பிரிவுகளுள் ஒவ்வோர் தனித்துவமும் உண்டு. அத்தகைய தனித்துவம் சார்ந்த தன்மைகளின் படி

வைஷ்ணவம் என்பதில் தத்துவம் தவிர்ந்த ஏனைய அம்சங்களில் சிவாகமங்களின் செல்வாக்கு பிரிக்கமுடியாத தன்மையை தன்னகத்தே கொண்ட தாக விளங்குவது மனங்கொள்ளத் தக்கது. இதன்படி சிவாகமம் சார்ந்த மரபானது இந்திய பண்பாட்டிற்கே பொதுவான தன்மையானது என்றும் கூறலாம். அந்நிலையில் வைஷ்ணவம் எனும் பிரிவு தனித்துவம் சார்ந்த நிலையிற் நின்று நோக்கும்போது இன்னோரம்சங்களில் சைவம் சார்ந்த தன்மைகளைக் கூறாது விட்டுவிடுவது மனங் கொள்ளத்தக்கது. எனினும் சைவாகமரபில் வைஷ்ணவம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கவிடயமாகும்.

சைவ வழிபாட்டு மரபில் சிவாகமங்கள் விபரிக்காத வழிபாட்டு மரபுகளும் திருவுருவ மரபுகளும் கிரியை நெறி முறைகளும் கிடையாதென்றே கூற லாம். அந்நிலையில் திருவுருவ அமைப்பு முறைகளை சிவாகமங்கள் சிறப்பாகச் சித்தரிக்கின்றன. அவற்றை விட சைவமரபில் சிறப்புற்று விளங்கும் அர்த்தநாரஸ்வர மூகூர்த்தத்தைப் போன்று சைவ வைஷ்ணவ அபேதத்தை விபரிக்கும் ஹரிஹரமூர்த்தத்தையும் சக்கரதான மூர்த்தி எனப்படும் விஷ்ணு அனுக்கிரக மூர்த்தி வடிவமும் மும்மூரத்திகளுள் ஒன்றான வடிவமும் சிவனுக்கே உரிய தனித்துவமானஏகாதிபத்திய மூர்த்தி வடிவிலும் விஷ்ணு விளங்கி நிற்பதைக்காணலாம். இவற்றை விட மூர்த்தத்தின் அம்சங்களோடு இணைந்தவராக வைவாஹய மூர்த்தத்திலும், லிங்கோற்பவ மூகூர்த்தத்திலும் விஷ்ணு இடம்பெறுவது மனங்கொள்ளத் தக்கது. சிவாகம மரபுகளின் சிறப்புக்களை தெய்வீகவியல் வரலாறுகள் சுதைவடிவில் சித்தரிக்கின்றன. சிவாகமங்கள் கூறும் லக்ஷியங்களாக விளங்கும் தன்மைகளின் தனித்துவங்களைத் தருவன இதிகாச புராணங்களாகும். இவ்விதிகாச புராணங்களே எமக்கு தெய்வீகவியல் வரலாறுகளை எடுத்துக் கூறுகின்றன.

வைஷ்ணவ மரபில் விஷ்ணுவின் திருவுருவச் சிறப்புக்களில் முக்கியத்துவமான சிறப்பினை உணர்த்துவது அவதாரம் என்னும் கோட்பாடாகும். இவ் அவதாரக்கோட்பாடுகளில் தசாவ தாரம் சிறப்பு பெறுகின்றது. இவற்றின் சிறப்பியல்புகளை சிவாகமங்கள் கூறாது விடுவதால் வைணவத்திற்குரிய தனிதது வத்துடன் வைஷ்ணவ சம்ஹிதைகள் முக்கியத்துவம் கொடுத்து விளக்கி நிற்பதும் மனங்கொள்ளத்தக்கது.

சைவத்திருக்கோயில் சிறப்புக்களின் விரிவுகளையும் பிரகாரங்கள் கோபுரங்கள் என்பவற்றுடன் கூடிய நகரமய ம. ும் சிறப்பினை சிவாகமங்களின் கிராமாதி விந்யாலை படலம் சிறப்பாகக் கூறுகின்றது. அந்நிலைகளின் படி முக்கிய தேவதையாக சிவன், ஸ்வதந்திர மூர்த்தியாக விளங்க ஏனைய ஸ்தானங்களில் அமையும் முறைமையின் கரந்துறையும் தெய்வமாகவும், பரிவாரமாகவும் பல தேவதைகள் சித்தரிக்கப்படுகின்றன. அந்நிலையில் முக்கிய சிறப்பு பெறுவன பரிவாரங்களேயாகும். இறைவனை அரசு நிலைப்படுத்தும் சிறப்புப் பெறும் இவ்வம்சங்களுள் அந்தாரம் எனும் இரண்டாம் பிரகாரத்தில் அமையும் அஷ்ட பரிவாரங்கள் முக்கியத்துவமுடையன. அத்தகைய மூர்த்திகளுள் ஒன்றாக விளங்கும் விஷ்ணுவின் ஸ்தானம் பற்றி கௌரவம், அஜிதம், தீபிதம், காரணம், யோகஜம், வீரம், ஆகிய சிவாகமங்கள் கூறுகையில் வடக்கு தெற்கில் தெற்கு நோக்கிய சந்நிதியாக விஷ்ணு இடம் பெறுவது

குறிப்பிடத்தக்கது. எனினும் சுப்பிரபேதாகமம் தெற்கில் வடக்கு நோக்கிய சந்நிதியாக சித்தரிக்கின்றது.

சிவாகமங்கள் கூறும் தெய்வங்கள் அஷ்ட மூர்த்தி வடிவினைச் சார்ந்தன. இவ் அஷ்ட மூர்த்திவடிவங்களாவன பிருதிவ், அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், எஜமான் என்பன. இவ்வஷ்ட மூர்த்தவடிவங்க ளின் ஒன்று சேர்ந்த வடிவமே வழி பாட்டிற்காக விளங்கும் திருவுருவ மாகும். அந்நிலையின் அடிப்படையில் அஷ்டமூர்த்தீஸ்வரர்களாக விஷ்ணுவின் அமைவிற்கு விஷ்வயோனி, சுசின், பத்மநாபன், அம்ருதாம்சு, கிருஷ்ணன், வைகுண்டன், விஷ்டரஸ்ரவன் தாமோதரன் ஆகியோர் சுட்டப்படுகின்றனர். இவ்வெண்மரின் இணைவடிவமே பிரதிஸ்டையின் போது நிலைநிறுத்தப்படுவது மனங்கொள்ளத் தக்கது.

இதனடிப்படையில் சிவாகம்ங்கள் மரபுநிலைசார்ந்த தன்மையில் கூறும் பிரதிஷ்டை .'.ஸ்தானங்களின் வரிசையில் விஷ்ணுவின் ஸ்தாபனங்கள் பற்றி நோக்குவோம். விஷ்ணுஸ்தாபனம் பற்றி கௌரவாகமம் (36) அசிந்த்ய விஸ்வசாதாக்யம் (64) காரணம் (1.99) பரமேஸ்வரம், வீரம் சந்தானசம்ஹிதை ஆகியன கூறுகின்றன.

சிவாகமங்கள் கூறும் ஸ்தாபனம் ஸ்வந்திரம், கேவலம் என இருவகைப்படும் ஸ்தாபனம் செய்யப்படும் வகைப்படியே நித்திய நைமித்திய சாம்ய கிரியைகள் அமைவது குறிப்பிடத்தக்கது. இவற்றுள் ஸ்வந்திரம் என்பது விஷ்ணுவைப்பொறுத்த வரையில் விஷ்ணுவை மையமாகக்கொண்டு விஷ்ணுவின் பரிவாரங்களையும் தன்மையதாகும். கேவலம் எனப்படுவது தனியாக விஷ்ணுவை ஸ்தாபிப்பதாகும்.

விஷ்ணுவை ஸ்தாபிக்கத்தக்க ஸ்தானங்களைக்கூறும் சிவாகமங்களுள் ரௌரவாகமம் வகையில் கிராமங்களின் மத்தியிலோ எட்டுத்திக்குகளிலோ, அந்தரானத்திலோ சமுத்திரத்தின் அருகிலோ, குளம், காடு, நதிக்கரை இவைகளிலோ குளத்தின் கரையிலோ பொதுவாக விதந்துரைக்கப்பட்டவாறு எத்தகைய பலன் எதிர்பார்க்கப்படுகின்றதோ அதனைமையமாகக் கொண்டு ஸ்தாபிக்கப்படுகின்றதோ அந்த திக்கில் அவ்விதமே நோக்கும் திசையும் தீர்மானித்து விஷ்ணுவின் ஆலயத்தை அமைக்கவேண்டும். இவ்வாறாக முன்பு கூறப்பட்ட விதிப்படியே அமையும். எனவிளக்கி கூறுகின்றது, மேலும் இதன் விளைவுகளை சிவாகமங்கள் கிராமாதிவிஞ்யால விதிப்படலம் ப்ராஸாதலக்ஷணவிதிப் படலம், மண்டபலக்ஷணவி படலம், என்பவைகளினூடு நோக்கத்தக்கன. இவற்றிற்கு மேலாக இதைப்பற்றி காரணம் கூறுகையில் கிராமத்திற்கு மேற்குதிக்கில் சமப்படுத்தப்பட்ட பிரதேசத்திலோ அனறி வடமேற்கு திசையிலோ கருடனை வாகனமாக உடைய விஷ்ணுவிற்கு ஆலயம் அமைப்பது உத்தமம் எனக் கூறுகின்றது.

இவ்வாறான ஸ்தானங்களில் அமையத்தக்க விஷ்ணுவின் லக்ஷசணங்களை ரௌரவம். வீரம், அஜிதம், ஆகியன சிறப்பாக விளக்கி கூறுகின்றன. சிற்பவியல் லக்ஷணங்களில் உத்தம தசதால அமைவில் அமையத்தக்க விஷ்ணுவின் தோற்றப்பாடுபற்றி ரௌராகமம் கூறுகையில் நான்கு கைகளும் இரண்டு கண்களும் சிரித்த முகமும் கரிய நிறமும் கிரீடமகுடத்தோடு கூடியும் , ஒளியுடனும், ராஜபூசணங்களை அணிந் தும் சமபாதமாக பத்மபீடத்தின் மீது நின்றும், நான்கு கைகளுள் வலது கீழ்கரத்தில்

அபயமும், இடது கீழ்பக்கத்தில் தண்டம் தாங்கியும் வலது மேறபக்கத்தில் சக்கரமும் இடது மேற்புறத்தில் சங்கும் தரித்தவராக பட்டாடை தரித்து பலவிதமான அழகிய ஆடை அணிந்து வலது இடது புறங்களில் முறையே ஸ்ரீதேவியும், பூமாதேவியும் விளங்க நிற்கின்ற விஷ்ணுமூர்த்தியின் வடிவத்திற்கு தேவிகளும் நிற்பவர்களாகவும் இருக்கின்றவடிவத்திற்கு இருக்கின்றவர்களாகவும் நிற்கின்றவர்களாயின் விஷ்ணுவின் இரு மருங்கிலும் த்ரிபாங்கத்துடன் விளங்குவர். எனக் கூறுவதோடு கவனத்தில் கொள்ளத்தக்க விடயங்கள் பலவற்றை முன்னர் கூறிய விதிப்படியாக அதில் அதிக கவனம் செலுத்தவேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்தி கூறுகின்றது. மேலும் ஒரு பிரதிமை செய்யத்தக்க பொருட்கள் பற்றியும் விளக்குகின்றது. மேலும் ஒரு மூர்த்தியின் லக்ஷணத்தை பிரதிமாலக்ஷணவிதி நுண்ணிய பங்கீடுகளுடன் கூடிய அளவீடுகளை வலியுறுத்திக் கூறுவது முறைமையாகும். அதனை அடிப்படையாகக்கொண்ட தன்மைகளின் அடிப்படையிலேயே திருவுருவ லக்ஷணங்கள் விளக்கிக்கூறப்படுவது மனங்கொள்ளத்தக்கது. இந்த நிலையின் அடிப்படையில் வீராகமம் கூறுகையில் "விஷ்ணு மூர்த்தியின் வடிவம் நிற்பதாகவோ இருப்பதாகவோ அன்றேல் சயன மூர்த்தியாவோ விளங்க ஸ்வந்திர மூர்த்தியாயின் பரிவாரங்களுடன் விதியில் கூறப்பட்டவாறு ஸ்தாபிக்கலாம்...." என விவரிக்கின்றது. பிரிதிமாலக்ஷண விதியினூடாக அஜிதாகமமும் விபரிக்கின்றது. ஒரு திருவுருவின் கொள்ளத்தக்க அளவுகளினையும் பெறப்படும் முறைமைகளினையும் விஷ்ணுமூர்த்திக்குரிய தன்மையில் பிரதிமையின் மானம் (அளவு) மந்திரம், பிரதிஷ்டைக்குரிய கிரியைகள் என்பன பற்றி சிறப்பான முறையில் ரௌரவாகமம் கூறுகின்றது.

சிவாகம மரபில் பிரதிஷ்டையின் முக்கியத்துவம் பெறுவது யாகசாலையும் பதினொருவகையான அக்கினிகளின் வடிவில் கலந்துறையும் அங்கவடிவமான இறைவனுக்குரிய குண்டங்களாகும். அந்நிலையின் விஷ்ணுவின் பிரதிஷ்டைக்குரியதாக நவகுண்டங்களுள் நான்கு திக்குகளிலும் சதுர வடிவான குண்டங்களும் விதிக்கண் நான்கிலும் விருத்த வடிவான குண்டங்களும், கிழக்கிற்கும் ஈசானத்திற்கும் நடுவில் பிரதான குண்டமாக யோனிவடிவமான குண்டமுமாக ஒன்பது குண்டங்கள் சுட்டப்படுகின்றன. இவற்றிற்கு மேலாக ஹோமத்திற்குரிய சமித்து மந்திரம், திரவியம் என்பனவும் விரிவாகக் கூறப்படுவது மனங்கொள்ளத்தக்கது. இவ்வாறான தன்மையில் விளங்கும் விஷ்ணுவின் அஷ்டஸ்வரங்களாக வாசுதேவன், ஹரி, கிருஷ்ணன், அச்சுதன், அனிருந்தன், ப்ரத்யும்னன், ஸ்ரீதரன், தரணீபதி, ஆகியோர் கிழக்கு முதல் ஈசானம் வரையானவர்களாக சுட்டப்படுகின்றனர். பொதுவாக சிவாகமங்கள் கூறும் மூர்த்தி பஞ்சானங்களுடனும் பஞ்சாவரணங்களிலும் விளங்கும் தன்மைகளையே சிவாகமமும் சித்தரிக்கின்றன. அஷ்டவித்யேஸ் வரரை சில மாறுதல்களுடன் சந்தாசனம் ஹீதை கூறுகின்றது.


ஸவாந்திரமாக விளங்கத்தக்க விஷ்ணுவின் அஷ்டபரிவாரங்கள் பற்றி ரௌரவம் அபராஜிப்ருச்சா, காரணம் ஆகியன கூறுகின்றன. ரௌரவாகமம் கூறுகையில் "த்வாரத்திற்கு வலது இடது பக்கமாக சங்கநிதி, பத்மநிதி ஆகியோரும் நேரே கூப்பியக்கரத்துடன்

கருடதுவஜம் அக்கினிக்கு முதல் ஈசானம் வரையாக விமலன் விதாதா, விக்ரமன். விஜயன், புஷ்டிமூர்த்தி, விருத்தி, த்ரிபதம், ஆகியோர் விபரி கக்ப்படுகின்றனர். இவ்வாறாக ஸ்தந் திரமாக அமையும் விஷ்ணு மூர்த்திக்கு கருடதுவஜத்துடன் கூடியதாக விதிப்படி மஹோட்சவம் செய்யத்தக்கது என விபரிக்கப்படுகின்றது. காரணமாகக் கூறுகையில் நேரே கருடன் விளங்கும் நிலைக்கு மேலாக கிழக்கு முதலான எட்டுத்திக்குகளிலும் சங்கர்ஷணர் முதலான மூர்த்திகளையே அஷ்ட பரிவாரங்களாகக் கொள்ளத்தக்கது. பரிவாரமில்லாதிருப்பின் வேறு விதிப்படி அமைக்கத்தக்கது. என்னால் சுருக்க மாக கூறப்பட்ட பாஞ்சாராத்திரத்தில் விஷேசமாக கூறப்பட்டுள்ளது. எனவி பரிக்கின்றது.

விஷ்ணுவின் திருக்கோயில் பற்றி யும் பிரதிஷ்டைபற்றியும் சிவாக மங் கள் விபரிக்கும் அதேவேளை வைகா னசம், பாஞ்சாராத்திரம் மற்றும் வைஷ் ணவ சம்ஹிதைகள் தமக்கே உரிய சிறப்புடன் விபரித்து கூறுவது மனங் கொள்ளத்தக்கது.

இவ்வாறாக சைவாகமமரபுசார்ந்த நிலையில் விஷ்ணு விளங்கும் தன்மை யும் சிவாகமம்ங்களின் நெறிப்பட்ட கிரியைகளின் சிறப்பம்சங்களின் அடிப் படைகளும் நோக்கப்பட்டன. எமது பிர தேசத்தில் விளங்கும் வைஷ்ணவத் திருக்கோவில் சார்ந்த மரபுகள் ஒப்பீட் டளவில் ஆராய்ந்து நோக்குதற்குரியன என்பதனையும் அவை எமது பிரதேசத் திகுரிய தனித்துவமான பண்பாட்டு அம்சமாக மிளிரும் என்பதனையும் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.





ஸ்ரீ மூலவர் சந்நிதி மேற்புறச்சுதை விக்கிரகங்கள்
ஸ்ரீ தேவி, பூமி தேவி ஸ்ரீ வரதராஜப் பெருமாள்



ஸ்ரீ சுதர்ஸன சக்கரமூர்த்தி

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வைணவ திருவுருவங்கள்

தஞ்சம் ஆகிய தந்தை தாயொடு,
தானும் ஆய்,அவை அல்லன் ஆய்,
எஞ்சல் இல் அமரர் குலமுதல்,
மூவர் தம்முள்ளும் ஆதியை,
அஞ்சி நீர் உலகத்துள்ளீரகள்,
அவன் இவன் என்று கடலேன் மின்,
நெஞ்சினால் நினைப்பான் எவன், அவன்,
ஆகும் நீள் கடல் வண்ணனே.

(நம்மாழ்வார் -திருவாய்மொழி)

“அடைக்கலம் தரும் தாயும் தந்தையும் தானுமாய் எம்பெருமான் ஒருவனே இருப்பான். அல்லாத மற்றைப் பொருள்களாகவும் இருப்பான். எல்லையில்லாத வானவர்களுக்குத் தலைவனாவான். ஆதிகாரணமாய் அரி அரன் அயற்கு முதல்வனாய் உள்ளான். உலகோர்களே! பகவான் மேன்மையைக் கண்டு எப்படிப்பட்டவனோ இவன்! என்று குழப்பம் வேண்டாம். நீங்கள் நினைக்கிற உருவத்திலேயே தான் ஏறிட்டுக்கொண்டு, அதையே தன் வடிவமாக ஏற்று அருள் செய்வான். அந்த நெடுங்கடல் நிறத்திருமாலை வணங்குங்கள்”

இவ்வாறு அடியார்களுக்கு வேதசாரமாகிய திருவாய் மொழியருளிய நம்மாழ்வார் ஆணையிடுகின்றார். பரந்து வியாபித்துள்ள பரம்பொருளை வடிவம் கொடுத்து வழிபடும் மரபு இந்து மக்களிடையே தொன்றுதொட்டு நிலவிவருவது. இறைவனுக் குத் திருவுருவம் கொடுத்தலையும் அத்திருவுருவ வடிவங்களை அமைப்பதற்கும் சிற்பசாஸ்திர நூல்களும், ஆகமங்களும் நெறிமுறைகளை வகுக்கின்றன. இதற்கமைவாக இறை உருவங்களை அமைத்து ஆலயங்களில் பிரதிஷ்டை செய்து வழிபடும் முறையும் அவற்றிற்கு உற்சவம் முதலிய கிரியைகள் ஆற்றலும் சிறப்பான தொன்றாகும்.

என்றும் உள்ளதும். தொடக்கமில்லாமல் தொடரும் கொள்கை உடைய பழைமையான நெறி இந்துமதம். இதனால் இதற்கு ‘சனாதன தர்மம்’ என்று பெயருடையதாயிற்று. சைவம், வைணவம், சாக்த்தம், கௌமாரம், காணபத்தியம், சௌரம். எனும் ஆறு பெரும் பிரிவுகளை தன்னகத்தே உடையது சனாதன தர்மம். இவ்வாறான பிரிவுகளில் திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட நெறி வைணவம். இந்த நெறியில் சிறப்பாகத் திருமாலிற்கென்ற வழிபாட்டு முறைகளும், அவ்வழிபாட்டு முறைக்கேற்ற திருவுருவங்களும், திருவுருவங்கள்

சார்ந்த தத்துவங்களும், கிரியைகளும் முக்கியம் பெறுகின்றன. இவற்றின் திருவுருவங்கள் வைஷ்ணவ ஆகமங்களாகிய பாஞ்சாராத்திரம், வைகானசம், ஆகியவற்றிற்கு அமைவாகவும், சிற்பசாஸ்த்திரங்களுக்கு உட்பட்டும் அமைக் கப்பெற்று வழிபாடுகள் இயற்றப்படுகின்றன. திருவுருவங்கள் அமைக்கப்பட வேண்டிய முறை, அவற்றின் அளவு, ஆலயங்களில் அமைய வேண்டிய இடம ஆகிய அம்சங்களையும் உள்ளடக்கியது மேற்கூறிய நூல்கள்.

'வைணவத் திருவுருவங்கள்' என்னும் இக்கட்டுரையில் வைணவ ஆகமங்களையும், சிலவழிபாட்டு நூல்களையும் அடிப்படையாக் கொண்டு திருமாலின் சில குறிப்பிட்ட திருவுருவங்களும் - அவற்றிற்கான வழிபாட்டு நெறிமுறைகளும் அதன் வழிபெறும் பயன்களும் எடுத்து நோக்கப்படுகின்றன. இத்தோடு 'வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள்' ஆலயத்திருவுருவங்கள் பற்றியதான சிறப்பும் குறிப்பிட்ட இடங்களில் ஒப்பு நோக்கி ஆராயப்படுகின்றது.

இருக்கு வேதத்தில் திருமாலின் திருவுருவங்கள் சிற்சில இடங்களில் குறிக்கப்படுகின்றன. ஒளிக் கிரணங்களால் சூழப்பட்ட விஷ்ணுமூர்த்தி தமது கிரணங்களால் ஒளி பரப்பி உலகெங்கும் வியாபித்துள்ளார். எனும் கருத்துக்கு அமைவாக வரும் பாடல் பிற்கால சூரிய நாராயண ரூபத்தை உணர்த்தி நிற்கின்றது. இவ்வேதத்தில் உள்ள விஷ்ணுபற்றி சூக்தத்தில் விஷ்ணுவின் வீரபிரதாபங்கள் கூறப்படுவதுடன் ஈரடியால் மூவடியளந்த கதை "விசக்ரமா னஸ்த்ரேதோ ருகாயாஹ" (1.154.1) குறிப்பிடுவதிலிருந்து திரிவிக்ரம மூர்த்தி வடிவம் சுட்டப்படுகின்றது. யஜுர் வேதத்தைச் சேர்ந்த நாராயணோபநிடதம் படைக்கும், காக்கும், அழிக்கும் முத்தொழிலையும் தாமொருவரே செய்து படைத்ததை தாமே திருமேனியில் தரித்து தம்மிலே லயமடைய செய்யும் ஆதிகாரணமான அற்புத புருஷன் ஸ்ரீமந் நாராயணனே எனக்கூறுகின்றது. தைத்திரிய ஆரணியத்தில் 'நாராயணாய வித்மஹே தீமஹி தந்நோ விஷ்ணும் ப்ரசோதயாத்' (4.1.6) என வரும் மந்திரத்தில் இருந்து திருமாலை விஷ்ணு நாராயணன், வாசுதேவன், ஆகிய வடிவங்களில் வழிபட்ட தன்மையைக் காணலாம். மேலும் இப்பகுதியிலேயே கூரியநகமும், சிம்மமுகமும் உடைய நரசிம்ம வடிவம் பற்றியும் பேசப்படுகின்றது.

மேற்கூறியவற்றை நோக்கும் போது திருமாலின் திவ்விய ரூபங்கள் பற்றிய கருத்து வேதகாலத்தில் இருந்து உபநிடத காலம் வரை வியாபித்து இருந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுவே தொடர்ந்து இதிகாச புராண காலத்தில் பல்கிப்பெருகின. பல வடிவங்களாக கற்பிக்கப்பட்ட திருமாலை, ஒவ்வொ ருத்தொகுதிகளாகப்பிரித்து வழிபாட்டு மரபுகளுக்கேற்ப அமைத்துதந்த பெருமை வைணவ ஆகமங்களையும் சிற்பசாஸ்த்திர நூல்களையும் சாரும். வைகாநச ஆகமம் வேத நெறிப்படி திருவுருவ ஒழுங்குகளையும் வழிபாட்டு முறை களையும் இயம்ப பாஞ்சராத்திரம் வேத நெறிகளோடு பிற்காலப் பிரபந்த மார்க்கத்திற்கு இணங்க வழிபாட்டு இயல்புகளை எடுத்து கூறுகின்றது. இவ்வழிபாட்டு இயல்புகளோடு இறை திருவுருவத் தத்துவங்களும் எடுத்து இயம்பப்படுகின்றது.

பரம் பொருளாகிய திருமால் தம்மை ஐந்து பெருவடிவங்களில் உண்டாக்கி

தரிசனம் தருவதாக கூறல் மரபு. அவையாவன பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அருச்சை, என்னும் வடிவங்களாகும். பரம் எனும் வடி வமானது. மேலுலகம் எனும் வைகுந்த லோகத்தில் ஸ்ரீ, பூமி, நிலா சமேதராய் எழுந்தருளியுள்ள தோற்றம் பரம் எனும் வடமொழிச் சொல்லிற்கு உயர்ந்த மேலான எனும் கருத்தாகும். மேலான விண்ணுலகோருக்கு உகந்ததாக தரிசனம் தருபவர் இப் பரமபதநாதன். இதையே நம்மாழ்வாரும் 'விண்மீதிருப்பாய்' எனக் குறிப்பிடுகின்றார்.

வியூகம் என்றால் விரிவுபடுத்தல் என்பது பொருள் பரமபதத்தில் வீற்றிருந்த பகவான் - வெள்ளையந்தீவு எனப்படுகின்ற ஷீராப்தி எனும் பாற்கடலில் ஆதி சேடனின் படுக்கையில் ஸ்ரீதேவி , பூமிதேவி அவர் திருவடி வருட அறி துயிலமர்ந்த நிலையில் மேலும் தன்னை நான்கு வடிவங்களாக்கி படைத்தல், காத்தல். அழித்தல், ஆகிய முத்தொழில்களைச் செய்கின்றார். கிழக்கு நோக்கி சிரிப்புடன் கூடிய வாசுதேவனாகவும், தெற்குநோக்கிய சிங்கமுகம் கொண்ட சங்கர்ஷணனாகவும், வடக்கு நோக்கிய வராஹமுகம் கொண்ட பிரத்யும்ன னாகவும், மேற்கு நோக்கிய ருத்ரமுகம் கொண்ட அநிருந்தனாகவும், தம்மை விரிவு படுத்தி எல்லாத்திக்குகளையும் நோக்கியுள்ளார். இதில் மேலும் வாசுதே வனிடமிருந்து கேசவன் , நாராயணன், மாதவன், எனும் உருவங்களும் சங்கரஷணனிடமிருந்து - கோவிந்தன் , விஷ்ணு, மதுசூதனன், எனும் உருவங்களும், பிரத்யும்னனிடமிருந்து - திரிவிக்கிரமன் , வாமனன், ஸ்ரீதரன், என்ற உருவங்களும் அநிருந்தனிடமிருந்து - ரிஷிகேஷன் பத்மநாபன், தாமோதரன், என்ற திருவு ருவங்களும் தோன்றி அருள் புரிவதாக சொல்லப்படுகின்றது. பெருடாளின் இப்பன்னிரு திருநாமங்களின் விளக்கமாகவே வைணவர்கள் பன்னிரு திருமண் காப்பு(நாமம்) இடுவதை வழக்கமாகக்கொண்டுள்ளனர். இவ்வியூக நிலையே மோக்ஷத்தெய்வமாகப் போற்றப்படுகின்றது. ஆன்மாக்கள் இறுதியில் நாராயண சாயுஜ்யமான மோக்ஷத்தை பாற்கடல் பள்ளி கொண்ட பெருமாளிடம் அடைவதாக நம்பப்படுகின்றது.

இவ்வியூக நிலை மூர்த்தங்களே கும்பாபிஷேக உற்சவக் கிரியைகளில் மிக முக்கிய மந்திர உச்சாடனமாக பயன்படுத்தப்படுகின்றது. எப்படி சைவத்தில் சிவனின் ஐந்து திருவுருவமாகிய ஈசானன், ஆகோரம், தத்புருஷம்., வாமதேவம், சத்ஜோயாதம் முக்கியம் பெறுகின்றதோ அதே போல் வைணவத்தில் நாரா யணன், வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன், ஆகிய ஐந்து வடிவங்களும் கிரியைகளில் வரும் நியாசம், ஸ்பர்சாகுதி, ஹோமம், ஆகிய வற்றில் முக்கிய இடம் வகிக்கின்றன. இவ் ஐந்து மூர்த்திகளும் ஏக மூர்த்தி யாகிய நாராயணாகிய ஆதிதேவனின் வடிவங்கள் எனத் திருச்சந்த விருத்தத்தில் திருமழிசையாழ்வார் பின்வருமாறு பாடுகின்றார்.

' ஏகமூர்த்தி மூன்று மூர்த்தி நாலு மூர்த்தி நன்மைசேர்
போகமூர்த்தி புண்ணியத்தின் மூர்த்தி எண்ணில் மூர்த்தியாய்
நாக மூர்த்தி சயனமாய் நலங்கடல் கிடந்து மேல்
ஆக மூர்த்தி ஆயவண்ணம் என்கொல் ஆதிதேவனே'

சைவத்தில் ஈசனாகிய சிவனுக்கும், வைணவத்தில்நாராயணற்கும் திருவுருவம் வைத்து வழிபடுவர் ஏனைய நான்கு மூர்த்திகட்கும் உருவநிலை கற்பிப் பட்டிருப்பினும் விக்கிரக வடிவில் பிரதிஷ்டைசெய்யப்படுவதில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியது ஒன்றாகும்.

திருமாலின் மூன்றாவது பெருநிலை வடிவம் விபவம். விபவம் என்பது இறை வன் தன்னிலையிலிருந்து இறங்கி வந்து அடியாருக்கருளல் எனப்பொருள் படுகின்றது. திருமாலின் அவதாரங்கள் விபவவடிவநிலைக்குள் அடங்குவன. அவதாரங்கள் பூர்ணவதாரம், அம்சாவதாரம், ஆவேச அவதாரம், எனும் பிரிவுக ளுள் உள்ளடக்கப்படுகின்றன. இராமன், கிருஷ்ணன், வாமனன், பலராமன், முதலியன பூர்ணவதாரமாகின்றது. மச்சம், வராகம், போன்றன அம்சாவதார மாகும், நரசிம்மம், பரசுராமம், ஆவேச அவதாரமாகின்றது, கீதையில் கிருஷ்ணன் கூறியதற்கிணங்க இறைவன் தர்மத்தை நிலைநாட்ட யுகந்தோறும் அவதரிக் கிறார். பெரியாழ்வார் இறைவனின் பத்து அவதாரங்களையும்

'தேவுடைய மீனமாய் ஆமையாய் ஏனமாய் அரியாய்க் குறளாய்
மூவுருவில் இராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய'

எனத் தனது பாசுரத்தில் விபவ வடிவினைப்போற்றுகின்றார்.

பரந்து வியாபித்துள்ள இறைவன் அனைத்து ஆத்மாவின் உள்ளிருந்தும் அருளும் வடிவம் அந்தர்யாமித்வம் ஆகின்றது. இதையே வேதங்களும், உபநிடதங்களும், அழுத்திக்கூறுகின்றன. "அந்தர் பஹிச்ச தத்ஸ்ர்வம் வ்யாப்ய நாராயணஸ்திதஹ"

அகமும் புறமும் வியாபித்துள்ள நாராயணனின் அருவநிலை அந்தர்யாமித் துவ வடிவில் உள்ளுணர்வால் உணரக்கூடியது.

திருமாலின் பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், எனும் நான்கு வடி வங்களையும் சாதாரண மக்கள் கண்டு இன்புறுவது அரிது. இக்கலியுகத்தில் அனைவரும் தரிசித்து இன்புறுவதற்காக தானே யுகந்து விக்கிரக வடிவில் அர்சாவதார மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இவ்வச்சாவதார மூர்த்தியின் விரிவு பட்ட வடிவங்களே இன்றைய காலத்து விக்கிரக வடிவில் அமைந்த வைணவதிருவுருவங்கள் ஆகும். இத்திருவுருவங்கள் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஸ்தலமகிமை பெறுகின்றன. பக்தர்கள் மனதில் பக்தியை ஏற்ப டுத்தி அடியார்களை உய்விக்க இத்திருவுருவங்கள் துணை செய்கின்றன. ஆழ்வார்களால் போற்றிப்பாடிப்பாடி மங்களாசனம் செய்யப்பட்டதும் விஷ்ணுவின் அர்ச்சை வடிவில் உள்ள திருவுருவங்களே பெருமாள் நெடிய மாயவனாகி நின்ற திருக்கோலம் இருந்த கோலம், பள்ளிக்கொண்ட கோலம் அரங்கன்கோலம், எனப்பல வகை உருவங்களைப் பாடிப்பாடி இன்புற்றனர் ஆழ்வார்கள். எனவே அச்சாவதாரமே அடியார்கள் கண்டு உய்ய இலகுவான வழி என நம்மாழ்வார் தமது அனேக பாசுரங்களில் அழுத்திக் கூறுவதாக வைணவ ஆச்சாரியர்களில்

ஒருவராகிய மணவாள மாமுனிகள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'செய்ய பரத்துவமாய் சீரார் வியூ கமாய்
துய்ய விபவமாய்த் தோன்றியிவற்றுள் - எய்துமவர்க்கு
இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிதென்றான்
பன்னு தமிழ்மாறன் பயின்று'

அர்ச்சாவதாரமாகிய இத்திரவுருவங்கள் ஆலயங்களில் எப்படிப் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது அவற்றின் சிறப்புக்கள் யாவை என நாம் நோக்குவோம். திருமாலின் ஐந்து வகையான பிரதிஷ்டைகளைப் பற்றி பாஞ்சாராத்திரப் பாத்மத்தில் கூறப்பட்டுள்ளன. அவையாவன.

1) ஸ்தாபனா
2) அஸ்தாபனா
3) ஸமஸ்தாபனா
4) பரஸ்தாபனா
5) பிரதிஷ்டானா

என்பனவாகும். 'ஸ்தாபனா' என்பது திருமாலை நின்றகோலத்தில் விக்கிரகம் அமைத்து வழிபடுதல்., 'அஸ்தாபனாவில்' திருமால் அமர்ந்த நிலையில் வீற்றிருப்பார். பள்ளிக்கொண்ட திருக்கோலத்தில் அமைத்துத்தொழுவது 'ஸமஸ்தாபனா' எனப்படும். வாகனங்களில் பற்பல ரூபங்களில் அமைத்து தொழுவது (உத்சவராக) 'பரஸ்தாபனா' எனப்படும். 'பிரதிஷ்டானா' என்பது சன்மார்ச்சையுடன் அமைப்பது. அதாவது பெருமாள் விக்கிரகங்களுடன் தாயார் விக்கிரகங்களை அல்லது திருமாலின் வேறு திருவுருவங்களைச் சேர்த்து அமைத்து வழிபடுவது ஆகும், இவற்றிற்கமைவாக வைணவத்திருவுருவங்கள் ஒவ்வொன்றின் சிறப்புக்கள் பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.

வைணவமரபில் விநாயகர் - விஷ்வச்சேன கணபதி எனும் பெயரில் வழிபாடு இயற்றப்படுகின்றது. இவரை தும்பிக்கையாழ்வார் என்றும் பேச்சு மரபில் கூறுவர். அழகிய பெருவயிற்றை உடையவரும் அடியார்களுக்கு அபயம் அளிக்க வலது திருக்கையை உடையவரும், அடியார்கள் இன்னல்களைத் தீர்க்க இடது திருக கரத்தில் கதாயுதமும், மேல் இருகைகளில் சங்கு சக்கரத்தை தரித்துக் கொணடு பத்மாசனத்தில் இருந்த நிலையை உடையது விஷ்வச்சேனரின் திருத்தோற்றம். வண்ணை வேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் ('எமது ஆலயத்தில்' எனும் பதம் இனி ஒப்புநோக்கும் இடங்களில் பயன்படுத்தப்படும்) ஸ்நபந மண்டபத்தின் தென்மேற்கு மூலையில் விநாயகர் சந்நிதி உள்ளது. இவ்விநாயகர் திருவுருவில் சங்கு சக்கரம் இல்லாதிருப்பினும் இவரை விஷ்வசேன கணபதியாகவே வழிபடப்படுகின்றது. ஆலயத்தின் முதற்பூசையும் இவருக்கே நடைபெறுகின்றது.

பரமபதத்தின் பர வடிவில் அமைந்துள்ள மூல புருஷன் ஸ்ரீமந்நாராயணன் இவரே அர்ச்சை வடிவில் மூல விக்கிரமாக வடிவமைக்கப்படுகின்றார். இந் நாராயணர் ஆதிநாராயணர், சூரிய நாராயணர், லக்ஷ்மி நாராயணர், சத்ய நாராயணர், யோகநாராயணர், எனும் மூர்த்தங்களாக வழிபடும் மரபு வைண வத்தில் உண்டு.

ஆதிநாராயண மூர்த்தியே பக்தர்களின் வழிபாட்டுத்தேவைகளை நிறைவு செய்ய ஒவ்வொரு வடிவம் எடுப்பதாக ஐதீகம் . ஆதிநாராயணரின் வடிவத்தைப் பின்வரும் தியாநசுலோகம் விளக்குகின்றது.

'அபயம் சங்கசக்ரஞ்ச கதாஹஸ்தம் த்விலோசனம்
ஸர்வாலங்கார சம்யுக்தம் துளசீமாலயா தரம்
கமலாசநஸ்திதம் சாந்தம் நாராயணம் அஹம் பஜே'

அதாவது அபயஹஸ்தம் சங்கு, சக்கரம், கதாயுதம், இவைகளுடன் இரு கண்களுடன் துளசீமாலை அணிந்து சாந்த மூர்த்தியாய் சரவாலங்காரமுடன் பத்மாசனத்தில் வீற்றிருக்கும் நாராயண மூர்த்தியை வணங்குகிறேன். என்பது அத் திவ்விய சுலோகத்தின் கருத்தாகும். இவ்வாதிநாராயண மூர்த்தியே வைணவத்தின் உயிர் நாடியாகப்போற்றும் அஷ்டஹரமாகிய திருமந்திரம் 'ஓம் நமோ நாராயணாய' எனச் செப்புகிறது. ஆழ்வார்களால் நன்கு அனு பவித்துப்பாடப்பட்டது.

"............நாடும் நகரமும் நன்கறிய நமோ
நாராயணா வென்று
பாடும் மனமுடைப் பத்தருள்ளீர். வந்து
பல்லாண்டு கூறுமினே!'

எனப்பெரியாழ்வாரும,

"..........நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம'

எனத்திருமங்கை ஆழ்வாரும் பாடுதல்நன்கு ஒப்புநோக்கத்தக்கது.

இவ் ஆதி நாராயண மூர்த்தியை பிரத்யக்ஷமாகத்தெரியும் சூரியக்கடவுளுடன் இணைத்து சூரிய நாராயணமூர்த்தியாக வழிபடுவர். இவரை கும்பத்தில் ஆவாஹனம் செய்து வழிபடும் முறை யாகசாலையில் மேற்கொள்ளப்படுகின்றது. தனியே விக்கிரக வடிவில் வழிபடும் மரபு இல்லை. வேதங்களிலும் உப நிடதங்களிலும் சூரியநாராயணர் சிறப்பாகப் போற்றப்படுகின்றார்.

விஹாய ஸகதிர் - ஜ்யோதி: ஸுருசிர் - ஹுதபுக்விப!
ரவிர் விரோசன: ஸுர்ய: ஸவிதா ரவிலோசன:!!

என விஷ்ணு சகஸ்ரநாமம் போற்றுகின்றது. அதாவது ஆகாயத்தில் உறைபவரும் தானாகவே பிரகாசிப்பவரும் ஆகுதியில் அளிக்கப்பட்டதைப் புசிப்பவரும் எங்கும் வியாப்பித்து இருப்பவரும், சூரியராகவும் , சூரியசக்தியாகிய சவித்ரு ஆகவும், சூரியனையே கண்ணாக உடையவராக விளங்குபவர் நாராயணன் எனக்கருத்துக் கொள்ளப்படுகின்றது.

லக்ஷ்மி நாராயணர் - சங்கு சக்கரம் கதாதயுதம் ஆகியவற்றுடன் கூடியவராகவும் அபயஹஸ்தமும் சாந்த மூர்த்தியாய் நன்கு பிரகாசத்தோடு கூடியவராய் இடது புறம் மஹாலக்ஷ்மியுடன் கூடிய திருவுருவம், இவ் வடிவம் நின்ற

திருக்கோலத்துடனும், பாம்பணையில் இருந்த திருக்கோலத்திலும் விக்கிரகத்தில் கற்பிக்கப்படுகின்றது. இத்திருவுருவ வழிபாட்டினால் ஏழ்மைநீங்கி சகல சம்பத்தும் உண்டாவதுடன், உலக வாழ்வில் செல்வாக்கும் சுகமும் கிடைக்கின்றது. இதே திருவுருவத்தைக் கும்பத்தில் ஆவாஹானம் செய்து வழிபடும் போது சத்யநாராயணராக அழைக்கப்படுகின்றார்.

பெருமாள் தாமே குருவாக இருந்து திருமந்திர உபதேசம் செய்கின்ற திருக்கோலம் யோகநாராயண வடிவமாகும். நாராயணன் சங்கு சக்கரம் ஏந்தி இடதுகீழ்கை யோக நிலையில் அமர்ந்த திருக்கோலம் யோகநாராயணர் திருவுருவம். யோகநிஷ்டையை பதரி (இலந்தை) மரத்திற்குக் கீழ் இருந்து மேற்கொண்டதால் வதரி விருஷ நாராயணன் என்றும் போற்றுவர். இந்தியாவின் வடபகுதியில் இமயமலைப்பிரதேசத்தில் பனிபடர்ந்த சூழலில் பத்ரிநாத் எனும் ஆலயம் அமைந்துள்ளது. இங்கு மூலவர் யோகநாராயணராக காட்சி தருகின்றார். கல்கி அவதாரம் முடிந்த பின்னர் இறைவன் யோகநிஷ்டையில் யோகநாராயணனுடன் ஐக்கியமாவார் என விஷ்ணு புராணம் கூறுகின்றது, எமது ஆலயத்தின் மஹோற்சவத்தின் இறுதியில் யோகநாராயணராக உற்சவரை அலங்காரம் செய்து இலந்தை விருக்ஷத்தை வாகனமாகக் கொண்டு உற்சவம் நடைபெறல் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆதிநாராயண மூர்த்தி வலது புறத்தில் ஸ்ரீதேவியுடனும், இடதுபுறத்தில் பூமிதேவியுடனும் நான்கு கரங்களுடன் பின்வலது கரத்தில் சக்கரமும், பின் இடது கரத்தில் சங்கும், அபயகரமாகிய முன்வலக்கரமும், முன்இடது கரம் கதாயுதமும் தரித்து கௌஸ்துப மணியோடு கிரீடம் தரித்து நெற்றியில் திருநாமம் திகழ, மார்பில் ஸ்ரீவத்ஸம், எனும் மறுவுடன் பத்மபீடத்தில் நின்ற திருக்கோலத்துடன் சர்வ அலங்காரராய் உள்ள திருவுருவம் மஹாவிஷ்ணு மூர்த்தமாகும். விஷ்ணு என்ற சொல்லிற்கு எங்கும் நிறைந்தவர், நன்மை தருபவர், மாயையிலிருந்து அகற்றுபவர், எல்லாப்பொருட்களின் உயிர் நாடியாக இருப்பவர், என்பது பொருளாகும். ஆதிநாராயணனின் தோற்றத்திலிருந்து தோன்றிய இந்த மஹாவிஷ்ணுவை நீரில் புஷ்பங்களால் அர்ச்சித்தும் அக்கினியை ஆகுதி செய்தும் மனத்தினால் தியானம் செய்தும் சூரியனை நோக்கி மந்திரங்களை உச்சரித்தும் சிலா ரூபங்களையும் வரைபடங்களையும் பிம்பங்களையும் வைத்துப்பூஜித்து வழிபடலாமென பாகவத புராணம் கூறுகின்றது.

இம் மஹாவிஷ்ணு மூர்த்தியே வரம் அருளும் வரதராஜப்பெருமாளாக ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதராகக் காட்சி தருகின்றார், இவரையே தேவாதிராஜன் என்றும் தேவராஜன் என்றும் போற்றுவர். அடியார்களின் குறைகளைத் தானே அறிந்து தீர்க்கும் கருணைக்கடலாக இருக்கும் மூர்த்தி, வரம், அருளும் தெய்வங்களுக்கெல்லாம் ராஜாவாக இருப்பதால் வரதராஜன் எனப்படுகின்றான்,

அர்ச்சாவதாரத்தின் மூல புருஷனாகவும், கலியுகத்தின் குறை போக்கும் தெய்வாகமாகவும். போற்றபடும் திருவுருவம் வேங்கடேசபெருமாள் ஆகும். 'வேம்' என்கின்ற வார்த்தை பாவத்தையும் 'கட்' களைபவர் என்கின்ற பொருளில் வருவதால் அடியார்களின் பாவங்களைப் போக்கி காக்கும் கடவுளாக வேங்கடேசர்

வழிபடப்படுகின்றார். வலது மேல் திருக்கரத்தில் சக்கரமும், இடது மேல் திருக்கரத்தில் சங்கும், வலது கீழ் திருக்கரத்தை சரணடையும் அடியார்களைக்காக்கும் கடிவரதஹஸ்தமாகவும். இடது கீழ் திருக்கரத்தை தொடையில் தாங்கிய ஊரு ஹஸ்தமாகவும், கௌஸ்துபமணியோடு கூடிய கிரீடமும், நெற்றியில் நீண்டு அகன்ற திருநாமமும், புன்சிரிப்போடு கூடிய திருமுகமும், சர்வாலங்காரராய் நின்ற திருக்கோலத்தில் அருள்பாலிப்பவர் இத்திருவுருவவடிவினர். இத்திருவுருவத்தில் உள்ள சிறப்பு யாதெனில் - ஸ்ரீதேவியும், பூமிதேவியும் பெருமாளின் திருமார்பில் வாஸம் செய்வதாக வடிவமைக்கப்படுதலாகும். 'வஹஸ்தவ நித்ய வாஸரஸிகாம்' எனப் போற் றப்படும் திருமார்பில் உறையும் திருமகளை நீளாதேவி எனும் பெயரிலும் அழைப்பர். பெரியாழ்வாரும் தமது திருப்பல்லாண்டில் வடிவாய் நின்வல மார்பனில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ..... எனப் போற்றுகின்றார். இதனால் இவர் ஸ்ரீநிவாசர் என்ற பெயரும் பெறுகின்றார். அலங்காரப்பிரியராகிய மஹாவிஷ்ணுவை அதிக அலங்காரம் செய்து அலங்கரிக்கப்படும். இத்திரு வுருவத்திற்கு திருஷ்டி கழிவதற்காக திருநாடியில் பொட்டு இடுதல். மரபாகும். சரணாகதித் தத்துவத்திற்கு முதலிடம் கொடுக்கும் வைணவத்தில் அடியவர்கள் பெருமாளின் திருப்பாதங்களை தரிசித்தல் வேண்டும். என்பதற்காக இத்திரு வுருவத்தின் திருப்பாதங்களை அலங்காரங்களால் மறைக்காது தரிசனத்திற்கு எப்போதும் விட்டிருப்பதை அவதானிக்கலாம். இத்திருக்கோலம் திருப்பதிக்கே உரிய திருக்கோலமாகப் போற்றப்படுகின்றது.

வைஷ்ணவத்தில் முக்தி தரும் மோக்ஷக்கடவுளாக வழிபடும் திருவுருவம் பள்ளிகொண்ட பெருமாள் இத்திருவுருவை ஸ்ரீரங்கநாதர் என அழைப்பர். அரங்கனின் அழகுக்கோலத்தை மதுரகவி ஆழ்வாரைத்தவிர மிகுதி பதினொரு ஆழ்வார்களும் அனுபவித்துப்பாடியுள்ளனர். ஆகமங்களில் திருமாலின் சயனத் திருக்கோலம் பத்து வகையாகக் கூறப்பட்டுள்ளது. ஜலசயனம், தலசயனம், புஜங்கசயனம். உத்தியோக சயனம்., வீரசயனம், யோகசயனம், தர்ப்பசயனம், பத்ர சயனம், (ஆவிலைத்துயில்) மாணிக்க சயனம், உத்தான சயனம், என்பன அப்பத்துமாகும். ஒவ்வொரு சயனத்திற்கும் ஒவ்வொரு திருவுருவம் அமைக்கும் முறையுண்டு. அவைகள் பற்றி நோக்கின் இப்பகுதி நீண்டு செல்லும்.

பொதுவாக புஜங்க சயனமானது ஆதிஷேஷனாகிய பாம்பணையில் பள்ளிகொண்ட பெருமாள் வலது திருக்கரத்தை அபயஹஸ்தமாகவும் சிரசைத் தாங்குவது போலவும், இடது கரத்தை நீட்டியும் தாமரை மலரை தாங்கியதாகவும். இருகரங்களுடையதாக காணப்படும் நாபியிலிருந்து பத்மாசனத்தில் பிரம்மா வீற்றிருப்பார். பாதசேவை புரிந்தவாறு ஸ்ரீதேவியும் பூமிதேவியும் வீற்றிருப்பார். சில திருவுருவங்களில் நான்குதிருக்கரங்கள் அமைத்து பின்இரு திருக்கரங்களிலும் சங்கு சக்கரம் தாங்கியதாக அமைக்கப்பட்டிருத்தலைக் காணலாம். வைணவத்தில் கோயில் என்றால் சிறப்பாகத் திருச்சி ஸ்ரீரங்கநாதராலயத்தைக் குறிக்கும். இங்கு பள்ளிகொண்ட பெருமாள் தெற்கு நோக்கிய வண்ணம் இருப்பதையும் சைவத்தில் கோவில் என்போற்றப்படும் சிதம்பரத்தில் நடராஜத்திருவுருவம் தெற்குநோக்கி மோக்ஷக் கடவுளாக இருப்பதையும் ஒப்பு நோக்கலாம்.

அடுத்து மேற்கூறிய திருவுருவங்களில் வரதராஜர், வேங்கடேசர், ஸ்ரீரங்கநாதர் ஆகிய திருவுருவங்கள் எமது ஆலயத்தில் பெறும் இடம் பற்றி நோக்குதல் பொருத்தமுடையதாகும். எமது ஆலயத்தின் கருவறையில் நான்கு விக்கிரங்கள் பிரதிஷ்டை செய்யபட்டுள்ளன. ஆதிவேங்கடேசர் எனப்போற்றும் பெருமாள் வேங்கடேசருக்குரிய திருவுருவ அமைப்புக்களுடன் வீற்றிருக்கின்றார். இவரே ஆலயத்தில் ஆரம்ப காலத்தில் ஸ்தல விருஷமாகிய பலா மரத்தின் கீழ் வைத்து வழிபடப்பட்டவராவார். ஆலயம் பெரிப்பித்த காலகட்டத்தில் கும்ப கோணத்தில் .இருந்து செய்வித்துகொண்டுவரப்பட்ட ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத வரதராஜப்பெருமாள் பிரதிஷ்டை செய்யப்பட்டது. வரதராஜப்பெருமாளின் வலது புறத்தில் ஸ்ரீதேவியும், இடது புறத்தில் பூமிதேவியும் நின்ற திருக்கோலத்துடன் காட்சிதருகின்றனர். எனவே கருவறையில் வேங்கடேசரும் (சிறிய திருவுருவ வடிவம்) வரதராஜரும் வீற்றிருக்கின்றனர். எமது ஆலயம் 'வேங்கடேச வரதராஜப் பெருமாள்' கோவில் என அழைக்கப்படுகின்றது. மஹாமண்டபத்தில் தெற்கு நோக்கிய வண்ணம் பள்ளிகொண்ட பெருமாளாக ஸ்ரீ ரங்கநாதர் அமைக் கப்பட்டுள்ளது. இச்சந்நிதிக்கு முன்பாகவே ஸ்ரீதேவி , பூமிதேவி சமேதராய் ஆதிவேங்கடேச பெருமாளும், வரதராஜபெருமாளும் உற்சவ மூர்த்திகளாக (தாம்ர விக்கிரங்கள்) காட்சிதருகின்றனர்,மூலவர், ரங்கநாதர், சந்நிதிகளுக்கு நேராக அமைந்துள்ள ராஜகோபுரங்கள் ஆலயத்தின் பொலிவை மெருகூட்டு கின்றன. திருமாலின் திவ்விய தேசங்கள் 108 ல் கோயில் என்று போற்றப்படும் ஸ்ரீரங்கம், திருமலை எனப்போற்றப்படும் திருப்பதி வேங்கடாஜலபதி, பெருமாள் கோயில் எனச்சிறப்பித்துக் கூறப்படும் காஞ்சி வரதராஜப்பெருமாள் கோயில் ஆகிய மூன்று ஆலயங்களிலும் கருவறையில் முறையே ஸ்ரீரங்கநாதர். வேங்கடேசர், வரதராஜப்பெருமாள் ஆகியோர் காட்சி தருகின்றனர். எனது ஆலயத்தில் இம் மூன்று திருவுருவங்களும் காட்சிதரும் கோலம். மேற்கூறிய திவ்விய தேசங்கள் மூன்றையும் ஒருங்கே தரிசித்த பேறு கிடைக்கப்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

திருமால் எடுத்த 10 அவதாரங்களும் விக்கிரக வழிபாட்டால் வழிபடப்பட்டு வருகின்றது. திருமாலின் அவதாரங்களாகிய மச்சம், கூர்மம், பரசுராமம், பலராமன், கல்கி ஆகிய 5 அவதாரங்களுக்கும் உருத்துவம் தியானலோக அடிப்படையில் கற்பிக்கப்பட்டிருப்பினும் விக்கிரக வழிபாட்டில் சிறப்பிடம் பெறவில்லை, ஏனைய அவதாரங்களாகிய வராகம், நரசிம்மம், வாமனம், இரா மன், கிருஷ்ணன் ஆகிய அவதார நாயகர்களுக்குச் சிறப்பு விக்கிரக வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது.

இரண்யாக்ஷனால் பாதாள லோகத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட பூமியை திருமால் வராக (பன்றிமுகம்) அவதாரம் எடுத்து பூமியை மீட்டுவந்தார். இப் புராணக்கதைக்கேற்ப சங்கு சக்கர தாரியாக அபய ஹஸ்தத்துடன் பூமா தேவியை தொடையில் இருத்திய தோற்றப்பொலிவுடன் இத்திருவுருவம் காட்சி தருவதாக அமைகின்றது. சக்தியின்றித் தனியே அமைக்கும் வராக மூர்த்தியும் உண்டு.

வைணவதிருவுருவங்களில் பிரசித்தி பெற்ற வடிவங்களில் நரசிம்ம வடிவம் முக்கியமானதொன்றாகும். பிரகலாதனின் வேண்டுகோளிற்கிணங்க இரணியனை தூணில் இருந்து சி ங்கமுகமும், மனித உடலும் கூரியநகங்களுடன் வெளிப்பட்டு வதம் செய்த திருவுருவம் நரசிம்ம அவதாரமாகும். கோயில்களில் நரசிம்மர்

'கிரிஜா' 'ஸ்தூணஜா' ஆகிய வடிவங்களில் பிரதிஷ்டை செய்யபடுகின்றது. பிரதிஷ்டைக்குரிய நான்கு வகை நரசிம்ம வடிவங்கள் ஆகமங்களில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. சக்கரத்தாழ்வாரின் பின்புறம் யோக நரசிம்மராக நான்கு திருக்கரங்களிலும் சக்கரத்தை ஏந்தியவாறு அமர்ந்த திருவுருவத்தை 'சுதர்சன நரசிம்மன்' எனக்கூறுவர். ஸ்ரீமஹாலஷ்மியைத் தனது இடது தொடையில் ஏந்தி 'ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மன்' எனும் திருவுருவில் இருப்பது ஒருவகை, கருட வாகனத்தின் மீது எழுந்தருளி 'பாடலாத்ரி நரசிம்மனாக' பக்த்தர்களுக்கு காட்சி தரும் திருவுருவம் இன்னொருவகை. நான்காவதாக ஆதிசேஷன் மேல் எழுந்தருளியிருக்கும் 'யாகை நரசிம்மன் தோற்றம்' இதைப்பாகை நரசிம்மன் எனவும் கூறுவர். நரசிம்மன் மூன்று கண்களுடன் பிரதோஷகாலத்தில் அவத ரித்தாராகையால் பிரதோஷகால நரசிம்ம பூஜை உயரிய பலனைத் தருகின்றது. நரசிம்மர் வழிபாட்டால் தேகஆரோக்கியம், பயமின்மை, கிரகபீடை, நிவர்த்தி, பிரசவ சுகம் , ஞானம் வளர்தல், விவாகம்தடையின்றி நடைபெறல் போன்ற பயன்கள் கிடைப்பதாக புராணங்கள் செப்புகின்றன. நரசிம்மப்பெருமான் இந்தியாவின் திருநாங்கூர், சோளங்கிபுரம், எனும் திருக்கடிகை, திருச்சிங்க வேள்குன்றம், எனும் அகோபிலம் ஆகிய திவ்ய தேசங்களில் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. எமது ஆலயத்தில் மஹாமண்டபத்தில் கிழக்கு நோக்கி வீற்றிருக்கும் சக்கராழ்வாரின் பின் புறத்தே யோகநரசிம்மர் (தாம்ர விக்கிரகம்) காட்சி தருகின்றார்.

மகாபலிச்சக்கரவர்த்தியின் ஆணவத்தை அடக்கும் முகமாகத் தோன்றிய வடிவம் வாமன அவதாரமாகும். நீல நிறமுடைய வாமனன் வனமாலையை அணிந்து இடது கையில் கெண்டியும், வலது கையில் குடையும் வைத்திருப்பதுடன் குள்ளமான வடிவுடையவராக பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. இவ்வாமனர் ஈர டியால் மூவுலகை அளந்த போது தூக்கிய திருவடியுடன் நின்ற திருக்கோலம் 'திரிவிக்கிரம்' வடிவமாகின்றது. இதையே ஆண்டாள் தமது திருப்பாவையில் 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்றும். அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி என்றும் பாடுகின்றார்.

இராமயண இதிகாசத்தின் கதாநாயகனாக விளங்கும் இராமன் திருமாலின் திருவுருவங்களின் சிறப்புப்பெறுகின்றது. இராம நாமத்தின் மகிமை பற்றியும் மகத்துவம் பற்றியும் கம்பர் பின்வருமாறு கூறுகின்றார்.

'நன்மையும் செல்வமும் நாளும் பெருகுமே.
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராமாவென்ற இரண்டெழுத்தினால்...'

இப்பேர் சிறப்புப் பெற்ற இராமனைத் தமது குழந்தையாகவே பாவனை செய்து பாடியனுபவித்தார். ஆழ்வார்களில் ஒருவரான குலசேகரர் ஸ்ரீராமமூர்த்தி யின் திருவுருவம் இளவயதுடைய சாந்தமான முகமும் சிங்கத்திற்கு ஒப்பான வீரபுஜங்களும் செந்நிறக் கண்களும் முழந்தாள் வரை நீண்ட வலது கரத்தில் அம்பும். இடது கையில் கோதண்ட வில்லும் தரித்திருக்கும் வடிவமாகும். இராமனுக்கு வலது புறத்தில் சீதையும், இடது புறத்தே இலக்குவனும் முன்னே ஹனுமானும்

சேர்த்துப் பிரதிஷ்டை செய்யப்படுதல் மரபாகும். பட்டாபிராமன் திருவுருவல் இராமனுக்கு இடது புறத்தே சீதையும், சத்ருக்கனும், வலது புறத்தே இலக்கு வனும் பரதனும் முன்நிலையில் ஹனுமானும் கருடாழ்வாரும் சேர்ந்ததாகப் பிரதிஷ்டை செய்வர். எமது ஆலயத்தில் மேற்குப் புறத்தே உள்ள திரு வீதியில் கிழக்கு முகமாக ஸ்ரீராமர் சந்நிதானம் உண்டு. மேற்கூறிய ராமர் திருவுருவத்தின் முதலாவதாகக் கூறிய திருவுருவம் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. (தாம்ரவிக்கிரகம்) ஸ்ரீதேவியின் அம்சமாக சீதை இருப்பதால் இராமருக்கு வலது புறத்தே சீதை வீற்றிருத்தல் இத்திருவுருவில் சிறப்பம்சமாக அமைகின்றது. இராமர், சீதை அமர்ந்த திருக்கோலத்தில் வடிவமைப்பதும் மரபாக உள்ளது.

ஸ்ரீகிருஷ்ணனின் திருவுருவம் மிகவும் பிரசித்தமானது. பெரியாழ்வார் தன் குழந்தையாகவே பாடி அநுபவித்தார். கிருஷ்ணனின் திருவுருவை சந்தானகோ பாலராகவும் , ஸ்ரீவேணு கோபாலராகவும் கீதை சொன்னகண்ணனாகிய பார்த்த சாரதியாகவும் அமைத்து வழிபடுவர். ஐந்துதலை நாகம் குடையாக வீற்றிருக்க வலது கால் பெருவிரலைச்சுவைத்த வண்ணம், இடது கால் குஞ்சிதபாதமாக வீற்றிருக்க மழலை முகத்துடன் குழந்தைப்பருவமாக அமைக்கப்படும் திருவுருவம் 'சந்தான கோபாலர்' ஆகும். குழந்தைச் செல்வத்தை அடியார்களுக்கு வழங்கும் திருவுருவாக அருள்பாலிக்கின்றார். இரு கைகளாலும் புல்லாங்குழல் பிடித்து வாசிப்பது போன்று நின்ற நிலையில் அமைக்கும் திருவுருவம் ஸ்ரீ வேணு கோபாலர் (வேணு - புல்லாங்குழல்) இவருக்கு வலது புறத்தே ருக்மிணி தேவியும், இடது புறத்தே சத்திய பாமா தேவியும் சக்திகளாகப் பிரதிஸ்டை செய்யப்படுகின்றது. இவரின் காலடியில் ப ுக்கன்றும் அமைக்கப்பட்டிருக்கும். இவரின் குழலிசையில் தம்மை மறந்த பசுக்கூட்டம் நாடிச்செல்வது போல ஆன்மாக்களாகிய பசுக்கள் , பதியாகிய பகவானிடம் நாடுகின்றனர். இதனால் இவரை 'கோவிந்தன்' என்றும் அழைப்பர். 'குறைவொன்றுமில்லாத கோவிந்தா' ஆண்டாளால் போற்றப்படும் கோவிந்த நாமாவை ஆதிசங்கரரும் 'பஜகோவிந்தம்' (வழிபடு கோவிந்தனை) பாடிச் சிறப்பிக்கின்றார். மேற்கூறிய இரு திருவுருவங்களும் பொதுவாகப்பிரதிஸ்டை செய்யப்படுகின்றன. இவற்றை விட பார்த்தசாரதியாக பாலகனான கிருஷ்ணனாக (குருவாயூரப்பன்) சில சிவ தலங்களில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது. எமது ஆலயத்தில் சந்தான கோபாலருக்கும், ஸ்ரீ வேணு கோபாலருக்கும் தனிச் சந்நிதி உண்டு. வேணு கோபாலர் சக்திகளின்றி தனியே (தாம்ர விக்கிரகம்) பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள விசயம் கவனிக்கத் தக்கதாகும்.

பொதுவாக விஷ்ணுவின் திருவுருவங்கள் அமைக்கும் போது நான்கு திருக்கரங்கள் உடையதாக அமைத்தல் வழமையாகும். ஆனால் இராமர், கிருஷ்ணர் திருவுருவங்களில் இரண்டு திருக்கரங்களே அமைக்கப்படுகின்றது. ஏனெனில் அவர்கள் மனிதனாவே வாழ்ந்து காட்டிய அவதாரமாகும்.

உலகில் முதல் வைத்திய தேவராக அவதரித்த திருவுருவம் ஸ்ரீ தந்வந்திரி ஆகும். விஷ்ணுவின் அம்சமாகிய இவரை ஆயர்வேத புருஷனாகக் கூறுவர். பின் இரு கைகளில் சங்குசக்கரத்துடனும், வலது கீழ்க்கையில் மூலிகையும், இடது கீழ்கையில் அமிர்த கலசமும் உடையவராய் நின்ற அல்லது இருந்த திருக்கோலங்களில் பிரதிஷ்டை செய்தல் முறையாகும். தந்வந்திரி வழிபாட்டால்

நோயற்ற வாழ்வு, ஆயுள்விருத்தி என்பன ஏற்பட்டு சுகவாழ்வு உண்டாகின்றது.

"ப்ரபுத்த ஸாங்காகத வேத வைத்யம் தன்வந்ரிம்
வைத்யவரம் நமாமி" எனப் போற்றுகின்றார் ஸ்ரீ பட்டர்

ஸ்ரீ ஹயக்கிரீவர் எனும் திருவுருவம் கல்விக்கதிபதியாக வழிபடப்படுகின்றது. முன் வலக்கை சின் முத்திரையும் ,முன் இடதுகையில் ஏட்டுச்சுவடி (புத்தகம்) ஏந்தியவராக பின் இரு கைகளிலும் சங்கு சக்கரத்துடனும், குதிரை முகமும் மனித உடலும் கொண்டு வெண்தாமரையில் சாந்தமுகத்துடன் அமைந்த திருக்கோலம். ஹயம் என்ற சொல்லிற்கு குதிரை என்ற அர்த்தம் உண்டு. ஞானத்தின் திருவுருவாகிய இவரை சைவத்திருவுருவில் தக்ஷிணாமூர்த்தியுடன் ஒப்பிடத் தக்கது.

'வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு'

எனப் பெரியாழ்வாரால் போற்றப்படும் விஷ்ணுவின் சக்கராயுதத்தின் அம்சமே 'சக்கராழ்வார்' எனும் திருவுருவம் ஆகும். சங்கம், சக்கரம், பாசம் , பரசு, கத்தி, சூலம், வில், அங்குசம், அக்கினி, அம்பு, வஜ்ரம், கேடயம், கலப்பை, உலக்கை, கதை, குந்தம் இவைகளைத் தரித்தவரும், தீச்சுடரைப் போல் முடியுடையவரும், மூன்று கண்களையுடையவரும்பெரும் தீ போன்ற மேனியுடையவரும், ஹாரம் கேயூரங்களை அணிந்திருப்பவரும், ஷட்கோணத்தில் இருப்பவரும் ஆக இத் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. வீரம் கிளர்ந்தெழும், அபயமளிக்கும் இச்சுதர்சன வழிபாட்டினால் , அஞ்சா நெஞ்சமும், தீர்க்க முடியாத நோயிலிருந்து விடுதலையும் ஏற்படுதல் உறுதி. எமது ஆலயத்தில் மஹாமண்டபத்தில் ஸ்ரீ ரங்கநாதர் சந்நிதிக்கு வலது புறத்தில் கிழக்கு நோக்கிய வண்ணம் காட்சி தருகின்றார் (தாம்ர விக்கிரகம்) சித்திரைத் திருவாதிரை நட்சத்திரத்தில் வருடம் தோறும் விஷேட சுதர்சன ஹோமம் , உற்சவம் நடைபெறல் குறிப்பிடத்தக்கதாகும்.

திருமாலின் சக்திகளாகிய திருமகள், மண்மகளாகிய பூமாதேவி, நீளாதேவி ஆகியோர் வைணவத் திருவுருவங்களில் முக்கியத்துவம் பெறுகின்றனர் .ஸ்ரீதேவி, பூமிதேவியரை மஹாவிஷ்ணுவிற்கு இருபுறமும் பிரதிஷ்டை செய்தல் ஒரு வகையாகவும், தனிச் சந்நிதிகளில் பிரதிஷ்டை செய்தலில் சிறப்பான வடி வத்தையும் பெறுகின்றனர். ஸ்ரீ தேவியானவள் தனிச்சந்நிதியில் மஹா லக்ஷ்மியாக பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. நான்கு புஜங்களுடன் பின்னிரு கைகளிலிலும் தாமரை ஏந்தியவளாக, முன் திருக்கரங்கள் அபய, வரத கஸ்தங்களாக, சாந்த முகத்துடன் பத்மாசனத்தில் வீற்றிருந்த திருக்கோலமாகும். இத்திருவுருவையே வைணவ ஆலயங்களில் தாயார் சந்நிதி எனப் போற்றுவர். பெருமாள் தரிசனத்திற்கு முன்னர் தாயாரை வழிபடுதல் வைணவ வழிபாட்டு மரபாகும். எமது ஆலயத்தில் இத்திருக்கோலத்துடனேயே மஹாலக்ஷ்மி சந்நிதி உண்டு. திருப்பதி ஆலயத்தில் அலமேலுமங்கா (அலர் - தாமரை, மேலுள்ள மங்கை மஹாலக்ஷ்மி) என வழிபடுகின்றனர்.

பூமிதேவி தனிச்சந்நிதியில் ஆண்டாளாகப் போற்றப்படுகின்றாள். அழகிய முகப் பொலிவுடன் வலது திருக்கை தாமரைப்பூ ஏந்தி, இடது திருக்கரம்

லம்பஹஸ்தமாக நின்ற திருவுருவமாக பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. இவரை கோதாதேவி என்றும் அழைப்பர். இவரைப் பெண் ஆழ்வாராகவும் போற்றுவர்.

நீளாதேவி நான்கு கரங்களுடன் நீலோற்பல மலரை பின்னிரு கைகளில் தாங்கியவாறு அபய, வரத ஹஸ்தத்துடன் நீலோத்பல நிறமுடையவளாக நீல வஸ்திரம் தரித்துப் பத்மாசனத்தில் அமர்ந்த திருவுருவம். இத் தேவி தனியாகப் பிரதிஷ்டை செய்யும் வழமை இல்லை. பெருமாளின் திருமார்பில் வாசம் செய்வதாக ஐதீகம். ஆழ்வார்கள் இவரை 'நப்பின்னை' என்ற பெயரால் பாடிப்போற்றியுள்ளனர்.

பெரிய திருவடி எனப் போற்றும் 'கருடாழ்வார்' வைணவத் திருவுருவங்களில் முக்கியம் பெறுகின்றார். மூலவருக்கு நேரே கூப்பிய திருக்கரங்களுடன் வீற்றிருப்பவர் (சைவாலயங்களில் நந்தி போல) திருமாலை விட்டுப் பிரியாதவராக எப்போதும் அவரின் வாகனமாக சேவித்தபடி இருப்பார். எமது ஆலயத்தில் மூலவருக்கு முன்னால் தனிச்சந்நிதி உண்டு. ஆலயத்தல் உள் தெற்கு வீதி யில் கருடவாகனருக்கு தனியான இடம் கொடுக்கப்பட்டு பூஜை செய்யப்படுதல் குறிப்பிடத்தக்கது.

சிறிய திருவடி எனப்போற்றும் ஆஞ்சநேயர் பெருமை சொல்லிடங்கா. வைணவ சந்நிதிகளில் முக்கிய இடத்தை வகிப்பவர். ருத்திர அம்சமாகப் போற்றப்படும் அனுமான் கூப்பிய திருக்கரங்களை உடையதாகவும், கதாயுதத்துடன் கூடியதாகவும் பிரதிஷ்டை செய்தல் மரபு. கபிமுகம், நரசிம்மம், கருடன், ஹயக்கிரீவராகிய (குதிரைமுகம்) வராகமுகம் ஆகிய ஐந்து முகங்களையும் கொண்டதாகப் பஞ்சமுக ஆஞ்சநேயரும் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. புத்தி, புகழ், பலம், தைரியம், பயமின்மை, நோயற்றவாழ்வு, சோம்பலின்மை, வாக்குச் சாதுர்யம், ஆகிய பலன்களை இவர் வழிபாட்டால் பெறமுடியும். எமது ஆலயத்தில் உள் பிரகாரத்திலும், ஆலயத்திற்கு வெளியேயும் ஈசானமூலையில் மேற்குமுகமாகத் தனிச்சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வைணவ வழிபாட்டில் இறுதி வழிபாடு விஷ்வச்சேன சண்டேஸ்வரருக்கு இடம் பெறுகின்றது. நான்கு திருக்கரமுடைய இவர் சங்கு, சக்கரதாரியாக அபய, வரத கஸ்தத்துடன் மடக்கிய இடது காலையும், பீடத்திற்கு கீழே தொங்கவிடப்பட்ட வலது காலையுமுடையவர். சில விக்கிரகங்களின் வலது கீழ்க்கை தர்சினி முத்திரையுடனும், இடது கீழ்க்கரம் கதாயுதமும் கொண் டிருப்பர். இதில் முதற்கூறிய வடிவமே எமது ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கநாதர் சந்நிதிக்கு இடதுபுறம் தெற்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்தில் வீற்றிருக்கின்றார். வழிபாட்டின் பலனைத் தருவதோடு வைணவ ஆச்சாரிய மரபின் முதல் குருவாகவும் விளங்குபவர் விஷ்வச்சேனர்.

விஷ்ணு ஆலயங்களில் ஆழ்வார்கள், ஆசாரியார்களின் திருவுருவங்களும் பிரதிஷ்டை செய்தல் சிறப்பாகும். அவ்வகையில் வேங்கடேசப் பெருமாள் ஆலயத்திலும், தெற்கு உள்வீதிப்பிரகாரத்தில் பன்னிரு ஆழ்வார்களுக்கு (தாம்ரவிக்கிரகம்) வடக்கு நோக்கிய சந்நிதி உண்டு. ஸ்நபந மண்டபத்தின் இடது பக்கத்தில் கிழக்கு நோக்கிய வண்ணம் விஷிஸ்ட்டாத்வைதத்தை அருளி

வைணவக்காப்பாளர் ஸ்ரீராமானுஜர் சந்நிதியும் அமைந்துள்ளது.

விஷ்ணு ஆலய துவாரபாலகர்கள் மூவகைப்படும். சண்டர் - பிரசண்டர், பத்திரன் - சுபத்திரன், ஜய விஜய என்பவர்களாவர். இவற்றில் எமது ஆலயத்தில் கருவறைக்குச் செல்லும் வாயிலில் ஜய விஜய துவாரபாலகர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆலயத்தின் துவஜஸ்தம்பம் கருடனுக்கும், பலிபீடத்திற்கும் நடுவில் அமைந்துள்ளமை சிறப்பிற்குரியதாகக் காணப்படுகின்றது. பலிபீடத்தின் முன் அடியவர்கள் தரிசனத்திற்காக திருப்பாதங்கள் வைக்கப்பட்டுள்மை சரணாகதித் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

வேங்கடேசப் பெருமாள் ஆலயத்தின் கண் உள்ள நவக்கிரக சந்நிதானம் தனித்துவச் சிறப்புடையது. நவக்கிரக நாயகனாக விளங்கும் வேங்கடேசரை மேற்கு முகமாக நோக்கிய வண்ணம் சூரியன் மத்தியில் வீற்றிருக்கின்றார். இது சூரிய நாராயண மூர்த்தத்தோடு ஒப்பிடத்தக்கது. கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கு நோக்கி தனது ஒளிக்கதிர்களைப் பாய்ச்சுவது போல என்றும் உதய சூரியராக காட்சி தருகின்றார். அவருக்கு நேரே கிழக்காக சந்திரனும், அக்கினி மூலையில் அங்காரகனும், தெற்கில் புதனும், நிருதி மூலையில் சனீச்சரனும், மேற்கில் வியாழனும், வாயு மூலையில் ராகுவும் வடக்கில் சுக் கிரனும், ஈசான மூலையில் கேதுவும் பிரதிஷ்டை செய்யப்பட்டுன. இதிலுள்ள மற்றைய சிறப்பம்சம் யாதெனில் இக்கிரகங்கள் எட்டும் மத்தியில் உள்ள சூரியனை நோக்கியதாக உள்ளது.

வைணவத் திருவுருவங்கள் ஆகமரீதியிலும், புராணஇதிகாச ரீதியிலும் பல்கிப் பெருகிக் காணப்படுகின்றன. கேசவாதி பன்னிரு நாமங்களுக்கும் புருஷமூர்த்தி, சத்யமூர்த்தி, அச்சுத, அநிருத்த போன்ற மூர்த்திகளுக்கும் திரு வுருவங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவைகள் பிரதிஷ்டை செய்யப்படும் மரபில் இல்லை.

தொகுத்து நோக்கும் போது இக்கட்டுரையில் மிக முக்கிய பிரதிஷ்டைக்குரிய திருவுருவங்கள் பற்றி மிகச்சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளன. இடையிடையே வேங்கடேசப் பெருமாள் ஆலய திருவுருவங்களும் அதன் சிறப்புக்களும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

**"யோ யோ யாம் யாம் தனும பக்தஹ ச்ரத்தயார்சிதுமிச்சதி**
**தஸ்ய தஸ்யாசலாம் ச்ரத்தாம் தாமேவ விததாம்யஹம"**

எனக் கீதையில் பகவான் கூறியதற்கமைவாக எந்தெந்த பக்தன் எந்தெந்த தேவ வடிவத்தை நம்பிக்கையோடு வணங்க விரும்புகின்றானோ அவ்வவனுடைய அந்த நம்பிக்கைக்குரியதாக நான் அமைவேன் எனக் கிருஷ்ணர் கூறுவதிலிருந்து எத்திருவுருவை வழிபடினும் அது பக்தியோடும் நம்பிக்கையோடும் வழிபட வேண்டும் என்பது புலனாகின்றது.

கதிரவன் ஒன்று ஆனாலும் அதிலிருந்து வெளிப்படும் ஒளிக்கதிர்களுக்கு வெவ்வேறு நிறங்கள் இருக்கின்றன. அதைப்போல பரப்பிரம்மம் ஒன்றாக இருந்து

கொண்டு சூரியக்கதிர்கள் போன்று பல்வேறு தத்துவங்களில் வெவ்வேறு வடிவங்களில் பல குணச்சிறப்புக்களுடன் விளங்குகின்றது. எனவே எத்திருவுருவ வழிபாட்டையும் முழுமனத்துடன் ஏற்று அப்பரம்பொருளின் திருவருளுக்கு பாத்திரமாவோமாக !

'ஓம் நமோ நாராயணய நமஹ'

*பிரம்மஸ்ரீ சா. குமரேச சர்மா*
**B.A (HONS)**
*தாவடி.*



ஓம்
ஸ்ரீராமஜெயம்



# பகவத் கீதை அழியா அமிர்தம்

"ஹேகிருஸ்ண கருணாஸிந்தோ தீனபந்தோ ஜகத்பதே
கோபேச கோபிகா காந்த ராதா காந்த நமோஸ்துதே"

**"என்னருமை கிருஸ்ணா படைப்பின் மூலமும் பரிதவிப்பவர் நண்பனும் நீயே கோபிகளின் நாயகனும் ராதாராணியின் நேசனும் நீயே உனக்கு எமது வணக்கங்கள்"**

பகவத் கீதை மகாபாரதத்தில் பீஷ்ம பர்வத்தின் ஒரு பகுதியாகத் தரப் பட்டுள்ளது. பகவத் கீதையை உபதேசித்தவர் பகவான் ஸ்ரீ கிருஸ்ணர். பகவான் என்னும் சொல் வியாச தேவரின் தந்தை பராஸர முனிவரால் விளக் கப்பட்டுள்ளது. அவரின் கூற்றுப்படி செல்வம், புகழ், பலம், அழகு, அறிவு, தியாகம் அல்லது துறவு என்பனவற்றை பூரணமாகக் கொண்டவர் பகவான் என அழைக்கப்படுவார். இந்த ஆறு சிறப்பம்சங்களையும் பூரணமாக உடையவராக அறியப்பட்டவர் ஸ்ரீ கிருஸ்ணர். எனவே தான் ஸ்ரீ கிருஸ்ணர் கீதை முழுவதும் பகவான் என்று குறிப்பிடப்படுகின்றார்.

"தர்ம சேஷத்ரே குரு சேஷ்த்ரே......" என்று பகவத் கீதை ஆரம்பிக்கின்றது. புண்ணிய யாத்திரை தலமான குருசேஷத்திரத்தில் தீர்க்கமான போர் புரிய கௌரவர்களும் பாண்டவர்களும் வியூகம் அமைத்து நிற்கின்றனர். வெற்றியின் சின்னமாகிய அனுமான் கொடியேற்றிய அர்ஜுனனின் தேரின் சாரதியாக பகவான் ஸ்ரீ கிருஸ்ணர் தனது கருணையினால் நண்பனின் சேவையில் இருக்கின்றார். எதிரணியில் உள்ள தனது உறவினர்களையும் நண்பர்களையும் இப் போரில் கொல்வதால் என்ன நன்மை என எண்ணிய அர்ஜுனன் போரிடத் தயங்கினான். பௌதீக விளைவுகளை எண்ணியவன் கடைமையை மறந்தான். அப்போது பகவான், "நானோ, நீயோ இங்கு கூடியுள்ள மன்னர்களோ இல்லாமலிருந்த ஒரு காலமென்றுமிருக்கவில்லை, எதிர்காலத்திலும் நம்மில் எவரும் இல்லாமலிருக்கவும் போவதில்லை"(ப:கீ 2:12) எனவும் "உனக்கு விதிக்கப்பட்ட கடமையை செய்வதற்கு மட்டுமே உனக்கு பூரண உரிமை உண்டு. செயல்களின் பலன்களில் உனக்கு அதிகாரமில்லை. உனது செயல்களின் விளைவுகளுக்கு உன்னையே காரணமாகவும் எண்ணாதே. செயலற்ற நிலையிலும் விருப்பம் கொள்ளாதே" எனவும் உரைக்கின்றார், ப.கீ(2:47). அர்ஜுனனின் மயக்கத்தை மாற்றவே பகவானால் கீதை உபதேசிக்கப்படுகின்றது. இறுதியில் "கரிஷ்யே வசன தவ" "உங்கள் வாக் குப்படி நான் செயல்படுகிறேன்"என்று கூறும் போது அர்ஜுனன் கண்ணனின் ஆணைக்கிணங்கிப் போர் புரிய முடிவு செய்கிறான்.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

## பகவத்கீதையின் நோக்கம்

பௌதீக நிலையின் அறியாமையில் இருந்து மனித குலத்தை விடுவிப்பதே பகவத்கீதையின் நோக்கமாகும். பௌதீக உறவுகளின் பற்றினால் குரு சேஷ்த்திர யுத்தத்தில் போர் புரிவதில் அர்ஜூனனுக்கு சிரமம் இருந்தது போலவே ஒவ்வொரு மனிதனுக்கும் பல விதங்களில் சிரமங்கள் இருக்கின்றன. அர்ஜூனன் ஸ்ரீ கிருஸ்ணனிடம் சரணடைந்தான். இதன் பயனாக கீதை உபதேசிக்கப்பட்டது. நாம் ஒவ்வொருவரும் பௌதீக இருப்பால் துன்பம் மிகுந்து இருக்கின்றோம். நமது நிலை ஒரு நிலையற்ற சூழ்நிலையில் அமைந் துள்ளது. துன்பப்படும் பற்பல மனிதர்களுள் ஒரு சிலரே தங்கள் நிலை பற்றி யும் தாங்கள் யாவர், இது போன்ற விரும்பத்தகாத சூழ்நிலையில் வைக் கப்பட்டதற்கான காரணம் யாது, என்பன போன்றவற்றைப் பற்றி ஆராய் வார்கள். தாங்கள் ஏன் துன்பப்படுகின்றார்கள் என்று வினவத் தொடங் குபவர்களும், எங்கிருந்து வந்தோம், மரணத்தின் பின் எங்கு செல்வோம் என்று ஆராய்பவர்களே பகவத்கீதை பயிலத் தகுந்தவர்களாகின்றனர். நேர்மையாக பகவத் கீதை பயில விரும்புபவர் பகவான் கிருஸ்ணரிடம் அசை யாத மதிப்பும், பக்தியும் உடையவராக இருத்தல் வேண்டும். அர்ஜூனன் அந்தத் தன்மையுடையவனாக இருந்தான்.

வாழ்க்கையின் உண்மை நோக்கத்தை மனிதன் மறக்கும் போது அதை மீண்டும் நிறுவவே முக்கியமாக பகவான் பிரமாவின் ஓர் தினத்தில் (8,600,000,000 வருடங்கள்) ஒரு முறை இவ் உலகிற்கு வருகின்றார். எம்மிடம் கருணையுடையவரான பகவான் ஸ்ரீ கிருஸ்ணர் அர்ஜூனனை சீடனாகக் கொண்டு கீதையினை உபதேசிக்கின்றார். ஸ்ரீ கிருஸ்ணனின் தோழனாதலால் அர்ஜூனன் அறியாமைக்கெல்லாம் உயர்ந்தவனாகவே இருந்தான். இருந்தும் வாழ்வின் சிக்கல்களைப் பற்றி ஸ்ரீ கிருஸ்ணனிடம் அவன் வினவ வருங்காலத் தலைமுறைகளின் நன்மைக்காக அவர் அவற்றை விளக்கி வாழ்க்கைத் திட்டத்தை வகுக்கவேண்டும் என்பதற்காகவே அவன் குருசேஷ்த்திரப் போர்க் களத்தில் அறியாமைக்குட்படுத்தப்பட்டான்.

## பகவத்கீதையில் பேசப்படும் விடயங்கள்

ஐந்து ஆதார உண்மைகள் பற்றி பகவத்கீதையில் விவாதிக்கப்படுகின்றது. அவையாவன

1. ஈஸ்வரன் (ஆள்பவர்)
2. ஜீவன் (உயிர் வாழி)
3. பிரகிருதி (பௌதீக இயற்கை)
4. காலம் (பௌதீக இயற்கையின் தோற்றம், நினைப்புக் காலம்)
5. கர்மம் (செயல்)

பகவத் கீதையில் இருந்து , கடவுள் யார்? , உயிர்கள் யாவை? , பௌதீக இயற்கை என்றால் என்ன? , பிரபஞ்சத்தின் தோற்றம் என்பதென்ன? , அது எவ்வாறு காலத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றது?, உயிர்களின் செயல்கள் யாவை? என்பவற்றை நாம் அறிய முடியும். ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு பதின்மூன்றாம் அத்தியாயத்தில் விளக்கப் படுகின்றது. உயிர்களைப் போல் அவரும் உணர்வுடையவர். ஆனால் உயிர் களின் உணர்வு அவற்றின் உடலுடன் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது. ஆனால் இறைவனோ எல்லா உயிர்களையும் உணர்பவர். ஒவ்வொரு உயிர் வாழியின் இதயத்திலும் இறைவன் பரமாத்மாவாக உறைந்து உயிர் வாழி தனது அபிலாசைகளை நிறைவேற்ற கருணை புரிகின்றார் என்று விளக் கப்பட்டுள்ளது. உயிர் வாழி என்ன செய்ய வேண்டும் என்பதை மறக்கின்றான். முதன் முதலில் அவன் ஒரு விதமாகச் செயல்படுவதென்று முடிவு செய்கின் றான். பின்பு தனது சொந்தக் கர்மத்தின் செயல்களிலும் விளைவுகளிலும் சிக்கிக் கொள்கின்றான். ஆடைகளைக் களைவது போல, ஒரு வித உடலை விட்டு வேறு ஒரு விதமான உடலைப் பெறுகின்றான். இவ்வாறு மாறும் போது தனது கடந்த காலச் செய்கைகளுக்கேற்ப விளைவுகளையும் பின் விளைவுகளையும் அனுபவிக்கின்றான். தூய்மையில் சத்வ குணத்தில் இருந்து தான் மேற்கொள்ள வேண்டிய செயல்கள் யாவை என ஜீவன் புரிந்து கொள்ளும் போது இந்தக் கர்மங்களை மாற்ற முடியும். அவ்வாறு செய்வானேயானால் கடநத காலச் செயல்களின் விளைவுகளையும் பின்விளைவுகளையும் மாற்றி விட முடியும. எனவே முன்பு கூறிய ஐந்து விடயங்களான ஈஸ்வரன், ஜீவன், பிரகிருதி, காலம், கர்மம் என்பவற்றில் கர்மம் நித்தியமானதல்ல என அறிகின்றோம்.

ஸ்ரீ கிருஸ்ணர் பல்வேறு சக்திகளில் எவ்வாறு இயங்குகின்றார் என்றும் பகவத்கீதை விளக்குகின்றது. தோற்றமளிக்கும் இந்த பௌதீக உலகம் தன்னில் தன்னிறைவு பெற்றது. இந்த அகிலத்தின் பராமரிப்புக்கும் , பாது காப்பிற்கும் தேவையான சகலவற்றையும் உற்பத்தி செய்யும் படியாக முழு மையாக ஆக்கப்பட்டுள்ளது. தேவையற்றது எதுவுமேயில்லை தேவைப்பட்டு இல்லாததும் எதுவுமேயில்லை. பரம முழுமையின் சக்தியினால் அமைக்கப்பட்ட தன் சுயமான காலத்தை உடையதாக இத் தோற்றம் இருக்கிறது. அந்த நேரம் முடிவுற்றவுடன் இறைவனின் முழு ஏற்பாட்டினால் இந்த நிரந்தரமற்ற தோற்றங் கள் அழிக்கப்படும். ஜீவன்கள் பூரணத்தை உணர்வதற்கான முழு வசதியும் பகவத் கீதையில் உள்ளது. எனவே பகவத் கீதை ஆன்மீக அறிவின் முழு ஞானத்தை விளக்குவதாக அமைந்துள்ளது.

## ஆன்மீக அறிவினை விருத்தி செய்யும் முறை

ஆன்மீக ஞானம் என்பது ஆராயக் கூடிய விடயமல்ல. பக்குவமற்ற புலன்களால் பொருட்களை ஆராய்வதால் நமது ஆராய்ச்சியும் முழுமையற்றதா கும். கீதையின் நான்காம் அத்தியாயத்தில் கூறியுள்ளபடி உன்னத அறிவினை, பகவானில் இருந்து தொடங்கி ஆன்மீக குருமார்களின் பரம்பரையில் வழங்கப் பட்டுவரும் சீடத் தொடர் என்னும் சரியான மூலத்திலிருந்து பெற வேண்டும்.

பகவான் ஸ்ரீ கிருஸ்ணனிடம் உபதேசம் பெற்ற அர்ஜுனன், அவர் சொன்னதை எல்லாம் மறுப்பின்றி ஏற்றுக் கொள்கின்றான். பகவத் கீதையின் ஒரு பகுதியை ஏற்றுக் கொண்டு வேறொரு பகுதியை மறுக்க ஒருவர் முயற்சிப்பது தவறானதாகும். பகவத் கீதையை நமது எண்ணப்படி பொருள் உரைக்காமல், நீக்கமற உள்ளபடி ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆன்மீக ஞானத்தின் மிகச் சிறந்த பரிசாக கீதையினை எடுத்துக்கொள்ள வேண்டும். பகவத் கீதை பகவானின் கீதம் பகவானே பேசியிருக்கின்றார். குறைபாடுகளால் பீடிக்கப்பட்ட சாதாரண உலக மனிதன் சொற்களிலிருந்து பகவானின் சொற்கள் வேறு பட்டவை. ஒரு சாதாரண மனிதன் நான்கு விதமான குறைபாடுகளுடையவன்:

1. நிச்சயமாக தவறு செய்யக் கூடியவன்,
2. மாயைக்குட்பட்டு மதிமயங்கும் தன்மையுடையவன்,
3. மற்றவரை ஏமாற்றும் குணமுடையவனாக இருக்கின்றான்,
4. பக்குவமற்ற புலன்களால் கட்டுப்படுத்தப் பட்டவனாயிருக்கின்றான்

உன்னத அறிவின் பக்குவமான விபரத்தை இந்த நான்கு குறைபாடுகளை உடையவன் அளிக்க முடியாது. ஆன்மீக ஞானம் இவ்வகையான குறைபாடுகளுடைய ஜீவன்களால் உபதேசிக்கப்படுவதில்லை. முதலில் படைக்கப்பட்ட பிரம்ம தேவரின் இதயத்தில் இது உரைக்கப்பட்டது. தான் இறைவனிடம் இருந்து பெற்றவாறே அந்த ஞானத்தை தனது புத்திரர்களுக்கும் சீடர்களுக்கும் பிரம்மதேவர் உபதேசித்தார். இவ்வாறு பரம்பரைச் சீடத் தொடரில் கீழிறங்கி வரும் ஆன்மீக ஞானம் உபதேசிக்கப்பட்டு வந்தது. சங்கிலித் தொடரில் சீடர் பரம்பரை வழியில் பேணப்பட்ட இந்த யோகமுறை காலப் போக்கில் முறிந்து விட்டது போல் தோன்றுவதால் , புதிய பரம்பரையின் முதல் சீடனாக அர்ஜுனனை ஆக்குவதாக பகவான் நான்காம் அத்தியாயத்தில் உரைக்கின்றார். மேலும் அர்ஜுனன் பகவானது நண்பனாகவும் பக்தனாகவும் இருப்பதால் இந்த பரம ஞானத்தை விளக்குவதாக பகவான் கூறுகின்றார். பகவத் கீதை இறைவனின் பக்தர்களுக்கான நூல் என்பதே இதன் உள்ளுரையாகும்.

## நமது இறுதி இலக்கு

இந்த பௌதீக உலகில் எல்லாமே அநித்தியமானவை. இங்கு ஒவ்வொன்றும் உருவாகி , சிறிது காலம் வளர்ந்து, சில உப பொருட்களை உருவாக்கி, நிலையிழந்து இறுதியில் அழிகின்றது. ஒரு மரத்தையோ, பொருளையோ, மனித உடலையோ எதை எடுத்துக் கொண்டாலும் இதுவே பௌதீக உலகின் நியதி. ஆனால் நிரந்தரமற்ற உலகிற்கு அப்பால் "சநாதன வெளி" எனப்படும் நித்தியமான ஆன்மீக வெளி உள்ளது எனவும் அந்த நித்திய பரவெளியின் தன்மை பதினைந்தாம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது. ஆன்மீக வெளியில் எண்ணற்ற கிரகங்கள் மிதந்து கொண்டிருக்கின்றன. பகவான் கூறுகின்றார்:

ந தத் பாஸயதே சூர் யோ ஒசசாங்கோ ந பாவக
யத் கத்வா ந நிவர்தந்தே தத் தாம பரமம் மம

( ப.கீ 15:6 )

"ஆன்மீக வெளியை அடைபவர் . பௌதீக வெளிக்கு மீண்டும் இறங்கும் அவசியம் இல்லை"

**பிறப்பு, மரணம், மூப்பு, வியாதி எனும் துன்பங்களைக்கொண்ட இந்த ஜட உலகை நீத்து, எவ்வாறு ஆன்மீக வெளியில் உண்மையான ஆனந்தமயமான வாழ்வைத் தொடங்குவது என்பது பற்றிய விபரம் கீதையில் உபதேசிக்கப் படுகின்றது. நாம் இந்த உடலல்ல என்று உணர்வதே ஆன்மீகத்தின் முதல் படியாகும். ஜட உலகில் நாம் மூன்று வகையான இயற்கைக் குணங்களுடன் உறவு கொண்டிருக்கின்றோம். பக்தி மயமான சேவை செய்வதன் மூலம் பற்றற்றவர்களாக நாம் மாற வேண்டும். நாம் இறைத்தொண்டில் பற்றுக் கொள் ளாவிடில் பௌதீக இயற்கைக் குணங்களிலிருந்து விடுபட இயலாது. பதவி களும், பற்றும் பேராசையினால் இயற்கையினை ஆட்சி செய்ய நினைக்கும் எண்ணத்தின் விளைவுகளாகும். இயற்கையினை ஆள நினைக்கும் இந்த எண்ணத்தை கைவிடும் வரை இறைவனின் நித்திய ராஜ்ஜியத்திற்குப் போகும் வாய்ப்பு இல்லை. பரமனின் சேவையிலீடுபடுவதால், பொய்யான ஜட இன் பங்களால் மயக்கப்படாத ஒருவனால் மட்டுமே அழிவற்ற, நிரந்தரமான இறை வனின் பரமபதத்தை அடைய முடியும் என பகவத் கீதையில் (ப.கீ 15:5) கூறப்பட்டுள்ளது.**

## கோலோக பிருந்தாவனம்

**அடுத்த படியாக பகவான் ஸ்ரீ கிருஸ்ணனின் வாசத்தலமான கோலோக பிருந்தாவனத்தை அடையும் வழிபற்றிய விபரம் கீதையின் எட்டாம் அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது:**

ஆந்தகாலே சமாம் ஏவ ஸ்மரண் முக்த்வா கலேவரம்
யு: ப்ரயாதிஸ மத்பாவம் யாதி நாஸத்யத்ரசம்சய:

"வாழ்வின் முடிவில் எவனொருவன் என்னை நினைத்தவாறே உடல் நீங்குகின்றானோ, அவன் உடனடியாக என் தன்மையை அடைகின்றான், இதில் சந்தேகமில்லை"

(ப.கீ 8:5 )

**இவ்வுலகில் நாம் அடையும் துன்பங்கள் எல்லாம் உடலிலிருந்து எழுப வையே. ஆனால் பரமபுருஷ பகவானை எண்ணியவாறே உடலை விடுபவன் உடன டியாக "சச்சிதானந்தமான" உடலை அடைகின்றான்.**

**உயிர்வாழி ஜட உலகில் ஒரு உடலை விட்டு நீங்கி மறு உடலை பெறும் விதமும் கூட முறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. மறு பிறவியில் எந்த விதமான**

உடலை ஒருவன் அடைவான் என்பது தீர்மானிக்கப்பட்ட பின்னரே ஒருவன் மரணமடைகின்றான். இறைவனால் அமர்த்தப்பட்ட உயர் அதிகாரிகளான தேவர்களே இதை முடிவு செய்கின்றனர். இப்பிறவியில் நமது செயல்களுக் கேற்பவே, நாம் உயரவோ தாழவோ செய்கின்றோம். மறு பிறவி இந்தப் பிறவி யிலேயே தயார் செய்யப்படுகின்றது. எனவே இந்தப்பிறவியில் இறைவனின் திருநாட்டிற்கு உயர்ச்சி பெற முயற்சி செய்தால் நிச்சயமாக இந்த ஜட உடலைவிட்டு வெளியேறிய பின் ஆன்மீக உடலை அடைவோம். பகவான் இதைப்பற்றி "சந்தேகமில்லை" என்றும் கூறுகின்றார். இது உறுதியாக நம் பப்பட வேண்டும். நமது கற்பனைக்குச் சரிவராததால் ஒரு பொருளை நாம் மறுக்கக் கூடாது. எனவே மரண நேரத்தில் கடவுளை "பரப்பிரமம்" அல்லது "பரமாத்மா" அல்லது "பகவான்" எனத் தியானிப்பவர்கள் நிச்சயமாக ஆன்மீக வெளியை அடைகின்றனர் என்பதில் சந்தேகமில்லை. மரண நேரத்தில் பரம புருஷ பகவானை எண்ணுவது எப்படி என்பதும் கீதையில் சொல்லப் பட்டுள்ளது. வாழ்வில் நாம் பௌதீக விடயங்களைப் பற்றி எண்ணப் பழக்கப் பட்டிருக்கின்றோம். நாவல்கள் , செய்தித்தாள்கள் , தொலைக்காட்சி நிகழ்வு கள் எனப் பலவும் நமது சிந்தனைகளை ஜடசக்தியால் நிரப்புகின்றன. ஆன்மீக இலக்கியங்களை படிப்பதன் மூலம் நமது சிந்தனையை இறைவனிடம் திருப்ப வேண்டும். இவ்விதமாக மரண சமயத்தில் கடவுளைத் தியானிப்பது நமக்கு முடியும். இதுவே பகவானால் அங்கீகரிக்கப்பட்ட வழி. இதன் பலனை அவரே உறுதி கூறுகின்றார்.

"தஸ்மாத் சர்வேஷுஜீ காலேஷுஜீ மாமனுஸ்மரயுத்யச
மய்யர்பித மனோபுத்திர் மாமேவைவஷ்யஸ்ய சம்ஸய"

செய்தித்தாள்கள், தொலைக்காட்சி நிகழ்வுகள் எனப் பலவும் நமது சிந் தனைகளை ஜடசக்தியால் நிரப்புகின்றன. ஆன்மீக இலக்கியங்களை படிப்பதன் மூலம் நமது சிந்தனையை இறைவனிடம் திருப்ப வேண்டும். இவ்விதமாக மரண சமயத்தில் கடவுளைத் தியானிப்பது நமக்கு முடியும். இதுவே பகவா னால் அங்கீகரிக்கப்பட்ட வழி. இதன் பலனை அவரே உறுதி கூறுகின்றார்.

"தஸ்மாத் சர்வேஷுஜீ காலேஷுஜீ மாமனுஸ்மரயுத்யச
மய்யர்பித மனோபுத்திர் மாமேவைவஷ்யஸ்ய சம்ஸய"

"எனவே அர்ஜுனா, என்னை நினைத்துக் கொண்டே, அதே சமயம் உனது கடமையான போரிடுதலையும் செய்வாயாக. உனது செயல்களை எனக்கு அர்ப்பணித்து உனது மனம், அறிவு இவற்றை என்னில் நிலை நிறுத்தி, இவ் விதமாக நீ என்னை அடைவாய் என்பதில் ஐயமில்லை."

(ப.கீ8:7 )

வெறுமனே பகவானை நினைத்துக் கொண்டு தொழிலை விட்டுவிடும் படி அர்ஜுனனிடம் பகவான் கூறவில்லை, பழக்கத்தில் கொண்டுவரமுடியாத எதையும் கடவுள் உபதேசிப்பதில்லை.

தற்காலத்தில் மனிதகுலம் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்

வதற்கும், சாதாரண பொழுது போக்கு அம்சங்களிலேயுமே அதிக நேரத்தினை செலவு செய்கின்றது. எல்லா ஆன்மீக ஞான நூல்களையும் படிப்பது என்பதுமுடியாத காரியம். பகவானால் உபதேசிக்கப்பட்ட வேதங்களின் சாரமான பகவத்கீதை போதுமானதாக அமைகின்றது. இந்தக் கீதமோ இறைவனின் திருவாயினின்று பொழிவது, கங்கையோ அவரது திருப்பா தங்களில் இருந்து வெளிப்படுவது. கங்கையின் நீரைப்பருகுபவன் பாபங் களிலிருந்து விடுபடுகின்றான் எனக் கூறப்படுகின்றது. இப்படியிருக்க கீதை யென்னும் அமிர்தத்தை சுவைப்பவர்கள் பற்றி என்ன கூற முடியும்? இறைவனின் திருவாய்க்கும் பாதங்களுக்கும் வேறுபாடில்லை எனினும், நம் நிலையில் பகவத்கீதை கங்கையைக் காட்டிலும் முக்கியமானதென்று சம்மதிக்கலாம்.

இறைவன் சிவபெருமானின் திருஅவதாரமாகக் கருதப்படும் ஆதிசங்கரர் ஆறாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தத்துவஞானியாவார். இந்தியாவில் அப்போது பர வியிருந்த பௌத்த சிந்தனையை அகற்றி மீண்டும் வைதீக மரபினை அத்வைத தத்துவத்தின் அடிப்படையில் நிலைநிறுத்தியவர். அந்த ஸ்ரீ பாத சங்கரர் பின்வருமாறு கீதையினை தியானிக்கின்றார்.

ஓ! பகவத் கீதா,
நின் அத்தியாயங்கள் பதினெட்டில்
பூ ரண ஞானமென்னும்
அழியா அமுதத்தை
மானிடர் மீது
பொழிந்துள்ளாய்
புனிதமான கீதையே
உன் மூலம் ஸ்ரீ கிருஸ்ணர்
அர்ஜுனனுக்கு அறிவொளி வழங்கினார்
பின்னர் முதுபெரும் முனிவராம் வியாசர்
மகாபாரதத்தில் உன்னை இணைத்தார்
அன்புள்ள அன்னையே
மனிதனின் மறுபிறவியை மாய்ப்பவளே
இவ்வுலகெனும் இருளில் நான்
உன்னைத் தியானிக்கின்றேன்.

உபநிஷத் எனும் பசுக்களை, அர்ஜுனன் எனும் கன்றிற்காக, இடையனான ஸ்ரீ கிருஸ்ணன் கறக்கின்றான். பகவான் தரும் உன்னத அமுதமாம் கீதை எனும் பாலைப் பருகுவோர் அறிவுடைய சான்றோர்.

*கலாநிதி சிவக்கொழுந்து ஸ்ரீ சற்குணராசா*
*கணித புள்ளிவிபரவியற் துறை*
*யாழ்பல்கலைக் கழகம்.*

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வைணவத்தின் பெருமை

வைணவ மதத்தின் தோற்றம் மிகத் தொன்மையானது சரித்திர காலத் திற்கு முற்பட்டது. வேதகாலம் முதல் சிந்துவெளி நாகரிக காலம் ஈறாக வைணவத்தின் தொன்மையை எடுத்தியம்பும் ஆதாரங்கள் பல. "மொகஞ்சதாரோ ஹரப்பா" அகழ்வு ஆராய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. சிந்துவெளி நாகரிகம் இற்றைக்கு ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என வரலாற்று ஆய்வாளர்களும், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் கருது கின்றனர். இந்த அகழ்வு ஆராய்வின் மூலம் பெறப்பட்ட எச்சங்கள் பலவற்றில் ஒரு சில வைணவசமய புராணங்கள் கூறும் தெய்வ வடிவங்களை ஒத்த தன்மையுடைய விக்கிரகங்கள் என இவற்றை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆகாகையால் வைணவ வழிபாடு சிந்து நாகரிக காலத்திற்கு முற்பட்டது என இவ்வாதாரங்கள் சான்றுபகர்கின்றன. எமது இந்து தர்மத்தை எடுத்தியம்பும் வேத நூல்களே ஆதி தெய்வங்களில் ஒருவராகிய ஸ்ரீ விஷ்ணுவை மதித்துப் போற்றுகின்றன. இது போன்றே தமிழ் சங்ககால இலக்கியங்களும் முல்லை நிலத்தின் தெய்வ மாக திருமாலைப் போற்றி மாயோன் வழிபாடு என்று இயம்புகின்றன.

இந்து சமய கிரியா அம்ஸநூல்கள் வாயிலாக வழிபாட்டின் முக்கியத்து வத்தை விளக்கி யாகங்களில் அவிர்பாகங்களை ஏற்கும் தெய்வங்களில் ஸ்ரீ விஷ்ணு பகவானும் முக்கியமானவர் என்று கூறுகின்றன. ஸ்ரீமந் நாராயணனை முழுமுதற்பொருளாக ஏற்ற வைஷ்ணவ சமயத்தின் ஆகமநூல்களாக வைகானசமும், பாஞ்சராத்திரமும் அமையப்பெற்றுள்ளன. இந்துசமய ஆகம நூல்களின் சுவடி ஆக்கம் ஏறத்தாழ 4ஆம், 5ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியிருக்கலாம் எனச் சரித்திர ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

## வைணவமும் அதன் பெருமையும

இதேபோன்று ஏறத்தாழ 7ஆம்,8ஆம் நூற்றாண்டுகளில் வேதாகம உட் பொருள்களை அடக்கிய வைணவபாசுரங்களைப் பன்னிரு ஆழ்வார் பாடிய வைணவ நெறிமுறைகளைப் பரப்பித் தமிழ் நாடு எங்கணும் வைணவத் தொண் டைப் பலன் கருதாது செய்தனர். வைணவத்தின் அடிநாதம் பகவானுக்கு மாத்திரம் தொண்டு புரிந்து சேவிப்பது அல்ல. பகவானின் அடியார்களுக்கும் பிரதிபலனை நோக்காது தியாக உணர்வுடன் பணி செய்வது பெரும் பேறாகக் கருதப்படுகின்றது. இதனால் போலும் குலசேகர ஆழ்வார் தமது பாசுரத்தின் வாயிலாக இதனை வலியுறுத்துகின்றார். "தூராத மனக்காதல் தொண்டர் தங்கள் குழாங்குமித் திருப்புகழ் பலவும் பாடி...." என்றார்.

பிற்காலத்தில் ஆழ்வார்களின் திவ்விய பாசுரங்களின் மூலம் வைணவத் தொண்டு பரந்து விரிந்து தென்மாநிலம் முழுவதும் வைணவ வழிபாடு நிலைபெறலாயிற்று. இதுபோன்றே இராமானுஜ ஆச்சாரியாரும் பக்தி வாயிலாக தத்துவக்கோட்பாடுகளையும் விசிஸ்டாத்வைத வேதாந்தமாக அமைத்தனர். இது

ஸ்ரீமந் நாராயணனை முதன்மைப்படுத்திய வைஷ்ணவ சமய நெறியாக அமைந்து பாரதத்தில் வடமாநிலங்களிலும், தென்மாநிலங்களிலும் ஸ்ரீ இராமனுஜ ஆச்சாரி யாரின் சிஷ்யர்களால் பரப்பப்பட்டது. வேதாகம நூல்கள் வாயிலாகவும் சிலப்பதிகாரம் தொல்காப்பியம் முதலிய பழந்தமிழ் காப்பியங்கள் மூலமாகவும் திருமாலின் வழிபாட்டுத் தொன்மை எடுத்தியம்பப்படுகிறது. பாரத இதிகாசங்களான ஸ்ரீராமாயணம், மகாபாரதம் முதலான நூல்கள் வாயிலாகவும் திருமாலின் திரு அவதாரங்கள் பற்றிப் பேசப்படுகின்றன. வைணவ வழிபாட்டிற்குரிய சிறந்த தலங்களை வைண மரபிற்கு ஏற்ப வைணவர்கள் திவ்விய தேசங்கள் என அழைப்பர்.

வடகலை சார்ந்த ஸ்ரீவேங்கடேசப் பெருமாளின் விக்கிரக அமைப்பு இவ்வாறு அமைந்திருக்கும் நான்கு கரங்களுடன் எழுந்தருளப்பெற்று இருப்பார் மேற்புற வலது கரத்தில் சக்கரத்தையும் மேற்புற இடது கரத்தில் சங்கையும் தரித்திருப்பார் கீழ்புற வலது பக்கக்கரம் அபயத்தைக் குறித்து நிற்கும் கீழ்ப்பக்க இடது கரம் தொடையை அணைத்து நிற்கும் இதை ஊருகஸ்தம் என்று அழைப்பர். இத்தன்மையுடைய மூகூர்த்தத்தை திருவேங்கடமாகிய திருப்பதி தேவஸ்தானத் திலும், இலங்கையில் யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்திலும், தெகிவளை விஷ்ணு ஆலயத்திலும் கண்டு தரிசிக்கலாம். தென்கலையைச் சார்ந்த ஸ்ரீவரதராஜப் பெருமாள் விக்கிரகத்தின் அமைப்பு இவ்வாறு அமைந்திருக்கும், நான்கு கரங்களுடன் எழுந்தருளப் பெற்றிருப்பார். மேற்புற வலது கரத்தில் சக்கரமும் இடது கரத்தில் சங்கும் கீழ்ப்புற வலது கரம் அபயத்தைக் குறித்து நிற்கும். கீழ்ப்புற இடது கரம் கதாயுதத்தை அணைத்து நிற்கும் இத்தன்மையுடைய முகூர்த்தத்தை ஸ்ரீவரதராஜப் பெருமாள் என்று அழைப்பர். இவர் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராகக் காட்சி அளிப்பர். இத்திருக் கோலத்தை காஞ்சி வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்திலும், இலங்கையில் யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்டேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்திலும், பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள தேவஸ்தானத்திலும் கண்டு தரிசிக்கலாம். இது தவிர்ந்த சயனத் திருக்கோலத்தில் ஸ்ரீரெங்கநாத சுவாமி ஸ்ரீதேவி, பூதேவி சமேதராய் தேவாலயத்தில் எழுந்தருளப் பெற்று பிரம்மனை நாபிக்கமலத்தில் தாங்கியுள்ளார். இவர் ஆதிஷேசனாகிய ஐந்து தலைகளையுடைய அரவின் மீது அறிதுயில் கொள்கின்றார். இவரது கமலத்திருப்பாதத்தின் அருகே ஸ்ரீதேவி ஆகிய ஸ்ரீமகாலட்சுமி வீற்றிருக்கிறார். இக்கோலத்தை அநேகமாக விஷ்ணு தலங்களில் பாரத நாட்டில் கண்டு சேவிக்கலாம். இவ்விக்கிரகங்கள் இரண்டுகரமுடையதாக அமையப் பெற்று வலது கரத்தை சிரசுடன் அணைத்து மேல் இடது கரத்தைத் தொடை மீது பதித்து கதாயுதத்தைப் பாம்பணை மீது சாத்தியுள்ளார். இச்சயனத் திருக்கோலக் காட்சியை ஸ்ரீரங்கம் ஸ்ரீரெங்கநாத சுவாமி தேவஸ்தானத்திலும், கேரளத்தில் திருவனந்தபுரம் ஸ்ரீபத்மநாப சுவாமி திருத்தலத்திலும் கண்டு தரிசிக்கலாம். இலங்கையில் யாழ்ப்பாணம் ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், ஊரெழுப் பிள்ளையார் கோயில் முதலிய தலங்களில் கண்டு தரிசிக்கலாம். வைணவர்கள் யாவரும் தமிழ்நாட்டிலுள்ள ஸ்ரீரங்க தலத்தைப் பூலோக வைகுண்டம் என்று மதிப்பிடுகின்றனர். இந்த சயனத் திருக்கோலத்தை

விப்பிர நாராயணர் என்ற தொண்டரடிப்பொடியாழ்வார் இவ்வாறு திருப்பாசுரம் மூலம் விளக்குகின்றார்.

"குடதிசை முடியை வைத்து குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டி தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத்துயிலு மாகண்டு
உடலெனக்குருகு மாலோ என்செய்கேன் உலகத்தீரே"
என்கிறார்.

பகவான் ஸ்ரீமந் நாராயணனது ஐவகை தத்துவ நிலைகளிலும் விபவம் என்று கூறப்படுவது அவதாரத்திருமேனிகள் எடுப்பதே ஆகும். ஸ்ரீமத் பாகவதம் பகவான் இருபத்திநான்கு அவதாரங்கள் எடுத்தார் என்றும் இவற்றில் பத்து அவதாரங்களே மிகவும் போற்றப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது. பதிணெண்புராணங்களில் நான்கு புராணங்கள் ஸ்ரீமந் நாராயணனது அவதாரங் களையும் லீலைகளைப் பற்றியும் எடுத்து இயம்புகின்றன. இவை நாரதபுராணம், கருடபுராணம், பாகவதபுராணம், விஷ்ணுபுராணம் ஆகும். வைஷ்ணவத்தில் அவதாரங்களின் தன்மை பெரிதும் போற்றப்படுகின்றன. அவதாரங்களின் நோக்க மாவது. "தர்மம் குன்றி அதர்மம் மோலோங்கும் போது பகவான் அவதரித்து துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வதற்கு யுகங்கள் தோறும் தோன்றுவேன்" என்று ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா கீதையில் கூறயுள்ளார். பத்து (தச) அவதாரங்கள் ஆவன மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, ஸ்ரீராம, பலராம, கிருஷ்ண, கல்கி என்பனவாகும்.

## மச்ச அவதாரம்

மச்ச அவதாரம் (மீன் உருவத்தோற்றம்) ஒரு சமயம் அகந்தை கொண்ட அசுரனாகிய ஹயக்கீரீவன் பிரமதேவனது படைத்தல் தொழிலுக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் அவர் வசம் இருந்த சதுர்வேதங்களைக் கவர்ந்து சென்று, ஆழ்கடலில் ஒளித்து வைத்துவிட்டான். இவனது செயலைக் கண்ணுற்ற பிரமன், இதை ஸ்ரீமந் நாராயணனிடம் முறையிட்டார். இந்த அதர்மச் செயலைத் தடுக்கும் பொருட்டு பகவான் மச்ச அவதாரமாகி மீன்வடிவம் எடுத்துச் சென்று ஹயக்கீரிவனை வதம் செய்து சமுத்திரத்தடியில் ஒளித்து வைக்கப்பட்ட நான்கு வேதங்களையும் பிரமனிடம் ஒப்படைத்தார். இதுவே பகவான் எடுத்த முதல் அவதாரம் ஆகும். இச்செயல் விபவம் என்ற வரிசையில் ஆவேசம் எனும் ஒழுங்கிற்கு அமைவானதாகும்.

## கூர்ம அவதாரம்

(ஆமை உருவத் தோற்றம்)

ஒருசமயம் ஸ்ரீமகாலக்சுமி இந்திரலோகத்தை விட்டு நீங்கி திருப்பாற்கடலின் அடியில் மறைந்து கொண்டாள். காரணம் இந்திரன் துர்வாசமுனிவர் வழங்கிய

திவ்விய மாலையைப் பணிவன்புடன் ஏற்காது அகந்தை உருக்கொண்டு அங்குசத்தி னால் ஏற்று யானைக்குச் சூட்டினான். யானை இதனை தனது காலில் இட்டு துவம்சம் செய்தது. இதனைக்கண்ணுற்ற துர்வாசர் மிகவும் சினம கொண்டு இந்திரனுக்குச் சாபம் இட்டார். இதனால் இந்திரலோகத்தைவிட்டு இலட்சுமி நீங்கினாள். அப்பொழுது தேவர்களும் அசுரர்களும் பாற் கடலைக் கடைந்து அமிர்தம் பெறும்பொருட்டு ஸ்ரீமந் நாராயணனைத்துதிசெய்தனர். இவர்களுடைய பிரார்த்தனையை ஏற்ற பகவான் மந்திர மலையை மத்தாகவும் வாசுகி என்னும் அரவை நாணாகவும் அமைத்து திருப்பாற்கடலைக் கடைய அனுமதித்தார். இச்சமயம் மந்திரமலை கடலுள் அமிழ்த்தொடங்கியது. இதனைக் கண்ணுற்ற பகவான் கூர்ம அவதாரமாகிய ஆமையின் வடிவமெடுத்து வந்து மந்திரமலையை தழாது இருக்க தனது முதுகில் தாங்கி நின்றார். பின்பு அமிர்தத்தை தேவர்கள் பெற்ற பொழுது ஸ்ரீமகாலட்சுமியும் திருப்பாற் கடலின் அடியினின்று தோன்றினார். பகவான் ஸ்ரீமகாலட்சுமியை தனது தேவியாக ஏற்று பாதத்தின் அருகே ஆதிஷேசன் மீது வீற்றிருக்கும் வண்ணம் பணித்தார். இதுவே இரண்டாவது அவதாரமாகிய கூர்ம அவதாரம் என அழைக்கப்படுகிறது. இதுவும் அவதாரத்தில் ஆவேச தத்துவங்களைச் சார்ந்ததாகும்.

## வராக அவதாரம்

(பன்றி உருவத் தோற்றம்)

ஒரு சமயம் அசுரனாகிய இரண்ணியாக்ஷன் தான்பெற்ற வரத்தின் பயனைப் பெறுதற்பொருட்டு மமதைகொண்டு பூமிரக்ஷகன் ஆகிய பகவான் ஸ்ரீமந் நாராயணனுடைய பெரும் சக்தியை அறியாது பூமியை எடுத்தச்சென்று பாதாள உலகில் மறைத்துவிட்டான். மறைத்து வைக்கப்பட்டிருந்த பூமியை மேலே கொண்டு வந்து அசுரனைக் கொன்று ஒழித்தார். இதனால், பகவான் பூவராகமூர்த்தி என்ற பெயரைப் பெற்றார். இது பகவான் எடுத்த மூன்றாவது அவதாரமாகும். தென்னிந் தியாவில் இவருக்கு எனகோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது பகவான் பூமியை மீட்ட மூன்றாவது அவதாரமாகும். இதுவும் அவதாரத்தில் ஆவேசதத்துவத்தைச் சார்ந்ததாகும்.

## நரசிம்ம அவதாரம்

(மனித உருவத்தோற்றம் பாதி விலங்கு உருவத்தோற்றம் பாதி)

தவவலிமையால் தருக்கடைந்த இரணியன் தன் நிலையை மறந்து பகவான் ஸ்ரீமந் நாரயணனது நாமத்தை உச்சரித்து வணங்காது தன் பெயரை உச்சரித்து தன்னை வணங்குவது அவசியம் என தனது பிரஜைகளுக்கு ஆணைப்பிறப்பித் தான். இவனது ஆணவத்தை அடக்குவதற்குபகவான் இவனுக்கு பிரகலாதன் என்ற புத்திரனை வழங்கி அவன் வாயிலாக ஓம் நாராயணாயநம என்னும் நாமத்தை நிதமும் உச்சரிக்கச் செய்தார். இதன் பயனாகச் சினமுற்ற இரணியன் பிரகலாதனுக்கு சொல்லொணாத் துன்பங்களை அளித்து இவனைக் கொல்ல

முயன்றபோது பகவான் தூணில் நின்று நரசிம்ம அவதாரமாகத் தோன்றி இவன் பெற்ற வரத்திற்கேற்ப அந்தி மயங்கும் வேளையில் இரணியனைத் தூக்கிவந்து மாளிகை வாயிற்படியில் வைத்து வதம் செய்கின்றார். இரணியன் பெற்ற வரமாவது தேவராலோ, மனிதர்களாலோ, விலங்குகளாலோ அல்லது பஞ்ச பூதங்களின் தூண்டுதலினாலோ அல்லது மாளிகையின் உட்புறத்தோ அல்லது வெளிப்புறத் தோதனக்கு மரணம் சம்பவிக்கக்கூடாது என்பது இவனது கோரிக்கையாகும். பகவானது சித்தம் இவனது கோரிக்கையை விட விஞ்சியதாகும். இதனால், இவர் பறப்பனவோ, ஊர்வனவோ, விலங்கோ, மனிதனோ, தேவனோ அல்லாத நரசிம்ம உருவைத்தாங்கி வந்து இரணியனை வதம் செய்தார் இது பகவானது நான்காவது அவதாரமாகும். இதனால், போலும் பெரியழ்வார் இவ்வாறு பாசுரம் மூலம் பாடுகிறார்.

"அந்தியம் போழ்தில் அரியுருவாகி அரியை
அழித்தவனை பந்தனை தீரப் பல்லாண்டு
பல்லாயிரத்து ஆண்டு என்று பாடுமினே"

இந்த அவதாரமும் ஆவேச தத்துவத்தை உணர்த்திநிற்கின்றது. இவ் அவதார மூர்த்திக்கு தென்னகத்தில் திருக்கோயில்கள் உள்ளன.

## வாமன அவதாரம்

(குறளன் திருவுருவத் தோற்றம்)

இரணியனது வம்சத்தில் உதித்த மகாபலிச் சக்கரவர்த்தி பிரகலாதனது பேரப்பிள்ளையாவான். அசுர குணம் படைத்தவனாயினும் சிறிது காலம் பிரகலாதனது அடிச்சுவட்டைப் பின்பற்றி நீதிதவறாது இராஜ்ஜிய பரிபாலனம் செய்தான். பின்பு சில காலம் தவ அனுஷ்டானத்தை மேற்க்கொண்டு சில வரங்களைப் பெற்று, இந்திரலோகம் முதலான மூவுலகையும் பரிபாலிப்பதற்காக அஸ்வமேதயாகம் செய்வதற்கான ஆயத்தங்களை மேற்க்கொண்டான். இந் நிலையில், தேவர்கள் தெய்வேந்திரனது தலைமையில் சென்று பிரமதேவனை அணுகித் தமது இன்னல்களைப் போக்கித் தேவலோக வாழ்வைத் தந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். நான்முகனும் தான் மகா பலிக்கு அளித்த வரத்தை மீண்டும் பெறத்தன்னால் இயலாது.

இதன்பொருட்டு ஸ்ரீமந்நாரயணனை இவரது தலைமையில் சென்று பிரார்த்தித்தனர். பகவான் இதன்பொருட்டு வாமன அவதாரம் எடுத்து பிரமச்சரியம் அனுஷ்டித்துக் குறளன் வடிவில் மகாபலியின் யாகசாலையை நோக்கிச் சென்று அங்கு மகாபலியைக் கண்டு, அவனது பாட்டானாகிய பிரகலாதனது குணவி ஷேசத்தைக் கூறி, தான் தவம் இயற்றுவதற்கு தனது திருவடியால் மூன்று அடி நிலம் தரும் வண்ணம் கோரினர். பகவானது தேஜஸ் பொருந்திய உருவைக் கண்ட மாத்திரத்தே மகாபலி இவரது கோரிக்கையை ஏற்று மூவடி நிலம்

தருவதாக வாக்குறுதி செய்து, இதனைத் தத்தம் செய்து வழங்க மகாபலி முனைந்தபொழுது, அசுர குருவாகிய சுக்கிராச்சாரியார் இச்செயலைத் தடுப்பதற்காக வண்டு உருவில் கெண்டி நீரில் நின்று நீர் வரும் வாயிலை மறைத்துக்கொண்டார். இதனை அறிந்த ராஜகுரு விஸ்வமித்திரர் தர்ப்பையினால் வண்டின் கண்களைக் குத்தின மாத்திரத்தே - மகாபலி கெண்டிநீர் கொண்டு தத்தம் செய்து கொடுத்தான். உடனே பகவான் திரிவிக்கிரமன் உருவில் விஸ்வரூபம் எடுத்து ஒரு பாதச்சுவடியால் நிலம் முழுவதையும் அளந்தார். மறுபாதச்சுவடியால் விண்முழுவதையும் அளந்தார். மூன்றாவது பாதச்சுவடியை எங்கே வைப்பது என வினாவிய பொழுது மகாபலி தனது சிரசைக் காட்டினான். இவனது சென்னிமிசைப் பாதம் பதித்து இதைப் பூர்த்திசெய்து இவனது தருக்கை அடக்கினார். இது பகவான் எடுத்த ஐந்தாவது அவதாரமாகும். திருமங்கையாழ் வார் மூவடிமண் கொண்டமையை திருப்பாசுரம் மூலம் இவ்வாறு விளம்புகின்றார்.

"முன்னம் குறளுருவாய் மூவடிமண் கொண்டளந்த
மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன்."

என்கிறார்.

## பரசுராம அவதாரம்

(கோடரியை உடைய திருவுருவம்)

கோடரியை ஆயுதமாகத் தோளில் ஏந்தியவர் ஜமதக்கினி முனிவரின் அருந்தவப் புதல்வராக அவதாரம் செய்தவர். கார்த்தவீரிய அர்ச்சுனனாகிய அசுர அரசன் ஒரு சமயம் ஜமதக்கினி முனிவரது ஆச்சிரமத்திற்கு வருகை தந்தான். இவனுக்கும் இவனது படைவீரர்களுக்கும் உணவளித்தற் பொருட்டு, முனிவரின் வேண்டு தற்கிணங்க காமதேனுப்பசு பூவுலகிற்கு வந்தது. இப்பசுவின் அரும்பெரும் சேவையைக் கண்ணுற்ற காத்தவீரியன், இப்பசுவை தனது அரச சேவைக்குப் பயன்படுத்த எண்ணி, முனிவரிடம் இப்பசுவை தமக்கு வழங்கும்படி பணித்தான். முனிவர் இக்கோரிக்கைக்கு இணங்காமை கண்டு ஆத்திரமுற்ற அவன் தனது சூழ்ச்சியால் இவரைக்கொன்று தனது வஞ்சத்தைத் தீர்த்தான். இவனின்தகாத செயலைஅறிந்த பரசுராமர் வெகுண்டெழுந்து காத்தவீரிய அர்ச்சுனனது அரச பரம்பரையையும், அநீதி கொடுமை உணர்வு நிறைந்த அரச பரம்பரையினரையும் அழித்து, நீதியை நிலைநாட்டும் பொருட்டு, சபதம் ஏற்று கோடரியை தோளில் தாங்கிய வண்ணம் பாரதம் எங்கணும் நாடோடியாகச் சுற்றித்திரிந்து, அரச சமுதாயத்தினரைத் தமது கோடரிக்கு இரையாக்கி தமது சபதத்தை நிறைவேற்றிய பின், கேரளநாட்டில் தமக்கென ஒரு அரசை நிறுவிய பின் அமைதியுற்றனர். இது பகவான் எடுத்த ஆறாவது அவதாரமாகும். இதுவும் ஐந்து நிலைகளில் ஒன்றாகிய விபவம் என்ற தத்துவத்தை உணர்த்தும் நிலையில் அமைந்துள்ளது.

## ஸ்ரீராம அவதாரம்

இது பூரண அவதாரமாகவும். இந்த அவதாரத்தில் கோதண்டம் என்னும் வில்லுடன் ஸ்ரீராமர் தோன்றுகின்றார். இது மிகுந்த கருணை வடிவான அவதாரம், நீதி வழுவாத தர்மம் தளைத்தோங்கிய அவதாரம், ஏகபத்தினி விரதம் பூண்ட, மனிதப் பண்பு நிறைந்த பூரண அவதாரம் ஆகும். இது தந்தை சொல்மிக்கதோர் மந்திரமில்லை என்ற வாக்கிற்கிணங்க பதின்நான்கு ஆண்டுகள் வனவாசம் மேற்கொண்டு வாழ்ந்தநிலையில் பிறமனை தீண்டிய இலங்கை வேந்தன் இராவணனுடைய காம உணர்வை போர்முனையில் ஒழித்து, விபீஷணனுக்கு இலங்கை அரசை ஈந்த அவதாரம் ஆகும். தனது இல்லத்தரசியாகிய சீதாதேவியைக் கவர்ந்து சென்று அசோகவனத்தில் சிறை வைத்திருந்த இராவணனுடைய ஈனச்செயலையும் மன்னித்து, யுத்தக்களத்தில் நிராயுதபாணி யாக நின்ற இவனது நிலை கண்டு இரக்கம் பூண்டு "இன்று போய் நாளை வா" என்று இயம்பிய கருணை வடிவுடைய தெய்வ அவதாரமாகும். சுக்கிரீவனது நிலைகண்டு மனநெகிழ்வுற்று வலிமை படைத்த வாலியை எழு மராமரங்களைத் துளைத்து வதம்செய்து சுக்கிரீவன் ஆகிய வானரத்திற்கு அரசு ஈந்த அவதாரம். இது பகவானது ஏழாவது அவதாரமாகும். இதுவும் விபவம் என்னும் அவதாரக் கோட்பாட்டிற்கு அமைவானதாகும். இந்த அவதாரம் பூவுலகில் அரச வம்சத்தில் சக்கரவர்த்தி திருமகனாகத் தோன்றி முழுமையான மனித வாழ்வை ஏற்று நன்மை, தீமைகளை அனுபவித்து நீதி வழுவா நெறி முறையில் நின்று தர்மச் செயலை நிலைநாட்டிய கருணை வடிவாகும். ஆகையால், இதனை பூர்ண அவதாரம் என்று அழைப்பர். இதனை குலசேகர ஆழ்வார் தனது பாசுரத்தில் இவ்வாறு விளம்புகின்றார்.

"வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த்தோன்றி
செங்கண்நெடுங்கருமுகிலை இராமன் தன்னை
திருச்சித்திர கூடந்தனுள் எங்கள் தனிமுதல்வனை" என்கிறார்.

## பலராமஅவதாரம

(உழவர் ஏர்க்காலை தோளில் தாங்கிய உருவத்தோற்றம்)

இந்தப் பலராம அவதாரம் ஸ்ரீகிருஷ்ண அவதாரத்துடன் இணைந்த அவதாரமாகும். ஸ்ரீகிருஷ்ண அவதாரத்திற்கு உறுதுணைபுரிந்த அவதாரமாகும். ஸ்ரீகண்ண பரமாத்மா தனது அவதார நோக்கை நிறைவேற்றும் பொழுது காலநேமி என்ற அசுரனது துவாரகை நகரின் முற்றுகையை முறியடித்தற் பொருட்டு முசுகுந்தன் உறங்கிய குகையினுள் அஞ்ஞாத வாசம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தருணத்தில் கோபிகாஸ்திரிகள் ஸ்ரீ கிருஷ்ணனது தரிசனம் காண தவித்து இவன் மீது வேதனை கொண்டு தங்களை இவன் அலட்சியம் செய்வதாகக் கருதி காழ்ப்புணர்வு கொண்டனர். இதனை அறிந்த பலராமர் ஸ்ரீகிருஷ்ணனது தூதுவனாக கோபிகாஸ்திரிகளை அணுகி இவனது நிலையை எடுத்தியம்பி

இவர்கட்கும் ஸ்ரீகண்ணனுக்கும் இடையே ஏற்பட்ட பிரிவினை நீக்கி நட்புணர்வை மீண்டும் வளம் பெறச்செய்தனர். இக்காலத்து ஸ்ரீகிருஷ்ணர் காலநேமியை உறங்கும் நிலையில் இருந்த முசுகுந்தனுடன் பொருதவைத்து அவனை குகையினுள் வதம் செய்தனர். இதன்பின் பலராமர் காலநேமியின்படைப் பலத்தை துவசம் செய்து துவாரகையின் முற்றுகையை நீக்கினர். பகவான் நாராயணனது பணிப்புரைக்கேற்ப ஆதிஷேசன் விபவத்தில் மூன்றாவது வகைக்கோட் பாட்டின் அம்சம் ஆகிய தத்துவத்திற்கேற்ப எடுத்த அவதாரமாகும். இது பகவானது எட்டாவது அவதாரமாகும்.

## ஸ்ரீகிருஷ்ண அவதாரம.

(புல்லாங்குழலை இசைத்தவண்ணம் பசுவுடன் நிற்கும் உருவத்தோற்றம்)

ஸ்ரீகிருஷ்ண அவதாரத்தையும் வைஷ்ணவர்கள் பூர்ண அவதாரம் என்று அழைப்பர். ஸ்ரீமத்பாகவத புராணம் ஸ்ரீகண்ணனுடைய லீலைகள் பலவற்றையும் எடுத்தியம்புகின்றது. ஸ்ரீகிருஷ்ணனே பாரதப் போரின் சூத்திரதாரியாவான். குருஷேத்திர யுத்தகளத்தில் அர்ச்சுனன் பந்து, மித்திரர்களைப் பார்த்த மாத்திரத்தே இவர்களைக் கொல்லவா இங்கு வந்துற்றேன் என்று திகைத்து நின்ற நிலையில் ஸ்ரீகண்ணன் இவனுக்கு கீதையை உபதேசித்து உலக இயல்புத் தன்மையை விளக்கிக்கூறி பூபாரம் தீர்க்க வந்ததன்மீது முழுப்பொறுப்பை யும் அர்ப்பணித்து விட்டு பாரத யுத்தத்தை தொடரும் வண்ணம் பணிப்புரை விடுக்கின்றார். தனது அவதாரத்தன்மையை விளக்கின்றார். பாரதயுத்தம் துஷ்டநிக்கிரக சிஸ்ட பரிபாலனம் செய்வதற்கு தாம் அவதரித்ததாகக் கூறுகின்றார். இது பகவான் ஸ்ரீமந்நாராயணனது ஒன்பதாவது அவதாரம் ஆகும். இந்த அவதாரத்தை இந்துக்கள் யாவரும் போற்றி வழிபாடு செய்கின்றனர். இவ் அவதாரத்தில் ஸ்ரீ கண்ணன் குழந்தை வடிவில் செய்த அற்புதங்கள் பலவாகும். சிலவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிடக்கூடியதாய் உள்ளது. அவை யசோதைக்குத்தான் ஞாலமுண்ட காட்சியைக் காட்டியது, பசுமந்தையை மேய்த்த கண்ணன் ஒரு சமயம் யாதவரையும் பசுக்களையும் காத்தற்பொருட்டு கோவர்த்தன கிரிகையை பெயர்த்து எடுத்து தனது கைகளில் ஏந்தப்பெற்று குடையாக உபயோகித்துக் காத்தமை, மரமாய் நின்ற நளகூபரது சாபத்தை நீக்க உரலுடன் கட்டுண்டு நின்று தாமோதரன் என்ற நாமம் பெற்று உரலை உருட்டிச்சென்று இம்மரங்களில் மோதி சாபவிமோசனம் வழங்கியமை தனது மாமனாகிய கம்சனது ஆணையை ஏற்று நச்சு முலையூட்ட வந்த அரக்கியின் முலையுண்டு அவளை வதம் செய்தமை, ஹம்சனுடைய கொடிய செயலை அகற்றி அவனை வதம் செய்தமை. துரியோதனனுக்கு தனது படையை வழங்கி தான் யுத்தத்தில் பங்குபற்றாது அர்ச்சுனனுக்கு தேர்ச்சாரதியாகி பார்த்தனுக்கு மெய்க்காவலனாக அமைந்து பாண்டவரது சபதத்தை வெற்றிபெறச்செய்தமை. விஸ்வரூப தரிசனத்தை அர்ச்சுனனுக்கு வழங்கப் பெற்றமை. சகாதேவனது பக்திக்கு கட்டுண்டு நின்றமை. கொடைவள்ளலாகிய கர்ணனுக்கு தரிசனம் வழங்கி மோட்சத்தை ஈந்தமை. ஸ்ரீகிருஷ்ணன் தனது அவதாரத்தில் நன்மை பயக்கும் லீலைகள் பலவற்றைச்

செய்தார். மக்களது நலன்கருதி தீயோரை அழித்து நல்லோரைக் காத்தருளினார். பாண்டவர்களுக்கு தூதுசென்று பாரதப்போர் முடித்தார். கீதையை உபதேசித்து மதிநலனத்தினால் மாதவன் ஆபத்பாந்தவன் என்ற நாமம் பெற்றார். இதனால் இவரை மாயோனாகவும் மதியூகியாகவும் மாதெய்வமாகவும் மாந்தர் கருதி இவரது அவதாரத்தை பூர்ண அவதாரம் என்று அழைக்கின்றனர். இது பகவான் ஸ்ரீமந்நாராயணன் எடுத்த ஒன்பதாவது அவதாரமாகும் இது விபவத்தின் மூன்றுவகைகளில் அவதார வரிசையில் மனித உருவில் அவதரித்து மக்கள் சமுதாயத்தின் மத்தியில் வாழ்ந்து அவ தார நோக்கை நிறைவுறச்செய்த பூரண அவதாரமாகும். இவ்வவதார மூர்த்திக்கு பாரதத்தில் வடபகுதி, தென்பகுதி அது மாத்திரமன்றி இக்காலத்தில் உலகின் பல நாடுகளிலும் ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கே கோயில்கள் பல அமையப்பெற்றுள்ளன.

## கல்கி அவதாரம்

(வெள்ளைக்குதிரை மீது வாளேந்திய திருவுருக்கோலம்)

இந்த அவதாரம் கலியுக முடிவில் தோன்றப்பெறும் என வைஷ்ணவ புராணங்கள் கூறுகின்றன. இவ்வவதார நிகழ்வு இன்னும் இப்பூவுலகில் நிகழ வில்லை. பகவான் ஸ்ரீமந்நாராயணனது அவதாரங்களும் அதனுடன் சம்பந்தமான புவியியல் தன்மைகளும் பகவான் எடுத்த திவ்விய அவதாரங்களின் தன்மையை புராணங்களின் வாயிலாக அறிந்துணர்ந்தோம். இது போன்று புவியியல் தன்மை யையும் இவற்றுடன் ஒப்பிட்டு ஆராய்வுசெய்த அறிஞரின் கருத்தையும் அறிவது அறிவாகும். பகவான் எடுத்த திருஅவதாரங்களில் மிகவும் போற்றி வைஷ்ண வர்களால் வழிபடும் அவதாரங்கள் பத்து ஆகும். இவற்றின் பரிணாமக் கோட்பாட் டின் தன்மையையும் புவியியல் தன்மையையும் ஒப்பிட்டு நோக்குமிடத்து இவ்வுலகில் முதற்கண் தோன்றியது நீரேயாகும் எனப் புவியியல் இயம்புகின்றது. இவ்வுலகிலுள்ள நிலப்பரப்புக்கள் யாவும் சமுத்திரங்களால் சூழப்பட்டுள்ளன. இந்தநீர்ப்பரப்பில் தோன்றிய முதன்மையான ஜீவராசி அல்லது உயிரினம் மச்சமேயாகும். இப்புவியியல் தன்மையுடன் ஒப்புநோக்கும்போது பகவான் எடுத்த முதல் அவதாரமும் மச்சமேயாகும். பகவானது இரண்டாவது அவதாரமாகிய கூர்மமாகிய ஆமையின் இயல்பை நோக்குங்கால் இந்த உயிரினம் நீரிலும் நிலத்திலும் வாழும் தன்மையுடையது. இதை புவியியற்தன்மையுடன் ஒப்புநோக்கும்பொழுது உலகில் தோன்றிய இரண்டாவது ஜீவராசி கூர்மமே (ஆமை)யாகும் எனக் கருதப்படுகின்றது. பகவான் எடுத்த மூன்றாவது அவதாரம் வராகம் என்னும் பன்றி உருவாகும். இந்த ஜீவராசி நிலத்தில் வாழும் தன்மையுடையது. இந்த விலங்கினம் ஒரு தாவரபட்சினி நிலத்தில் உண்டாகும் கிழங்குவகைகளைத் தனது கோரப்பற்களால் அகழ்ந்து எடுத்து உண்ணும் தன்மையுடையது. இந்த அவதாரமும் புவியியல் தன்மையுடன் ஒத்ததாக அமைந்துள்ளது. இது நிலத்தில் மாத்திரம் வாழ அருகதையுள்ள விலங்கின் வர்க்கத்தைச்சார்ந்த மூன்றாவது உயிரினமாகும்.

பகவான் எடுத்த நான்காவது அவதாரம் நரசிம்ம அவதாரமாகும். இந்த

அவதாரம் பாதி மனித உருவத்தையும், பாதி விலங்குருவையும் உணர்த்து கின்றது. இதனை புவியியற்தன்மையுடன் ஒப்பிடும்போது மனிதன் விலங்கி லிருந்து தோன்றியவன் என்பதையும் ஆதிமனிதனின் உணவுப்பழக்கம் இவ்வாறு அமைந்திருந்தது. நிலத்தில் தோன்றிய கிழங்கு வகைகளையும், கற்கால மனிதன் கற்களின் உதவிகொண்டு சிறிய விலங்குகளையும் வேட்டையாடி சிங்கமாகிய விலங்குபோல் வாழ்ந்தான் என்பதை இவ்வவதாரம் விளக்குகின்றது. இதுவும் புவியியற் தன்மைக்கு ஒத்த அவதாரமாக அமைகின்றது. இது பாதி மனிதன் பாதி விலங்கின் தன்மையை சித்திரிக்கின்றது.

பகவான் எடுத்த ஐந்தாவது அவதாரம் வாமன அவதாரமாகும். இக்குறளன் வடிவு அவதார பண்பாட்டில் தன் முதல் அடியை எடுத்துவைத்து உலகை அளந்த தன்மையை உணர்த்தும் அவதாரமாக அமைகின்றது. இதனை புவியியற் தன்மையுடன் ஒப்புநோக்குங்கால் இது மனிதன் விலங்கியற் தன்மையிலிருந்து நீங்கி மனித நாகரிகத்தை வளர்க்க முதற்பாதசுவட்டை பதித்த முதல் மனிதப்பருவம் ஆகும். இது புவியியற் தன்மையுடன் ஒத்த அவதாரமாகும். இது மனித வளர்ச்சியின் முதற்படிவத்தை குறிக்கின்றது.

பகவான் எடுத்த ஆறாவது அவதாரம் பரசுராம அவதாரமாகும். கோடரியைத் தோளில் ஏந்திய உருவமாகும். அவதார நோக்கில் தனது சபதத்தை நிறைவேற்ற ஊர் ஊராகத் திரிந்து அவதாரக்கோட்பாட்டை நிறை வேற்றிய பின்பு ஓர் இடத்தில் அமைதி பெற்றமையை உணர்த்தும் அவதாரமாகும். இதனுடைய புவியியற் தன்மையை ஒப்பிட்டு நோக்குங்கால் தன்னையும் தனது செல்வமாகிய பசுமந்தையையும் காக்கும்பொருட்டு ஊர்ஊராகச்சென்று திரிந்தமை இது நாடோடி வாழ்க்கை என வரலாறும் புவியியலும் இயம்புகின்றன. புவியியற் தன்யுடன் ஒத்ததாக இது அமைகின்றது.

பகவான் எடுத்த ஏழாவது அவதாரம் ஸ்ரீராம அவதாரமாகும். இது கையில் வில்லை ஏந்திய உருவமாகும். இதனுடைய அவதார நோக்கம் அரசற்கு அரசனாகிய சக்கரவர்த்தி தசரதனின் திருமகனாக ஸ்ரீராம என்னும் நாமம் சூடப்பெற்று சத்தியத்தின் முதல்வனாகவும், விழுமிய ஒழுக்கம் நிறைந்த ஏகபத்தினி விரதனாகவும் கருணையின் திவ்விய வடிவம் கொண்டு நீதிவழுவாத் தெய்வத் திருமகனாக வாழ்ந்து துஷ்ட நிக்கிரகம் செய்து இராச்சிய பாரம் ஏற்ற அவதாரமாகும். இந்த அவதாரத்தின் தன்மையுடன் புவியியற்தன்மையை ஒப்புநோக்கும்கால் பண்டைய உலகில் மக்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர். இக்கூட்டங்களைக் காப்பதற்கும் இயக்குவதற்கும் தலைவர்கள் தோன்றினர். இத்தலைவர்கள் ஒன்றிணைந்து தங்களது மக்களையும் உடைமைகளையும் கொடிய விலங்குக் கூட்டங்களினின்றும் பலம் பொருந்திய துஷ்டர் குழுக்களி லிருந்தும் காத்துக்கொள்வதற்காக தம்மிடையே பராக்கிரமத்துடன் கூடிய செல்வாக்குப்பெற்ற தலைமையிலும் ஆளுமையின்கீழும் அடங்கி தமது மனிதக் கூட்டங்களை வழிநடத்தினர். இச்சிறப்பு தன்மையும் இவ்வவதாரத்தின் தன்மையும் புவியியற்தன்மையுடன் ஒப்புநோக்குங்கால் குறுநில ஆட்சியை தோற்றுவித்து மக்கள் சமுதாயத்தை உருவாக்கி குறுநிலத் தலைவர்களின் ஆணைக்கு கட்டுப்பட்டு வாழத் தொடங்கினர் எனலாம். இது குறுநிலத் தலைவர்களின்

அதிபதி என்பதனை விளக்குகின்றது. இது புவியியற் தன்மையுடன் ஒத்து அமைகின்றது.

பகவான் எடுத்த எட்டாவது ஸ்ரீபலராம அவதாரம் ஆகும். இது தோள்களில் கலப்பையைத் தாங்கி நிற்கும் உருவமாகும். இந்த அவதார நோக்கம் மக்களின் இடர்களை நீக்கி வளம்பெறச் செய்தலாகும். இவ்வவதாரம் கையில் கலப்பையை ஏந்தியமை யாதெனில் மனிதன் உலகில் வாழ்வதற்கு உணவு அத்தியாவசிய மாகும். இந்த அவதாரம் உழவுத்தொழிலின் அவசியத்தை உணர்த்துகின்றது. இந்த அவதாரத் தன்மையுடன் புவியியற்தன்மையை ஒப்புநோக்குங்கால் கிராம வாழ்க்கையில் ஈடுபடும் மக்கள் சமுதாயம் தமது உணவுப் பிரச்சினையிலும் நிறைவு எய்த தரிசு நிலங்களை பயன்படுத்தி பயிர்த்தொழிலை விருத்தியடையச் செய்வது அவசியமாகின்றது. ஆகையால் இவ்வவதாரத்தன்மையும் புவியியற் தன்மையுடன் ஒற்றுமைப்படுகின்றது.

பகவான் எடுத்த ஒன்பதாவது அவதாரம் ஸ்ரீகிருஷ்ண அவதாரமாகும். புல்லாங்குழலை இசைத்து பசுக்களை மேய்த்த உருவத்தோற்றமாகும். இவ்வ வதாரத்தை நோக்குங்கால் ஒரு மதிநலம் வாய்ந்த தெய்வீகப்புருஷனாகத் திகழ்ந்து பாரதப்போரில் பங்குபெறாது நின்று இக்காலத்துதுடன் ஒப்பிடுகையில் அரசியற் சாணக்கிய மாமேதையாகத் திகழ்ந்த அவதாரமாகும். தனது அவதார நோக்கில் புவிபாரம் நீக்கும் தன்மையை மிக அழகுபடக் கீதை மூலம் அர்ச்சுனனுக்கு எடுத்தியம்பி பாரத யுத்தத்தில் ஈடுபடவைத்த சூத்திரதாரியாவார். கிருஷ்ணனின் இவ்வவதாரத்தன்மையை புவியியலுடன் ஒப்புநோக்கும்போது குறுநிலங்கள் பல ஒன்றுசேர்ந்து ஒரு நாடாகின்றது. இந்நாட்டைப் பல மன்னர்கள் ஆட்சி செய்தனர். பல நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு இராச்சியமே உருவானது. இப்பல நாடுகளைப் பல மன்னர்கள் ஆண்டனர். இந்நாடுகள் ஒரு சக்கர வர்த்தியின் ஆளுகையின் கீழ் அமைந்திருந்தன. இவருக்கும் மன்னர்கள் கப்பம் செலுத்தினர். அந்த சக்கரவர்த்தியிடம் பல லட்சம் போர்வீரர்கள் அடங்கிய யுத்தப்படைகள் இருந்தன. இந்த அரசர்கள் இடையே போட்டிபொறாமை வளரப்பெற்று சூதுவாதுகள் மூலம் பகைமையுற்ற நாடுகளைப் பிடிக்க போர் தொடுத்தனர். போர்வியூகமும் மதிநுட்பமும் படை வலிமையும் பெற்ற மன்னர் வெற்றிவாகைசூடினர். ஆகையால் இவ் அவதாரத்தின் தன்மையை புவியியற் தன்மையுடன் ஒப்பிடும்போது இதுவும் ஒற்றுமையாக அமைகின்றது.

பகவான் எடுத்த பத்தாவது அவதாரம் கல்கி அவதாரமாகும். இந்த அவ தாரம் இன்னும் தோன்றவில்லை. இது கலியுக முடிவில் தோன்றுமெனப் புராணம் வாயிலாக அறிகின்றோம். இந்த அவதாரத்தின் உருவம் கரத்தில் வாள் ஏந்தப்பெற்று வெள்ளைநிறக் குதிரையில் பகவான் தோன்றவிருக்கிறார். இந்த அவதாரத் தன்மையை புவியியற்தன்மையுடன் நோக்குங்கால் இது விஞ்ஞான உலகின் தன்மையை மக்களுக்கு எடுத்தியம்புகின்றது எனலாம். வாகனங்களின் இயக்கமும் இயந்திரங்களின் இயக்கமும் குதிரையின் வேகத்தையும் சக்தியையுமே குறிப்பதையே கண்ணூடாகக்காண்கின்றோம். ஆகையால் புவியியல் தன்மையுடன் ஒற்றுமையுடையது என்பதை எமக்கு உணர்த்துகின்றது ஆகையால் பகவான்

ஓம்
ஸ்ரீராமஜெயம்

இவ்வுலகில் எடுத்த அவதாரங்கள் யாவும் புவியியலுடன் ஒவ்வாதவை என ஒதுக்கிவிட இயலாதவையாகும். இப்புவியியல் உயிரினங்களின் இயக்கமும் மானிட வர்க்கத்தின் இயக்கமும் வளர்ச்சியும் அவதாரங்களின் நோக்கங்களை அடிப்படை ஆதாரங்களாக உடையன என்பதை உணர்த்துகின்றன.

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக் கண்டேன்
என்னாழி வண்ணன் பால் இன்று"

V.N.C *நாராயணசாமி*

*முன்னைநாள் தலைவர்*

*வண்ணை.ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.*





ஸ்ரீ சீதை, ஸ்ரீ ராம, ஸ்ரீ லக்ஷ்மண மூகூர்த்தங்கள் - பரிவார மூர்த்திகள்



ஆழ்வார்கள் - விக்கிரமங்கள்

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# இராமன் கண்ட அநுமான்

*க.சிவராமலிங்கம்*
*முன்னைநாள் பிரதி அதிபர்,*
*யாழ்.இந்துக்கல்லூரி.*

இராமன் கதை சங்ககாலம் தொடக்கம் தமிழ் மக்களிடையே பேசப்பட்டு வருகின்றது. பல இந்திய மொழிகளிலே இலக்கிய வடிவம் பெற்ற கதை இராமன் கதை. இவற்றுள் வான்மீகி தந்த கதை சமஸ்கிருத மொழியில் அமைந்து உலக அறிஞர்களின் உள்ளங்களில் இடம் பெற்றிருக்கின்றது.

காலம், தேசம், மொழி, சமயம் எனும் வரம்புகளைத் தாண்டிப் பயிலப்படுவதும் இக்கதையே. இந்த வரிசையிலே கம்பன் படைத்த இராம காதை கம்பராமாயணம் என்ற பெயர் தாங்கி தமிழ் தெரிந்தவர்கள் நாக்களிலே தவழ்ந்து தமிழ்த தேன் ஊற்றெடுக்க நிற்கின்றது. தமிழுக்கு கதி அதாவது வாழ்வு, வரம்பு, எல்லை எல்லாம் இரு நூல்களே என்பர். முன்னையது கம்பன், பின்னையது திருவள்ளுவர். தமிழர் தம் குறிக்கோள் இதுதான் என்று இவ்விரு நூல்களும் காட்டி வாழ்வை நல்லாத்துப் படுத்தவன. எனவே எமக்குக் கதி கம்பராமாயணமும், திருக்குறளும்தான் எனக் கொள்ளல் பொருத்தமே.

கம்பனின் கவித்தவத்தைப் புகழாத பின்வந்த தமிழ்ப் புலவர்கள் யாரும் இல்லை.

மாந்தருள் போற்றும் கவித்துவம் கம்பனுடையது.
பாத்திரப் படைப்பில் தன்னிகர் இல்லாத புலவன் கம்பன்.
இதற்குக் காரணம் பாத்திரப் படைப்பின்போது கம்பன் தானே பாத்திரமாகி விடுகின்றான்.

தானே அதுவுமாகி நிற்கும் கம்பனின் திறன் கம்பனிற்கே உரியதாகும். இரண்டே பாடல்களில் அறிமுகமாகும் நீலமாலை தொடக்கம் காப்பியத்தில் நீக்கமற நிறைந்து இருக்கும் காப்பிய நாயகன் இராமன் வரை ஒவ்வொன்றும் தன்னேரில்லாத படைப்புக்களே. (பரம்பொருளாம் இராமன் காப்பிய நாயகனாக ஏற்றுக்கொள்ளப்படலாமா? என்ற வினா ஒரு புறம்)

சிந்தனைக்குரிய இருவரில் அனுமன் குரங்கினத்தவன். இராமனைப் போலல்லாது கிட்கிந்தா காண்டத்திலே முதன்முதல் அறிமுகமாகின்றான். எனினும் புதுமை எதுவெனில் அறிமுகமான நேரத்திலிருந்து பாட்டுடைத் தலைவனாக நாம் கொள்ளும் பரம்பொருள் இராமனையும், கவிக்குல நாயகன் அனுமனையும் கூர்ந்து நோக்கில் ஒரு மயக்கமே ஏற்படுகின்றது.

அந்தளவுக்கு இராமனும் அனுமனும் ஒன்றாகி நிற்பதை உணரமுடிகிறது. அனுமன் தன் கூர்த்த மதியால் ஐம்புலனடக்கத்தால், அரசியல் ஞானத்தால் செதுக்கிய சொற்களால் சொல்ல நினைத்ததை கேட்பவன். தரமும் நிலையும் தெரிந்த சொல்லும் திறத்தால் பரம் பொருளாம் இராமனை முற்றும் கவர்ந்து,

அவன் வாயாலேயே "யார் இச்சொல்லின் செல்வன்" என்று வியக்க வைக்கின்றான்.

அனுமன் என்ற பாத்திரப்படைப்பை கம்பன் படைத்தது போல வேறு எந்தப் புலவனும், வேறு எந்த மொழியிலும் படைத்திருக்கிறானா ? இல்லை என்றுதான் சொல்லத் துணிகிறேன்.

இராமனின் அவதார நோக்கம் நிறைவுபெற பல பாத்திரங்கள் கூனி உட்பட உதவியபோதும், அனுமன் போல உதவியவர் யாரும் இல்லை என்றே கூறலாம். புலன் ஐந்தின் வலி அடக்கி நின்ற அனுமனின் பெருமையை பரம்பொருளாம் இராமனால் தானே அறிய முடியும்.

அனுமனுக்கு கம்பன் தரும் அடைமொழிகளைக் கொண்டும் அனுமன் பெருமையைத் தெரிந்து கொள்ளலாம். சில்கால் தருமமே தனித்துப்போம் தருமம் , அறம் என்ற சொற்களால் பரம்பொருளையே புலவர்கள் விழித்த இடங்கள் இலக்கியத்தில் இல்லாமலில்லை.

இந்திரசித்தனின் நாகபாணத்தால் இலக்குவன் உட்பட அனைவரும் சாய்ந்த போது, இராமனின் துன்பமும் தனிமையும் போக்க மந்திரமலையுடன் வந்த அனுமனை இராமன் நன்றிப்பெருக்கு கரைபுரண்டோட "தாங்கள் எல்லோரும் அனுமனின் மைந்தர்கள்" என்று கூறி அகமிக மகிழ்கிறான்.

"முன்னின் தோன்றினோம் முதையின் நீங்காது
என்னின் தோன்றிய துயரின் ஈதுசேர்
மன்னின் தோன்றினோம் முன்னம் மாண்டோம்
நின்னின் தோன்றினோம் நெறியில் தோன்றினாய"

தசரதன் பிள்ளைகளாகப் பிறந்த நாங்கள் இறந்து விட்டோம். இப்போது அறநெறி காக்கும் உன் கருணையால், செயலால் வாழ்கிறோம். எனவே இப்போது நாங்கள் உன் பிள்ளைகள் என்ற கருத்தை இராமபிரான் வெளிப்படுத்துகிறான் என்றால் "இறைவன் அடியார் உள்ளத்து ஒடுக்கம்" என்ற வழி அனுமனை இராமன் தன் தனித் தொண்டனாக ஏற்றான் - தருமத்தின் தனிமை தீர்த்தான் என்று இராமன் கண்டான் என்கிறான் கம்பன்.

இராமன் கண்ட அனுமனின் பெருமை சொற்பதம் கடந்தது. அனுமன் புகழ் பாட கம்பனே சொல்லற்று நிற்கின்றான். ஒரு இக்கட்டான நிலையில் இராவணனை நல்லாத்துப்படுத்தும் முயற்சியில் படுதோல்வி அடைந்த விபீடணன் இராமனைச் சரணடைகின்றான். அனலன் வாயிலாக கம்பன் "புகல் அவன் கழல் அடைந்து உய்யப் போந்தனன்" என்கின்றான் - பூரணசரணாகதி கூட இருந்து காப்பவன் நீலன், சுக்கிரீவன் உட்பட, அடைக்கலம் தரக்கூடாது என மறுக்கிறார்கள். அண்ணனைத் துறந்து வந்த அரக்கனை ஏற்கக்கூடாது இது எல்லோர் கருத்தும்.

அடைக்கலம் என்று வந்த ஒருவனை பரம்பொருள் இராகவன் எப்படி மறுப்பது? தன்னிற் பெரியவர் எல்லாம் பேசிய வாதங்களைக் கேட்டு மாருதி அயல் நிற்கின்றான். பரம்பொருள் இராமன் திருவுளத்து முடிவு இருந்தது. எனினும் மாருதி வழி மற்றவர் சிந்தை தெளிவிக்க நினைந்தான். அனுமனை" செறி பெருங் கேள்வியாய் விழித்து "நெறிதரு மாருதி என்றும் நேர்இலாஅறிவினை

நோக்கினார் கருத்து என் செப்பு" என்றான். அறிவின் மேலுளார்களாகிய இராமன் விரிக்கிற் பெருகும் அனுமன் பேசுகின்றான். "தேவர்க்கும், மூவர்க்கும் முடியாத ஒன்றை (இராவணவதத்தை) முடிக்க நிற்கும் நீ "அபயம்" என்றவனை ஏற்காது விட்டால் அது கிணற்று நீரை கடல் சந்தேகிப்பது போலஆகி விடாதா? கொற்றவேந்தே" என்கிறான். அறிஞர் சிரிக்க மாட்டாரா?

"ஆதலால் இவன் வரவு நல்வரவே" "உன் குறிப்பு அறியேன்" என்று நிறுத்தினான் பேரறிவாளனாம் மாருதி.

தன் புலனடக்கத்தால் தன்னை அறிந்து தனது தலைவனை அறியும் ஞானியரின் தரத்தவன் அனுமன். இராமபிரானின் திருவுளக் கருத்தை அறிந்து கொண்டே அனுமன் பேசுகின்றான்.

இதுவே மெய்யன்பின் திறம்.

"உன் திருவுளக் கருத்து எதுவோ அதுவே என் கருத்து" என்று பேரறிஞன் சகாதேவன் பேசியது நினைக்கத்தக்கது.

வள்ளல் இராகவனுக்கு கிடைத்தது ஒரு வாய்ப்பு. விடுவானா? " மாருதி உனது அமுதவாக்கு நன்று நன்று , பேரறிவாளா!" என்றான்.

இராமன் பரம்பொருள் மக்கள் துயர் துடைக்க "வானழிந்து மண் புகுந்த வள்ளல்" சிறந்த அரசியல் ஞானி.

அறத்தின் நாயகன் - காவலன் பேசுகிறான்

"மாருதி வடித்துச் சொன்ன வெத்தியே வெத்தி" அடைக்கலம் கொடுப்பதால் வெற்றியே பெறுக தோற்க வீசு இலாது வாழ்க!

இராமனைச் சுற்றியிருந்த அத்தனை பேரும் நிலையால் உலகில் அனுமனை விட மிகஉயர்ந்தவர்கள்.

ஆனால் அனுமன் தன்னடக்கத்தால், புலனடக்கத்தால், தொண்டால், அறிவால், மிக உயர்ந்தவன்.

எனவேதான் அயோத்தியிலும் அரியணை தாங்கும் பெரும் பொறுப்பு இராமனால் இவனுக்கு தரப்பட்டது.

கடவுளையே காக்கும் கடவுளாக அனுமன் நிலைபெற்றால் போதும், நிறைவாக இராமன் மகிழ்ந்து, இனிது நோக்கி "திண்தோளாய் பொருந்துநப் புல்க" என்று அணைத்து தானே ஆக்கி கடவுளர் பதம் தந்தனன்.

இராமன் கண்ட அனுமனின் மெய்யியல் நிலை சிந்தனைக்குரியது. அரன் இருந்த மலை எடுத்த அண்ணல் இராவணனுக்கு கோவில் இல்லை, இந்த இராவணேஸ்வரனை பத்துத்தலைப் பூச்சியாக்கிய மாவீரன் வாலிக்கு கோவில் இல்லை.

கார்மேகவண்ணன் கோவில் கொண்ட இடமெலாம் தானும் கோவில் கொண்டு பிரியானாகிக் கடவுளர் பதம் பெற்ற அனுமன் ஆராதனைக்குரியவனே!

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# கண்ணன் திருவடிகளில் அர்ஜுனன் மாலையானான்

மகாபாரதத்திலே குருஷேத்திர போர் முடிந்து, தர்மமானது அதர்மத்தை வென்றுவிட்டது. கௌரவர்கள் அனைவரையும் முழுமையாக அழித்து ஒழித்து பாண்டவர்களின் மூத்தோனாகிய தர்மர் உதிஷ்டிரன் தலைமையில் தர்மசாம் - ராஜ்ஜியம் ஸ்தாபிக்கும் நந்நாளும் பிறந்து விட்டது. சூரியன் அஸ்தமிக்கும் வேளை அவ்வேளையில் அந்தக்கால முறைப்படி வெற்றிபெற்ற மன்னர்கள் மகாரதர்கள் தங்கள் வீரத்திற்கு உரிய மரியாதை பெறும் சடங்குகள் நிகழவேண்டி இருந்தது அவரவர்களின் தேரோட்டிகள் இரதத்தின் நின்றும் இறங்கி வந்து இரதத்தை வலம் வந்து தரையில் மண்டியிட்டு நிற்க மகாரதர்களும் மன்னர்களும் தேரில் இருந்து இறங்கி வந்து தேரோட்டிகளின் மலர் மாலைகளை ஏற்று மக்கள் ஆரவாரம் செய்வதைக் கேட்டு மகிழ்ச்சி அடையும் நேரமது.

அந்த நேரத்தில் சூரிய பகவான் மறைந்து கொண்டிருக்க பஞ்சபாண்டவர்களின் ரதங்கள் வரிசையாக வந்து முறையே முதல் உயுதிஷ்டிரன், வீமன் அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர் தங்கள் தங்கள் இரதங்களில் வீரமுடன் வீற்றிருப்பது மிகவும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது தர்மத்தின் மாபெரும் வெற்றியைக் கொண்டாடும் பொருட்டு அஸ்தினாபுரத்தில் எஞ்சியோரும், இந்திரப்பிரஸ்தப் பிரஜைகளும் வந்து கூடிக் குழுமி நிற்கின்றனர். தங்கள் தலைவர்கள் பெறப்போகும் மாலை மரியாதைகளைக் கண்டுகளிக்க அனைத்து வீரர் கூட்டங்களும் காத்து நிற்கின்றார்கள். அப்பொழுது யுதிஷ்டிரரின் தேர்ப்பாகன் தேரினின்றும் இறங்கிவந்து தேரை வலம் வந்து மண்டியிட்டு மன்னன் யுதிஷ்டிரன் பாதங்களைப் பணிந்து நிற்கிறான். யுதிஷ்டிரன் கீழே இறங்கி வந்ததும் அவனுக்கு மலர்மாலை அணிவித்து "யுதிஷ்டர் வாழ்க" என்று குரல் எழுப்புகிறான். அதைத் தொடர்ந்து "வாழ்க வாழ்க" என்ற மக்களின் குரல் ஒலி வானைப் பிளந்து கொண்டு இருக்கின்றது.

அடுத்து இரண்டாவது முறையாக வீமனின் இரதம், வீமன் என்று சொன்னாலே எதிரிகள் எல்லோரும் நடுங்குவார்கள் அந்தளவிற்கு அவன் மிகவும் முக்கியமான வெற்றிகளுக்குக் காரணமாக இருந்தவன் மிகப் பெரிய வீரனல்லவா! உடலும் உயரமும் பருமனுடைய மலை போன்ற திடகாத்திரமானவனல்லவா! துரியோதனனின் தொடையை தன்னுடைய கதாயுதத்தினால் பிளந்தவனல்லவா பாஞ்சாலியின் சபதத்தை நிறைவேற்றியவனல்லவா நூற்றுவரின் மூத்தவனும் தலைவனுமான துரியோதனன் திரௌபதையின் துகிலுரியவும் திரௌபதையைத் தன்னுடைய தொடையின் மேல் கொண்டுவந்து இருத்தும்படி துச்சாதனன் திருஷ்டத்துய்மன் என்ற இருதம்பியருக்கும் கட்டளை இட்டதும் அதன் காரணமாகத் திரௌபதை துரியோதனின் தொடையைப் பிளந்து அதன் இரத்தத்தைத் தன் கூந்தலில் தடவித்தான் கூந்தல் முடிவேன் என்றும் அது நிறைவேறாதவரைகூந்தல் முடியமாட்டேன் என்றும் சபதம் செய்து அன்றிலிருந்து தலைவிரி கோலமாகவே

இருந்தவள் அந்த நேரத்திலே பொங்கியெழுந்த வீமனைத் தர்மர் அமைதியாக இருக்கும் படி கூறி அமரவைத்தார் அதே நேரத்தில் வீமன் சீறியெழுந்து துரியோதன னின் தொடையைப்பிளந்து உதிரத்ததை எடுத்து தானே தருவேன் என்று திரௌபதைக்கு வாக்குறுதியளித்து சபையோர்முன் சபதத்தின் மேல் சபதம் செய்தான் அதன் படி பாஞ்சாலியின் சபதத்தையும் தன்னுடைய சபதத்தையும் ஒருங்கே நிறைவேற்றிய மாவீரன் என்பதால் மரியாதை சற்று அதிகமாகவே கிடைக்கின்றது கரகோஷங்களும், வாழ்த்தும் வாழ்த்துக்களும் எல்லா இடங்களுக் கும் பரவி ஒலித்துக்கொண்டு இருக்கிறது. மிகவும் விமரிசையாக வீமனின் மரியாதைச் சடங்கு நடந்து நிறைவேறுகின்றது.

அதனை அடுத்து மூன்றாவது முறையாகப் பாரதப் போரின் கதாநாயகன் ''வில்லுக்கு விஜயன்'' வில்வித்தையில் மாபெரும் முதலாவது வீரனான அர்ஜுனனின் முறையில் அவனின் ரதம் நிற்கிறது தேர்ப்பாகன் சர்வசாதாரணமானவனா? ''துவாரகாபுரி ஸ்ரீகிருஷ்னனல்லவா'' ஆகையினால் அர்ஜுனனுக்கு எவ்வளவு பெரிய மதிப்பும் மரியாதையும் இருக்கும் என்று கற்பனை பண்ணிப் பார்க்கமுடியாதல்லவா பாண்டவர்களும் பகவானின் அவதாரம் என்று போற்றிப்புகழ்ந்த புண்ணிய புருஷன் அல்லவா அர்ஜுனனின் தேரோட்டி பின் பெருமைக்கு என்ன குறை அர்ஜுனனுக்கு அனைத்துக் கௌரவமும் புகழும் அமைந்து அல்லவா இருக்கிறது.

எனவே யாருக்கும் கிடைக்காத பெரும்புகளும் பாக்கியமும் மதிப்பும் தனக்குக் கிடைக்கப்போவதை எண்ணி மனம் பூரித்தான் பீஷ்மர்,விதுரர்,துரோணர், பாண்டவர் களைச் சிறுவயதில் இருந்து வளர்த்தவர்கள் வில்வித்தைக் கற்றுக்கொடுத்தவர்கள், கல்விபயின்று கொடுத்தோர்கள், உடன்பிறப்புக்கள், அத்தனை பெரியவர்களையும், சேனைகளையும் கொன்று குவித்த காண்டீபத்தைக் கொண்ட வில் வீரன் என்ற படியால் அவனுக்கு தலைக்கனம் ஏறியது "துவாரகாபுரி ஸ்ரீகிருஷ்ணன்" தேரோட்டி என்றால் யாருக்குத்தான் தலைக்கனம் ஏறாது அவன் "கண்ணன்" யார் என்பதை அந்த ஒருசிறிய நேரத்துக்குள் மறந்துவிட்டான்.

போர் புரியவென்று புறப்பட்டு வந்த குருஷேத்திரத்திலே போர்களத்திலே நின்று கொண்டு எதிர்த்திசையை நோக்கிப்பார்த்த அர்ஜுனனுக்கு "பீஷ்மரையும், துரோண ரையும் விதுரரையும் கண்டவுடன் ஒருதிகைப்பு ஏற்பட்டது ஏனென்றால் தாய்தந்தையா போல் இருந்து வளர்த்த பீஷ்மர் ஒழுங்காக முறையே வில்வித்தைக் கற்றுக் கொடுத்து எல்லோரையும்விட அன்பும் பாசமும் காட்டி வில்லுக்கு விஜயன் என்ற முதன்மையான ஸ்தானத்தில் வைத்தவர் விதுரர் கல்வி கேள்விகளில் பாண்ட வர்களை மேலோங்கச் செய்து அனைத்தையும் காட்டிக்கொடுத்து பயின்று கொடுத்த பெரிய ஆசான் துரோணாச்சாரியார் ஆகிய மூவரையும் கண்டவுடன்
இவர்களையா நான் கொல்வதற்காகவா இங்கே வந்தேன் அப்படிப்பட்ட மகா பாவியா நான் என்ன பாவம் செய்தேன் இன்னும் பெரிய பாவத்தையல்லவா செய்யப் போகின்றேன் இந்தப்போர் வேண்டாம் நான் போர்புரியமாட்டேன் என்று கலங்கி நிற்கையிலே அவனுடைய அஸ்திரங்கள் கீழேவிழ காண்டீபத்தையும் நழுவவிட்டான்.

மரணத்தை எண்ணி கலங்கிடும் விஜயா
மரணத்தின் தன்மை சொல்வேன்

மானிடர் ஆன்மா மரணம் எய்தாது
மறுபடி பிறந்து இருக்கும்.

மேனியைக் கொல்வாய் நீ
அதன் மேனியைக் கொல்வாய்

அது மறுபடி பிறந்திருக்கும்
நீ விட்டு விட்டாலும்

அவர்கள் மேனி வெந்துதான்
தீரும் ஓர் நாள்

மன்னவர் பொருள்களைக் கைக்கொண்டு நீட்டுவார்
மற்றவர் எடுத்துக் கொள்வார்.

புண்ணியம் இதுவென்று உலகம் சொன்னால்
அந்தப்புண்ணியம் கண்ணனுக்கே

கண்ணனே சாற்றினான் கண்ணனே தூற்றினான்
கண்ணனே போற்றினான் கண்ணனே கொலை செய்கிறான்

கண்ணன் மனது கல் மனது என்றோ
காண்டீபம் நழுவ விட்டாய்
காண்டீபம் எழுக நின் கைவண்மை எழுக

துணிந்து நில் தர்மம் வாழ
இக்களம் எல்லாம் சிவக்க வாழ

யுகே யுகே யுகே

அர்ஜுனனானவன் அஞ்சி பதுங்கி நின்ற நிலையிலேயே "ஸ்ரீகிருஷ்ணன்" அவனைத் தேற்றி அவனுடைய மனதைமாற்றி விஜயா நீ அவர்களைக் கொல் லாமல் இரக்கம் காட்டினாலும் அவர்கள் அனைவரும் சேர்ந்து உன்னைக் கொல்லவே இங்கு வந்து உன் எதிரில் நிற்கிறார்கள் இன்னும் சிறிது நேரத்தில் உன்னைக் கொல்லப் போகிறார்கள் என்றான். உன்ஒருவனைக் கொல்வதற்காக எத்தனை பேர்கள் உன்எதிரில் வந்து நிற்கிறார்கள் என்று பார்த்தாயா? அவர்களுக்காகவா நீ இன்னும் இரங்குகின்றாய் அவர்கள் உன்னைக் கொல்வதற்கு முன் நீ ஒருவனாக நின்று அவர்கள் அனைவரையும் கொன்றொழிக்க வேண்டும் என்று மாயக்கிருஷ்ணன் புத்தி புகட்டினான் "அதுவே கீதோபதேசம்".

"கண்ணன் கூறுகின்றான்" அர்ஜுனா பாஞ்சாலி சபதம் போட்டுவிட்டு கூந்தல் முடியாமல் இருக்கிறாள் அது நிறைவேறவேண்டும் வீமன் சபதம் போட்டிருக்கிறான் அது நிறைவேற வேண்டும் அதன் பின்புதான் அவள் கூந்தல் முடிய வேண்டும் அண்ணன் தர்மனுக்கு தர்மராட்சியம் கிடைக்கவேண்டும். பாண்டவர்களின் சுய கௌரவம் காப்பாற்றப்படவேண்டும் அதர்மத்தை முற்றாக அழிக்கவேண்டும் தர்மத்தை நிலை நாட்ட வேண்டும் பூமாதேவியின் பாரத்தைக் குறைக்கவேண்டும் இப்பூவுலகைக் காக்க வேண்டும் ஆக உன்முன்னிலையில் நிற்பவர்கள் நல்லவர் களாக இருந்தாலும் சரி தீயவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் அழியவேண்டும் ஏனெனில் அவர்களுடைய அழிவு காலம் வந்துவிட்டது இன்னும் சில பொழுது கழிய அவர்கள் அனைவரும் உன் கையால் அழிவார்கள்.

அவர்களைக் கொல்வது நீயல்ல நான் தான் கொல்லப் போகின்றேன் அதற்கு நான் உன்னை ஒரு கருவியாக பாவிக்கிறேன் ஆகவே நீ கொல்லா விட்டாலும் அவர்களின் உடல் எப்பவோ ஒரு நாள் அழியத்தான் போகிறது அதையும் நானே செய்வேன் ஆகையினால் அவர்களைக் கொல்வதானால் உனக்கு ஒரு பாவமும் இல்லை அது எல்லாம் என்னையே தான் வந்தடையும் என்பதானால் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை நீ வந்த வேலையைச் செய் நான் சொல்வதை சரியாகச் செய் அவர்களைக் கொல்லவென்றே உன்னைப்படைத்திருக்கிறேன் அவர்கள் உன்கையாலேயே மடிய வேண்டியவர்கள் அவர்கள் மடியும் நேரம் வந்து விட்டதால் நான் இங்கு வந்திருக்கிறேன் உன்னைப் பயன்படுத்துகின்றேன் அவர்கள் செஞ்சோற்று கடன் தீர்க்கவே இங்கு வந்திருக்கிறார்கள் துரியோதனன் தகாத பாதையில் சென்று கொண்டிருந்த போது அவர்களால் அதைத்தடுத்து நிறுத்தமுடியவில்லை அவனுடைய சோற்றை உண்டபடியால் அந்தக் கடனைச் செய்ய வந்தவர்கள் அந்தக்கவலை உனக்கு வேண்டாம். அவர்கள் செத்து மடியும் பொழுது அவர்களின் உடம்பு மட்டும்தான் அழியும் ஆன்மா என்றும் அழியாது என்னிடமே மீண்டும் வந்தடையும் ஆத்மாவானது பரமாத்மாவிடம் வந்த பின்பு மீண்டும் பிறவி எடுக்கிறது. "இதுவே நியதி" இதற்கு யாரும் விதிவிலக்கல்ல இதுவே பிறப்பும் இறப்பும் என்பதாகும் பிரபஞ்சத்தின் இயற்கையும் இதுவே பிறவியின் சுற்று வட்டமும் இது தான் ஆன்மா பிறந்து இறந்து கொண்டே இருக்கும் அது அழிவில்லாதது எனக்குள்ளேயே அனைத்தும் அடங்கும் என்று அர்ஜுனனை விழித்தெழ வைத்த கண்ணன் நான் இனி என் காரியத்தைச் செய்யப் போகிறேன் நீ உன் கடமையைச் செய் அதர்மத்தை அழித்து தர்மத்தைக் காக்கப்போகிறேன் நீ பயப்படாமல் காண்டீபத்தை மீண்டும் கையில் எடுத்துக் கொள் என்று இந்த அற்புதமான "கீதோபதேசம்" செய்த அண்ணல் பகவான் ஸ்ரீகிருஷ்ணனை அப்போது தன்னுடைய தேர்ப்பாகனாகவே ஒரு குறைந்த தரத்தில் உள்ள தேரோட்டியாகவே மிகச் சிறிய தேரோட்டியாகவே மட்டுமே அவன் எண்ணினான் ஒரு கணம் தன்னறிவு மழுங்கி ஆணவம் மேலிட நின்றான் கண்ணன் தனது உற்ற நண்பன் பாண்டவர்களின் தூதுவன் மகாபாரதப் போரை வழி நடத்தி முடிக்க வந்திருக்கிறான் என்பதை அர்ஜுனனால் உணரவே முடியவில்லை.

கண்ணன் தேரை விட்டு கீழே இறங்குவான் என்று அர்ஜுனன் எதிர்பார்த்தான் ஆனால் கண்ணன் இறங்கவில்லை அர்ஜுனன் திகைத்தான் எங்கும் ஒரே பரபரப்பும் மனக்கிலேசமும் வியப்பும் நிலவுகிறது பார்ப்பவர்கள் மனதில் இனி என்ன நடக்கப் போகிறதோ என்று எதிர்பார்த்த வண்ணமாக நோக்குகின்றார்கள் அர்ஜுனன் ஒரு கணம் பொறுத்தான் அவனின் அறியாமை அவனுள்ளே பேசியது கடமையைச் செய்பயனை எதிர்பாராதே என்று எனக்கு உபதேசித்த கண்ணன் இப்போது தான் மட்டும் தேர்ப்பாகனுக்குரிய கர்மத்தைச் செய்யாமல் விதி விலக்குப் பெற நினைக்கிறானே என்று அவன் சிந்தித்தான் மாயக்கண்ணனின் ஆழமான அறிவையும் அவன் அன்பையும் எடை போடமுடியாத விஜயன் தேரில் வந்து கீதை சொன்ன கண்ணனை யாராலும் அறிய முடியுமா? ஒருகணம் திகைப்பு மறுகணம் அர்ஜுனா உடனடியாக நீ தேரினின்று முதலில் இறங்கிவிடு என்ற ஆணை கண்ணனிடம் இருந்து பிறந்தது இந்தத் தேர் ஒரு விதிவிலக்கு என்றான் கண்ணன்.

கண்ணனும் அர்ஜுனனும் உடலும் உயிரும் போல் என்றுமே ஒருவரை ஒருவர்விட்டு இணைபிரியாத உற்ற ஆருயிர் நண்பர்கள் அல்லவா கண்ணனின் ஆணையை என்றுமே எதிலுமே மீறி அறியாதவன் அர்ஜுனன் ஆகவே கண்ணன் கூறுவதில் ஏதோ அர்த்தம் உள்ளது என்று எண்ணி தேரில் இருந்து காலடி எடுத்து வைத்து இறங்கி நடக்காமல் தேரினின்று குதித்தே விட்டான் ஒரு இமைப்பொழுதைக்கூட அப்பொழுது தாமதிக்கக் கூடாதுதென்று அப்படிக் குதித்தான்.

கண்ணன் ஏதும் அறியாதவன் போல தேரிநின்றும் சிரித்தபடி மெதுவாக சாதாரணமாக இறங்கி வந்தான் பகவான் கண்ணனின் இரு பாதங்களும் நிலத்தில் பதிந்தது அவ்வளவு தான் அர்ஜுனனின் தேர் திடீரெனத் தீப்பற்றி வானளாவி எரிய ஆரம்பித்தது பார்த்தோர் அனைவர் முகத்திலும் ஒரே பேரதிர்ச்சி அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் கூறுகிறான் அர்ஜுனா உனது எதிரிகள் உன் ரதத்தின் மீது ஏவிய மந்திர சக்திகள் அனைத்தும் நான் அத்தேரில் அமர்ந்திருந்த காரணத்தினால் எதுவிதமான செயற்பாடுகளுமின்றி பலனற்று இருந்தன உன்தேரின் முடிவு காலத்தைத் தெரிந்து கொண்டுதான் உன்னை முதலில் இறங்கும்படி கூறினேன் நான் முதலில் இறங்கியிருந்தால் இந்தத் தீயினின்றும் உன்னைக் காப்பாற்ற வேண்டிய நிலமை ஏற்பட்டிருக்கும் எனவே இப்பொழுதும் உன்னைக் காப்பாற்றவே நான் சம்பிரதாயச் சடங்குகளை மீறினேன் அது தவிர வேறு எதற்குமல்ல தேரோட்டியின் உரியகடமையைச் செய்யத்தயங்கியதாலுமல்ல என்று கூறி சற்று நில் விஜயா உன்னை வலம்வந்து உனக்கு மாலை இடுகிறேன் என்று கூறினான் கண்ணன். இதைக் கேட்டதும் ஆணவம் அனைத்தும் அழிந்த நிலையில் அர்ஜுனன் தன்னையே ஒரு மலர்மாலையாக்கி கண்ணனின் திருவடிகளில் தன்னைச் சமர்ப்பித்துக் கொண்டான்.

*இராஜாசண்முகநாதன்*
*மணற்றறை ஒழுங்கை*
*கந்தர்மடம்.*



ஸ்ரீ ராமாநுஜ ஆச்சாரியார்



ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ ரெங்கநாத சுவாமி சந்நிதி சுதைவிக்கிரகங்கள்

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# தொண்டுக்காக வாழ்ந்த ஆழ்வார்

இறைவனைப் பணிந்து தொண்டு செய்யும் அடியவர்கள் பலர் இருக்கிறார்கள்.இறைவன் அடியாருக்குத் தொண்டு செய்யும். அவர்களை வணங்கும் சில அடியார்கள் இருந்து வருவதனாலேயே இறையடியார் குலமொன்று வாழையடி வாழையாக இருந்து வருகின்றது. சைவ சமயத்திலே ஆரூரிலே வீற்றிருக்கும் அம்மானுக்கு ஆளாகிய ஆரூரான் (சுந்தரமூர்த்தி சுவாமிகள்) தில்லை வாழ்ந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்றும் திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன் என்றும் கூறிய முறைதான் இறை வணக்கத் தோடு குருவணக்கத்தையும் உருவாக்கியது. வைணவ சமயத்திலே பகவத் கைங்காரியம் செய்தவராக தொண்டரடிப்பொடி ஆழ்வார் கருதப்பட்டார். இது பற்றி பி.ஸ்ரீ.ஆச்சாரியார் பின்வருமாறு கூறுகிறார்

"அரங்கன் திருமுற்றத்திலே பரம பக்தர்களும்
யோகிகளுமான தொண்டர்களைச் சாதி வேற்றுமை
கருதாது தெய்வ சாமனராகக் கருதி அளவளாவிய
நிலை. அவர்களோடு ஆடிப்பாடிக் கலந்து தொண்டாற்றிய நிலை....."

இந்த வகையிலே தொண்டருக்குத் தொண்டனான தொண்டரடிப்பொடி பற்றிச் சிறிது விரிவாக நோக்கலாம்.

சோழ தேசத்திலே (தஞ்சாவூர் பிரதேசத்திலுள்ள) மண்டங்குடி என்ற ஊரைச் சேர்ந்த விப்ரநாராயணர் என்னும் வைஷ்ணவ அடியார் தம்முடைய ஊரை விட்டு வந்து திருவரங்கத்தையே உறைவிடமாகக் கொண்டு அரங்கநாதனுக்கு நந்தவனப் பணி செய்திருந்தார். நந்தவனத்திலே இவர் செய்த திருமாலைத் தொண்டு அல்லது துளவத் தொண்டு, தேவதேவி என்னும் பெண்ணுக்காக மேற்கொண்ட காதல் தொண்டு, வாடாத மாலைகளாகச் சொற்களாலே தொடுத்த திருமாலைத் தொண்டு, திருப்பள்ளியெழுச்சித் தொண்டு என்பன விப்பரநாராயணரை தொண்டராக மட்டுமன்றி தொண்டரடிப்பொடி ஆகவும் ஆக்கி விட்டன. "நந்தவனத் தொண்டனாக உள்ள என்னை உன் அடியாருக்கு அடியானாக ஆட்படுத்தி விடு" என்று திருவரங்கப் பெருமானிடம் கேட்பதை,

"............சூழ்புனல் அரங்கா!
தொடை ஒத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்டர் அடிப்பொடி என்னும்
அடியனை அளியனென் றருளி.உன் அடியாருக்கு
ஆட்படுத்தாய். பள்ளி எழுந்தருளாயே"

என்று அவருடைய திருப்பள்ளியெழுச்சி நிறைவுப் பாடல் கூறுகின்றது. இவ்வாறு அடியரான தொண்டரடிப் பொடியின் நிலை பற்றி அவருக்குப் பிற்காலத்திலே தோன்றிய குலசேகர ஆழ்வார்,

ஓம்
ஸ்ரீராமஜெயம்

"ஆடிப்பாடி அரங்க!ஓ! என்று
அழைக்கும் தொண்டர் அடிப்பொடி
ஆட நாம் பெறில்கங்கை நீர் குடைந்து
ஆடும் வேட்கை என் ஆவதே"

என்று பாடுகிறார். தேவதேவி என்னும் பெண்ணிலே வைத்த உண்மையான அன்பினாலும் அவளுக்காகத் தன் பொருளையெல்லாம் இழந்தும், திருடன் என்ற பெயர் பெற்றும் துயரடைந்த விப்ரநாராயணர் நடந்தவற்றிற்கெல்லாம் கழிவிரக்கமடைந்து "திருந்திய உள்ளத்தோடும் வாழ்க்கையோடும் தமது நந்தவன கைங்காரியத்தைத் தொடர்ந்து செய்ததுடன், கைங்காரியப் பிரியர்களான பாகவதர்களின் குழு ஒன்றினையும் அமைத்துக்கொண்டார். பேராசையின்மையும் தியானமும் சீலமும் சாந்தமும் துவேஷமின்மையும் சம நோக்கும் உடையவர்களான தொண்டர்களின் அடிப்பொடியே கங்கா ஸ்நானத்தைக் காட்டிலும் பரிசுத்தமானது என்ற முடிவிற்கு வந்தார். இத்தகைய திருக்கூட்டம் ஸ்ரீரங்கநாதனுடைய சந்நிதியில் கூடுவது உண்டு" என்பதையும் அதில் தொண்டரடிப்பொடி தலைமை தாங்கினார் என்பதையும் குலசேகரருடைய பாசுரம் புலப்படுத்துகிறது.

தொண்டுக்காக வாழ்பவர்கள் தம்முடைய தொண்டினை சுய விமரிசனம் செய்து கொள்வார்கள். பட்டர் என்னும் ஆச்சாரியார் பெருமாள் சந்நிதியிலே தற்சோதனை செய்து கொண்டு நின்றார். அங்கு நின்ற சிலர் அவர் மீது வசை கூறினர். ஏனைய பக்தர்கள் மனம் வாடினர். ஆனால் பட்டரோ தம்மை இகழ்ந்தவரை அழைத்துப் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தார். ஏனைய அடியவர்கள் திகைப்பும் வியப்புமடைந்தனர். "இவர்களுடைய வசைக்கு அஞ்சி இவற்றைக் கொடுத்தேன் என்று எண்ண வேண்டாம். நான் அறியாத குற்றங்களையும் பெருமாள் திருச்செவி சாத்தி, நமது தற்சோதனைக்கு உதவிய உதவிக்காகக் கொடுத்தேன்" என்று பட்டர் கூறினார். இத்தகைய சுயவிமர்சனத்தைத் தொண்டரடிப்பொடியாரும் செய்கின்றார். நந்தவனத் தொண்டு செய்து வந்த தொண்டரடிப்பொடி தேவதேவியிலே விருப்பங்கொண்டு துயரப்பட்டதையெல்லாம் நினைவிலே கொண்டு தான்,

"கள்ளத்தேன் நானும் தொண்டராய்த்
தொண்டுக்கே கோலம்பூ ண்டு
உள்ளுவார் உள்ளிற் றெல்லாம்
உடனிருந்து தறிதியென்று
வெள்கிப்போய் என்னுள்ளே நான்
விலவறச் சிரித்திட்டேன"

என்று அவர் பாடுகின்றார். தன்னுடைய தொண்டு மனதுக்குள்ளே இருந்த ஆசையினை இறைவன் உணர்ந்து கொண்டானே என எண்ணி வெட்கப்படுகின்றார். தொண்டனுள் எப்போதும் இறைவன் உடனிருப்பான் என்பதனாலே "துன்புறு வாரல்லர் தொண்டு செய்வாரே" என்ற சம்பந்தர் பாடலினூடாக அறிகிறோம்.

தொண்டுக் காதலிலே வெற்றி கண்ட தொண்டரடிப் பொடியார் பூமாலை புனைவதுடன் பாமாலையும் புனையலானார். அவர் பாடிய திருமாலை என்னும் பிரபந்தம் 45 பாசுரங்களைக் கொண்டது. திருமாலை என்பதற்கு 'அழகிய மாலை', புனித மாலை', 'திருமாலைப் பாடிய மாலை' என்றெல்லாம் பொருள் கொள்ளலாம்.

இம்மாலை கூறுவதென்ன? பல கூறுகின்றது. சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன். இறைவனின் நாமம் கற்றலால் வரும் பயன் என்ன?

குலம் தரும்: செல்வம் தந்திடும்
அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும்: நீள் விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும்
பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலத்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயண என்னும் நாமம்.

என்று "நாராயணா" என்னும் நாமம் எவ்வளவு நலன்களையெல்லாம் தருகிறது என திருமங்கையாழ்வார் பாடுகிறார். ஆனால் தொண்ரடிப்பொடியாழ்வாரோ இறைவன் நாமம் கற்றலால் வரும் பயனை,

காவலிற் புலனை வைத்துக் கலிதன்னை கடக்கப் பாய்ந்து
நாவலிட்டுழிதர்கின்றோம் நமன்தமர் தலைகள் மீதே
மூவுலக குண்டுமிழ்ந்த முதல்வ! நின்நாமம் கற்ற
ஆவலிப் புடைமை கண்டா யரங்கமா நகருளானே.

'காவலில் புலனை' என்பது காவலில்லாத புலன்கள் என்று பொருள் கொள்வர். எப்புலன்கள் எம்மை அலைக்கின்றனவோ இறைநாமம் கற்ற படியால் அவை அடக்கப்பட்டு எத்தனையோ வியத்தகு செயற்பாடுகளுக்கு உதவுகின்றன. அழகிய மணவாளப் பெருமானை இப்பாசுரங்களுடாக கண்டுகளிப்படைகின்றார்.

> "சுரும்பமர் சோலை சூழ்ந்த
> அரங்கமா கோயில் கொண்ட
> கரும்பினைக் கண்டுகொண்டு என்
> கண் இணை களிக்குமாறே"

அழகன் இனிப்பாகவே இருக்கிறான். 'அரங்கமே கோயில் கொண்ட கரும்பு' என்று கூறும் ஆழ்வார் அந்தக் கரும்பினைக் கண்ணாலேயே சுவைக்கலாம் என்பதைக் 'கரும்பினைக் கண்டு கொண்டு' என்று கூறுகின்றார். அழகிய மணவாளப் பெருமானின் பெருமையான, வியப்பான, பேரழகான தோற்றத்தினை,

ஓம்
ஸ்ரீராமஜெயம்

"பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே"

என்னும் பாசுரத்தாலே புலப்படுத்துகிறார். தொண்டு பற்றியே எண்ணுகின்ற ஆழ்வார் தன்னலமற்ற சோம்பரில்லாத தொண்டினை எல்லோருக்கும் உணர்த்த முற்படுகிறார். அது மாத்திரமின்றி தன்னுடைய தொண்டினையும் சுயவிமரிசனம் செய்து கொள்கிறார். வடநாட்டு இராமாயணங்களிலே காணப்படாத ஒரு கதை சேதுபந்தனம் அமைப்பதற்கு அணில்கள் தம் பங்களிப்பினைச் செய்தமையாகும். இக்கதையினை தொண்டரடிப்பொடியாழ்வாரே முதன் முதல் தமிழிலே குறிப்பிடுகிறார். இராமன் இலங்கை செல்வதற்கு அணைகட்டத் தொடங்கியதும் குரங்குகள் மலைகளையெல்லாம் தள்ளிக்கொண்டு வந்து கடலினைத் தூர்க்கின்றன. இக்குரங்குகளெல்லாம் இராமனுடைய ஆணைப்படி செய்கின்றன. ஆனால் அணில்களோ அவனுடைய கட்டளை எதுவுமல்லாமல் தம்பணி செய்கின்றன. இதுவல்லவோ உண்மையான தொண்டு, என்னுடைய தொண்டு இதற்கு ஈடாகுமா என்று ஆழ்வார் தன்னையே சுயவிமரிசனம் செய்வதாக,

குரங்குகள் மலையை நூக்க
குளித்துத்தாம் புரண்ட டோடித்
தரங்கநீர் அடைக்கலுற்ற
சலமிலா அணிலும் போலேன்.

கள்ளங்கபடமற்ற தொண்டுக்காதல் எப்படிப்பட்டது என்பதை உணரவைக்கிறார் ஆழ்வார்.

திருமாலையிலுள்ள ஒவ்வொரு பாசுரமும் தொண்ரடிப்பொடியாழ்வாரின் ஆட்டமசைவற்ற இறுக்கமான பத்தியினைப் புலப்படுத்தி நிற்கின்றன. அரங்க மாநகரப் பெருமானின் அழகிய கோலத்தினைப் புனைந்து காட்டுகிறார். அவனுடைய அருட்செயல்களை அழகான சொற்களூடாகப் புலப்படுத்துகிறார். தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பள்ளியெழுச்சி உலகத்தவரை இருளினின்று ஒளிக்குக் கொண்டுவருவதாயுள்ளது. ஆழ்வாருடைய திருக்கைங்கரியத்தை உணர்த்துகிறது. ஆழ்வார் இறைவன் முன்னாலே வந்து நின்றார். பெருமான் கண் திறந்து பார்க்கவில்லை. பதறுகிறார் ஆழ்வார்.

"கடல் நிறக் கடவுள் எந்தை
அரவணைத்துயிலுமா கண்டு
உடல் எனக்கு உருகுமாலோ
என் செய்கேன் உலகத்தீரே"

என்று திகைக்கின்றார். எனவே "பெருமானே பள்ளியெழு" என்று வேண்டுகிறார். திருப்பாவையிலே ஆண்டாள் எல்லோரையும் துயில் எழுப்பிய பின்னரே "நப்பின்னைப் பிராட்டி உன் மணவாளனைத் துயிலெழுப்பு" என்று வேண்டுகிறாள். இங்கும், தேவருலகம் துயிலெழுந்து இறைவனுடைய திருப்பார்வை தம்மேல் படவேண்டுமென வந்து வரிசையிலே நிற்கின்றார்கள். இப்படி இவர்கள் எல்லாம் வந்து நிற்க, இறைவனைத் துயில் எழுப்புவதிலே என்ன தாமதம். ஆழ்வாரே போய் இறைவனிடம்,

"கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனவிரு ளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலி லலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத் தம்மா பள்ளி யெழுந்தருளாயே"

என்று "சூரியன் உதித்து விட்டான். உலகப்பௌதிக இருள் அகன்று விட்டது. காலை நேரமாகிவிட்டது காலத்துடன் வாழும் எங்களுக்குக் காலையாகி விட்டது. காலமின்றி இருக்கும் இறைவா உனக்கு எங்கள் காலத்தை உணர்த்து கிறேன். வானவர்கள்,அரசர்கள் எல்லோரும் வந்து நிற்கின்றனர். அலை கடல் போலே பேரொலி கேட்கின்றது. இந்த பேரொலியினிடையே எப்படி உனக்கு துயில் வருகின்றது. அறிதுயில் கொள்ளும் பெருமானே நாங்கள் அறிவுபெறத் துயில் வருகின்றது. அறுதுயில் கொள்ளும் பெருமானே நாங்கள் அறிவுபெறத் துயில் எழ வேண்டும்" எனக் கேட்கிறார். காலை நேரத்தின் அற்புதமான காட்சிகளையெல்லாம் 'ஆழ்வார் தன்னுடைய திருப்பள்ளியெழுச்சிப் பாசுரங்களிலே வெளிக்கொணருகிறார்.

தொண்டுக் குலமே தொழுகுலம் என்பதைத் தன் வாழ்வினாலும் பாசுரங்களினாலும் எடுத்துக் காட்டியவர் தொண்டரடிப்பொடியாழ்வார். பெருமாளுடைய பணியிலேயே மனமுருகி ஈடுபட வைக்க அவருடைய பாசுரங்கள் வழிகாட்டுகின்றன.

*பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்*
*தலைவர், தமிழ்த்துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

ஓம்
ஸ்ரீராமஜெயம்



# கோதையின் கோல விளக்கு



*கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ்*
*திட்டப்பணிப்பாளர்,*
*வைச வித்தியாவிருத்திச்சங்கம்.*

## ஆண்டாள் அறிமுகம்

பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் கோதை எனப் பெயர்பெற்ற பாவை நாலாயிரம் என்னும் அருந்தொகுப்பிலே அமைந்துள்ள திருப்பாவை. நாச்சியார் திருமொழி என்னும் பாடல்களைக் பாடிய தெய்வ மகள், புதுவை ஆண்டாள் எனவும் போற்றப்படுபவள் இன்னிசையால் பன்னு திருப்பாவை பாடிக்கொடுத்தவள். பாமாலையோடு பூமாலையும் சூடிக்கொடுத்தமையால் சூடிக்கொடுத்தசுடர்கொடி என்ற காரணப் பெயரையும் பெற்றவள் தான் வாழ்ந்த காலத்து வழிபாட்டைப் பாடல்களிலே பதிவு செய்து தந்தாள். இந்த அருள்நங்கையை ஒரு பாடல் அழகாக அறிமுகம் செய்கிறது.

> **அன்ன வயற்புதுவை யாண்டாள் அரங்கற்குப்**
> **பன்னு திருப்பாவைப் பல்பதியம் இன்னிசையால்**
> **பாடிக்கொடுத்தாள்நற் பாமாலை பூ மாலை**
> **சூ டிக் கொடுத்தாளைச் சொல்.**

ஆண்டாள் அரங்கன் அழகையும் அருள்நிறத்தையும் அனைவரும் காணப் பணி செய்தாள். அவளுடைய பக்திப்பணி இன்று வரையும் தொடர்கிறது. வழிபாடு என்னும் மனித வாழ்வுக்கான சொல் நெறியைக் காட்டியவள். இருண்டு கிடந்த வாழ்வுச் சூழலை பக்தி என்னும் கோல விளக்கேற்றி ஒளிமயமாக்கியவள். வீடு தொடங்கி ஊர்களுடாக நாடு வரை அந்த விளக்கு ஒளிதந்து நின்றது. மனத்தின் துன்ப இருளை அகற்ற ஆண்டாள் ஏற்றிய கோலவிளக்கு அணையாத அகல்விளக்காக நிற்கிறது. அந்த விளக்கை அவள் ஏற்ற வழிகாட்டியவர்கள் முதலாழ்வார்கள் ஒளி விளக்கேற்றும் முறைமையையும் அதன் ஒளியிலே இறைவனைக் கண்ணாரக்காணும் தன்மையையும் அவர்கள் காட்டினார்கள். பொய்கையாழ்வார் வையம் தகளியாக வார்கடலே நெய்யாக ஊற்றி வெய்ய கதிரோன் என்னும் உலகோர் காணும் ஒரு விளக்கை ஏற்றினார். அந்த விளக்கின் அடிப்பாகத்தைச் சுற்றிய சொல்மாலைகள், இடர்களையும் என்று காட்டினார். இது பலரும் காணும் பாரியதொ ந புற விளக்கு. பூதத்தாழ்வார் அன்பே தகளியாக ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தையை இடுகின்ற திரியாக்கி ஒரு ஞானச்சுடர்

விளக்கை ஏற்றினார். இது பக்திவயமாகி ஏற்றும் அகல்விளக்கு. இந்த இரு விளக்குகளின் ஒளியிலே அரங்கனைக் கண்டு வணங்கிப்பாடியவர் பேயாழ்வார் ஆண்டாள் ஏற்றிய கோலவிளக்கு வழிபாட்டின் முறைமைகளைக் காட்டுகின்றது ஒளி விளக்கை ஏற்றி பூமாலையால் விளக்கின் அடித்தளத்தை அணி செய்து பாமாலை சூடிப் பரவசமாகி நிற்கும் நிலைதான் மனதை நிறைவிக்கும். இருளகன்று போக ஒளியில் தெரியும் இறைவன் கோல அழகு கண்டு மெய்சிலிர்த்து கண்களில் நீர்வடிய நிற்கும் நிலை அவன் கருணையில் உருகிக்கரையும் மனித உருவம். இந்த பக்தி அனுபவத்தைப்பெற்ற ஆண்டாள் அதனைப் பிறரும் பெறுவதற்கு வழிகாட்டப் பல கோல விளக்குகளை ஏற்றி வைத்தாள். காலம் பல கடந்தாலும் அந்த விளக்குகள் அணையா விளக்குகளாய் நின்று ஒளி காட்டுகின்றன.

ஆண்டாள் பாடிய திருப்பாவை இந்தக் கோலவிளக்கின் அமைப்பை நன்கு விளக்குகிறது. பெரியாழ்வாரின் வளர்ப்பு நெறி ஆண்டாளைப் பக்தி நெறியில் செல்லப் பயிற்சி அளித்தது. தாயின் வளர்ப்பு நெறிக்கு மாறுபட்ட தந்தையின் வளர்ப்பு நெறி ஒன்று ஆண்டாளின் வரலாறு ஊடாக எமக்குத் தெரிகின்றது. பெரியாழ்வார் பெற்ற மகளாக அன்றி வளர்ப்பு மகளாக செல்ல மகளாக ஆண்டாள் விளங்குகின்றாள். பெரியாழ்வார் ஆண்டாளை வளர்க்கும் போது ஏற்பட்ட நேரடி அனுபவத்தையே கண்ணனைக் குழந்தையாகப் பாவனை செய்து பாடும் போது வெளிப்படுத்தியுள்ளார். பெரியாழ்வாரின் வழிபாட்டு முறை ஆண்டாளைப் பெரிதும் கவர்ந்தது. கண்ணனுக்கென அவர் கட்டிவைத்த பூமாலையைச் சூட்டி மாலையின் நேர்த்தியைச் சூட்டியிருக்கும் நிலையில் காண அவள் விழைந்தாள். அந்த மாலையைத் தானே சூடிக் கண்ணாடியில் அதனைப்பார்த்து தந்தையின் கைவினை நுட்பத்தை அறிந்து கொண்டாள். அந்த நுட்பத்தை அடிப்படையாக வைத்துக் கண்ணனுக்குப் பாமாலை சூட்டினாள். அது அற்புதமான பக்திஅனுபவத்தை அதன் சீர்மையைக் காட்டியது. பெரியாழ்வார் தொடுத்த பல நிறப் பூக்கள் அவருடைய வண்ணத்தெரிவின் ஆற்றலைக்காட்டின. அதற்கும் மேலாக அதை சூடிநிற்கும் கண்ணனின் கோல அழகை மனதிலே காணும் பரவசத்தை உணர்த்தியது.

கண்ணனுக்குத் தொடுத்த பூமாலைகள் ஆண்டாளின் உள்ளத்திலே ஒரு புதிய உணர்வைத் தூண்டின. பூமாலைகள் சூடிய கண்ணனின் அழகிய தோற்றம் அவளைக் கவர்ந்தது. அவனையே தனது கணவனாக வரித்துக்கொண்டு வாழ முற்பட்டாள். சிறு வயது முதல் கண்ணனின் கோல அழகு கண்டு அவன் மீது காதல் கொண்ட கோதை அவனையே அடைய வேண்டி நோன்பு நோற்றாள். பெரியாழ்வாரும் கண்ணன் மீது பக்தி கொண்டு வழிபாடு செய்தார். எனவே கோதையின் வீட்டுச் சூழல் வழிபாட்டு நடைமுறைகளைப் பேணும் இடமாயிருந்தது. பெரியாழ்வார் கண்ணனுக்குச் செய்து வந்த பூமாலை சாற்றும் தொண்டுப்பணி அவர் வளர்ப்பு மகளான கோதையையும் கவர்ந்தது. அவள் கண்ணன் மீது கொண்ட ஈடுபாடு வளர்ந்து காதலாய் மலர்ந்தது. கோதையின் காதலை பெரியாழ்வாரே தாயாகி நின்று வருமாறு கூறுகின்றார்.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

" காறை பூ ணுங் கண்ணாடி காணும் தன் கையில் வளைகுலுங்கும்
கூறையுடுக்கும் ஆயர்க்கும் தன் கொவ்வைச் செவ்வாய் திருத்தும்
தேறித்தேறி நின்றாயிரம் பேர்த் தேவன் திறம் பிதற்றும்
மாறின் மாமணி வண்ணன் மேல் இவள் மாலுறுகின்றாளே"
(பெரியா:திருமொ3.8.8)

இத்தகைய கோதையின் மானுட நிலையினை பெரியாழ்வார் எடுத்துக் கூறும் போது அவளுடைய இளமைப் பண்பை அறியமுடிகின்றது வளர்ப்பு மகளின் மனமறிந்த ஒரு தந்தையாகப் பெரியாழ்வார் தோன்றுகிறார். கண்ணன் மீது அவள் கொண்ட பக்திக்கு மேலாக கோதையின் காதல் அவரை மெய்சிலிர்க்க வைக்கிறது. அன்பு உள்ளம் கொண்ட தந்தையின் வளர்ப்பு கோதையை வழிபாட்டு நடைமுறைகளைப் பேணவேண்டும் என்ற விருப்புக்குள்ளாகிற்று. அந்த விருப்பினையே அவள் பாடிய திருப்பாவையிலே தரிசிக்க முடிகின்றது. வழிபாட்டின் தன்மைகளையும் நன்மைகளையும் பக்தி என்னும் கோல விளக்கேற்றி வைத்து ஆண்டாள் எமக்கு காட்டுகின்றாள். கோலவிளக்கின் ஒளிவீசும் திரிகளிலே அவள்காட்டிய பக்திக்கோலம் துல்லியமாகத் தெரிகிறது. அவை ஒவ்வொன்றும் தனித்தனியான விளக்குகளாகி பல வழிபாட்டு முறைகளைத் தெளிவாகக் காட்டுகின்றன.



ஓம்
ஸ்ரீராமஜெயம்

# காலத்தைக் காட்டும் கைவிளக்கு

ஆண்டாளின் திருப்பாவை விளக்கிலே ஒரு சுடர் காலத்தைக் காட்டும் கைவிளக்காக ஒளிவீசுகிறது. வழிபாடு செய்யவேண்டிய காலத்தைக் காட்டுகின்றது. வழிபாடு நடைமுறைகளைச் செய்வதற்கு உரிய காலத்தை முன்னோர் வகுத்து வைத்திருந்த முறைமையை ஆண்டாள் குறிப்பிட்டுக் கூறுகின்றாள்.

**"மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாளால்**
**நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்"** (திருப்பா:1)

ஓர் ஆண்டுக் காலத்தில் நடைபெற்ற வழிபாட்டு நடைமுறைகளைத் தான் வாழும் காலத்திலே செயற்பாட்டில் ஆண்டாள் செய்திருந்தாள் மார்கழி மாதத்திலே சிறப்பாகநோன்பு நோற்கப்பட்டது. அந்தநோன்பின் தொடக்க காலம் 'மதிநிறைந்த நன்னாள்' என்று வரையறை செய்யப்பட்டிருக்கின்றது. கீதை உபதேசம் செய்த கண்ணன் மாதங்களிலே நான் மார்கழி என்றான். வெப்பத்தின் கொடுமையற்ற குளிர்மையான காலம் மார்கழி யாதம். திங்களின் தோற்றத்தையும் வளர்ச்சியின் நிறைவையும் கொண்டு காலம் கணிக்கப்பட்டதால் 'மார்கழித்திங்கள்' என மார்கழிமாதத்தை ஆண்டாள் குறிப்பிட்டாள். காலத்தைக் குறிப்பிட்டபின்னர் ஒரு நாளின் தொடக்கத்தை உணர்த்தி நோன்புக்கான முன்னோடிச் செயற்பாடுகளை உரைக்கின்றாள். நோன்பு மேற்கொள்ளும் பெண்களுக்கு ஆண்டாள் கைவிளக்கில் காலம் மட்டுமல்ல அந்த காலத்துக் காட்சிகளும் தெரிகின்றன. நேரத்தை அறிவிக்கும் ஒலிகளைச் சொல்லிக்காட்டுகின்றாள்.

**"புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்**
**வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ"** (திருப்பா:6)

விடியற்காலை வேளையில் புட்களின் ஒலிகேட்டு உறக்கம் கலையும் தன்மை இங்கே சொல்லப்படுகிறது. வீட்டினருகில் இருக்கும் பறவைகள் விடியற் காலையில் ஒலியெழுப்பி எம்மை துயில் கலைய வைக்கும் இயற்கையான வாழ்வியலை இங்கே ஆண்டாள் காட்டுகிறாள். பறவைகளின் ஒலிகளை அடுத்து வழிபாட்டிற்கமையச் செய்ய அழைக்கும் வெள்ளைச் சங்கின் விளிக்குரல், காலை வேளையில் காதிலே வந்து மோதும் சங்கொலி பேரொலியாகக் கேட்கும். பறவைகளின் ஒலியை எல்லாம் மேவி வந்து ஊரவரை எழுப்பும், தனியொரு வீட்டில் வாழ்பவரை மட்டுமன்றி ஊரவர் யாவரையும் வழிபாட்டுக் கடமையைச் செய்ய கோயிலுக்கு அழைக்கும், இந்தப் பண்பாட்டு நிலையை இன்னும் விளக்கமாக ஆண்டாள் பாடியுள்ளாள்.

**"கீசு கீசு என்றெங்கும் ஆனைச் சாத்தான் கலந்து**
**பேசின பேச்சரவம் கேட்கலையோ?"** (திருப்பா:7)

"கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வன பரந்தன காண......" (திருப்பா:8)

ஆனைச்சாத்தான் என்றழைக்கப்படும் பறவைகளின் கலகலப்பான பேச்சொலி மக்களின் உறக்கத்தைக் கலைக்கும் விடியல் வேளையை உணர்த்தும். கீழ் வானம் வெள்ளென வெளுத்துத் தோன்றும். எருமைகளெல்லாம் மேய்ச்சலுக்காகப் பரந்து செல்லும் காட்சி ஒரு நாளின் தொடக்கத்தையும் கடமையையும் உணர்த்தும். ஆண்டாள் வாழ்ந்த காலத்தில் கடிகாரம் புழக்கத்தில் இருக்கவில்லை. இயற்கை காட்சிகளின் தோற்றத்தையும் மாற்றத்தையும் கொண்டே மக்கள் தமது நாளாந்த, வாராந்த,மாதாந்த கடமைகளை வகுத்துச் செய்தனர்.

உறக்கத்தை விட்டெழுந்து மனிதர் தமது கடமைகளைச் செய்வதற்கு இயற்கையே துணைசெய்தது. பறவைகளின் ஒலியை அடுத்து விட்டிலே கேட்கின்ற ஒலியொன்றை ஆண்டாள் குறிப்பிடுகின்றாள்.

"காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசைப்படுத்த தயிரரவம் கேட்டிலையோ" (திருப்பா:7)

வீட்டிலே பெண்கள் தயிர்கடையும் காட்சி ஆண்டாளின் கைவிளக்கின் ஒளியில் அழகாய்த் தெரிகிறது. ஆய்ச்சியர் தயிர்கடையும் போது இரு வகையான ஒலிகள் கேட்கும். ஒன்று ஆச்சியர் கைகளிலே அணிந்திருந்த அணிகலன்களின் ஒலி. காசு, பிறப்பு என்ற அணிகளும் கையில் அணியப்படுபவை. அவற்றை ஆண்டாள் குறிப்பிடுவது மகளிர் கடமை நேரத்திலும் நேர்த்தியுடன் இருந்ததைக் காட்டுகின்றது. அணிகலன்களின் ஒலி அவற்றின் அமைப்பையும் உய்த்துணர வைக்கின்றது மற்றது கைபேர்த்து தயிர்கடையும் போது தயிரும் நீரும் கலந்து எழுப்பும் ஒலி. இது உறக்கத்திலிருந்து விழிப்போருக்கு உணவையும் நினைவுபடுத்தும் ஒலியாக உள்ளது. இருள் பிரியும் விடிகாலை வேளையில் வீட்டில் எழும் இந்த ஒலி வீட்டின் செல்வ நிலையையும் உயர்த்தும். ஆண்டாள் தனது பாடலிலே இந்த ஒலிகளின் கூர்மையை அநுபவித்தே கூறுகின்றாள். பெண்களின் வீட்டுக்கடமைகளும் மனிதர் உறக்கத்தைக் கலைக்கும் நிலையை ஆண்டாள் கூறுவது வீட்டிலிருந்தே பெண்களின் தொழிற்பாட்டால் எல்லோரும் இயங்கும் நிலையை மறைமுகமாகக் காட்டிநிற்கிறது.

ஓம்

ஸ்ரீராமஜெயம்

# கோலங்கள் காட்டும் சுடர் விளக்கு

ஆண்டாள் காலைத் துயில் கலைந்து கடமை செய்யும் நிலைகளைக் காட்சிகளாக காட்டுகின்றாள். உறக்கம் விட்டெழுவோர் கண்கள் தேடும் அழகுக் கோலமொன்றை வருமாறு பாடுகிறாள்.

"உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்" (திருப்பா:14)

வீட்டின் பின்புறத்திலே தோட்டத்திலே உள்ள வாவியில் செங்கழுநீர் மலர்ந்துவிட்டது. ஆம்பல் மலர் கூம்பி விட்டது. இந்த இரு மலர்களும் நேரம் காட்டும் கடிகாரங்கள். செங்கழுநீர் காலையிலே மலரும். ஆம்பல் மாலையிலே மலரும். இவை இரண்டும் காலையையும் மாலையையும் பிரித்துக்காட்டும். மலர் மலரும்போது பொழுது தொடங்குகிறது. மலர் கூம்பும் போது பொழுது முடிவடைகின்றது. இயற்கையின் சீர்மையை மலர்கள் தமது தொழிற்பாட்டால் விளக்கி நிற்பதை ஆண்டாள் சொல்லிக் காட்டுகின்றாள்.

அடுத்து அவள் காட்டும் காட்சி மிகத் துல்லியமானது. செங்கல் நிற ஆடை அணிந்த, வழிபாடு செய்யும் ஆண்களைக் காட்டுகின்றாள். திருக்கோவிலிலே சங்கு ஊதுவதற்காக அவர்கள் அணியாகச் செல்கின்றார்கள். அவர்களின் வழிபாட்டு ஆடையின் சீர்மை ஆண்டாளின் சுடர் விளக்கில் அழகாய்த் தெரிகிறது. மார்கழி மாதத்தில் விடியற்காலையில் கோவிலிலே கூட்டாக நின்று சங்கை வாயிலே வைத்து ஒலியெழுப்பும் செயற்பாடு ஆண்களின் வழிபாட்டு நிலையாக இருந்ததை இதனால் நன்கு உணர முடிகின்றது. சிவந்த நிறத்து ஆடையின் தோற்றம் அக்காலத்தில் வழிபாட்டு ஆடை அணியும் மரபு ஒன்றிருந்ததை விளக்குகின்றது. சிவப்பின் தோற்றத்தை அறிய 'செங்கல் பொடிக்கூறை' என்று ஆண்டாள் கூறுவது அவளுடைய நிறத்தை வகைப்படுத்தும் கலைத்திறனை உணர்த்துகின்றது. சங்கை எடுத்து வாயிலே வைத்து ஊதுபவருடைய வாயழகையும் சுட்டுகிறாள். வெண்பல்லுடைய தவத்தவர். இங்கே ஆண்டாள் அவர்களுடைய வயது நிலையை மறைமுகமாகக் கூறுகிறாள். திருக்கோவிலை நோக்கி தூய்மையான கோலத்தோடு அணியாகச் செல்லும் அந்த தவத்தோரும் நாளின் தொடக்கத்தை அறிவிக்கும் நாட்காட்டிகளே.

ஆயர்பாடியில் உள்ள சிறுமிகளுக்கு ஆண்டாள் ஒரு வழிபாட்டுபயிற்சி அளிப்பவளாக இருக்கின்றாள். வீடு வீடாகச் சென்று விடியற்காலையில் அவர்களைத் துயில் எழுப்பி நீராடச் செல்லும் வழக்கம் ஒன்று இருந்துள்ளது. நீராடிய பின்னர் திருக்கோயில் வழிபட வேண்டும் என்ற ஒரு கற்பித்தல் முறைமை இருந்ததையும் ஆண்டாள் காட்டுகிறாள். துயில் காட்சிகள் மூலமாக வழிபாடு வற்புறுத்தப்பட்டதையும் உணரமுடிகிறது. தூமணி மாடத்திலே சுற்றும் விளக்கெரிய

தூபம் கமழ துயில் அணை மேல் உறங்குபவரை எழுப்பும் முயற்சி நடைபெறுகின்றது. எழுந்திராத வன்துயில் வயப்பட்டாரை கும்பகருணனுடன் ஒப்பிட்டு எழுப்புகின்றனர். தோழியரெல்லாம் புடைசூழ வந்துவீட்டு முற்றத்தில் நின்று கண்ணன் புகழைப் பாடி எழுப்புகின்றனர். நேற்று நானே வந்து உங்களை எழுப்புவேன் என்று கூறிச் சென்றவள் இன்று இன்னும் உறங்கும் காட்சி.

நப்பின்னையைச் சென்று எல்லோருமாய் எழுப்பும் இன்னொரு காட்சி. அங்கு துயில் எழுப்பும் நிலை வேறுபட்டுள்ளது. சாதாரண வீடு அல்லாமல் மாளிகையில் வாயில் காப்போன் கொண்ட செல்வநிலை.

"நாயகனாக நின்ற நந்த கோபன்னுடைய
கோயில் காப்பானே கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே மணிக்கதவம் தாள் திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னம்முன்னம் மாற்றாதே யம்மா நீ
நேய நிலைக் கதவம் நீக்கோலோரெம்பாவாய" (திருப்பா:16)

மாளிகை வாயிலில் நிற்கும் காவலனை முதலில் கண்டு பேசிய பின்னரே துயில் எழுப்பும் நடைமுறையை மேற்கொள்ளலாம். தோரணவாயில் அமைப்புக் கொண்ட பெரிய மாளிகையுள்ளே செல்ல அனுமதி பெறவேண்டும். ஆயர் பாடியில் வாழும் சிறுமியர் நப்பின்னை வாழும் மாளிகைக்கு தூய்மை நிலையில் செல்லவேண்டும் என்பதும் குறிப்பிடப்படுகின்றது. நப்பின்னையை நேரில் சென்று எழுப்பும் நிலையை ஆண்டாள் மனித வாழ்வியல் நடைமுறையுள் இணைத்துக் காட்டுகிறாள். வாசலிலே வந்து நின்று

"நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தம் கமழும் குழலி கடை திறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தன காண் மாதவிப்
பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி உன் மைத்துனன் பேர்பாட
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய்........" (திருப்பா:18)

எனச் சிறுமியர் கேட்கின்றனர். குத்து விளக்கெரிய கோட்டுக்கால் கட்டில்மேல் மெத்தென்ற பஞ்சணை பரப்பிய படுக்கையிலே துயில் கொள்ளும் நப்பினை தனித்து உறங்கவில்லை. தன் கணவனோடு உறங்குகிறாள். இதனால் அவளை எழுப்பும் போது கண்ணனையும் எழுப்பவேண்டிய நிலை. இந்த நிலையை ஆண்டாள் நயம்படச் சொல்கிறாள். இயற்கை நிலையிலே கோழி கூவி விடியலை உணர்த்தும். பலமுறை குயில் கூவி எல்லேரையும் எழுப்பும். இந்த நல்ல

வேளையிலே நப்பின்னையின் மைத்துனன் புகழ் பாட வேண்டுமென ஆண்டாள் அழைக்கின்றாள். மார்கழித் திங்கள் நோன்பின் பயனையும் பாடி அவள் அருள் வேண்டுகின்றாள்.

கண்ணனுடைய ஆற்றல்களையும் அருந் திறத்தையும் திருப்பாவை என்னும் சுடர் விளக்கிலே கண்டறிய முடியும் ஒவ்வொரு பாடலிலும் அதனை எடுத்துச் சொல்கிறாள். யசோதை பெற்ற இளஞ்சிங்கம், கார்மேனி கொண்டவன், செங்கண்ணன்,கதிர்மதியம் போல முகமுடையான். நாராயணன் தோற்றம் சுடர் விளக்கில் தோற்றுகிறது. அவன் ஆற்றல்களை அந்தத் தோற்றம் நினைவில் கொணர ஆண்டாள் அவற்றை பாடல்களிலே பதிவு செய்கிறாள். ஓங்கி உலகளந்த உத்தமன், தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரன், பேய் முலை நஞ்சுண்டவன், மனத்துக்கினியவன், அரக்கனை கிள்ளிக் களைந்தவன், மூவுலகையும் அளந்தவன், தென்னிலங்கை செற்றவன், சகடம் உதைத்தவன், கன்று குணிலாய் எறிந்தவன், குன்றுகுடையாய் ஏந்தியவன்,ஒருத்தி மகனாய் பிறந்து ஒருத்தி மகனாய் வளர்ந்தவன் கஞ்சன் வயிற்றில் நெருப்பென நின்றவன், வங்கக் கடல் கடைந்தவன், கூடாரை வெல்லும் கோவிந்தன் என அவள்கூறும் கண்ணனின் ஆற்றல் அவனை வணங்கி வழிபடத் தூண்டுகின்றது. அவனைப் பல்வேறு நாமம் கொண்டு போற்ற வழி சொல்கிறது. நாராயணன், மாயன், கண்ணன், தாமோதரன், கேசவன், மாதவன், வைகுந்தன், முகில் வண்ணன், நெடுமால் எனப்போற்றித்துதிக்க வைக்கிறது. நாற்றம் தரும் துழாய் முடியும் சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையும், பங்கயக்கண்ணும் வழிபடுவோர் மனக்கண்களிலே தெரிய ஆண்டாள் ஏற்றிய பக்தி சுடர் விளக்கு உதவுகிறது.

கண்ணனை வழிபடுவோரை வழிப்படுத்தும் ஆண்டாள் தனது பக்தி அனுபவத்தை பிறரும் அடையவேண்டுமென எண்ணினாள் தன்னிலையிலுள்ள இளம் பெண்களையெல்லாம் ஒன்றிணைத்து வழிபாட்டு மரபை புகட்டுகின்றாள். பெரியாழ்வாரிடம் கற்றுப் பயிற்சி பெற்ற கோதை அதனை மற்றவர்க்கும் கற்பிக்க எண்ணித் திருப்பாவை பாடினாள். ஊர் ஒன்று கூடி வழிபட்ட கோவில் வழிபாடு வகை செய்தது. ஆண்டாள் இளமையின் ஆற்றலை வழிபாட்டுடன் இணைக்கிறாள். நாளின் தொடக்கத்திலே வழிபாட்டைச் செய்ய எல்லோருக்குமே வழிகாட்டுகிறாள். ஆண்டாள் வாழ்ந்த காலத்தில் வழிபாட்டு வாழ்வியல் நடைமுறையாக இருந்தது. மரபுடன் இறுகப் பிணைந்திருந்தது. காலத்தை உணர்த்தி கடமைகளைச் செவ்வனே செய்ய சிறந்ததொரு கையளிப்பாக விளங்கியது. எனவே ஆண்டாள் காலத்து வழிபாட்டு மரபு அவள் ஏற்றிய சரவிளக்குகளின் ஒளியிலே துலக்கமாய்த் தெரிகிறது.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வழிபாட்டு மரபு காட்டும் கோல விளக்கு

மார்கழி நோன்பின் மரபை ஆண்டாளின் திருப்பாவை விளக்குகின்றது. ஆயர்பாடிச் சிறுமிகளின் வழிபாட்டு மரபிலே மார்கழி நோன்பும் இடம் பெற்றதை ஆண்டாள் ஏற்றிய கோல விளக்கின் ஒளியால் உணர முடிகின்றது. முப்பது பாடல்களில் வழிபாட்டின் வரலாறு,முறைமை,பயன் என்பன கூறப்பட்டுள்ளன.

"வையத்து வாழ்வீர்கள் நாமும் நம் பாவைக்கு
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத்துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் மாந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி யுகந்தேலோ ரெம்பாவாய" (திருப்பா:2)

உலகத்தவருக்கு ஒரு வழிபாட்டு மரபை எடுத்துச் சொல்லும் ஆண்டாளின் மனப்பக்குவம் ஒரு பண்பட்ட சமூகத்தை எமக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளது. கண்ணனை வழிபட ஒரு நோன்பு முறை அக்காலத்தில் இருந்துள்ளது. உணவைச்சுருக்கிய ஒரு உடலை பக்குவப்படுத்தும் முறை விடிகாலையில் நீராடி உடலைத் தூய்மை செய்யும் முறை தம்மை அழகுபடுத்தாத துறவு மனப்பாங்கு, செய்யவெண்ணாதவை என முன்னோர் வரையறை செய்தவற்றை செய்யாத மனவுறுதி,தீயனவற்றை பேசாத நயம் என ஆண்டாள் நிரைப்படுத்தியிருக்கும் பழக்கமும் வழக்கமும் சரவிளக்குப் போல நிரையாக அமைந்துள்ளன.

இறைவன் பெயரைச் சொல்லி நீராடினால் தீங்குகள் நேராது. நாடு முழுவதும் மட்டுமன்றி நாடுகள் எல்லாவற்றிலும் திங்கள் மும்மாரி பெய்யும் என்ற முன்னோரது நம்பிக்கையை ஆண்டாள் மீட்டுருவாக்கம் செய்து காட்டுகிறாள் மழையால் வயல் விளையும், வயிற்றுப்பசி தீரும், வளங்கள் பெருகும் எனவே மழையை வேண்டிக் கண்ணணைப் பரவுவது ஒரு முறைமையாக இருந்துள்ளது. உலகம் செழிக்க, உயிர்வாழப் பெண்கள் செய்த வழிபாடு தான் துணைசெய்தது. ஆயர்குல அணிவிளக்காம் கண்ணனிடம் மழையை வேண்டும் வழிபாடு மார்கழித் திங்கள் முழுவதும் நடை பெற்றது உலகத்து உயிரினங்கள் அனைத்தும் நலமாய் வாழ நீர் இன்றிஅமையாதது அதனால் உடலைத் தூய்மை செய்து நல்லுணவைத் துறந்து மனதை ஒருமுகப்படுத்தி எல்லோரும் ஒன்றிணைந்து வேண்டுதல் செய்யும், வழிபாடு செய்யும் போது மழை பெய்தது பெண்கள் இந்த வழிபாட்டைத் தொடர்ந்து செய்யவேண்டுமென ஆண்டாளின் விண்ணப்பம் திருப்பாவை பாடலாய் வெளிவந்தது. வழிபாடு தொடர்ந்து நடைபெற்றால் அது மரபாகி மக்களுக்கு நன்மை தரும் அதனாலே அதனைத்தொடர்ந்து செய்ய உறுதியுரை செய்கிறாள் ஆண்டாள்.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து உன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வான் என நன்று காண் கோவிந்தா
ஏற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் எமக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நங் காமங்கள் மாற்றேலோரெம்பாவாய்"

இப்பாடல் வழிபாடு ஏழேழ் பிறவிக்கும் தொடரப்படவேண்டியதை உணர்த்துகிறது. எதற்காக விடிகாலையில் வழிபாடு செய்கிறோம். எனக் கண்ணனுக்கே விளக்குவது போல உலகத்தவருக்கே விளக்கம் கூறுகிறாள். எப்போதும் உன்னையே நினைத்துப் பணி செய்வோம். இந்தப் பிறவியில் மட்டுமல்ல இனிவருகின்ற எல்லாப் பிறவிகளிலும் உன்னை வணங்கவேண்டும். அதற்காக எங்களுடைய ஏனைய காமங்களை எல்லாம் நாம் மாற்றி விடுவோம். உடலழகை விடுத்து உள்ளத்தூய்மையுடன் வழிபாடு செய்ய ஆண்டாள் மார்கழி நோன்பைக் காட்டுகிறாள். பசுக்களை மேய்த்து வாழ்வு நடத்தும் ஆயர் பாடி மக்களை கோவில் வழிபாட்டில் ஈடுபடுத்தும் பக்திப்பணியை ஆண்டாள் மேற்கொண்டாள். காரைக்காலம்மையாரைப் போல தனிப்பட்ட வழிபாட்டு நிலை ஆண்டாளுக்கு இல்லை. இளம் பெண்களை இணைத்து ஒரு சமூகவயப்பட்ட வழிபாட்டைப் பேணுகிறாள். அறியாத பிள்ளைகளுக்கு வழிபாடு பற்றிய அறிவை வழங்கும் பணி செய்கிறாள். இத்தகைய வழிபாட்டின் பயன் என்ன என்பதையும் ஆண்டாள் தெளிவாகக் கூறுகின்றாள்.

"கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா உன்றன்னைப்
பாடிப்பறை கொண்டு யாம்பெறும் சன்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூ வே
பாடகமே யென்றனைய பலகலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம் அதன் பின்னே பாற்சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்." (திருப்பா27)

மனித நிலையில் வழிபாட்டின் பயனை எதிர்பார்ப்பது இயற்கையே. செல்வச் சிறப்பைப் பெறுவதால் நாடு புகழ்பெறும். மக்கள் வாழ்விலும் செல்வத்தின் செழுமை விளங்கும். வழிபாட்டினால் வாழ்வுமிகுந்து வரும். நோன்பில் வழிபாட்டை நிலைபெறச் செய்ய வேண்டும். உணவைச் சுருக்கி சில நாட்கள் இறை நினைவோடு இருப்பது நல்லது. நமது உள்ளத்தைச் செம்மைப்படுத்த இது ஒரு நல்ல வழி. உடல் நலத்திற்கும் உணவுச் சுருக்கம் நன்மை தரும். நோன்புக்காலம் முடிய ஆடை அணிகளால் அழகு செய்து பாற்சோற்றை நெய்யோடு உண்ணும் பாங்கு சிறந்தது. கூடியிருந்து எல்லோருமாய் மகிழ்வோடு பகுத்துண்டு வாழ்வது

தான் ஆண்டாள் காட்டும் முன்னோருடைய வாழ்வியல் நடைமுறை. வழிபாடு எல்லோரையும் இணைக்கும் செயற்பாடாக இருந்தது. அது தொடர ஆண்டாள் திருப்பாவை பாடினாள். கண்ணனை விழிபடும் வகையைக் காட்டினாள். கண்ணனுடைய திருநோக்கு எம்மீது படவேண்டும். அது எமக்கு எல்லாம் தரும்.

"செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் வழியாவோ
திங்களும் ஆதித்தனும் எழுந்தாற்போல்
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்
எங்கள் மேல் சாபமிழந்தேலோ ரெம்பாவாய." (திருப்பா:22)

செங்கண்மாலின் கண்களை சந்திர சூரியராகக் காட்டுகிறாள். இயற்கை நிலையிலே இவை எழுந்து வரும்போது இருள் விலகும். ஒளி பிறக்கும். மனித வாழ்வின் இருளைப் போக்கும் இந்த இரு சக்திகளும் துணையாக நின்று நலம் தருபவை. மழையை வேண்டிப் பாடும் பாட்டு வறுமையிருளைப் போக்கும் வழிபாடு. பால்சொரியும் பசுக்களால் நிறைந்த செல்வம் சேரும். மனிதன் இயற்கையுடனும் பறைவை, விலங்குகளோடும் இணைபட்டு வாழ்ந்த ஒரு வாழ்க்கையை ஆண்டாள் துன்பமற்ற மகிழ்வான வாழ்வாகக் கண்டாள். அதையே மீண்டும் பேண முயன்றாள். அவள் காலத்தில் அதற்கென வகுக்கப்பட்ட நடைமுறைகள் வீட்டு வாழ்வையும் நாட்டு வாழ்வையும் செம்மைப்படுத்தின. மனித மனம் வழிபாட்டால் பண்பட்டது. வழிபாட்டின் பண்பும் பயனும் எல்லோரும் உணர்ந்து ஒன்றாக இருந்தமையை ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்கள் இயம்புகின்றன.

பெண்களின் வழிபாடு உலகம் முழுமைக்கும் பெரு நன்மை தருவதை அறிய ஆண்டாளின் கோல விளக்குச் சுடர் வீசுகிறது. புதுவைப் பட்டர் பிரான் மகள் கோதை சொன்ன பாமாலை ஒரு கோல விளக்கு. விளக்கேற்றிய திருக்கோவில் போல ஆண்டாளின் திருப்பாவை அமைந்துள்ளது. அவள் ஏற்றிய விளக்கின் ஒளியிலே ஏனைய சரவிளக்குகளையும் ஏற்றி நாம் வழிபட்டால் இடர் தீரும். இன்னல் போம். துன்பம் ஓடும். எனவே ஆண்டாள் பண்பைத் தொடர அனைத்து மகளிரும் இணைந்து செயற்படவேண்டுவதும் இன்றி யமையாதது.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

யாழ் - வ - வே - வ - பெருமாள்

# "வைகுஷ்ணவ னென்னும் வன்மை கண்டாயே"

அன்பு நெஞ்சத்தீர்!

வண்ணை வேங்கடேசப் பொருமாள் ஆலய மகாமூர்த்திக்கும் சகல பரிவார மூர்த்திகளுக்கும் புதிய கோபுரம் உள்பட விஷேச மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மன நிறைவு அடைகின்றோம். இலங்கையில் உள்ள வைஷ்ணவ சைவப் பெருமக்கள் அனைவரும், சமயப் பண்பாட்டோடு வாழ்வதற்கு தன்னிகரில்லா பணியாற்றிக் கொண்டிருக்கும் தேவஸ்தான மகாசபையினரால் செய்து கொண்டிருக்கும் பணிகள் அனைத்தும் பாராட்டுக் குரியதாகும். மேலும் இக் கைங்கரியம் சிறப்பாக நிறைவு பெறவேண்டும் என்று எம்பெருமான் நாராயணன் திரு அருள் பெற்று மேலும் நன்மை பெறவேண்டும் என்று வாழ்த்தி ஆசீர்வதித்துக் கொள்கின்றேன்.

"வைணவ நெறி"

வன்மை என்பது வாக்குத் தூய்மை, நாக்கு உன்னையல்லால் வேறு ஒன்றும் பேசலாகா, மூக்கு அறியலாகா, அன்பு வழி செல்வோனே வைஷ்ணவம் என்று சொல்லுதற்கு அதிகாரி யோக்கியன்.

நன்மை தீமைக ளொன்று மறியேன்
நாரணா என்னு மிதனை யல்லால்
புன்மையா லுன்னைப் புள்ளுவம் பேசிப்
புகழ்வா னன்று காண்டாய் திருமாலே
உன்னு மாறுன்னை யொன்று மறியேன்
ஓவாத நமோ நாரணா என்பன்
வன்மை யாதுவன் கோயிலில் வாழும்
வைணவ னென்னும் கண்டாயே

-பெரியாழ்வார் திருமொழி

இதன் பொருள் மனம், வாக்கு, உடல், ஆகிய திரிகரணங்களையும், பகவானிடம் ஈடுபடுத்த வேண்டும். மனம் பகவானையே நாட வேண்டும்.அவனையே கூறவேண்டும் அவனைத்துதிக்கவேண்டும் ஆனால் நாக்கு அதற்கு இடங் கொடாது. சுவை காட்டித் தகாத இடத்தில் இழுத்துச் செல்லும் அதன் தன்மையை நினைக்காமல் இந்திரியங்களை அடக்கி பகவான் நாமங்களையே கூறவேண்டும் கூறப்படும் சொல் எப்படிப்பட்டது என்று பகவான் நினைக்கிறானே தவிர. எவ்விடத்திலிருந்து தம்மைப்பற்றிய சொல் வருகிறது என்று பகவான் நினைப்பதில்லை. குற்றம் நிறைந்த சொல்லாயினும் அதை நாற்றமாகவே பகவான் எண்ணுகிறான்.

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# "வைணவ நெறி"

"உனக்குப் பணிசெய்து இருக்கும் தவம் உடையேன்" தேனில் இனிய பிரான் திருமால் திருவடிகளே பணிந்து பகவத் கைங்கரியம் செய்து சரணாகதி அடைவர் வைணவர். திருமாலுக்குச் சேவை செய்யும் பகவத் கைங்கரியத்தையும், சரணாகதித் தத்துவத்தையும், இரண்டு கண்களெனப் போற்றுவர் வைஷ்ணவர். பாஞ்சராத்திரமும், வைகானசமும் வைணவ ஆகமங்கள். திருமாலின் வாகனம் கருடன் கொடியும்கருடன், சக்கரம் சார்ங்கம், வாள், தண்டு பாஞ்ச சன்னியம் ஆகிய ஐந்தும் திருமாலின் பஞ்சாயுதங்கள் எல்லா உயிர்களையும் காப்பது திருமாலே என்பதை எம்பெருமானின் அபய ஹஸ்த முத்திரை விளக்கும் உள்மனச் சுடரின் விளக்கமாக இருப்பது கௌஸ்துபமணி பாஞ்ச சன்னியம் என்னும் ஒலியிலிருந்து ஓங்காரத்தைப் படைக்கிறான் விஷ்ணு.
விஷ்ணு என்றால் எங்கும் பரவி இருப்பவன் என்று பொருள் அல்லவா. திருமகளின் தலைவனாகிய லட்சுமிபதி யோகத்திற்கு தலைவனாகிய யோகேசுவரன். உலகத்திற்கு தலைவனாகிய ஜகன்நாதன், அனைத்திற்கும் முதல் காரணமாம் ஆதிமூலம், எல்லா உயிர்களின் உள்ளத்திலும் வீற்றிருக்கும் வாசு தேவன் மக்களால் வணங்கப்படும் ஜனார்த்தனன். கெட்டவர்களை அழிக்கும் துஷ்டநிக்ரஹகாரியாக, நல்லவரைக் காக்கும் சிட்ட பரிபாலனராகவும் விளங்கும் பெருமான். அறத்தை நிலைநாட்டும் தர்மஸ்தாபகராகவும் பாவத்தைப்போக்கும் அரியும் அவனே. வேதம் திருமாலே ஆதிதேவன் என்று குறிப்பிடுகிறது. திருமால் அனாதியானவன் ஆதியும் இல்லை அந்தமும் இல்லை தொடக்கமும் முடிவும் இல்லாதவன் துளசி மாலையான், திருமால் எங்கும் நிறைந்த பரம் பொருள்.
திருமங்கை ஆழ்வார் திருமால் தரும் அன்பு பரிசுகளைப் பட்டியல் போட்டுக் காட்டுவார் நாராயணா என்னும் திருப்பெயர் தரும் நன்மைகளை மிக அழகாகக் கூறுவார். நாராயணா, நாராயணா என்று சொல்லிக்கொண்டிருந்தாலே போதும் அதனால் நல்ல குடியில் பிறக்க முடியும் செல்வங்கிடைக்கும் தொண்டர்களைத் துன்பம் அணுகா. வானுலக வாழ்வு கிடைக்கும் இனிய உலக வாழ்வு கிடைக்கும். பெற்ற தாயை விடச் சிறப்பாக உதவும். நலம் தரும் சொல்லான நாராயணா என்னும் நாமம் என்பார் திருமங்கை ஆழ்வார். நாவினுள் நின்று மலரும் ஞானக்கலைகளுக்கெல்லாம் காவி நல் மேனிக் கமலக் கண்ணனே ஆவியாக இருக்கின்றனன் என்பர் நம்மாழ்வார்.

தூய பிரம்மம், முடிவான இறுதியான பிரம்மம் விஷ்ணு, இவரே நாராயணன். வாசுதேவன் வேங்கடேசுவரன் என்று விசிஷ்டாத்துவைதம் குறிப்பிடுகிறது. மனித குலத்தை மீட்பதற்காக இறைவன் அவ்தாரம் செய்வார் சிறப்புடைய சூழ்நிலையில் மண்ணகத்தில் தோன்றுவார். இவ்வாறு அவதாரம் செய்யும் இறைவன் திருமேனிகளாக விக்கிரக வடிவங்களாத் திருக்கோயில்களிலே எழுந்தருளி இருக்கிறார் கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் இந்தக் கோயில்களே நமது சமயத்தைக் காத்து வரும் கருவி அதில் இருக்கும் அருவுருவம் ஓர் அடையாளம் அந்த உருவம் இதயத்தில் பக்தியோடு வழிபட வேண்டியது ஆகும் மந்திரங்களால் வழிபடக்கூடிய ஒன்றாகும் ஆத்மா பகவானுடன்

ஐக்கியமாகும் இடமே ஆலயம் இது ஆகம விதிப்படி அடைக்கப்பட்டவை ஆன்மீக வழிபாட்டில் சிறந்து விளங்குகிறது நம்நாடு.

உலக வாழ்க்கையில் அலை பாயும் மனதிற்கு சாந்தி தருவது கோவில்களாகும் பக்தியுடன் வழிபாடு செய்தால் நிச்சயம் எல்லா சௌபாக்கியமும் கிடைக்கும் நம்முடைய கலாச்சாரம் கலைகள் எல்லாம் வாழையடி வாழையாக கோயில் மூலம் வளர்கிறது. கோவில்களில் ஆகம சாஸ்திரங்களையும் விதிமுறைகளையும் தெரிந்து கொண்டால் எல்லா உண்மைகளும் விளங்கும் ஜபம், தவம், முதலியவற்றால் மந்திர சக்தி பெற்றது கோவில் விக்கிரகம். இவை ஆசார்ய புருஷர்களின் ஆத்ம சக்தியால் பிராணப்பிரதிஸ்டை செய்யப்பட்டவையாகும் இவை அப்படியே குறைவின்றி இருப்பதற்காகத்தான் நித்திய புஜை உற்சவங்கள் எல்லாம் நடைபெறுகிறது. ஒலி, காற்று, ஈரம் பூமி எல்லாம் கல்லில் உள்ளது. இதனால் தான் தெய்வச்சிலைகளை கல்லில் படைத்தார்கள். பொரியோர்கள் வகுத்துக் கொடுத்தபடி கோயில் காரியங்கள் செய்ய வேண்டுமென்று காஞ்சிப் பெரியவர் சொன்னது போல் ஆலயம் நமது

உயிருக்கும் உயிர் என்று நினைக்கவேண்டும். நமது பண்பாடும் கலாச்சாரமும் வகுப்பு ஒற்றுமையும், கட்டுப்பாடும் தேசப்பற்றும் மொழி வளர்ச்சியும் பிறருக்கு உதவும் குணமும் வளரும் ஆகவே எல்லோரும் கோயிலை காப்பதில் அக்கறை கொள்ள வேண்டும். இதுவே நன்நெறிக்குய்பது நாராயணா என்னும் நாமம்.

மக்கள் தங்கள் ஆன்மீக தாகத்தை தணிப்பதற்காகவே பகவானை விக்கிரக ரூபத்தில்கோயில்களில் வைத்து வழிபடுகி ர்கள். கடவுளின் பர அவதாரங்களும், அதன் குணாதிசயங்களையும் ஆதாரமாகக் கொண்டே எல்லா இடங்களிலும் விக்கிரக பிரதிஸ்டை செய்யப்படுகிறது. இவைகள் மக்கள் தரிசித்து பயன் அடைய வேண்டும் என்பதே, கோயில்கள் அமைய முக்கிய காரணமாகும். இந்த விக்கிரகங்கள் சக்தியுடன் திகழ்வதால் நம்முடைய குறைகள் கோயிலுக்குச் செல்லும் போது நிவர்த்தியாகிறது. ஆழ்வார்கள் பன்னிரண்டு பேரில் ஸ்ரீமந் நாராயணனின் திருமார்பில் தவழும் வனமாலையின் அம்சமாகத் தோன்றியவர் தொண்டரடிப் பொடியாழ்வார். எம்பொருமானின் திருநாம மகிமைகளை எடுத்துக் கூறுவதிலேயே லயித்திருந்த தொண்டரடிப் பொடியாழ்வார்,திருவரங்கத்துப் பொருமானைப் பாடிப்பரவியதிலும்,மாலைதொடுத்து சுவாமிக்கு அணிவித்து அழகுபார்க்கும் கைங்காரியத்திலும் ஈடுபட்டு இன்பங்கண்டார். ஆழ்வார் எம்பொருமானுடைய பெயரைச்சொல்லுவதில் எல்லையில்லாத இன்பத்தைக் கண்டனர். எம்பொருமானைக் காட்டிலும் அவனது நாமங்களுக்கு இனிமை பாவனம் முதலியன அதிகம் எம்பெருமானின் நாமம் ஒன்றே போதும். நாம் நலம்பெற. தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக. நாமம் சொல்வதனால் பாவம் தொலையும் என்பது உண்மைதான். இருந்தும் ஒருவர் (பிறர்) நாமத்தைச் சொல்லவும் நாம மகிமையைப் பேசக் காதால் கேட்பவர்கள் அடைந்த பலனையும் இங்கு சொல்லவேண்டிய அவசியம் ஒன்று இருக்கிறது இங்குள்ளவர்கள் உண்டியே உடையே என்று அஞ்ஞானத்தில் அழுந்தி அழுந்தி போகிறார்களே என்று மனம் பொறுக்கமாட்டாமல் வருந்தி அவர்களுக்கும் இதோபதேசம் செய்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார். திருமலை என்ற பிரபந்தத்தில் இதோபதேசம்

செய்கிறார் செய்வதையும் இறைவனின் திருக்குணங்களைப்பாடுவதையும் நாமாவின் பலத்தால் தான் பெற்ற பேறுகளைச் சொல்லியும் நம்மைத் திருப்திப்

படுத்துகிறார். இந்த நூலுக்கு ஆதாரமாய் இருப்பது விஷ்ணு தர்மம் என்ற வட நூலாகும்.பாண்டவர்களுடைய வம்சத்தில் நாலைந்து தலைமுறைக்கு பிறகு,சதாநீகன் என்ற ஒரு அரசன் ஆண்டு வந்தான் அவன் கருவிலே திருவுடையவனாய் கிருஷ்ணபக்தனாய் இருந்து வந்தான்.சௌனக முனிவரிடம் உய்வுபாயம் கேட்டு அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமானிடம் ஈடுபடுவதும் அவன் பெயரைப் பாடுவதும் உய்வுபாயம் என்று அறியப் பெற்றார். அந்த விஷ்ணு தர்மத்தைக் காட்டிலும் ஆழ்வாருடைய திருமலைக்கு ஏற்றம் உண்டு. அங்கு செல்பவர் சௌனக பகவான் கேட்பவர் சதாநீகன். இங்கு சொல்பவர் ஆழ்வார் செவிமடுத்துக் கேட்பவர் ஸ்ரீரங்கநாதன். சதாநீகன் தான் அறியாததைக் கேட்டுப் பெற்றான். இங்கோ ஆழ்வார் அருளிச்செய்ய அனைத்தும் அறிந்த பெருமான் தெரிந்து கொண்டே கேட்டருளினார். ஏனெனில் தன்னுடைய குழந்தையாம் ஆழ்வாருடைய மழலைச் சொல் கேட்டு இன்புறுவதற்கேயாகும்.

நாமசங்கீர்த்தனத்தின் மகிமையை விளக்கும் ''முத்கலன்''சரித்திரத்தை உதாரணமாகக் காண்கின்றார்.திருநாமத்தை சொல்லமுடியவில்லை என்றாலும் ஒருவன் சொல்ல அதைக் கேட்கலாகாதோ. இப்படி நாமத்தை காதால் கேட்பது மட்டும் (செய்தவன்) அடைந்த பேற்றினைக் கேட்பாயாக முன் ஒரு காலத்தில் ''முத்கலன்'' என்றவன் பாவமே செய்வானாய் வாழ்ந்து வந்தான் ஒரு சமயம் அவன் தான் செய்த பாவத்திற்குப் பரிகாரமாக எள்ளினாலான பசுவை தானம் செய்யும் போது கிருஷ்ணார்ப்பணம் என்று செல்லிக்கொடுத்தான். இவன் மரணமடையும்போது யமதூதர்கள் பாசக் கயிற்றாலே கட்டி யமனிடம் இழுத்துக்கொண்டு சென்றார்கள். யமனும் இவனை எதிர்கொண்டழைத்து உபசரித்தான். உன்னுடைய தூதர்கள் என்னைக்கட்டி இழுத்துவர நீ என்னை உபசரிக்கிறாயே இதற்கு காரணமென்ன என்று கேட்டான் முத்கலன். உன்னுடைய பெருமை அவர்களுக்குத் தெரியர்து. உனக்கும் தெரியாது. நீ ஒரு தரம் கிருஷ்ணநாமத்தை சொன்னதாலேயே நான் உன்னை உபசரிக்கிறேன் என்று திரு நாமப்பிரபாவத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான் யமன். இப்படி அவர்கள் திருநாமப்ரபாவத்தைப் பேசிக்கொண்டிருக்கும் திருநாமத்தைக் கேட்ட மகிமையாலே அவர்களுக்கு நரகத்துன்பம் ஒழிந்து ஸ்வர்க்கத்தில் இருப்பதுபோல் சுகமுண்டாயிற்று. காதால் கேட்பதற்கே இப்பயன் என்றால் சொல்வதால் ஏற்படும் பயனைச் சொல்லவும் வேண்டுமோ. பாடலைக் குறிப்பிடுகின்றோம்

**நமனும் முத் கலனும் பேச**
**நரகில் நின்றார்கள் கேட்க**
**நரகமே சுவர்க்கமாகும்**
**நாமங்களுடைய நம்பி**
**அவனதூ ரரங்க மென்னாது**
**அயர்ந்து வீழ்ந் தழிய மாந்தர்**
**கவலையுள் படுகின் றாரென்**
**றதனுக்கே கவல்கின்றேனே.**

இப்படி உய்வு பாயமாக எளிய நாமசங்கீர்த்தனம் இருக்கவும் அடியார்களைக் காத்தருள கங்கணம் கட்டிக்கொண்டு மேலிருந்து வந்திறங்கி ஈராற்றிடையில் அரங்கமா நகரில் அடியான் ஒருவன் கிடைக்கமாட்டானா என்று ஏங்கிக் கிடந்தருளும் ஸ்ரீரங்கநாதன் இருக்கவும் மக்கள் திருவரங்கம் செல்லாமலும் வைகுந்தாவாமனா என்று சொல்லாமலும் பேற்றினை இழந்து தவிக்கின்றார்களே என்று பரிதவிக்கின்றார் "காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்கு உய்யும் வண்ணம் கேட்டிரோ நம்பி மீர்காள் கெருடவாகனனும் நிற்க, சேட்டை தன்மடியகத்துச்செல்வம் பார்த்திருக்கின்றீரே' என்று எளியவனாய் அன்புடயவனாய் எதையும் அளிக்கும் சர்வ சக்தியாய் அரங்க நகரப்பன் இருக்க வேறு தேவதைகளை வணங்கி செல்வதை எதிர்பார்க்கின்றீர்களே என்ன மடமை என்று வருந்திக் கூறுகின்றார் ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவரில்லை பாரில் நின் பாதமுலம் பற்றினேன் பரமமூர்த்தி என்று தன்னிடத்தில் எம்பெருமானை அடைய வேறு உபாயங்கள் இல்லை என்று கர்ம ஞானம் மிகக் குறைவு என்றும் அவனுடைய கல்யாண குணங்களைப்பாடுதலே பரமயோக்கியம் என்று சொல்லித்தன்னை மீட்டருள வேணும் என்று பிரார்த்திக்கின்றார். சாத்திரங்களில் சொல்லப்பட்ட வழிமுறைப் பகுதிகள் அனைத்தும் இப்பிரபந்த வழியாக அநுஷ்டித்தவராய் பேறு பெற்றார். என்பதற்கிணங்க நாம் இந்த அருமையான மனிதப் பிறவியை எடுத்ததன் நோக்கம் இனி ஒருக்கால் பிறவாமல் இருப்பதற்கு என்பதை நுண்ணறிவு கொண்டு உணர்ந்து ஒழுகுவோமாக.

"கோவிந்த நாம சங்கீர்த்தனம்"
கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா!

*வண்ணை ஸ்ரீவேங்கடேசப் பெருமாள்
தேவஸ்தான முன்னைநாள் ஓதுவார்.
க.தியாகராசா
யாழ்ப்பாணம்.*



ஓம்
ஸ்ரீராமஜெயம்

# ஸ்ரீரெங்கநாதனின் தாழ் பணிந்திடுவோம்

வேங்கடேச வரதராஜப் பெருமாளே சரணம்
வேதனைகள் தீர்த்தருளும் மாதவனே சரணம்
பாங்குடனே ஸ்ரீ தேவி பூமிதேவியுடனே
பாதார விந்தம் பணி வோர்க்கருள் புரிந்திட
தீங்குகள் களைந்து தீமைகள் விலக்கிடும்
தீனதயாளனே திருமாலே சரணம் சரணம்
நாங்களெல்லோரும் நாராயணனே நமவென்று
ஸ்ரீ ரெங்கநாதனின் தாள் பணிந்திடுவோம்!

கண்ணையிமை காப்பது போல எம்மைக்
காத்தருள் புரிந்திடும் கண்ணபிரானே
வண்ணையிலுறைந்து வளரும் வாசவனே
வளமான வாழ்வருள்வாய் கேசவனே
மண்ணையுண்ட வாயனே மாயவனே வா
மணிவண்ணா மாதவா மாலவனே வா
பண்ணைப் பசுக்களையெல்லாம் வேய்ங்குழலால்
மதி மயங்கச் செய்த மாலே வருக வருகவே!

வந்தனை செய்தோம் நாம் வரதராஜப் பெருமானே
வந்தே நல்ல வரமருள வேண்டுமையா!
சிந்தனை யிலெந்நாளும் ஸ்ரீரங்கநாதன் நாமமே
ஸ்ரீதரா கோவிந்தா கோபாலா நாராயணா
உந்தனை எண் ணியே உளமாரத் துதித்தோமே
உள்ளத்தால் வணங்குகின்றோம் உலகநாதனே
கந்தனை மருகனாய்க் கொண்ட கண்ணனே
கரங்கூப்பி வணங்குகின்றோம் சிரந்தாழ்த்தியே!
நாராயணன் நாமத்தை நாளும்
பாராயணஞ் செய்து பாடி மகிழ்வோம்!

சைவப்புலவர்
இராசையா ஸ்ரீதரன்
நாச்சிமார் கோவிலடி.
யாழ்ப்பாணம்.



ஸ்ரீ சந்தான கோபாலர் விமானம்



ஸ்ரீ வேணுகோபாலர் விமானம்

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வண்ணை ஸ்ரீரெங்கன் பத்து

**ஆக்கியோன் V.N.C நாராயணசாமி**

**பல்லவி**
வண்ணை வாழ் வேங்கடடேசா - உன்
வண்ணம் கண்டேன் - வரதராஜா

**அநுபல்லவி**
பெரும் புகழ் தந்திடும் வேங்கடேசனே
அரும்பொருள் ஈந்திடும் அரங்கேசனே
வரும் வினைஅகற்றிடும் வரதராசனே
துருவி ஞானம் நல்கிடும் நாராயணனே

**சரணம்**
வாராயோ வாசுதேவா
பாராயோ பத்மநாபா
தாராயோ தாமோதரனே
தீராயோ தீவினைகள் திரிவிக்கிரமனே

**ஸ்ரீரங்கநாதர்**
வாயிலிலே வான் அளாவிய கோபுரந்தனை - கண்டேன்
கோயிலிலே அரவின் மேல் பள்ளி கொள்ளும் - பத்மநாபனைப் பணிந்தேன்
நாபியிலே நான் முகனைத் தரிசித்தேன்
தாமரையிலே வீற்றிருக்கும் திருமகளையும் -
பூமகளையும் ஒரு சேரக் கண்டேன்.

**மகாலஷ்மி**
உயர்வற கமலாசனத்தில் வீற்றிருக்கும் - தாயே
துயர்வற துன்பம் துடைத்திடும் கற்பக - வல்லியே
அயர்வற அகம் மகிழ்வித்த அருஞ்செல்வியே
மயர்வற மாநிதி ஈந்திடும் செங்கமலச்செல்வியே

**ஸ்தல விருட்சம்**
வான் அளாவிய பலா விருட்சம் காண்
தான்அளாவிய பலாக்கனிகள் காண்
தேன் அளாவிய வண்டினங்காண்
பொன் அளாவிய திருவுடைமார்பனைக் - காண்

**சந்தானகோபாலர்**
ஆலிலை மேல் கண்வளரும் சந்தான கோபாலா
கோலினைத்தாங்கிஆவினைமேய்த்த சீலா
மாலின் வடிவாய் அவதாரம் ஏற்ற மாயா
வாலினைப் பற்றி அரவின் மேல் ஆடிய தூயா

## கருடாழ்வார்

நாராணற்குப் பெரிய திருவடியானவனே
காரணனாய் விண்மிசைக் கருடனாய் - ஊர்ந்தவனே
பூரணனாய் அரங்கற்கு தாசனாய் - அமைந்தவனே
வாரணம் சூழ் வடவேங்கடவனைத் - துதிசெய்பவனே

## கோபாலகிருஷ்ணன்

தேவகி மைந்தானாய் உதித்த கோபாலா
தேவரைக்காக்க ஜனித்த ஜசோதரை - புதல்வா
கோவலர் சோதரனாய் ஆவினம் மேய்த்த கண்ணா
குவலயம் காக்க வந்தவண்ணா

## ஸ்ரீ ஆண்டாள்

பூமாலையும் பாமாலையும் சூடிக்கொடுத்த - சுடர்க்கொடியே
பூமாதேவியாக வந்துதித்தகோதைப் - பிராட்டியே
திருமால் தன்னை வரிக்க மேகம் விடு தூது செய்த நங்கையே
அரங்கமாலுடன் சோதியாய் இணைந்த- பொற் கொடியே

## ஸ்ரீ ராமர்

தருமம் தழைக்க வந்த தசரதன்மைந்தா
மருகனாய் ஜனகற்கு வாய்த்த இராகவா
உருவில் மாயமானாய் வந்தமாரீசனை - அழித்தவனே
மாருதீபால் நேயம் பூண்ட ஜானகி ராமா

## ஆழ்வார்கள்

போற்றிபோற்றி பொய்கையர்
பூதத்தார் பேயாழ்வார் போற்றி
போற்றி போற்றி திருமழிசையர்,குலசேகரர்
தொண்டரடிப்பொடியார் போற்றி
போற்றி போற்றி நம்மாழ்வார் மதுரகவியார் திருப்பாணர் போற்றி
போற்றி போற்றி ஸ்ரீ ஆண்டாள் பெரி யாழ்வார் திருமங்கையர் போற்றி

## ஆஞ்சநேயர்

மாருதனாய் இராமதூதன் எனப் போற்றப்படுபவரே
காரணனாய் சீதைபாற் சென்று கணையாளி பெற்றவரே
பூரணனாய் இராவணன் அரசை தீயிட்டு அழித்தவரே
நாரணனாய் அமைந்தவர்க்கு சிறிய திருவடி ஆனவரே

## வண்ணக் கோபுரம்

அரங்கன் வாயிலில் வண்ணக் கோபுரங் கண்டேன்
அரங்கநாதனின் பாம்பணை அறிதுயில் - கண்டேன்
அரங்கனின் நாபியில் நான் முகனின் உருக் கண்டேன்
அரங்கேசனுடன் ஸ்ரீ தேவி வீற்றிருக்க கண்டேன்



ஸ்ரீ சந்தான கோபாலர் -
பரிவார மூர்த்தி



நவக்கிரக நாயகர்கள்

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# நன்றியுரை

யாழ்.நகரின் வண்ணையம் பதியில் வீற்றிருந்து அடியவர்கட்கு வேண்டுவனவற்றை ஈந்து உதவும் அருட்பெரும்சக்தியாகத் துலங்கும் ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரான ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளின்அநுக்கரகத்தினால் இவ்வருடம் ஸ்ரீரங்கநாதசுவாமியின் பஞ்ச அவஸ்தைக் கோபுரத்திருப்பணிக்கைங்கரியம் பூரணமாக நிறைவுற்ற தன்மையை எண்ணி முதற்கண் எல்லாம் வல்ல எம்பெருமானை வழுத்துகின்றோம்.

இந்த ஆலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸ்ரீ ரங்கநாதகோபுரத்திற்கும் பரிவார மூர்த்திகளாகிய ஸ்ரீசந்தான கோபாலர், ஸ்ரீவேணுகோபாலர், ஸ்ரீராமர், தேரடி ஆஞ்சநேய சந்நிதிகளை பூரணமாக நிறுவ நிதி உதவி அளித்த வணிகப் பெருமக்கட்கும் மற்றும் இலங்கை, இங்கிலாந்து அவுஸ்திரேலியா கனடா வாழ் கண்ண பக்தபெருமக்கள் அனைவருக்கும் எமது தேவஸ்தான ஆதீன மகாசபையும் ஸ்ரீரங்கநாத கோபுரத் திருப்பணிச் சபையும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றன.

இந்த கோபுர நிருமாண வேலைகளின் பொருட்டு நிதிசேகரித்து உதவிய எமது தேவஸ்தானமகா சபையின் வெளிநாட்டுகளில் வாழ் உறுப்பினர்கட்கும் மற்றும் கண்ண பக்தர்கட்கும் இந்தச் சபைகளின் நன்றி அறிதல் உரித்தாகுக. இந்தக் கோபுர கட்டட நிருமாணங்களை செவ்விய முறையில் அமைத்து பூரண நிறைவெய்த உதவிய சகல நிருவாக சபை உறுப்பினர்கட்கும் மகாசபையின் நன்றி உரித்தாகுக

.ஸ்ரீரங்கநாத சுவாமி கோபுரத்தை செவ்விய முறையில் அமைத்துகொடுத்த ஸ்ரீ சண்முகநாதன் பொறியியலாளருக்கும் ஸ்தபதி கோபலசிங்கம் மற்றும் கோபுர ஐந்துதளங்களிலும் சுதை விக்கிரகங்களை ஒழுங்குற அமைத்துஉதவிய தமிழ்நாடு திருவானைக்காமணிவண்ணன் குழுவினருக்கும் இந்தச் சபையின்நன்றிஉரித்தாகுக.

தேவஸ்தான மகாகும்பாவிஷேக கிரியைகளிலும் மற்றும் ஸ்ரீரங்கநாதகோபுர கும்பாவிஷேகத்திலும் பங்கு பற்றிச் சிறப்பித்த சகல குருமார்கட்கும் பிராமணோத்தமர்கட்கும்விழாவைச் சிறப்பித்த நாதஸ்வரக் கலைஞர்கட்கும் வானொலி தொலைக்காட்சி அஞ்சல் மூலம் சிறப்பித்த சக்தி ஒலிபரப்பு தொலைக்காட்சி ஸ்தாபனத்தினருக்கும் மற்றும் தொண்டர் குழுவினருக்கும், இராஜகோபுரத்திற்கும், தேவஸ்தானத்தில்அமைந்த சகல விமானங்கட்கும் இராஜகோபுர மண்டபம் மூலஸ்தான வசந்தமண்டபங்களுக்கும் மற்றும் மணிக்கோபுரங்களுக்கும் பலவகை வர்ணத்தீந்தைகளை நல்கிய ICI பெயிற் ஸ்தாபனத்தினருக்கும் இந்தச் சபைகளின் நன்றிக்கடைப்பாடு உரித்தாகுக. ஸ்ரீரங்கநாத சுவாமி கும்பாபிசேக மலருக்கு ஆசியுரைகளும் வாழ்த்துரைகளும் வழங்கிய வைணவ ஆச்சாரியார், இந்துக்குருமார்களுக்கும், குருபீட ஆதீனத்தினருக்கும், எமதுமகாசபையினதும், கோபுரத்திருப்பணிச் சபையினதும் நன்றியுரித்தாகுக. இத்துடன் இந்தக் கோபுர கும்பாபிசேகமலரை சிறப்பிக்க

ஓம்
ஸ்ரீராமஜெயம்

கட்டுரைகளும் வெண்பாக்களும் வரைந்து உதவிய தமிழ்அறிஞர்களுக்கும், நிழற்படங்களையும் இந்த மலரையும வெளியிட்டு உதவிய சுரபி பதிப்பக ஸ்தாபனத்தினருக்கும், கும்பாபிசேகங்களைக்கண்டு தரிசித்த பக்தப் பெருமக்களுக் கும் இம்மாகாசபையும், நிர்வாகச்பையும், திருப்பணிச்சபையும் தங்களின் அன்புகலந்தநன்றியை தெரிவித்துக்கொள்கின்றன.

சுபம்

*ஸ்ரீரங்கநாத கோபுரத் திருப்பணிச் சபை*
*வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜ பெருமடாள் தேவஸ்தானம்*
*யாழ்ப்பாணம்.*



ஓம்
ஸ்ரீராமஜெயம்

## (1) ஸ்ரீ ரங்கநாத கோபுரத்திருப்பணிச்சபை உறுப்பினர்கள்

1. சபையின் தலைவர். திரு.நா.ஸ்ரீரஞ்சன் *(நடுவில் நிற்பவர்)*
2. செயலாளர். திரு. V.S. கிருஷ்ணமூர்த்தி *(தலைவரின் வலதுபுறம் நிற்பவர்)*
3. பொருளாளர் திரு. N.ஸ்ரீரெங்கநாதன் *(தலைவரின் இடதுபுறம் நிற்பவர்)*
4. உறுப்பினர் திரு.த. ஸ்ரீரூபன் *(செயலாளரின் வலதுபுறம் நிற்பவர்)*
5. உறுப்பினர் திரு.சி.கந்தசாமி *(பொருளாளரின் இடதுபுறம் நிற்பவர்)*

## (2) வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோவில் ஆதீன மகா சபையின் நிர்வாகசபை உறுப்பினர்கள்.

*இடமிருந்து வலம் நிற்பவர்கள்.*

1. திரு.தி. சிவரூபன்.
2. திரு.மு. சிவலோகநாதன்.
3. திரு.இரா. லோகநாதன்.
4. உபசெயலாளர் திரு.இ. இராகவன்.
5. செயலாளர் திரு.ஸ்ரீ. பாலமுரளி.
6. தலைவர் திரு.நா. ஸ்ரீரஞ்சன்.
7. பொருளாளர் திரு.N. ஸ்ரீரெங்கநாதன்.
8. உபதலைவர் திரு.இ. இரகுபதி.
9. திரு.செ. இரத்தினகோபால்.
10. திரு.பெ. கோவிந்தசாமி.
11. திரு. V.S. கிருஷ்ணமூர்த்தி.



ஸ்ரீ ரங்கநாத கோபுரத்திருப்பணிச் சபை உறுப்பினர்.



நிறுவாக சபை உறுப்பினர்கள்



இராஜகோபுர கும்பாபிஷேகம்



ஸ்ரீ ரங்கநாத கோபுர அஸ்திவாரம் இடும் வைபவம்

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தை பரிபாலனஞ்செய்த அறங்காவலர் பட்டியல்



## வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தை பரிபாலனஞ்செய்த அறங்காவலர்களின் பெயர்ப்பட்டியல்

### கி.பி 1835 முதல் 1939ஆம் ஆண்டுவரை

1. திரு.தி.ரெங்கசாமிச்செட்டியார்
2. திரு.நா.சவுரிச்செட்டியார்
3. திரு.கு.சிவனாண்டிச்செட்டியார்
4. திரு.க.வெங்கடாசலம் செட்டியார்
5. திரு.ந.வீரபத்திரச்செட்டியார்
6. திரு.வ.தருமுச்செட்டியார்
7. திரு.தி.கோபாலன் செட்டியார்
8. திரு.வ.சஞ்சீவிச்செட்டியார்
9. திரு.ச.சின்னண்ணாச்செட்டியார்
10. திரு.ச.கோபாலுச் செட்டியார்
11. திரு.கோ.கதிராமச்செட்டியார்
12. திரு.ஆ.சின்னையாச்செட்டியார்
13. திரு.கோ.பொன்னையாச்செட்டியார்
14. திரு.சி.பொன்னையாச்செட்டியார்
15. திரு.சி.இராமசாமிச்செட்டியார்
16. திரு.சு.ஆறுமுகம் செட்டியார்
17. திரு.தி.சின்னத்தம்பிச்செட்டியார்
18. திரு.வ.சின்னையாச்செட்டியார்
19. திரு.ச.சுப்பிரமணியம் செட்டியார்
20. திரு.கோ.அய்யன்னாச்செட்டியார்
21. திரு.பொ.சின்னண்ணாச்செட்டியார்
22. திரு.வீ.செல்லப்பாச்செட்டியார்
23. திரு.சி.கந்தையாச்செட்டியார்
24. திரு.க.துரையப்பாச்செட்டியார்
25. திரு.வீ.வைத்திலிங்கம்செட்டியார்
26. திரு.க.குப்புசாமிச்செட்டியார்
27. திரு.அ.பொன்னையாச்செட்டியார்

# கி.பி 1940 - 1992 வரை




1940 ம் ஆண்டு திரு.கோ.அய்யன்னாச்செட்டியார்
1941 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1942 ம் ஆண்டு திரு.ந.வீ.வைத்திலிங்கம் செட்டியார்
1943 ம் ஆண்டு திரு.தீ.அ.துரையப்பாச் செட்டியார்
1944 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1945 ம் ஆண்டு திரு.சீ.நாராயணசாமி
1946 ம் ஆண்டு திரு.வெ.நா.செல்லையா
1947 ம் ஆண்டு திரு.து.சீனிவாசகம்
1948 ம் ஆண்டு திரு.தீ.அ.துரையப்பா செட்டியார்
1949 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1950 ம் ஆண்டு திரு.க.பழனிச்சாமி
1951 ம் ஆண்டு திரு.வெ.நா.செல்லையா
1952 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1953 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1954 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1955 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1956 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1957 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1958 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1959 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1960 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1961 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1962 ம் ஆண்டு திரு.தி.வரதராஜன்
1963 ம் ஆண்டு திரு.திரு.வெ.நா.செல்லையா
1964 ம் ஆண்டு திரு.து.சீனிவாசகம்
1965 ம் ஆண்டு திரு.க.பழனிச்சாமி
1966 ம் ஆண்டு திரு.க.பழனிச்சாமி
1967 ம் ஆண்டு திரு.சி.பொ.செல்லையா
1968 ம் ஆண்டு திரு.நா.இராசநாயகம்
1969 ம் ஆண்டு திரு.க.குமாரசாமி
1970 ம் ஆண்டு திரு.து.சீனிவாசகம்
1971 ம் ஆண்டு திரு.க.பழனிச்சாமி
1972 ம் ஆண்டு திரு.கோ.கிருஷ்ணசாமி
1973 ம் ஆண்டு திரு.து.சீனிவாசகம்



1974 ம் ஆண்டு திரு.து.சீனிவாசகம்
1975 ம் ஆண்டு திரு.க.பழனிச்சாமி
1976 ம் ஆண்டு திரு.க.பழனிச்சாமி
1977 ம் ஆண்டு திரு.வெ.நா.செ.நாராயணசாமி
1978 ம் ஆண்டு திரு.கோ.கிருஷ்ணசாமி
1979 ம் ஆண்டு திரு.து.சீனிவாசகம்
1980 ம் ஆண்டு திரு.க.குமாரசாமி
1981 ம் ஆண்டு திரு.க.குமாரசாமி
1982 ம் ஆண்டு திரு.வெ.நா.செ.நாராயணசாமி
1983 ம் ஆண்டு திரு.சி.பொ.செ.வாசுதேவன்
1984 ம் ஆண்டு திரு.து.சீனிவாசகம்
1985 ம் ஆண்டு திரு.க.பழனிச்சாமி
1986 ம் ஆண்டு திரு.ந.செல்லப்பா
1987 ம் ஆண்டு திரு.செ.சுந்தரலிங்கம்
1988 ம் ஆண்டு திரு.மு.சுவாமிநாதன்
1989 ம் ஆண்டு திரு.கோ.கிருஷ்ணசாமி
1990 ம் ஆண்டு திரு.ந.செல்லப்பா
1991 ம் ஆண்டு திரு.வை.கி.வேதாசலம்
1992 ம் ஆண்டு திரு.செ.சுந்தலிங்கம்

1993 ஆம் ஆண்டு முதல் தேவஸ்தான ஆதீன மகாசபை தேவஸ்தானப் பொறுப்பை ஏற்றுப் பரிபாலிக்கின்றது.

1993 ம் ஆண்டு திரு.வெ.நா.செ.நாராயணசாமி
1994 ம் ஆண்டு திரு.செ.இரெத்தினகோபால்
1995 ம் ஆண்டு திரு.கோ.கிருஷ்ணசாமி
1996 ம் ஆண்டு திரு.வெ.நா.செ.நாராயணசாமி
1997 ம் ஆண்டு திரு.வெ.நா.செ.நாராயணசாமி
1998 ம் ஆண்டு திரு.வெ.நா.செ.நாராயணசாமி
1999 ம் ஆண்டு திரு.செ.இரெத்தினகோபால்
2000 ம் ஆண்டு திரு. மு.சிவலோகநாதன்
2001 ம் ஆண்டு திரு.மு.சிவலோகநாதன்
2002 ம் ஆண்டு திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி
2003 ம் ஆண்டு திரு.நா.ஸ்ரீரஞ்சன்



ஸ்ரீ ராம, ஸ்ரீ சீதா லக்ஷ்மண விமானம்



கொடியேற்ற மஹோற்சவம்
சூரிய பருதிச் சேவை



கொடியேற்ற உற்சவ இரவு அன்ன சேவை



சேஷசயன உற்சவம்
2ம் நாள் உற்சவம்




அநுமச் சேவை-
4ம் நாள் மஹோற்சவம்



கருட சேவை
3ம் நாள் மஹோற்சவம்



திருக்கல்யாண உற்சவம்



யானை வாகன உற்சவம்
6ம் நாள் உற்சவம்



மஹோற்சவ விழாவில் 7ம் நாள் வெண்ணைத் தாளிச்சேவை



அஸ்வாரூடச் சேவை - 8ம் நாள் மஹோற்சவம்




ஸ்ரீ ரங்கநாதர் கோபுரம்



தேவஸ்தான ரத உற்சவம்



தீர்த்தோற்சவம் - 10ம் நாள் உற்சவம்



சந்திரப் பிறைச்சேவை - கொடியிறக்க உற்சவம்




பூந்தண்டிகை உற்சவம் - 5ம் நாள் உற்சவம்



திருவூஞ்சல் பூந்தொட்டி உற்சவம்



ஆஞ்சநேயர் உற்சவம்



யோக நாராயணர் வதிரி விருட்ச சேவை



ஸ்ரீ வைகுந்தவாசன் சயனக் காட்சி, துவார பாலகர் சுதை விக்கிரகம்

(ஸ்ரீ ரெங்கநாத கோபுரம்)



ஸ்ரீ ரங்கநாத கோபுர அஸ்திவாரம் இடும் வைபவம்

ஓம்
ஸ்ரீராமஜெயம்

# பிழைதிருத்தம்

| பக்கம் | பிழையான சொற்கள் | திருத்தம் |
|---|---|---|
| இல்லை | கேபாபுரத்திற்கும் | கோபுரத்திற்கும் |
| I | ஸ்ரீமந் | ஸ்ரீமத் |
| | சாந்தரேச | சுந்தரேச |
| III | வ..ராஜ | வரதராஜ |
| | வைண- | வைணவ |
| IV | கிருஷ்ணாந்த | கிருஷ்ணானந்த |
| | திரு இல்லாது உள்ளது | திரு சேர்த்துக்கொள்க |
| V | திரு இல்லாது உள்ளது சேர்த்துக் கொள்க | உரிய இடங்களில் திரு |
| VI | இங்கனம் | இங்ஙனம் |
| 1. | தெரிவித்துள் | தெரிவித்து |
| 2. | அவன்தாழ் | அவன்தாள் |
| 3. | உணர்ந்த | உணர்ந்து |
| 14. | நரசிம்- | நரசிம்ம |
| 16. | விமாசையாக | விமரிசையாக |
| 16. | ஸ்ரீமத் | ஸ்ரீமந் |
| 16. | அர்ச்சுணனுக்கு | அர்ச்சுனனுக்கு |
| 17. | வும் | மும் |
| 18. | ஏறத்தாள | ஏறத்தாழ |
| 19. | வழங்களாயினர் | வழங்கலாயினர் |
| 28. | அவரோகணித்து | ஆரோகணித்து |
| 33. | இருபாபாலாரும் | இருபாலாரும் |
| 35. | தீர்தோவத்திற்கு | தீர்த்தோற்சவத்திற்கு |
| 36. | வைத்து | வைத்த |
| 46 | புனராவர்த்தனம் | புனராவர்த்தம் |
| 52 | பாலயாலம் | பாலாலயம் |
| 53 | யாகசாலை | பாகசாலை |
| 53 | மூன்றாவது ஆவரணத்தில் இருந்து | |

தொடரவும் -


இந்திர, அக்கினி, யம, நிருதி, வருண, வாயு, குபேர, ஈசானனையும் பெருமாளுக்கு வலது பக்கத்தில் ஸ்ரீதேவியையும் இடது பக்கத்தில் ஹரிணியையும், கௌது பேரஸ்தானத்தில் சுபத்ர, சர்வஹ்யாத்மக சுகாவஹ, ராமதேவ, சம்வஹ, புண்ணியதேவ, சுபக முதலியவர்களையும்

இரண்டாவது ஆவரணத்தில் மித்ர, சனாதன, அத்ரி, சனந்தன், சனத்குமார, விஸ்வசனகனையும் (என்ற தொடர் முன்னுள்ள மூன்றாவது ஆவரணம் என்ற வசனத்தை நீக்கிவிடவும்)

| | | |
|---|---|---|
| 53 | ந்ரக்ஷன் | ந்யக்ஷ்ன் |
| | ந்யஷ | ந்யக்ஷ |
| | முதான | முதலான |
| 54 | சம்ஹரிகை | சம்ஹிதை |
| | அரியலாற் | அரியல்லாற் |
| | அவுணரக்க | அவுணரைக் |

ஓம்
ஸ்ரீராமஜெயம்

| | | |
|---|---|---|
| 56 | உசாத்தணை | உசாத்துணை |
| | ஸ்ரீஷேசப்பட்டா | ஸ்ரீஷேசப்பட்டாச்சாரிய |
| 63 | அர்த்தநாரஸ்வர | அர்த்தநாரீஸ்வர |
| 64 | பிருதிவ் | பிருதிவி |
| | எஜமான் | எஜமானன் |
| | மண்டபலக்ஷ்ணவி | மண்டபலக்ஷ்ணவிதி |
| 65 | சந்தாச்னம் | சந்தானசம்ஹிதை |
| 66 | கருடதுவஜம் | கருடனும் |
| | மஹோடசவம் | மஹோத்சவம் |
| 69 | ஆகோரம் | அகோரம் |
| 86 | ஆந்தகாலே | அந்தகாலே |
| 96 | விளக்கின்றார் | விளக்குகின்றார் |
| 99 | தோள்களில் | தோளில் |
| 101 | படுத்தவன | படுத்துவன |
| | கவித்தவத்தை | கவித்துவத்தை |
| 105 | தேரோட்டிபின் | தேரோட்டியின் |
| 106 | தாய் கந்ததையா | தாய்தந்தை |
| 118 | வீட்டிலே | வீட்டிலே |
| 102 | விழிப்போருக்கு | விளிப்போருக்கு |
| 127 | ஜக்கியமாகும் | ஐக்கியமாகும் |
| | வழிப்படுகி-ர்கள் | வழிப்படுகிறார்கள் |
| 128 | செல்பவர் | சொல்பவர் |
| 133 | வெளிநாட்டுகளில் | வெளிநாடுளில் |
| | -வ்விய | செவ்விய |



கரபி பதிப்பகம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.